2782,

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXIII NO: 1

March 23 1984

D
V211,31 N84
N84.63.1
136241

2505 / 85:31/85

வெளியீடு 5-3-85] [Issued 5-3-85

.2782

ஆணையர்
...டு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
16 MAY 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 23, 1984 - தொகுதி LXIII எண் 1
Friday the 23rd March 1984 - Volume LXIII No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

V211,31 N84
N84.6301
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் சென்னை-600 008
136241

## உள்ளடக்கம்.

23—3—1984

பக்கங்கள்.

(அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் i—iii

(ஆ) Personnel of the Government of Tamil Nadu .. v—vi

(இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. .. vii—viii

(ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்) .. .. .. .. ix—xvi

1. வினாக்கள்-விடைகள் —

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 1—35

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 36—94

2. தகவல் கோரல் —

(அ) இராம் பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விளக்கக் கூட்டம் .. .. .. 95

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. 95

(இ) உள்ளாட்சி மன்றங்களுககுத் தேர்தல் நடத்துவது குறித்து .. .. .. 96

3. ஒத்திவைப்புத் தீர்மானம் —

எண்ணூர் அனல்மின் நிலையத்திற்கு சிங்கரேணி யிலிருந்து நிலக்கரி வருதல் .. .. 97—102

4. கவன ஈர்ப்புகள் —

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவது .. .. .. .. ..102—106

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் பாதிக்கப்பெற்றுள்ளது ..1 6—110

பக்கங்கள்.

5. அறிக்கை அளித்தல் —

பொது நிறுவனங்கள் குழு .. .. ..110—111

6. முன்பண மானியக் கோரிக்கைகள், 1984-85— அளித்தல் .. .. .. .. 111

7. இறுதி துணை மதிப்பீடுகள், 1983-84-அளித்தல் ..111—114

8. அறிவிப்புகள் —

(அ) துணை மானியக் கோரிக்கைகள், 1983-84 —வெட்டுத் தீர்மானங்கள் .. .. 114

(ஆ) பேரவை அலுவல் .. .. .. 155

9. வரவு-செலவுத் திட்டம், 1984-85—வாக்கெடுப்பு (தொடர்ச்சி) — 114—155

(அ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு 156—177

(ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன் ..

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் 114—116, 162—176

திருமதி தா. இராசாம்பாள் .. ..117—125

டாக்டர் கே. பி. இராமலிங்கம் ..125—131

திரு. பெ. சு. திருவேங்கடம் ..132—138

திரு. கு. அ. செங்கோட்டையன் ..138—143

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் 143—145

திரு. ச. பாலகிருஷ்ணன் .. ..147—151

திரு. கே. தனுக்கோடித் தேவர் ..151—153

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் ..153—155

திரு. பி. முகம்மது இஸ்மாயில் ..156—158

திரு. எஸ். சிவராமன் .. ..158—162

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. ..178—179


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர் லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல் பொருள் இயல், ஆயத்துறை மற்றும் மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக).

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம் மற்றும் இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால் பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சி மொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

*9.* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந் தொழில்கள் சுரங்கம் மற்றும் கனிவளம்.

*10.* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

*11.* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

*12.* மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

*13.* மாண்புமிகு திரு. சு முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)— போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

*14.* மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (கைத்தறி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்)—நெசவாலைகள், கைத்தறி மற்றும் கூட்டுறவு.

*15.* மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்றுச் சூழல், மாசு கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)— பயண இசைவுச் சீட்டு மற்றும் சுற்றுச் சுழல், மாசு கட்டுப்படுத்தல்.

*16.* மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத்-துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

*17.* மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

*18.* மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—வீட்டுவசதி, குடிசைமாற்றுவாரியம், பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்த மாக.

*19.* மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்



*20.* மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற் றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

*21.* மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

*22.* மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

*23.* மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

*24.* மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத்துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### *GOVERNOR OF TAMIL NADU.*

THIRU SUNDER LAL KHURANA.

### *MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.*

1. HON. DR. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Excise and Prohibition excluding grant of liquor permit.

2. HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education, Official Language.

8. HON. DR. K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Law and Industries)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. DR. H. V. HANDE (Minister for Health)—Health.

13. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Handlooms and Co-operation)—Textiles, Handlooms and Co-operation.

15. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Passports and Environmental Pollution Control.

16. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. HON. THIRU R. SOUNDARARAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. HON. THIRU S. R. RADHA (Minister for Public Works)—Housing, Slum Clearance Board, Public Works Department and Establishment matter relating to Public Works Department.

19. HON. THIRU M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

20. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggers Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. HON. THIRU R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. HON. THIRU K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. வே. இரா. ஜெயராமன்.
2. டாக்டர் கே. சமரசம்.
3 டாக்டர் கே. சௌரி ராஜன்.
4 திரு. சு. பாலன்.
5 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர் :

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள் :

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.,
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,

குழு அலுவலர் :

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.,

சார்புச் செயலாளர்கள் :

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,
திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**15—2—1984 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

எஸ்டேட் அலுவலர் :

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் :

திரு. பி. கோதண்டராமன்.

விவாதப் பதிப்பாளர் :

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.,

தலைமை நிருபர் :

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.



தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப் பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடனை. |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர். |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர். |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி. |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.). |
| 9 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு). |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர். |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.). |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 13 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி. |
| 14 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி. |
| 15 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 16 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி. |
| 17 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.). |
| 18 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2. |
| 19 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர். |
| 20 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கற்பட்டு. |
| 21 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி. |
| 22 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி. |
| 23 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குற்றாலம். |
| 24 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 25 | இராசாம்பாள், திருமதி தா. | தலைவாசல் (செ.வ.). |
| 26 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி. |
| 27 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம். |
| 28 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.). |
| 29 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி. |
| 30 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு). |

| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 31 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 32 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி. |
| 33 இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி. |
| 34 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம். |
| 35 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம். |
| 36 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம். |
| 37 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.). |
| 38 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம். |
| 39 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 40 இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதாகிருஷ்ண நகர். |
| 41 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 42 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 43 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.). |
| 44 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 46 உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 47 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 48 உமாநாத், திரு. ரா. | நாகை. |
| 49 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 50 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம். |
| 51 கணேசன், திரு. இ. | இடப்பாடி. |
| 52 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |
| 54 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர். |
| 55 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர். |
| 56 கருப்பசாமிப் பாண்டியன், திரு.வி. | பாளையங்கோட்டை. |
| 57 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை. |
| 58 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 59 கல்லன், திரு. கே. | உதகமண்டலம். |
| 60 கலிதீர்த்தான், திரு சோ. | சங்கராபுரம். |
| 61 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.). |
| 62 கலையரசன், திரு. நன்னிலம், அ. | நன்னிலம் (செ.வ.). |
| 63 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம். |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 65 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 68 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1. |
| 69 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர். |
| 70 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர். |
| 71 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம். |
| 72 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.). |
| 73 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர். |
| 74 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.). |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர். |
| 76 குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 77 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை. |
| 78 கோபால், திரு. சி. | சோளிங்கர். |
| 79 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 80 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம். |
| 81 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.). |
| 82 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 83 கோவைத்தம்பி, திரு. | பேரூர். |
| 84 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ.). |
| 85 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு). |
| 86 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 87 சண்முகம், திரு. இரா. | திருத்தணி. |
| 88 சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 89 சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி. |
| 90 சந்திரசேகரன், திரு. எ. | சோழவந்தான். |

| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 91 சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.). |
| 92 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 93 சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 94 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 95 சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம். |
| 96 சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 97 சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி. |
| 98 சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 99 சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 100 சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 102 சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 103 சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 104 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர். |
| 106 சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 107 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 108 சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 109 சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர். |
| 110 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 111 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 112 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 113 சுப்பிரமணியன், திரு. கே.எம்.எஸ். .. | போடிநாயக்கனூர். |
| 114 சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |
| 115 சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 116 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 117 சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி. |
| 118 செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 119 செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 120 செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 121 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர் களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 122 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |
| 123 சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 124 சொக்கலிங்கம், திரு. கே. .. | திருப்போரூர். (செ.வ.) |
| 125 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 126 சோமு, திரு. என்.வி.என். .. | பூங்காநகர். |
| 127 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சி-2. |
| 128 சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம். |
| 129 சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர். |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 தங்கவேலு, திரு. பி. ... | செயங்கொண்டான். |
| 134 தவசி, திரு. ஆர். .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 135 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 136 தனுக்கோடி தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 139 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 140 திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 141 திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 142 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 143 தீர்த்தராமன், திரு. ப. .. | பெண்ணாகரம். |
| 144 துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 145 துரைமுருகன், திரு. .. .. | ராணிப்பேட்டை. |
| 146 துரைராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 147 துரைராஜ், திரு. பி. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 148 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 149 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 150 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 151 நவநீதகிருஷ்ண பாண்டியன் .. | ஆலங்குளம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 152 நாச்சிமுத்து, திரு. கே. பி. | .. | மேட்டூர். |
| 153 நாராயணசாமி, திரு. கே. | .. | திருவண்ணாமலை. |
| 154 நாராயணன், திரு. பி. ஜி. | .. | பவானி. |
| 155 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | | திருநெல்வேலி. |
| 156 நெடுமாறன், திரு. ப. | .. | மதுரை (மத்திய) |
| 157 பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | .. | கும்பகோணம். |
| 158 பட்டாபிராமன், திரு. செ. | .. | திருவள்ளூர். |
| 159 பம்மல் நல்லதம்பி, திரு. | .. | தாம்பரம். |
| 160 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | | பல்லடம். |
| 161 பலராமன், திரு. இல. | .. | போரூர். |
| 162 பழனிச்சாமி, திரு. சு. | .. | மேட்டுப்பாளையம். |
| 163 பழனிமுத்து, திரு. சி. | .. | ஆத்தூர். |
| 164 பழனியப்பன், திரு. கு. பா. | | விழுப்புரம். |
| 165 பழனிவேல், திரு. எம். | .. | பழனி (செ.வ.). |
| 166 பாண்டியன், திரு. பி. எச். | .. | சேரன்மாதேவி. |
| 167 பாபு கோவிந்தராஜன், திரு. | | கடலூர். |
| 168 பாபுஜனார்த்தனன், திரு. | .. | செய்யாறு. |
| 169 பாரமலை, திரு. க. .. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 170 பாலகிருஷ்ணன், திரு. ச. | .. | மொடக்குறிச்சி. |
| 171 பாலகிருஷ்ணன், திரு. வி. | .. | சிவகாசி. |
| 172 பாலசுப்பிரமணியன், திரு. க. | | சீர்காழி (செ. வ.) |
| 173 பாலசுப்பிரமணியன், வேடசந்தூர், திரு. வி.பி. | .. | வேடசந்தூர். |
| 174 பாலன், திரு. சு. | .. | பெரம்பூர் (செ. வ.) |
| 175 பாலுச்சாமி, திரு. ஏ. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 176 பிச்சை, திரு. எம். .. | .. | அருப்புக்கோட்டை. |
| 177 பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | .. | வில்லிவாக்கம். |
| 178 புருஷோத்தமன், திரு. து. | .. | சைதாப்பேட்டை. |
| 179 பூங்காவனம், திரு. என். ஏ. | .. | காட்பாடி. |
| 180 பெரியசாமி, திரு. ஏ. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 181 பெரியசாமி, திரு. ரா. | .. | தொட்டியம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 182 பெருமாள், திரு. என். | .. | வரகூர் (செ.வ.) |
| 183 பெருமாள், திரு. ரா. கு. | .. | விளாத்திகுளம். |
| 184 பொன்னம்மாள், திருமதி | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 185 பொன்னுரங்கம், திரு. ப. | .. | ராயபுரம். |
| 186 பொன்னையன், திரு. சி. | .. | திருச்செங்கோடு. |
| 187 மணி, திரு. டி. .. | .. | விளவங்கோடு |
| 188 மணிமாறன், திரு. ஆர். | .. | திருப்பூர் |
| 189 மாணிக்கம், திரு. எம். எஸ். | .. | வேதாரண்யம். |
| 190 மாரிமுத்து, திரு. த... | .. | குளத்தூர் (செ.வ.) |
| 191 முகமது இஸ்மாயில், திரு. பி. | | பத்மநாபபுரம் |
| 192 முசிறிப்புத்தன், திரு. பி. | .. | திருச்சி-1. |
| 193 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | .. | கன்னியாகுமரி |
| 194 முத்துசாமி, திரு. க... | .. | ஈரோடு. |
| 195 முத்துராமலிங்கம், திரு. இ. | .. | ராதாபுரம். |
| 196 முத்துவேல், திரு. என். | .. | வானூர் (செ.வ.) |
| 197 முத்தையா, திரு. இரா. | .. | சேடப்பட்டி |
| 198 முனிரத்தினம், திரு. இரா. சா. | | கும்மிடிப்பூண்டி. |
| 199 முனுசாமி, திரு. மு. ப. | .. | பாலக்கோடு |
| 200 மூர்த்தி, திரு. ஜி. .. | .. | பேரணாம்பட் (செ.வ.) |
| 201 மொக்கையன், திரு. பி. | .. | ராஜபாளையம் (செ. வ.) |
| 202 யசோதா, திருமதி டி. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 203 ரகுமான்கான், திரு. அ. | .. | சேப்பாக்கம் |
| 204 ரங்கசாமி, திரு. ஆர். | .. | சத்தியமங்கலம் |
| 205 ரங்கசாமி, திரு. க. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 206 ரமணி, திரு. கு. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 207 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் திரு... | .. | புதுக்கோட்டை |
| 208 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | | முசிறி. |
| 209 ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 210 வரதராஜன், திரு. என். | .. | திண்டுக்கல் |
| 211 விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | .. | வீரபாண்டி |
| 212 வின்சென்ட், திரு. மி. | .. | நாகர்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 213 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 214 விஜய்பாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 215 விஜயராகவன், திரு.பொ. .. | கிள்ளியூர். |
| 216 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட் |
| 217 வீராசாமி, திரு. த. .. | ஒரத்தநாடு |
| 218 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 219 வெங்கடசுப்பிரமணியம், திரு.ப. | காஞ்சீபுரம். |
| 220 வெங்கடரெட்டி, திரு.டி. .. | ஓசூர். |
| 221 வெங்கடேசன், திரு.பி.எம். | பெரணமல்லூர் |
| 222 வெள்ளைச்சாமி, திரு.த. .. | ஆத்தூர். |
| 223 வேணுகோபால், திரு.த. .. | தண்டராம்பட்டு |
| 224 வேலப்பன், திரு.சி.வி. .. | கபிலமலை |
| 225 ஜகத்ரட்சகன், திரு.எஸ். .. | உத்திரமேரூர். |
| 226 ஜான் வின்சென்ட், திரு.மு. .. | நாங்குநேரி. |
| 227 ஜெயராமன், திரு.வே.இரா. | தேனி . |
| 228 ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி. |
| 229 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டாறு. |
| 230 மார்கரெட் எலிசபெத் பிலிப்ஸ். திருமதி | நியமன உறுப்பினர் |
| 231 வெற்றிடம். | |
| 232 வெற்றிடம். | |
| 233 வெற்றிடம். | |
| 234 வெற்றிடம். | |
| 235 வெற்றிடம். | |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்

(1) மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், அமைச்சர்.
(2) மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், அமைச்சர்.
(3) மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, அமைச்சர்.
(4) மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா, அமைச்சர்.
(5) மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப், அமைச்சர்.
(6) மாண்புமிகு திரு. க. கலைமணி, அமைச்சர்.
(7) திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

1984 மார்ச் 23, வெள்ளிக்கிழமை.

பங்குனி 10, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல் ".

மக்களுக்கு இயற்கை அறிவு மனத்தால் ஏற்படும். ஆனால் இப்படிப்பட்டவன் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், அவன் சேர்ந்துள்ள இனத்தால் ஏற்படும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மின் நிலையங்களைக் கண்காணிக்க குழு அமைக்கும் திட்டம்.

407—(*வினா எண் 20187)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் நிலையங்களைக் கண்காணிக்கக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நம் நாட்டில் அதிகமான அளவிற்கு அனல் மின் நிலயங்கள் புனல் மின் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே அடிக்கடி பாதிப்பு ஏற்பட்டு, பெரிய அளவிலே மாற்றம் இருக்கின்றது. ஆகவே அவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு குழு அமைத்தால் அப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படாமல் எதிர்காலத்தில் நன்மைகள் ஏற்படும். எனவே அரசு அதை மறுபரிசீலனை செய்ய அப்படிப்பட்ட கண்காணிப்பு, குழுக்களை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கண்காணிப்புக் குழு என்று ஒன்றும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் மத்திய-மாநில அரசுகளின் மின் உற்பத்தி நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று என் தலைமையில் இயங்கிவருகின்றது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை நாங்கள் கூடி மின் உற்பத்தி எவ்வாறு உள்ளது, மின் உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கலாம், வருங்கால மின் தேவைகளை எவ்வாறு சமாளிப்பது போன்ற விவரங்களையும், மின் உற்பத்திக்கான திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று அதாவது ''ஆன்—கோயிங் ஸ்கீம்'' ( On - going Schemes ) பற்றி பரிசீலனை செய்கின்றோம்.

மின் இணைப்புக் கொடுப்பதில் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம்.

408—(*வினா எண் 20535)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் இணைப்புக் கொடுப்பதில் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதில் ஆண்டுக்கு ஒரு குறியீட்டை வைத்து, இவ்வளவு கிணறுகளுக்கு நாங்கள் மின் இணைப்புக் கொடுக்க இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறது. ஆனால் அந்தக் குறியீட்டை எட்டுவதில்லை. எனவே, இப்படி அறிவிக்கப்படுகின்ற அந்தப் பாசனக் கிணறுகளுக்கு முழுமையாகவும் மின் இணைப்பு கொடுத்து விடுவார்களானால், இப்படிப்பட்ட சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூட தேவையில்லை. அப்படி மின் வாரியத்தால், அறிவிக்கப்படுகின்ற அந்தக் குறியீட்டளவையாவது எட்டுவதற்கு, மின்சார வாரியம் விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயலுவார்களா ?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குறியீட்டளவை எய்துவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதிலே முன்னுரிமை கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சிறு விவசாயிகள் ஏற்கனவே கட்டிய அந்த முன்பணத்துடன், இப்போது அடிஷனல் டெபாசிட் கட்டவில்லை என்று சொல்லி பல இடங்களில் மின் துண்டிப்பு நடைபெறுகிறது. மூன்று மாதங்களுக்கு உரிய கட்டணத்தை முன் பணமாகக் கேட்டு வசூல் செய்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் அந்த 'ஸ்பாட்'-லே பில் போட்டு வசூல் செய்து வருகிறார்கள். ஆகவே, மூன்று மாத டெபாசிட் இருக்கும்போது, அடிஷனலாக, கஷ்டப்படக்கூடிய ஏழை விவசாயிகள் இடத்திலே, அந்த டெபாசிட் வேண்டுமென்று கேட்டு, மின் துண்டிப்பு நடைபெறுகிறது. அதைத் தடுப்பதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாட்டைச் செய்வார்களா ? இப்போதுகூட, திருச்சியிலே பெரம்பலூர் வட்டாரத்தில் பல இடங்களில் துண்டிப்பு நடந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இதை அனுதாபத்தோடு கவனித்து, கஷ்டப்படுகின்ற விவசாயிகளுக்கு உதவி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது புதிய மின் இணைப்புகள் தருவது பற்றிய கேள்வி.

திரு. தி. அன்பழகன் : ஏரி, குளம், ஆறு போன்ற பாசன வசதியற்ற பகுதிகளாக இருந்து, கிணற்றுப் பாசனத்தையே நம்பியிருக்கிற பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு சீனியாரிட்டி பார்க்காமல், மின் இணைப்புத் தருவதில், முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சீனியாரிட்டி பார்க்கக்கூடாது என்று ஆரம்பித்தால், அது பல்வேறு முறைகேடுகளுக்கும், ஊழல்களுக்கும் வழி வகுக்கும். அதுவும் குறிப்பாக இந்த சிறு விவசாயிகளின் மின் இணைப்புகளைப் பொறுத்தவரையில் அது மிகப் பெரிய கோரிக்கையாக இருந்து வருகிறது. எந்தத் தேதியில் மனுக்களைக் கொடுத்தார்களோ அந்தத் தேதியின் அடிப்படையில் தரவேண்டும் என்று நாம் உறுதியாக இருப்பதால்தான், ஓரளவு இப்போது விவசாயிகளிடத்திலே திருப்தி ஏற்பட்டு வருகிறது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில், நிலவள வங்கிகள் மூலம் கடன் பெற்றவர்களுக்கு மட்டும் தான் முன்னுரிமை கொடுத்து, மின்சார இணைப்புக் கொடுக்கப்படுகிறது. தனியார்கள் சொந்த முறையிலே வேறு

வங்கிகள் மூலம் கடன் பெற்று, மோட்டார் வாங்கி வைத்திருப்பவர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதில் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஒரு பிரச்சினை. சென்ற ஆண்டு வறட்சி இருந்தாலும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதாலும், தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் யார் தயாராக இருந்தாலும் அவர்களுக்கு மின் இணைப்புத் தரலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டது. அதனால் அந்த நிலவள வங்கி மூலமாக, கூட்டுறவு வங்கி மூலமாக கடன் வாங்குகின்றவர்களுக்கு அந்த உரிமை தரப்பட்டது. இந்த மார்ச் மாதத்திற்குப் பிறகு அந்த உரிமை அவர்களுக்கும் இருக்காது.

திரு . கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ கோடி கடன் நிலுவைகளை ரத்து செய்த இந்த மாநில அரசு இந்த சிறு விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளைக் கொடுப்பதில் இந்தத் துறைக்கு என்ன நஷ்டம் ஏற்படுகிறது? அரசுக்கு என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒன்றும் இல்லை. ஊழல் அதிகரிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லும்போது, கூட்டுறவு வங்கி மூலமாக, பேங்குகள் மூலமாக கடன் பெற்றவர்களுக்கு முன்னுரிமை என்று சொன்னார்கள். இந்த எஸ்.டி., எஸ்.சி. டிரைபல் ஜனங்களுக்கு இந்த ஆண்டு அரசாங்கம் உதவி கொடுத்து, 'ஸ்பெஷல் காம்பனன்ட் பிளான்' மூலமாக கிணறுகளை வெட்டச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் உதவி கொடுத்தது சென்ற ஆண்டுதான். அவர்களுக்கு இணைப்புக் கொடுப்பதற்கு 'சீனியாரிட்டி' பார்த்து, குறிப்பாக, கடலூர், பண்ருட்டி, திண்டிவனம், செஞ்சி போன்ற இந்த 4 தாலுக்காக்களில், இந்த 'ஸ்பெஷல் காம்பனன்ட் பிளான்' மூலமாக உதவி பெற்று, கிணறு வெட்டியவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க ஒரு ஸ்பெஷல் உத்தரவை அமைச்சர் அவர்கள் போடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்போது அரசுத் துறைகளைச் சார்ந்த விதைப் பண்ணை, மற்றும் ஆராய்ச்சி மையங்கள் போன்ற நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ள விசையேற்றங்கள், தமிழக குழாய்க் கிணறுகள் கார்ப்பரேசன் அதாவது டியூப் வெல்ஸ் கார்ப்பரேசன், சமுதாய





கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறு விசையேற்றங்கள், மூன்றாவது தஞ்சை மாவட்டத்தில் 'குரூட் விரைவுத் திட்டத்தில், அதாவது 'கிராஷ் புரோகிராம்' கீழ் வரும் விசையேற்றங்கள், இந்த மாதம் 31—3—1984-உடன் முடிந்துவிடும். இந்த மேற்கூறிய இரண்டு இனங்களுக்கும் இருக்கிறது. அரசு பார்த்து எங்கேயாவது சில இடங்களிலே இதைப் போல ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது மலைவாழ் மக்கள், இதுபோல் கூட்டுறவு மூலமாகவோ அல்லது அரசாங்கத்தின் உதவி பெற்றோ, பம்புசெட்டுகள் போடுவார்களானால், அதைப்பற்றி தனி உத்தரவின் மூலம் அதற்கு மட்டும், தனி உத்தரவு போடுவதற்கு அதிகாரம் இருக்கிறதே தவிர, பொதுவாகத் தருவதற்கு இப்போது இயலாது.

திரு. என். எஸ். வி. சித்தன் ; மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, எந்த நூற்றாண்டிலேயும் இல்லாத அளவிற்கு, காலம் தவறி பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகள் இருக்கின்ற பகுதிகளுக்காவது மின்சாரம் கொடுப்பதில் அரசு முன்னுரிமை அளிக்குமா ? அண்மையிலே ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; அது இயலாது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் 5 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே மின் இணைப்பு வேண்டும் என்று மனுச் செய்திருந்தும்கூட வட ஆர்க்காடு மாவட்டத்திலே 1979-80-ஆம் ஆண்டு முதல் இன்னும் மின் இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறது. அவர்களுக்கு விரைவில் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, 5, 6 ஆண்டுகள் என்பது பெரிதல்ல. 20 ஆண்டுகளுக்கு முந்தியுள்ளதற்கு எல்லாம் இப்போதுதான் நாங்கள் கொடுத்து வருகிறோம். காங்கிரஸ் காலத்திலே கொடுத்த மனுக்களுக்குக் கூட அப்போது அவர்களுக்கு செல்வாக்கு இல்லாத காரணத்தாலே, முறைப்படி நாம் சீனியாரிட்டிப்படி தருகிறோம். (குறுக்கீடு). அவர்கள் செல்வாக்கு என்றால், காங்கிரஸ்காரர்களுக்கு அல்ல. அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டி இருக்கும் அல்லவா ? அதைச் சொல்கிறேன். நீங்கள் ஏன் உடனே குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதைப் போல பதறுகிறீர்கள். அது அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலே, 20 வருஷங்கள் கூட ஆகியிருக்கின்றன.

**கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்டத்திலுள்ள மருத்துவமனை.**

409—(*வினா எண் 18277)—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்டத்தின் மருத்துவமனைக்கு வருடத்திற்கு எத்தனை ரூபாய்களுக்கான மருந்து வழங்கப்படுகிறது ?

(ஆ) இந்த மருத்துவமனைக்குத் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில் எப்போது செய்யப்படும்?

(ஈ) இம்மருத்துவமனையில் மருத்துவர் இடம் காலியாக உள்ளதா ?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 21,000 வரை மருந்துகள் வழங்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

(இ) கேள்வி எழவில்லை.

(ஈ) நியமிக்கப்பட்ட மருத்துவர் ராஜினாமா செய்துவிட்டார். புதிய மருத்துவரை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. டி. மணி : கீரிப்பாறையில் இருக்கிற அந்த மருத்துவமனையில் ஏற்கனவே கீரிப்பாறை டிவிஷன், காளிகேசன் டிவிஷன், பரலியாறு டிவிஷன், கீரிப்பாறையில் இருக்கிற பாக்டரி டிவிஷன், இவைகளில் இருக்கிற 600-க்கும் அதிகமான தொழிலாளர் குடும்பத்தினர்கள், அந்த மருத்துவமனைக்கு சென்று வருகிறார்கள். திடீர்என்று டாக்டர் இல்லாத குறை ஏற்பட்டு மாதங்கள் பல ஆகியுள்ளது. அவர்கள் பொது மருத்துவமனைக்கு வரவேண்டும் என்று சொன்னால் நாகர்கோவிலுக்கு பல மைல்கள் தாண்டி வரவேண்டும். எனவே அவசரமாக ஒரு லேடி டாக்டரையும் அதேபோல் மருத்துவரையும் நியமனம் செய்ய அரசு துரிதமாக நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே இருக்கிற ரப்பர் தோட்டத்தில் மருத்துவர்களை நியமனம் செய்வதில் மிகுந்த சிக்கல்கள் ஏற்பட்டன. நம்முடைய மருத்துவத் துறையின் கீழ் பணியாற்றும் மருத்துவர்களை அங்கே வேலைக்கு என்று அனுப்பும்போது அவர்களிலே பலர் அங்கே போக விரும்புவதில்லை. அங்கே மாற்றம் செய்தால் விடுமுறை எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் என்ற சூழ்நிலை ஏற்பட்டு, அந்த அனுபவத்தை ஒட்டி அரசு அந்த ரப்பர் தோட்டத்திற்கு என்று தனியாகவே வேண்டுகோள் விடுத்து விண்ணப்பங்களைக் கேட்டுப் பெற்று மருத்துவரை நியமிக்கலாம் என்று முடிவு எடுத்து அவர்களுக்கு அனுமதி வழங்கியது.

அப்படி தானாகவே விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்ட 5, 6 பேர்கள் இதிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலே, பலபேர் தங்களை இந்தப் பதவியிலே சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. அல்லது சேரவில்லை. அப்படிச் சேர்க்கப்பட்ட ஒரு டாக்டரும் கொஞ்ச நாள் இருந்து விட்டு பிறகு ராஜினாமா செய்துவிட்டு போய்விட்டார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே மருத்துவர்களை போடுவதே கஷ்டமாக இருக்கிறது. என்ன காரணத்தினாலோ அங்கே பணியாற்ற டாக்டர்கள் முன்வருவதில்லை. ஆகவே, தக்கவர்கள் அங்கே வந்து பணியாற்ற விருப்பம் தெரிவிப்பார்களேயானால், தேர்ந்தெடுத்து விரைவிலே நியமிக்க வேண்டும் என்று இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே மருந்து வழங்குவதில் சுமார் 21 000 ரூபாய்க்கு மருந்து வழங்குவதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே இன்றைய காலநிலையில் அந்த மருந்துகள் பற்றாக்குறை ஆகும். எனவே அதிக மருந்து தேவை இருக்கிறது. 6 மாதங்களுக்கு முன்னால் அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது இந்தக் குறை இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். எனவே இன்னும் அதிகமான மருந்துகளைத் தருவதற்கும், அதேபோல் அங்கே போதுமான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடையாது என்ற நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மலைப் பாங்கான பகுதியில் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பணிபுரியக் கூடிய அந்தப் பிரதேசத்தில் இருக்கிற மருத்துவமனைக்குப் போதுமான மருந்துகள் இல்லை, தண்ணீர் இல்லை, அதே போல மின்சார விளக்குகள் பியூஸ் ஆகிப்போனால், அவைகள் காலாகாலத்தில் மாற்றப்படுவதில்லை. எனவே இது மலைப்பாங்கான பகுதி என்ற முறையில் அந்தப் பகுதியிலே தொழிலாளர்களுக்கு வசதி செய்யும் முறையில், டாக்டர்களை நியமித்து, போதுமான மருந்துகளையும், அதே போல மற்ற வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 23

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துகள் வாங்குவதற்கு 18 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால் அது போதாது என்று தெரிவிக்கப்பட்டதற்கு ஏற்ப இப்பொழுது 21,000 ரூபாய் வரையில் மருந்து வாங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தேவையானால் அந்த சூழ்நிலைக்கு ஏற்ப அந்த மருந்துகள் வாங்குவதற்கு தொகை அதிகரிப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும். தண்ணீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் தற்போது தினசரி 50 காலன் தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது போதவில்லை என்ற காரணத்தால் 100 காலன் தண்ணீர் வழங்கப்படுவதற்கு, அந்த தண்ணீர் வருகின்ற குழாய்களை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போல தேவையான வசதிகளைச் செய்வதற்கு அந்த நிர்வாகம் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறது. இன்னும் அதை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கடைசியாக இருந்த டாக்டர் மேற்படிப்பு படிப்பதற்காக ராஜினாமா செய்து விட்டார். ஆனால் நமக்கு ஒரு பக்கம் டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது போன்ற மலைப் பகுதிகளில் வேலை வாய்ப்பு இருக்கிறது என்பது ஒருபுறம். 4 தினங்களுக்கு முன்பு இதுபோன்ற மலைப் பகுதியில் வேலை வாய்ப்பு இருக்கிறது. டாக்டர்கள் வேண்டும் என்று அரசாங்கம் அறிவிப்புக் கொடுத்தது. அதன்படி வேலையற்ற பல பெண் டாக்டர்களும், ஆண் டாக்டர்களும் வந்தார்கள். இண்டர்வியு நடந்தது. இப்போது நம்முடைய மருத்துவத்துறை அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பதால் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமக்கு ஒரு புறம் டாக்டர்கள் வேலையற்றிருக்கிறார்கள் என்ற பிரச்சினை. மறு பக்கம் இது போன்ற இடங்களுக்கு அவர்கள் வரத் தயாராக இல்லை. ஆனால் உண்மையிலேயே ஏதோ கஷ்டத்தினால் தான் அவர்கள் போனார்கள் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். கடைசியாக ராஜினாமா செய்துவிட்டு எம். எஸ். படிக்க வேண்டியதற்காகப் போய் விட்டார். இங்கே சுகாதார அமைச்சர் அவர்களும் இருப்பதால் இதுபோன்ற அத்தியாவசியமான பணிகளில் வேலையற்ற டாக்டர்கள் இருக்கிற நிலையில் இப்படி 4 மாதங்களாகியும் டாக்டர் இல்லாத நிலை இருப்பதால் தொழிலாளர்கள் மலைப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு ஏதாவது ஏற்பாடு உடனடியாக செய்ய ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, ரப்பர் தோட்டத்திலே மருத்துவர்கள் இல்லை என்ற கேள்விக்குத் தான் என்னால் பதில் அளிக்க முடியும். அந்த வகையிலே நம்முடைய அரசினிடத்திலே அனுமதியைப் பெற்று பொதுவாக மருத்துவத் துறையாலே மக்கள் நல்வாழ்வுத் துறையாலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களை அங்கே வேலைக்கு அமர்த்துவது என்ற முறை நீண்டகாலமாக இருந்தது. அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் அங்கே பணியாற்ற வருவதில்லை. மருத்துவக் கல்லூரியிலே இடம் கிடைப்பதற்கு எத்தனையோ வழிகளிலே முயற்சிக்கிறார்கள். அதற்கு அப்புறம் தேர்வு பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள். தேர்வு பெற்றதற்குப் பிறகு வேலை பெறுவதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் வேலை கொடுத்ததற்குப் பிறகு வேலை பார்ப்பதற்கும் அவர்கள் வீட்டுக்கு அருகிலேயே மருத்துவ மனை வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ரப்பர் தோட்டத்தில் பணியாற்றுகிற—காரணம் தொழிலாளர்களும் பொதுமக்களும் தானே இதற்சென்று பிறந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றே எங்கேயாவது வேலை செய்தாக வேண்டும் —ஆகவே அந்தச் சூழ்நிலையில் மலைவாழ் தொழிலாளர்கள் மலைப் பகுதியிலே போய் பாடுபடுகிறார்கள். ஆனால் இந்த அரசாங்கம் செலவைச் செய்து மருத்துவக் கல்வியைக் கற்றுக் கொடுத்து அவர்களையெல்லாம் தயார்படுத்தியதற்குப் பிறகு அங்கே வேலை தருகிறோம் என்றால் போக மறுக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறையால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வர மறுக்கிறார்கள். ஆகவே, கேட்கிறபோதே கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் தோட்டத்திலே வேலை செய்வதற்கு இந்த பதவி என்று சொல்லி விண்ணப்பங்களை கோரிப்பெற்றோம். அவர்கள் எல்லாம் வந்தார்கள். வந்தவர்களிலே எஸ். கனகசபாபதி, எஸ். எம். குமார் ஆகியவர்கள் போதிய அவகாசம் கொடுத்தும் பணியில் சேர முன்வரவில்லை. வரிசை 4-ல் உள்ள டாக்டர் செண்பககுமார் என்பவர் வந்து நியமிக்கப்பட்டார். அதற்கு பிறகு ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்போல் இருக்கிறது. எப்படியோ மேல்படிப்புக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டு போய்விட்டார். அவருக்கு மேல்படிப்பு தேவைப்படுகிறது. அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு அடிப்படையான மருத்துவ வசதிகூட கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அவர்களையும் வைத்துக் கொண்டு நாம் இதை நடத்தியாக வேண்டும். மீண்டும் மீண்டும் கேட்கிறோம், வருகிறார்கள், அங்கே வந்து காலை ஊன்றிக் கொண்டு எப்படி மேலே ஏறலாம் என்பதற்காகத் தான் அங்கே வருகிறார்களே தவிர தொழிலாளர்களுக்கு பணிபுரிய வேண்டுமென்ற நோக்கத்திலே அங்கே வரவில்லையென்று தெரிகிறது. என்ன செய்வது, இப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டுதான் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்ய வேண்டும். மருத்துவர்களிடமிருந்து நாம் பாதுகாப்புப் பெற்றாக வேண்டும்.

வேதாரண்யம் தாலுகாவில் கடல் ஆமை இனத்தைப் பெருக்கும் திட்டம்.

*410*—(*வினா எண் 19205) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் தாலுகாவில் கடல் ஆமை இனத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருவது உண்மையா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) வேதாரண்யம் சரகத்தில், கோடியக்கரை, ஆற்காட்டுத்துறை மற்றும் வனவன் மகாதேவி என்ற மூன்று இடங்களில் குஞ்சு பொறிக்கும் இடங்கள் ( Hatcheries ) அமைக்கப்பட்டு, கடல் ஆமை முட்டைகளைக் கடற்கரையிலிருந்து சேகரித்து வந்து, குஞ்சு பொரிக்கும் இடங்களில் வைத்து பாதுகாத்து, பின்னர் கடலில் விடப்படுகிறது. இத்திட்டம் அக்டோபர் 1982 முதல் மே 1983 உடன் முடிந்த காலங்களில் செயல்படுத்தப்பட்டது. 30,092 முட்டைகள் சேகரிக்கப்பட்டன. 23,538 குஞ்சுகள் பொறித்தன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆமை இனத்திலே ஓங்கல் ஆமை, பெருங்கல் ஆமை, பஞ்சல் ஆமை, எலிமூஞ்சி ஆமை என்ற பல ஆமைகள் இருக்கின்றன. இதில் எந்தவித ஆமை அங்கே வளர்க்கப்படுகிறது? கடலோரப் பகுதிகளிலே வாழ்கிற மக்கள்தான் ஆமை சாப்பிடுகிறார்கள். தமிழ் நாட்டிலே உள் பகுதியிலே இருக்கிற மக்கள் ஆமை கறி சாப்பிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்று சொல்வார்கள். வேதாரண்யத்திலே ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கே ஆமை புகுந்தால் நல்லதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வேளையாக இந்த ஆமை இந்த மனிதர்கள் இருக்கிற பக்கம் தலை வைத்து படுப்பது இல்லை. ஏன் என்றால் மனிதர்களைக் கண்டால் அவ்வளவு பயம். இது கடல் ஆமை. ரெட்லி என்று சொல்லப்படுகிற ஒரு வகையான கடல் ஆமை. இது கடலில் ஒரு மிகச் சிறந்த இனமாக உயிர் இனமாக கருதப்படுகிறது. இதை இந்த மனிதர்கள் கண்ணில் படுகிறபோது இவர்கள் அடித்து தின்ன ஆரம்பித்த பிறகு இதனுடைய தொகை குறைந்து கொண்டே வருகிறது. செப்டம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதத்





திற்குள் இருக்கிற அந்த பருவ காலத்தில் இது குஞ்சு பொறிப்பதற்காக முட்டை இடுவதற்குத்தான் கரைக்கு வருகிறது. இந்த தரையில் இதைக் கண்டால் அடித்து கொல்கிறவர்கள் இருக்கிறார்கள் என்று அந்த ஆமைக்குத் தெரியாது. ஆகவே இந்த கரையில் முட்டையிடுவதற்கு வருகிற போது நாம் அதை விட்டு வைக்கவில்லை. அதை கொன்று சாப்பிடுகிறோம். இந்த முட்டையை எடுத்துக்கொண்டு போய் இது கோழி முட்டை என்று சொல்லி விற்று சாப்பிடுகிறோம். வருமானம் சம்பாதிக்கிறோம். ஆகவே இந்த சூழ்நிலையினால் கடலில் அப்படிப்பட்ட ஒரு அபூர்வமான இனம் குறைந்து கொண்டே வருகிறது என்று உலகம் முழுவதும் இதை கருதி நம்முடைய கடற்கரையில் இது அதிகமாக இருக்கிறது. இதை காப்பாற்றவேண்டும் என்று மத்திய அரசு, மாநில அரசும் முயற்சி எடுத்து தான் இந்த திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. அதிலே நமது மாநில அரசின் முயற்சிகள் மிகுந்த அளவில் பாராட்டப்பட்டு வருகிறது. இந்திய பிரதமர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள். அப்படி யாராவது இந்த கடலில் உள்ள ஆமையை பிடித்து தின்றாலோ அல்லது முட்டையை கொண்டு வந்தாலோ கடுமையான தண்டனை அளிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் நாம் இதிலே மிக சிறந்த வெற்றியை பெற்று வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் பயப்படவேண்டாம். இந்த ஆமை புகுந்த வீடு என்பது தரையில் இருக்கிற ஆமை. தரையில் இருக்கிற ஆமை இந்த மனித இனத்தோடு சேர்ந்த ஆமை. இது பாவம், கடல் ஆமை.

வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் அமைக்கும் திட்டம்.

*411*—(*வினா எண் 19493) திரு து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அங்கு திருக்குறள் ஆராய்ச்சிக்கூடம் அமைக்கும் யோசனை அரசின் ஆய்வில் உள்ளதா ?*

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

*திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலமெல்லாம் அன்னை தமிழுக்கு பெருமை சேர்க்க வெளிநாட்டு பயணிகள் எளிதில் திருக்குறளை புரிந்து தமிழின் சிறப்பை புரிந்து கொள்ள வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் போதனைக் கூடம் ஒன்றை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஒட்டிய கேள்விக்குத் தான் இல்லை என்று பதில் அளித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு மாதிரியாக கேள்வி கேட்கிறார்கள். அது தேவை இல்லை. காரணம் திருக்குறளை போதிப்பதற்கும் அதை ஆராய்ச்சி செய்வதற்கும் பல்கலைக் கழகத்தில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகையால் இந்த வள்ளுவர் கோட்டத்திற்குள் தான் இதை செய்யவேண்டும் என்று இல்லை. வள்ளுவருக்கான ஆராய்ச்சிகளும் போதனைகளும் எந்த இடத்திலும் நடைபெறலாம். அது வள்ளுவர் கோட்டம் ஒன்றில் தான் நடைபெறவேண்டும் என்று அரசு கருதவில்லை.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் விசாலமான ஒரு நல்ல பரப்பளவில் இந்த வள்ளுவர் கோட்டத்தை அமைக்காதது தான் இதை விரிவு படுத்த முடியாததற்கு ஒரு காரணம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்களா ? இந்த வள்ளுவர் கோட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சரான பின்பு தான் சுத்தமானது அதற்கு முன்பு சுத்தமானதாக இல்லை என்று எங்களைப் போன்றவர்களுக்கு தகவல் அந்த வழியிலிருந்து வந்துகொண்டிருக்கிறது. மீண்டும் அந்த் வள்ளுவர் கோட்டத்திற்கு முன்பு குப்பை கூளங்கள் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்து பல பகுதிகளை சுத்தம் செய்து இருக்கிறார்கள். உள்ளே திருக்குறள் போதிப்பதற்கு பதிலாக அந்த வளாகத்துக்கு வெளியே இருக்கின்ற இடங்களை மிகவும் சுத்தப்படுத்தி அதாவது பொது மக்கள் வந்தால், வெளியூரிலிருந்து ' பயணிகள் வந்தால் தங்கி பார்க்கக்கூடியதாக அந்த இடத்தை மீண்டும் சுத்தப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நெருக்கடியான இடத்திலே அந்தக் கோட்டம் அமைக்கப்பட்டு விட்டது என்பது உண்மை. ஆனால் அமைக்கப்பட்டதற்கு பின்பு அதை பாதுகாக்கவேண்டும் என்று அந்த சுற்றுப்புறங்களில் எல்லாம் நாம் சுத்தமாக, தவர்ச்சிகரமாக வைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அந்த வள்ளுவர் கோட்டத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற செய்தித் துறை மிகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு எதிரில் இருக்கிற இடத்தில் எல்லாம் மண்ணைப் போட்டு மூடி அங்கு ஒரு நல்ல பூங்கா வரவேண்டும் என்று கருதி, வடபுறத்தில் இருக்கிற இடத்தையும் சுத்தமாக வைத்து, பொதுவாக இருக்கிற அந்த காலி இடங்களையும் அந்த வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றி பின்னால் இருக்கிற இடங்களிலும் நல்ல அழகான நல்ல சூழ்நிலையில் சுற்றுப்புற சூழ்நிலை அமைந்ததாக இருக்கிற வகையில் செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அரசினுடைய நிதித் துறை மற்ற துறைகளுக்கு அனுப்பியது. மாண்புமிகு முதலமைச்சர் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் அனுப்பப்பட்டு இருக்கிற அந்த இடத்திற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். அது நிறைவேற்றப்பெறுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறபடி அதனுடைய சுற்றுப்புற சூழ்நிலை சுற்றுப் பகுதிகள் நல்ல அருமையான சூழ்நிலையில் அமையும், அழகான தோற்றத்தோடு அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தின் எதிரில் அண்ணா அவர்களுடைய சிலை அமைக்கப்பட்டு இருக்கிறது. அதனைச் சுற்றி முள் செடிகளும் மற்ற செடிகளும் அதிக அளவில் இருந்து மிகவும் அசுத்தமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடங்கள் சுத்தமாக 'இருப்பதற்கு அங்குள்ள முள் செடிகளையும் மற்ற செடிகளையும் எடுத்து வழி வகைகளைச் செய்வார்களா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரிலும் பக்கத்திலும் பின்னாலும் இருக்கக்கூடிய இடங்கள் எல்லாம் யாருக்குச் சொந்தமான இடங்கள் என்பதில் சில சிக்கல்கள் இருந்தன. இந்தச் சிக்கலைத் தீர்த்து அது ஒரு நிர்வாகப் பொறுப்பிலே வரவேண்டுமென்று அந்த வள்ளுவர் கோட்டத்தின் நிர்வாகத்தை வைத்திருக்கிற செய்தித் துறைப் பொறுப்பில் வரவேண்டும் என்று கேட்டு இப்போதுதான் அதைப் பெறுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது. ஆகவே நான் முன்னால் குறிப்பிட்டிருக்கிற திட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலை அமைந்திருக்கிற இடம் உட்பட சேர்ந்துதான் அழகுபடுத்தும் அந்தத் திட்டத்தில் இணைந்து வருகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் உருவச் சிலை பாதி அளவிற்குத்தான் இருக்கிறது எனற காரணத்தால், அது அவ்வளவு எடுப்பாக இல்லை என்ற காரணத்தால் அதை அகற்றிவிட்டு முழு உருவச்சிலை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

[1984 மார்ச் 23

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் முன்வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நான் வள்ளுவர் கோட்டத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். அங்குள்ள தேர் போன்ற ஒரு வடிவமும் அந்தக் கட்டடமும் பழுதடைந்து கீறிப் போயிருக்கிறது. ஆதலால் அதை அரசாங்க அதிகாரிகள் பார்வையிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கீறல்களைச் சரி செய்து இன்னும் ஸ்ட்ராங்காக அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் எந்தப் பகுதியைச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த தேர் போன்ற வடிவத்தில் கீறல் விழாது. அது கீறல் விழுவது மாதிரி அமைக்கப்படவில்லை. மேல் தள பகுதிகளில் கீறல்கள் விழுந்து இருக்கின்றன—அவசரத்தில் முடித்திருக்கிறார்கள்—அவற்றைப் பழுது பார்க்கவும் அதையெல்லாம் திருத்துவதற்கும் பொதுப்பணித் துறையினிடத்தில் நாம் அனுமதிகள் வழங்கி அவர்கள் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். தேரில் அப்படிக் கீறல் விழுந்ததாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற தகவலின் அடிப்படையில் அதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

### இந்து அறநிலையத் துறை மூலம் இலவசத் திருமணம் நடத்திவைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள்.

412—(*வினா எண் 21695) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலையத் துறை மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு இலவசத் திருமணங்கள் எத்தனை நடத்தி வைக்கப்பட்டன ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

(இ) தற்சமயம் அது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், மீண்டும் அதைத் தொடர்ந்து நடத்த அரசு உத்திரவிடுமா ?



1984 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இந்து அறநிலையத் துறை மூலம் 15-8-1981 முதல் நாளது வரை தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு 684 இலவசத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

(ஆ) திருமணங்கள் செய்யும் இந்து ஆதி திராவிட தம்பதிகளுக்கு நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ஒரு தம்பதிக்கு ரூ. 750 முதல் 1,000 வரை திருமாங்கல்யத்திற்கு வேண்டிய தங்கம் மற்றும் ஆடைகள் முதலியன வாங்கவும், இதர திருமண செலவிற்கும் கொடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(ஈ) வினா எழவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு இந்து அறநிலையத் துறை மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 684 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இவை எந்தெந்தக் கோவில்களில் நடத்தப்பட்டன ? இதற்கு அரசாங்கம் நிதி உதவி செய்யும் முயற்சியில் ஈடுபடுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மொத்தம் 940 திருமணங்கள் நடத்தி வைக்கப்பெற்றன. அதில் 684 திருமணங்கள் ஆதி திராவிட மக்கள் செய்துகொண்ட திருமணங்களாகும். நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல் அதிக நிதி வசதி அல்லது உபரி நிதி இருக்கிற ஆலயங்களிலிருந்து இந்தத் திருமணங்கள் அந்த நிதியைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருக்கின்றன. நீண்ட பட்டியல் இருக்கிறது, எந்தெந்தக் கோவில்கள் என்று தெரிவிப்பதற்கு வசதி இருக்கிற கோவில்களில், மக்கள் எங்கே தங்கள் திருமணங்களைச் செய்ய வேண்டுமென்று வேண்டுதல் வைத்திருக்கிறார்களோ அந்தக் கோவில்களில் இவை நடத்தப்பட்டிருக்கின்றன. அரசாங்கத் துறையிலிருந்து பணம் கொடுத்து இப்படிப்பட்டதொரு திட்டத்தை நிறைவேற்றுகிற திட்டம் அறநிலையத்துறையின் பொறுப்பில் இல்லை. சமூக நலத் துறை அல்லது ஆதி திராவிடர் நலத் துறை போன்ற துறைகளில் அப்படி இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டால் அந்தத் துறை அமைச்சர்கள் அதற்குப் பதிலளிப்பார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, அரசாங்கம் இதில் உதவி செய்யக்கூடிய சூழ்நிலை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்துக்கள் முஸ்லீம்களாக மதம் மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்த சமயம் இதில் அதிகமாக அக்கறை செலுத்தி அரசு இம்மாதிரி உத்தரவிட்டு இப்படி கோவில்கள் மூலம் ஏழை ஆதி திராவிட மக்களுக்கு திருமணங்கள் செய்து வைக்கப்பட்

டன. இப்போது அது குறைந்திருக்கிறது. அந்தச் சமயத்தில் பழனியில்கூட அதிகமான திருமணங்கள் இலவசமாக நடத்தி வைக்கப்பட்டுள்ளன. நானே நேரில் போய் நடத்தி வைத்தேன். ஆனால் சமீப காலத்தில் அந்த முயற்சியில் அக்கறை குறைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே ஏழை ஆதி திராவிட மக்களுக்கு இலவசத் திருமணங்கள் நடத்திவைப்பதில் புது முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருபது ஆலயங்களில் இந்தத் திருமணங்கள் நடத்தி வைக்கப்பெற்றிருக்கின்றன. பல ஆலயங்களில் நூற்றுக்கும் மேலாக திருமணங்கள் நடத்தி வைக்கப்பெற்றிருக்கின்றன. இதில், பொது மக்கள் சில ஆலயங்களில்தான் இந்தத் திருமணங்களைச் செய்து கொள்வதற்கு முன்வருகிறார்கள். பழனியில்கூட நீண்ட காலமாக அங்கு விண்ணப்பங்கள் வராமல் இருந்தது. மீண்டும் வற்புறுத்தி கேட்டு பெற்றதற்குப் பிறகு 39 திருமணங்கள்தான் அங்கே நடத்தி வைக்கப்பட்டன. வந்த விண்ணப்பங்கள் அவ்வளவுதான். பொது மக்களிடத்தில் இருக்கிற நம்பிக்கை—சில ஆலயங்களில்தான் திருமணம் செய்து கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். சில பிரார்த்தனை ஸ்தலங்களில்தான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். சில ஸ்தலங்களில் செய்து கொள்வதில்லை. அது நிறுத்தப்படவில்லை. மீண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் வருகிறபோது மீண்டும் விண்ணப்பங்கள் கேட்டுப் பெற்று அந்தத் திருமணங்களை நடத்த வேண்டுமென்றுதான் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30.)

திரு. ஏ. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்கும்போது 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரையில் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு பவுன் விலையே 1,500 ரூபாய் என்று இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட திருமணங்களை நடத்துகின்ற ஆதி திராவிட மக்களுக்கு ஒரு பவுனில் தாலி செய்கின்ற அளவிற்கும், ஆயிரம் ரூபாய்களைத் திருமணச் செலவிற்காகவும் கொடுக்கின்ற அளவிற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கின்ற திருச்செந்தூர் கோயிலில் வள்ளித் திருமணம் போன்ற பெரிய திருவிழாக்கள் நடக்கின்றன. அப்படிப்பட்ட திருவிழாக்களின்போது, இப்படிப்பட்ட திருமணங்கள் நடப்பதற்கு அரசு முயற்சியெடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் ஆலயத்தின் சார்பில் 36 திருமணங்கள்தான் நடந்திருக்கின்றன. பழனி கோயிலைப் பொறுத்தவரையில்கூட நான் இப்பொழுது சரியான புள்ளி விவரத்தைச் சொல்லுகிறேன். அந்தக் கோயிலின் சார்பாக 44 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. இதில் 39 திருமணங்கள் ஆதி திராவிட மக்களுக்குச் செய்யப்பட்ட திருமணங்கள் ; 5 திருமணங்கள் பிற்பட்டோருக்குச் செய்யப்பட்ட திருமணங்கள். திருச்செந்தூர் கோயிலைப் பொறுத்த வரையில் 36 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. இதில் 16 திருமணங்கள் ஆதி திராவிட மக்களுக்குச் செய்யப்பட்டவை ; 20 திருமணங்கள் பிற்பட்டோருக்குச் செய்யப்பட்ட திருமணங்கள். ஆகவே, எந்தக் காரணத்தினாலோ திருச்செந்தூர் கோயிலில் திருமணம் செய்து கொள்வதற்கு விண்ணப்பங்கள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் முயற்சியெடுத்து விண்ணப்பம் போட்டால் ஒவ்வொரு ஆலயத்திலும் குறிப்பிட்ட அளவிற்கு அவர்கள் செய்யலாம் என்று வைத்திருக்கிறோம். ஒரு பவுனிலே தாலி செய்து கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். தாலி அந்தச் சகோதரியின் கழுத்தில் இருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய கவலை. ஆகவே, ஓரளவிற்குக் குறைந்தபட்சம் அந்தத் தாலியை நாம் செலவு செய்து இப்பொழுது செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், தேவையானால் அதை அதிகப்படுத்துவதைப் பற்றி அறநிலையத் துறை பரிசீலிக்கும்.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு அறநிலையத் துறையின் மூலமாக இத்தனை திருமணங்கள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அறநிலையத்தின் மூலம் ஆதி திராவிட மக்களுக்குச் செய்கின்ற இதே சலுகையைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும், திராவிடர்கள் அல்லாத மற்ற இனத்தைச் சார்ந்த ஏழை மக்களுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே நம்முடைய தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களைத் தான் ஆதி திராவிடர்கள் என்று அழைக்கிறோம். மற்றவர்களைத் திராவிடர் என்று அழைக்கிறோம். திராவிடர்கள் அல்லது ஆதி திராவிடர்கள் என்று யார் வந்தாலும் அவர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும். காரணம் இந்து ஆலய நிதியிலிருந்து இந்த உதவிகள் செய்யப்படுகின்றன. ஆதி திராவிடர்கள் இந்துவாக இருந்தாலும், அல்லது திராவிடர் என்று அழைக்கப்படும் மற்றவர்கள் இந்துவாக இருந்தாலும் உதவிகள் செய்யப்படும். 940 திருமணங்களில், 684 பேர் இந்து ஆதி திராவிடர்கள் ; 190 பேர் இந்து பிற்பட்டோர் ;

66 பேர் கலப்பு மணம் செய்து கொண்டவர்கள்—இந்து மக்களிடத்திலே. ஆகவே, இப்படிப் பிரிவு இல்லாமல், இந்து என்று தன்னை ஒத்துக்கொண்டு பதிவு செய்து கொண்டு இருப்பவர்கள், வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருப்பவர்கள் யாராக இருந்தாலும் ஆதி திராவிடர்கள், திராவிடர்கள் என்று பேதம் பார்க்காமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அறநிலையத் துறை மூலம் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களில் ஒரு சாரார், அதாவது மணமகளோ அல்லது மணமகனோ ஆதி திராவிடராக இருந்தால் அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்பு மணம் செய்து கொள்பவர்கள் இருவருமே இந்து மதத்தைத் தழுவியவர்களாக இருக்க வேண்டும். வேறு மதத்திலிருந்து கலப்பு மணம் செய்து கொண்டால் சட்டம் இடம் கொடுக்காது. அப்படிக் கலப்பு மணம் செய்து கொண்ட 66 பேர் இதில் பயன் பெற்றிருக்கிறார்கள்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்து மதத்தில் ஆடம்பரமான முறையில், அதிகமான செலவில் திருமணம் செய்து கொள்வதைக் குறைக்க வேண்டும் ; தடுக்க வேண்டும் என்ற முறையில் இந்து திருமணங்களை ஆலயங்களில் நடத்துவதற்கு முன் வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கட்டணம் இல்லாமல் அனுமதித்தும், ஆலய மண்டபங்களைக் குறைந்த வாடகைக்கு அளித்தும் இந்து திருமணங்கள் ஆலயங்களில் அதிகமாக நடப்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, குறைந்த செலவில் திருமணங்கள் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஆலயங்களில் திருமணம் நடத்த வருகின்றவர்கள் வருகிறார்களே தவிர வசதி இருப்பவர்கள் யாரும் குறைந்த செலவில்தான் திருமணம் நடத்த வேண்டும் என்ற லட்சியத்தோடு வரவில்லை. இயலாதவர்கள் தான் வருகிறார்கள். அப்படி வருகின்றவர்களுக்கு உதவுகின்ற வகையில் அந்தக் கட்டணமும் 10 ரூபாய் 15 ரூபாய் என்ற அளவில்தான் வாங்குகிறார்கள். ஏனென்றால் வெகுவான வசதிகளை அங்கே செய்து கொடுக்க வேண்டி இருக்கின்றன. எனவே அதனை ஒரு ஒழுங்கு முறைக்குள் உட்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டணம் வைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அங்கே நடக்கின்ற திருமணங்கள் முறையாக, சட்டப்படி நடக்கின்றதா, என்பதை எல்லாம் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அதி





காரிக்கு இருக்கின்றது. ஆகவே அதற்காக குறைந்த கட்டணம் தான் வசூலிக்கிறார்கள். ஆனால் 10, 15 ரூபாய் கூட கொடுக்க முடியாத நிலைமையில் இருப்பவர்கள் திருமணம் நடத்த வருகிறார்கள் என்றால் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது அதை அதிகாரிகள் பரிசீலிக்கலாம். இலவசமாக அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்கிற அளவில் இருக்கின்றது என்று கருதுகிறேன். அப்படி இல்லை என்றால் அந்தக் கருத்தை அவர்களுக்கு, பரிசீலனைக்காகத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு 640 இலவசத் திருமணங்கள்தான் நடத்தி வைக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். மீனாட்சி கோயிலில்தான அதிகமான திருமணங்கள் நடந்ததாகச் சொல்கிறார்கள். திருப்பரங்குன்றத்திலும் அதிகமாக நடக்கின்றன. பழனியில் மொட்டை ஆண்டி என்பதால் அங்கே அதிகமாகத் திருமணம் நடக்கவில்லை என்று தெரிகின்றது ; திருச்செந்தூரிலே அவர் இரண்டு பெண்டாட்டிகாரரர் என்பதால் அங்கே அதிகமான திருமணங்கள் நடக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை ; ஆனால் அதே நேரத்தில் வைணவர் கோயிலில் இப்படிப் பட்ட ஆதி திராவிடர்களுக்கான திருமணங்கள் நடந்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் சொன்னதில் கூட ஒரு தவறு இருக்கின்றது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் 10 திருமணங்கள்தான் நடந்திருக்கின்றன. அங்கே அதிகமாக யாரும் விண்ணப்பிக்க வரவில்லை. அதைப்போல எந்தெந்த காரணங்களினால் ஆலயங்களில் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறார்கள் என்பதை எல்லாம் இங்கே சட்டமன்றத்திலே உட்கார்ந்து கொண்டு காரணங்களைக் கூறிக் கொண்டிருந்தால் அது தேவையற்ற வகையில் அவர்களின் உணர்வுகளுக்குள்ளே நுழைவதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழனிக்கு ஏன் அதிகம் செல்லவில்லை, திருச்செந்தூருக்கு ஏன் அதிகம் செல்லவில்லை என்று கேட்டார்கள். எந்த அடிப்படையில் அங்கே அவ்வாறு அதிகமாகச் செல்லவில்லை என்பது தெரியாது. ஆனால் இங்கே இருக்கின்ற பட்டியலில் வைணவர் கோயில் பற்றிய விவரம் இல்லை. ஆனால் வைணவர் கோயில் அல்லது சிவன் கோயில் என்ற வித்தியாசம் இல்லை. எந்த ஆலயத்தில் உபரி நிதி இருக்கின்றதோ அங்கெல்லாம் நடத்தலாம் என்று தெரிவித்திருக்கிறோம். ஆகவே ஒருவேளை வைணவ ஆலயங்கள் உபரி நிதியைப் பெற முடியாத சூழ்நிலையில் இருக்கலாம். ஆனால் ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்திற்கு உட்பட்டதுதான் சமயபுரம் கோயில். ஆகவே சமயபுரம் கோயிலில் இந்தத் திருமணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

*[1984 மார்ச் 23*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 413, 414, 415, 416, 417 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

**தாலுக்கா மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மனநோய் மருத்துவர்களை நியமிக்கும் திட்டம்.**

*418*—(*வினா எண் 13129)—திரு. இரா. தாமரைக்கனி : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் உள்ள தாலுக்கா மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மனநோய் மருத்துவர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?*

*(ஆ) மாவட்ட தலைநகரங்களில் உள்ள மனநோய்ப் பிரிவுகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?*

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

*(அ) இல்லை.*

*(ஆ) இல்லை.*

திரு. இரா. தாமரைக்கனி : *தலைவர் அவர்களே, மனநோய் கொண்டவர்கள் இயற்கை சூழ்நிலையில் இருந்தால்தான் சிறந்த பலன் கிடைக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்திக்கிறார்கள். ஆகவே நல்ல மலைவளம் உள்ள ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, குற்றாலம் முக்கடலும் சந்திக்கின்ற கன்னியாகுமரி மாமல்லபுரம் ஆகிய இடங்களில் மனநோய் மருத்துவ மனைகளை நிறுவ அரசு யோசனை செய்யுமா ?*

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே : *தலைவர் அவர்களே, மனநோயைப் பொறுத்தவரையில் சைக்யாட்ரிக் கிளினிக்ஸ் என்று நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய யோசனை போல் மேல்நாடுகளில் ரஷ்யா, போன்ற நாடுகளில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே அதிகமான டாக்ஸ் வசூல் பண்ணுகிறார்கள். அதனால் அவர்கள் நிறையச் செலவு பண்ணுகிறார்கள். மேலும் கம்பல்சரியாக சில மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் எனறெல்லாம் அங்கே சொல்கிறார்கள். ஆகவே அந்த அளவுக்கு நம்மாலே இப்போது செய்ய முடியாத காரணத்தால் நாம் என்ன செய்துகொண்டு வருகிறோம் என்பதைச் சொல்கிறேன். ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் புதிதாக ஒரு சைச்யாட்ரிக் யூனிட் ஏற்படுத்தி அந்த வகையில் மனநோய்க்கு என்று தனிப் பிரிவு ஏற்படுத்தி இருக்கிறோம்.*



*1984 மார்ச் 23]*

திரு. இரா. தாமரைக்கனி : *தலைவர் அவர்களே, மனநோய் மருத்துவமனை சென்னையில் மட்டும் இருப்பதால் அதிலும் கீழ்ப்பாக்கத்திலே இருப்பதால் கொஞ்சம் நிலை தடுமாறி இருப்பவர்களைக் கூட கீழ்ப்பாக்கத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கிண்டல் செய்கிறார்கள். மேலும மனநோய் உள்ளவர்கள் சென்னையில்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று வெளியே மற்ற இடங்களில் இருப்பவர்கள் கூறுகிறார்கள்.*

*(முற்பகல் 9-40)*

*ஆகவே சென்னையிலே உள்ள அந்த நிலையைப் போக்க மாவட்டத் தலைநகரங்களிலும், தாலூக்காகளிலும் மனநோய் மருத்துவ மனைகளை நிறுவுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு மட்டும் நான் பதில் சொல்கிறேன். வெகு விரைவிலே, இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளுக்குள்ளே ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் சைக்கிரியாட்ரிக் கிளினிக் டிபார்ட்மென்ட்டைத் துவக்க அரசாங்கம் திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறது.*

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும், அதற்கு பின்னாலே படிப்படியாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் மனநோய் மருத்துவப் பிரிவு தனியாக ஆரம்பிப்பதற்கு உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒவ்வொரு தாலுக்கா மனையிலும் தனியாக இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்படாவிட்டாலும், மாவட்டத் தலைநகரங்களில் பணிபுரிகின்ற மருத்துவரை வாரம் இருமுறையோ, அல்லது ஒரு முறையோ அங்கே சென்று வெளி நோயாளிகளாக அவர்களை பாவித்து மனநோய் இருக்கிறதா என்பதைப் பரிசோதிப்பதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா ? காரணம் என்னவென்றால், ஏழை, எளிய மக்கள் மனநோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் சென்னைக்கு வந்தோ அல்லது மாவட்டத் தலைநகரங்களுக்கு வந்தோ அவர்களால் வைத்தியம் செய்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஆகவே தாலுக்கா மருத்துவ மனைகளில் இந்த சௌகரியம் இருந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த யோசனையை ஏற்றுக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : *மாண்புமிகு தலைவர் அவர்களே, இது நல்ல யோசனையாகும்.*

[1984 மார்ச் 23

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன நோயால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ மனைகளில் சேர்ப்பதில் சில கடுமையான சட்டத் திட்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், இப்படி மனநோயால் பாதிக்கப்பட்டவர்களால் அங்கே இருக்கிற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஒரு மகஜரை காவல் துறையினருக்குத் தரவேண்டும். காவல் துறையினர் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே சிறிய நகரங்களிலும், தாலுக்கா நகரங்களிலும் மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ மன நோய்க்கு வருவதற்கு இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கிறதால், அவர்கள் தாராளமாக கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனையில் சேர்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது. அந்தச் சிக்கலை ஒட்டிதான் இப்படிப்பட்ட உத்தரவு ஏறத்தாழ 40, 50 ஆண்டுகளாக, பிரிட்டிஷ் ஆட்சியிலே இருந்தே நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. போலீஸ்காரர்கள், மனநோயால் அவதிப்படுகிற நோயாளியால் மக்கள் பயங்கரமாக பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. He is likely to be violent and cause violence to his relations and neighbours என்று திட்டவட்டமாக சொல்வார்களானால் அப்போது தான் அவர்களை மருத்துவமனையில் சேர்க்கலாம். இல்லாவிட்டால் இரண்டு டாக்டர்கள், அரசாங்க டாக்டர் ஒருவர், தனியார் டாக்டர் ஒருவர் அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுத்து அதற்கு பிறகு அவர்களை அங்கு சேர்க்கலாம். இப்படி கடுமையான முறையில் நாம் நிலைமைகளை வகுக்கவில்லை என்றால் என்ன ஆபத்து வந்துவிடுகிறது என்றால், யாராவது ஒருவரை பிடிக்கவில்லை என்றால் அவர்களை மனநோய் மருத்துவமனையில் சேர்த்து, அவர்களுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது என்று பழி வாங்குவதற்கு இதனைப் பயன்படுத்துவார்கள். நாம் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டாக இல்லையென்றால் இவர்கள் இப்படி பழி வாங்கப்படுவார்கள் என்ற காரணத்தினால் தான் நாம் ஸ்ட்ரிக்ட்டாக இருக்கிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் போன்ற இடங்களில் மனநோய் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவ மனைகளை வைத்திருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு விலங்குகளைப் போட்டும், மிகக் கடுமையான முறையில் அடித்து துன்புறுத்தியும் சிகிச்சையளிப்பதாக செய்திகள் வருகின்றன. அப்படிப்பட்ட தனியார் மருத்துவ மனையில் பாதிக்கப்பட்டவர்கள் துன்புறுத்தப்படுவதை, கண்காணிப்பதற்கும், அதைத் தடுப்பதற்கும் அரசு வழி வகைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய முழு விவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்களானால் உடனடியாக காவல் துறை மூலமாகவோ அல்லது நம்முடைய இலாக்கா மூலமாகவோ நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பது உண்மையா? மனநோய் வருவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை அரசாங்கம் ஆய்ந்துள்ளதா? கிராமப் பகுதிகளில் மன நோயாளிகளை கோவில்களுக்கு கொண்டு போய் மன அமைதி ஏற்படுத்தி குணமாக்குவது அரசிற்கு தெரியுமா? மன நோயாளிகளை இயற்கை வளம் நிறைந்த இடங்களுக்கு கொண்டு செல்ல அரசு விளம்பரம் செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன நோயாளிகளுடைய எண்ணிக்கை படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது என்பது உண்மை. ஏனென்றால் இந்த மெண்டல் ஆஸ்பத்திரிகளில் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஒரு பிரஷர் இப்போது கிடையாது. ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டு வருகிறது. மன நோயை குணப்படுத்த பல்வேறு வகைகள், முறைகள் இருக்கின்றன. ஆகவே, தான், நான் மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன். மன நோயாளிகளை உடனடியாக மருத்துவ மனையிலே சேர்ப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே தான் பதில் சொல்லி இருக்கிறேன்.

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், வசதி படைத்தவர்களாக இருந்தால், அவர்களுடைய உறவினர்களுக்கு நாம் தகவல் கொடுத்து, பிறகு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை நாம் அறிகிறோம். ஆனால், திக்கற்றவர்கள், வசதியற்றவர்கள் மன நோயால் பாதிக்கப்பட்டால், அவர்களைப் பற்றி எந்தவிதமான தகவலும் அரசுக்கோ, போலீசுக்கோ கொடுக்க முடியாத நிலையில் அவர்களால் பொதுமக்களுக்குத் தொல்லையும், பொது மக்களால் அவர்களுக்குத் தொல்லையும் ஏற்படுகிறதே அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 23

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன நோயால் அவதிப்பட்டு, ஒரு நோயாளி மருத்துவமனையில் சேர்க்கப்படுவாரானால், உடனடியாக அவருடைய உறவினர்களுக்கு தகவல் கொடுத்து விடுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏழை எளியவர்களாக இருந்தால், தகவல் கொடுக்கப்படுகிறதா என்று கேட்கிறார்கள். அந்த நோயாளிக்கு உறவினர்கள் இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரிந்த உடனே, நாம் தகவல் கொடுத்துவிடுகிறோம். இல்லை என்றால், அந்த நோயாளியினுடைய உறவினர், சொந்தக்காரர், யாருடைய பாதுகாப்பிலே இருக்கிறார் என்கின்ற தகவல் கிடைக்காமல் போய்விடும். ஆகவே தான், அப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்கு அவர்கள் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்ட உடனே அவரது சொந்தக்காரர்களுக்கு தகவல் கொடுக்க முடியால் போய்விடுகிறது. இருந்தாலும், ஏழை எளியவர்களாக இருந்தாலும், மற்றும் யாராக இருந்தாலும், நாம் உடனடியாக அவர்கள் சொந்தக் காரர்களுக்கு தகவல் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

தாரமங்கலம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் திட்டம்.

*419—(*வினா எண் 16772)* திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் (Upgrade) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் நடப்பு ஆண்டில் (1983–84) தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82, 1982–83 ஆம் ஆண்டுகளில் சில ஆரம்ப சுகாதார நிலயங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதன் தரம் உயர்த்தப்பட்டு, அங்கே படுக்கை வசதிகள், அறுவை சிகிச்சை வசதிகள் போன்ற வசதிகள் செய்து கொடுத்திருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், 1983–84 ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதுவும் தேர்வு செய்யப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. இருந்தாலும் வரயிருக்கின்ற ஆண்டில் தேர்வு செய்யப்பட்டு, தரம் உயர்த்தப்படுகின்ற நேரத்தில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதனுடைய தரத்தை உயர்த்த அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82-ல் 15 இடங்களை நாம தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரம் உயர்த்தப்பட்டு, அவைகள் தாலுகா மருத்துவமனை தரத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். 1982–83 ஆம் ஆண்டில் மேலும் 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை அந்த அளவுக்கு கொண்டு வநதிருக்கிறோம். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1981–82ல் அந்த முறையில் எருமைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தியிருக்கிறோம். அதேமாதிரி, 1982–83 ஆம் ஆண்டில் நாமகிரிப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தியிருக்கிறோம். up-grading th: Public Health C ntre to the level of th: Taluk Headquarters Hospital 1983–84 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், 12 இடங்களில் நாம் அப்-கிரேட் செய்யாமல், 'டியூபக்டெமி'க்கான வசதிகளை செய்து கொண்டிருக்கிறோம்.

அரசு மருத்துவமனைகளில் 'அக்யூ பஞ்சர்' மருத்துவ முறையில் சிகிச்சையளிக்கும் திட்டம்.

*420—(*வினா எண் 16841)* திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் 'அக்யூபஞ்சர்' மருத்துவ முறையில் சிகிச்சைகள் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) சென்னை, அரசு பொது மருத்துவமனையில் அக்யூபஞ்சர் மருத்துவத்துறையில் சிகிச்சை செய்யப்படுகிறது.

(ஆ) தமிழ்நாட்டில் அக்யூபஞ்சர் முறை முதல் முதலாக சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் துவக்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டில் 5,000 நோயாளிகளுக்கு இந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. இச்சிகிச்சை நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டதில் பெரும்பாலானவர்களுக்கு சதைப்பிடிப்பு மற்றும் வலிகள் முதலியவைகளுக்கு மட்டும்தான நிவாரணம் அளித்துள்ளது.

[1984 மார்ச் 23

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு, தனியார் துறையிலே ஏராளமானவர்கள் அக்யூபஞ்சர் முறையில் வைத்தியம் செய்வதற்கு நாங்கள் கற்றுத் தருகிறோம். பயிற்சி தருகிறோம் என்று சொல்லி, பத்திரிகையிலே விளம்பரம் செய்து கொண்டு, பல இன்ஸ்டிடியூட்டுகள் வைத்திருக்கிறார்கள். என்பது தெரியுமா? அவைகள் சரியான முறையில் செயல்படுகின்றனவா? நிஜமாகவே அவர்களுக்கு அக்யூபஞ்சர் பற்றி ஏதாவது தெரியுமா? அவர்கள் கொடுக்கிற சான்றிதழ்கள் wh th'r it is valid என்பதுபற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is not a valid post graduate qualification. ஆகவே, இந்தப் பிரச்னையே எழவில்லை. சிலர் இதுபற்றி நாம் கற்றுக் கொடுக்கிறோம் என்று சொல்வதை இப்பொழுது இருக்கக்கூடிய நம்முடைய சட்ட வரம்புக்குள்ளே தடுக்க முடியாது. ஆனால் அவர்கள் கொடுக்கின்ற சர்ட்டிபிகேட் போஸ்ட் கிராஜுவேட் சர்ட்டிபிகேட் அல்ல. நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்.

This acupunture does not come in within the post graduate qualification.

திரு. ரா. கிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அக்யூபஞ்சர் முறை பழங்காலத்திலேயே இருந்ததாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே மயக்க மருந்து—அனிஸ்தீசியா—கொடுப்பதற்கு மிக சுருக்கமான செலவிலே, ஆப்ரேஷன் செய்ய மிக வசதியாக இருக்கிறது என்று சீனாவிலே, மிகவும் பரவலாக ஆக்கப்படுகிறதே, அதைத் தமிழ்நாட்டிலும் மிக அதிகமாகப் பரவலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் கொடுக்கின்றபோது தெரிவித்த மாதிரி, இதைப் பரவலாக்க வேண்டும், இதற்கு ஒரு வாய்ப்பு தர வேண்டுமென்பதற்காக, ஸ்டான்லி மருத்துவ மனையில் நாம் ஆரம்பித்தோம். ஆனால் அங்கேயே, பல டாக்டர்கள் இது ஏற்றுக்கொள்ளக்கூடிய முறை அல்ல; அனீஸ்தீஷியாவுக்குக் கூட இதைப் பயன்படுத்தினோம். ஆனால் முழுமையான அனிஸ்தீஷியா இதில் நமக்குக் கிடைக்கவில்லை—சரியான வகையிலே அறுவை சிகிச்சை செய்ய முழு அனிஸ்தீஷியா கிடைக்கவில்லை. வலி இருந்தால், அந்த வலியைக் குறைப்பதற்காக to reduce the muscular pain அதற்கு மட்டும் பயன்படு



1984 மார்ச் 23]

கிறது என்கிற கருத்தை அங்கே இருக்கிற சிறப்பு மருத்துவ அதிகாரிகள் சொன்னார்கள். ஆகவேதான ஸ்பெஷலிஸ்ட்ஸ் பரிந்துரை அடிப்படையிலே நாங்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டோம். 1973-லேயிருந்து 1978 ஆம் ஆண்டு வரையில் ஸ்டான்லி மருத்துவமனையில் வைத்திருந்தோம். இப்பொழுது அது சென்னை பொது மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

திருவிடை மருதூர் தாலுகா தலைமை மருத்துவமனையில்
சித்த வைத்தியப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

(421—*வினா எண். 18385) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகா தலைமை மருத்துவமனையில் சித்தவைத்தியப் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ): தற்போதில்லை.

புதிய டாக்டர்களை நியமிக்கும்போது ஆரம்ப சுகாதார
நிலையங்களில் பணிபுரிய வைக்கும் திட்டம்.

422—(*வினா எண் 19148)—திரு. பி. எம். தங்கவேல் ராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழவுத் துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக டாக்டர்களை நியமிக்கும்போது அவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாவது பணிபுரிய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) தற்போது 3 ஆண்டுகளுக்கு மேல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் டாக்டர்கள் அரசு மருத்துவமனைகளுக்கு மாற்றப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) புதியதாக மருத்துவர்களை நியமிக்கும்பொழுது, பட்ட மேற்படிப்பு தகுதி பெறாத மருத்துவர்களை கண்டிப்பாக 2 வருடங்கள் கிராமப் புறங்களில், குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிய வேண்டும் என்ற அரசு உத்தரவு தற்போது உள்ளது.

(ஆ) தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 முதல் 8 ஆண்டுகளுக்கு மேலாகப்பணிபுரிந்து வரும் மருத்துவர்களை அரசு மருத்துவமனைகளுக்கு மாற்றும் சாத்யக்கூற்றினை ஆராயுமாறு இயக்குநர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது புதிதாக டாக்டர்களை நியமிக்கும்போது, வாய்ப்பும் வசதியும் அதிகார பலமும் உள்ளவர்கள் நேரடியாகப் பொது மருத்துவ மனைக்கு வந்து விடுகிறார்கள். ஏழை, எளிய டாக்டர்கள், அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த டாக்டர்கள் மட்டும்தான் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே வேலை செய்யக்கூடிய டாக்டர்களிலே ஏறக்குறைய 75 சத விகிதம் டாக்டர்கள், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அரசாணையை நான் படிக்கிறேன்.

'The Tamil Nadu Second Pay Commission has, inter-alia recommended that taking into account the large number of qualified medical personnel available . . . . .

என்று போட்டு விட்டு.

'They accordingly direct that newly graduated doctors who have completed their internship, on appointment as Assistant Surgeon in the Tamil Nadu Medical Service be made to work compulsorily in non-teaching Medical Institutions in rural areas, especially in Primary Health Centres during the first two years of their service without removing the benefit of compensatory allowance.'

என்கிற ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையிலே தான் இப்போழுது மூலக் கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வி கேட்கிறார்கள். செல்வாக்கு படைத்தவர்கள் எல்லாம் வந்து விடுகிறார்களா, என்று. கண்டிப்பாக அப்படி செய்யக் கூடாது என்று நாம் சொல்லியிருக்கிறோம்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சர்வீஸ் கமிஷன் வாயிலாகத் தேர்தெடுக்கப்பட்ட மருத்துவர்களைப் போடுகிறபோது, என்னுடைய தொகுதியில் உள்ள தம்பம்பட்டி அரசு மருத்துவ மனை தலைமை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பெண் மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. அங்கே ஒரு பெண் மருத்துவர் வேண்டும் என்று நான் பல முறை முயற்சித்தும், அமைச்சர் அவர்களைப் பார்த்து வற்புறுத்திச் சொல்லியும், அங்கே பெண் மருத்துவர் பதவி காலி இருந்தும், அங்கே பெண் மருத்துவர் நியமிக்கப்படாமல் இருப்பதற்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பல முறை கேட்டும், அங்கே ஏற்கனவே பெண் மருத்துவர் பணி செய்து இருந்து, தற்போது காலியாக 3 ஆண்டுகாலமாக இருந்தும், அந்த போஸ்ட் நிரப்பப் படாமல் இருப்பதற்கான காரணம் என்ன? கிராமப்புறங்களில் பெண் மருத்துவர் பதவி நிரப்பப் படாமல் இருப்பதால் மிகவும் கஷ்டமான நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பதவியை விரைவில் நிரப்ப அரசுமுன் வருமா ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் அதற்கான விண்ணப்பத்தை கொடுத்து இருந்தார்கள். உடனடியாக அங்கே பெண் மருத்துவர் நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் சொல்லி இருக்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் இருந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று அறிகிறேன். அந்தப் பதவியை நிரப்ப நடவடிக்கை எடுக்காத அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதன் முதலாக டாக்டர்களைப் போடுகிறபோது அவர்கள் அங்கே 3 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்ற விதியை கண்டிப்பான முறையில் அவர்கள் ஏற்றுகொண்டால்தான் தொடர்ந்து அரசாங்க சர்வீசில் அவர்கள் இருக்க முடியும் என்ற நிர்பந்தத்தின் மூலம் இன்று கிராமத்தில் டாக்டர்கள் நியமனம் செய்யப்படுகிற நிலைமை இல்லை. இப்போது கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது ரப்பர் தோட்டத்திற்கு டாக்டர்களைப் போட்டோம், யாருமே வரவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, கிராமப் புறங்களில் பணி செய்யும் டாக்டர்களுக்கென விசேஷமான முறையில் ஏற்பாடுகளைச் செய்வதற்கு குறிப்பாக போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, போன்ற இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்து, அந்தக் கிராமங்களிலேயே அவர்கள் தங்கி வேலை செய்கிற கஷ்டத்தைக் குறைக்கும் வகையில் அரசு ஏற்பாடுகளைச் செய்து டாக்டர்களை அனுப்ப ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இது ஒரு நியாயமான கோரிக்கை. அந்த அடிப்படையிலே தான் நாம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கின்ற நிலைமைகளை உயர்த்தி, அங்கே டாக்டர்களைப் போட வசதிகளைச் செய்து வருகிறோம். படிப்படியாக, பேஸ்ட் ப்ரோக்கிராம் என்ற வகையில், ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிசெய்கிற டாக்டர்களுக்கு இந்த வசதி செய்து கொடுத்து வருகிறோம்.

[1984 மார்ச் 23

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக டாக்டர்களை நியமிக்கும்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவர்கள் வேலை செய்ய வேண்டும் என்ற கருத்துக்கு உறுப்பினர்களிடையே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை என்று கருதுகிறேன். ஆனால் அப்படி டாக்டர்களை நியமிக்கிறபோது, அந்தந்த மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கிற டாக்டர்களை அந்தந்த மாவட்டங்களிலேயே போடுவதற்கு அரசு முன்வருமா? தற்போது வடஆற்காடு மாவட்டத்தில் உள்ளவர்களை திருநெல்வேலி மாவட்டத்திற்கும் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருப்பவரை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நெல்லை இருக்கிறவர்களை தென்னாற்காடு மாவட்டத்திற்கும் று போடுகிறார்கள். இது போன்ற நிலைமையை மாற் அந்தந்த மாவட்டத்திலேயே போட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக, பல்லாண்டு காலமாக அரசாங்கத்திலே ஒரு முறை இருக்கிறது. சொந்த மாவட்டங்களிலேயே போடக்கூடாது என்ற முறை இருக்கிறது. அப்படிச் செய்தால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. டாக்டர்களுக்கும் சிக்கல் ஏற்படுகிறது. அவர்களுக்கும் விருப்பு, வெறுப்பு இருக்கும். சொந்தக்காரர்கள் தொல்லை இருக்கும். பல டாக்டர்கள் கேட்கிறார்கள், எங்களுக்குச் சொந்த மாவட்டத்தில் போடாதீர்கள், வேறு எங்காவது போடுங்கள் என்று அதற்காக சொந்த மாவட்டத்தில் இருக்கக்கூடாது என்று. கட்டாயம் அல்ல. On the merit of the case decision is taken சில இடங்களில் இருக்கலாம், சில இடங்களில் இல்லாமல் இருக்கலாம் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் மருத்துவர்களைப் போடுவதை பரிசீலிக்கலாம். ஆனால் திட்டவட்டமாக சொந்த மாவட்டத்திலே தான் அவர்களைப் போட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது பட்டப்படிப்பு படித்தவர்தான ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிய அனுப்பப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். சில இடங்களில் பட்டப்படிப்பு, மேற்பட்டப் படிப்பு படித்த டாக்டர்கள் கூட வேலை செய்கிறார்கள். தாலுக்கா மருத்துவ மனைகளில் தற்போது பட்டப்படிப்பு படித்த டாக்டர்கள் தான் இருக்கிறார்கள். மேல்பட்டப்படிப்பு படித்த டாக்டர்கள் இல்லை. ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேல்பட்டப்படிப்பு படித்த டாக்டர்களை நியமிப்பதால் அவர்களுடைய முழுத் திறமையையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியாது. ஆகவே, அவர்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் பட்டமேற்படிப்பு படித்த டாக்டர்களை தாலுக்கா மருத்துவ மனைகளில் நியமிக்க அரசு முன்வருமா?



1984 மார்ச் 23]

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பட்ட மேல்படிப்பு (போஸ்ட் கிராஜுவேட்) படித்த டாக்டர்களை கூடிய அளவுக்கு அவர்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய இடங்களில் நியமிக்கிறோம். உதாரணமாக டி.சி.எச். குவாலிஃபிக்கேஷன் உள்ளவர் இல்லாவிட்டால் எம். டி. குவாலிஃபிக்கேஷன் உள்ளவரை ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நியமிப்பதாக இருந்தால் அவர்களுடைய முழு திறமையையும் அங்கே பயன்படுத்த முடியாது. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்ன மாதிரி தாலுகா மருத்துவமனைகளில் அவர்களுடைய திறமை முழுவதையும் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதால் அங்கே அவர்களை நியமனம் செய்யலாம். ஆனால் அங்கே தான் நியமிக்க வேண்டுமென்று 'பிளாங்கட் ஆர்டர்' போட முடியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் மீண்டும் செயல்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்படும்.

பனை வாரியம் அமைக்கும் திட்டம்.

423—(*வினா எண். 18990) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த வாரியம் அமைக்கப்படுவதற்கு ஏற்கெனவே ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. அது மத்திய அரசின் காதி கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, மீண்டும் அந்த வாரியத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, மாநில பனை, தென்னை தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக இந்த கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பனைத் தொழில்களுக்கு என்று தனி வாரியம் உருவாக்குவது என்பது பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தேசீய அளவில் ஆய்வு செய்ய வேண்டிய ஒன்றாகும். அதற்கு ஏற்ப தமிழக அரசு இதுபற்றி பரிசீலனை செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவரவர்களே, பனைத் தொழில் மையங்களை மாவட்டந்தோறும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படிப்பட்ட எத்தனை மையங்களை தமிழகத்தில் அமைக்க அரசு எண்ணியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே பனை பொருள் உற்பத்தி மையம் தமிழகத்தில் தற்போது தர்மபுரி மாவட்டத்திலுள்ள மாத்தூரிலும், புதுக்கோட்டையிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம் குமரபுரத்திலும் செயல்படுகின்றன. மேலும் தென்னாற்காடு மாவட்டத்தில் மா. புதூர், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானூர், வடஆற்காடு மாவட்டத்தில் மங்கலம் மாமண்டூர், திருநெல்வேலி மாவட்டத்தில் அந்தோணியார்புரம், மதுரை மாவட்டத்தில் கோவிலூர், கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு, சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் ஆகிய இடங்களில் பனைபொருள் மையங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பனை ஏறும் தொழிலாளர்களுக்கு கடன் வழங்கும்போது 20 பேர், 30 பேர்களைச் சேர்த்து வழங்குவதால் அந்தத் தொழிலாளர்களுக்கு அரசு மானியம கிடைக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் ஒவ்வொரு தொழிலாளருக்கும் தனித்தனியாக கடன் வழங்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் அரசின் கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. இந்தக் கருத்து அரசின் கவனத்திற்கு வந்தபின்னால் அரசு ஆய்வு செய்யும்.





அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் அமைக்கும் திட்டம்.

424—(*வினா எண். 20660) திரு. சி. கணேசன்: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களில் இயங்குகின்றன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு சி. கணேசன்: தலைவரவர்களே, அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராம நூற்புக் கூடங்கள் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள் கிராம நூற்புக் கூடங்கள் என்பது முழுக்க முழுக்க வேலை வாய்ப்பில் தாய்மார்களுக்குப் பயன்படும் என்பதால் அரசு இதற்கு ஊக்கமளித்து வருகிறது. ஆகவே, இந்த கதர்துறையின் சேவை நடவடிக்கை அச்சிறுப்பாக்கம் தொகுதியிலும் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக எதிர்காலத்தில் ஆனால் மிகக் குறுகிய காலத்திலே அங்கே செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, தற்போது அச்சிறுப்பாக்கம் தொகுதியில் நூற்புக் கூடம் தொடங்கும் குறிப்பு எதுவும் இல்லை என்றாலும், அங்கே அதற்கு ஏற்ற வசதிகளும் சான்றுகளும் இருக்குமானால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

*Developing Mandapam as a Major Fishing Research Centre.*

425 **Q. No.* 19161 THIRU P. VENKATASUBRAMANIAM: Will the Hon. the Minister for Fisheries be pleased to state—

(*a*) whether the Government have examined the necessity to develop Mandapam as a Major Research Centre in fishing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) மற்றும் (ஆ): தற்போது மண்டபத்தில் சிறிய அளவிலான ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதனை பெரிய அளவில் அபிவிருத்தி செய்யும் திட்டம் பரிசீலனையில் இல்லை. மேலும் மண்டபத்தை பெரிய அளவிலான மீன் ஆய்வகப் பகுதியாக அபிவிருத்தி செய்யும் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

[1984 மார்ச் 23

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே இருக்கின்றது போல், இந்த மீனள ஆராய்ச்சி நிலையத்தை மண்டபத்தில் விரிவாக்கம் செய்ய அரசு மீண்டும், பரிசீலனை செய்ய முயலுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையிருப்பின் துறை பரிசீலித்து ஆவன செய்யும் என்று கூறுகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் இருக்கின்ற ஆராய்ச்சி நிலையம், மத்திய அரசால் நிறுவப்பட்ட 'சென்ட்ரல் மெரின் சென்டர்', அதைத் தவிர்த்து, மாநில அரசு நடத்துகிறதா? அல்லது அரசு நடத்துவதற்கு முற்படுவார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் மாநில அரசின் சார்பிலே ஒரு ஆய்வகம் இருக்கிறது. மத்திய அரசின் சார்பிலும் அங்கு ஒரு ஆய்வகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்திலே பெரும்பாலும், கடற்கரைப் பகுதிகள் அதிகமான அளவில் இருக்கின்றன. அங்கே இறால் மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. எனவே தமிழக அரசு மீண்டும் பரிசீலனை செய்து, ஒரு பெரிய ஆய்வுக்கூடம் ஏற்படுத்துவதற்காக முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: அரசு பரிசீலிக்கும்.

## ஆறுகாட்டுத் துறையில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்.

426—(*வினா எண். 20339) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் ஆறுகாட்டுத் துறையில் மீன்பிடித்துறைமுகம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள். முடிவுற்றன.



1984 மார்ச் 23]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

## சென்னை கோடம்பாக்கம் அரசினர் மாணவர் இல்லத்தில் சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல்.

1—வினா 1813— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள அரசினர் மாணவர் இல்லத்தில் சுகாதார வசதிகள் குறைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைபாடுகளைக் களைய அரசு எடுக்கும் நடவடிக்கைகளின் விவரம் என்ன?

விடை—

(அ) சென்னை, கோடம்பாக்கம் அரசு ஆதி திராவிட கல்லூரி மாணவர் விடுதியில் சுகாதார வசதிகள் குறைந்திருப்பது சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் ஆகியோர் மூலம் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) அரசாணை நிலை எண் 1747, சமூக நலத்துறை, நாள் 13—3—1981 இல் கோடம்பாக்கம் விடுதியில் மின் இணைப்பு, கதவு, சன்னல், அலமாரிகள் ஆகியவற்றினை பழுது பார்ப்பதற்கு ரூ. 33,800 செலவுத் தொகை அளிக்கப்பட்டது. சுகாதார வசதிகளான கழிவறை மற்றும் குளியலறைகளில் உள்ள மின் இணைப்புகள் அவற்றின் கதவு, சன்னல், அலமாரிகள் ஆகியவை உட்பட அனைத்தும் பழுது பார்க்கும் வேலையும் நிறைவு பெற்று வழங்கப்பட்ட செலவுத் தொகை அனைத்தும் செலவழிக்கப்பட்டுவிட்டது என்று தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி வாரியத்தின் வேளாண்மை இயக்குநர் கூறியுள்ளார்.

## சிவகாசி நகராட்சி சிறுகுளம் பகுதியில் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்.

2—வினா எண். 2724—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசி நகராட்சியில் சிறுகுளம் பகுதியில் நகரசுத்தி தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

விடை—இல்லை.

[1984 மார்ச் 23

தானிப்பாடி கிராமம் அருகே கட்டப்பட்ட ஏரி.

3—வினா 3894—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தானிப்பாடி கிராமத்தில் சுமார் 3 ஆண்டுளுக்கு முன்பு புதியதாக கட்டப்பட்ட ஏரியில் இருந்து பாசனத்திற்கு கால்வாய் வெட்டி தண்ணீர் நில பாசனத்திற்கு பயன் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): செங்கம் வட்டம், தானிப்பாடிகிராமத்தின் அருகில் பாசனத்திற்காக ஒரு ஏரி 1979 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இந்த ஏரியில் உள்ள இரண்டு மதகுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள் முறையே 46.01 ஏக்கரும் 37.19 ஏக்கரும் பாசனம்பெற வேண்டும். ஏரியின் கீழ்ப்புறம் நிலத்திற்கு பாயும் கால்வாயை நிலத்தின் சொந்தக்காரர்களே தங்களது செலவில் குடிமராமத்தின் கீழ் வெட்டிக் கொள்ள வேண்டும். மதகுகளிலிருந்து பாசனம் பெறக்கூடிய ஆயக்கட்டு களுக்கு வாய்க்கால் செல்லக்கூடிய பூமியின் மட்டங்கள் (Level of the fields and alignment of the bothies) பொதுப்பணித் துறை அதிகாரிகளால் பார்வையிடப்பட்டு, ஒவ்வொரு மதகுகளின் ஆயக்கட்டுதாரர்களின் முன்னிலையில் பூமியில் காண்பிக்கப்பட்டு அவர்களது யோசனைகளையும் கருத்தில் கொண்டு, வாய்க்கால் வெட்ட வேண்டிய மார்க்கம் பூமியில் அவர்களுக்கு காண்பிசகப்பட்டு விட்டது எனவும் மதகுகளுக்கு கம்பி கட்டைகள் போடப்பட்டு, வருவாய் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் இனி அவர்களே சொந்த செலவில் தங்களது நிலத்திற்கு கன்னி வாய்க்கால்களை வெட்டிக் கொள்ள வேண்டும் எனவும் சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவிக்கிறார்.



1984 மார்ச் 23]

ஆசிரியர் பயிற்சி முடித்து வேலையின்றி இருப்பவர்கள் எண்ணிக்கை.

4—வினா 4454—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சி படித்துவிட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்கள் மாவட்ட வாரியாக எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களில் ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) 28—2—1981 அன்றைய நிலவரப்படி தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக காத்திருக்கும் ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 39,364 ஆகும் மாவட்ட வாரியான விவரங்கள் இணைப்பு 1-ல் **காணலாம்

(ஆ) அவர்களில் ஹரிஜன் வகுப்பை மட்டும் சார்ந்தவர்கள் 2,320 நபர்கள் ஆகும். மாவட்ட வாரியாக விவரங்கள் இணைப்பு 2-ல் *** கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) ஆசிரியர் பயிற்சி படித்துவிட்டு வேலையின்றி இருப்பவர்கள் அனைவருக்கும் அரசாங்கமே வேலை வாய்ப்பு அளிக்க இயலாது: பள்ளிகளில் தேவையான அளவிற்கு மட்டும் அந்தந்த ஆண்டுகளில் ஒதுக்கப்படும் நிதி நிலைமைக்கு ஏற்ப, புதிய ஆசிரியர்ப்பணி இடங்களை அரசு அனுமதிக்கிறது. ஆசிரியப் பயிற்சி முடித்த அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதென்றால் அரசுக்கு நிதிச் செலவு மிகவும் அதிகமாகும்.

** 180–183-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.
*** 184–187ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 23

1980-81-ஆம் ஆண்டில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களும் 1981-82 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் புதிய ஆசிரியப் பணியிடங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆசிரியப் பணியிடங்கள் வகை. | 1980-81-ல் தோற்றுவிக்கப்பட்ட பணி யிடங்கள். | 1981-82-ல் எதிர்பார்க்கப்படும் பணி யிடங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இடைநிலை ஆசிரியர்கள் .. | 1,000 | 1,000 |
| 2. உடற்பயிற்சி ஆசிரியர்கள் | 200 | 250 |
| 3. நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியப் பணி இடங்கள். | 200 | 200 |
| 4. நடுநிலைப்பள்ளி தமிழாசிரியர் பணி இடங்கள். | .. | 500 |
| 5. உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பட்டதாரி ஆசிரியர் பணி இடங்கள். | 200 | 200 |
| 6. மேல் நிலைப்பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியப் பணிகள். | 2,100 | .. |
| 7. மேல் நிலைப்பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்கள். | 200 | .. |

ஆசிரியப் பயிற்சிப் படித்து வேலையின்றி இருக்கும் ஹரிஜன ஆசிரியர்களுக்கென தனி பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுவதில்லை. ஏற்படும் காலியிடங்களிலும் புதிதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களிலும் ஹரிஜன ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரப்படி பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.



1984 மார்ச் 23]

ஏழை மீனவர்களுக்கு இலவச ரேஷன் மற்றும் நிவாரணம் வழங்கல்.

5—வினா 6271—திரு. ச. பாரமலை: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இயற்கையின் சீற்றத்தின்போது, கடலில் மீன் பிடிக்கச் செல்ல முடியாத போதும், போதுமான மீன் கிடைக்காத காலங்களிலும் பட்டினியால் வாடும் ஏழை மீனவர்களுக்கு திருவிதாங்கூர்—கொச்சி நிர்வாகத்தின் காலத்திலும், அதற்குப் பின் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், இலவச ரேஷன் மற்றும் நிவாரணமும் அளிக்கப்பட்டு வந்ததாகச் சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தற்சமயம் வறட்சியாலும், மீன் கிடைக்காமலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு அதே உதவிகளைச் செய்ய தமிழக அரசு முன் வருமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): புயல் மற்றும் பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசினால் நிவாரணம் அளிக்கப்படுகிறது. இதுபோன்ற நிவாரணம் 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் மீனவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மீன் கிடைக்காத பருவ காலங்களில் நிவாரணம் அளிக்கும் பொதுவான திட்டம் ஒன்றை இந்த அரசு வகுத்துள்ளது.

கடற்கரையோரம் வசிக்கும் மீனவர்கள் ஓர் ஆண்டில் சுமார் மூன்று மாத காலம் அதாவது கடலுக்குப் போக முடியாத பருவ நிலையாலும் மற்றும் கடல் பருவ நிலை மாற்றத்தால் மீன்களின் இடப்பெயர்ச்சி காரணமாக மீன்கள் இல்லாமையாலும் நிலையான வருவாய் வாய்ப்பின்றி இருக்க நேரிடுகிறது. எனவே இந்த நிலையான வருவாய் வாய்ப்பு இல்லாத 3 மாத காலத்திற்கு அவர்களுக்கு ஒரு குறைந்த அளவு உதவி வழங்கவும் அதே சமயம் அது அரசு அளிக்கும் மானியமாக மட்டும் அமைந்து விடாது. அவர்களுக்குச் சேமிப்பு வழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கடற்கரை மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணம் என்ற திட்டத்தை வகுத்து அதனை 1-6-1982 முதல் செயற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் படி—

மீனவர்கள் முறையாக, வருவாய் கிடைக்கும் 9 மாதங்களிலும் மாதந்தோறும் ரூ. 10 வீதம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் மீனவர்களுக்கு தலா ரூ. 90 வீதம் அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு ஒவ்வொரு மீனவர்க்கும் ரூ.180 (ரூ.90×90) சேமிக்கப்படுகிறது.

இத்தொகை முறையான வருவாய் இல்லாத மூன்று மாதங்களுக்கும் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் ரூ. 60 வீதம் வழங்கப்படும்.

மீனவர்களால் மாதந்தோறும் செலுத்தப்படும் ரூ. 10 மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வசூலிக்கப்பட்டு மீன்துறை உதவி இயக்குநர் இயக்கும் தனி நிதியின் கீழ் இருப்பு வைக்கப்படும். மூன்று மாதங்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ரூ. 60 மீன்துறை ஆய்வாளர்கள் மூலம் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் சேர்ந்தவர்கள் மட்டுமே இதனால் பயன் அடைவார்கள். தமிழ்நாட்டு மீனவர்களின் நல்வாழ்வுக்காக தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள இத்திட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாக அமலாக்கப்படுகிறது. மீனவர்களின் வாழ்வு வளம் பெறவும், மீனவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும் ஏற்ற நல்லதொரு திட்டம் இந்தத் திட்டம்.

காட்பாடி பகுதியில் தொழில் தொடங்க ஒப்படை செய்த நிலம்.

6—வினா 6614—திரு. இல. பலராமன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, குடியாத்தம் தாலுகா, காட்பாடி பகுதியில், உம்முடியார் நிறுவனத்திற்கு ஒப்படை செய்த நிலத்தை அவர்கள் தொழில் ஆரம்பிக்காமையால் அரசு அதை மீண்டும் பெற செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) இதை என்ன செய்ய உத்தேசம்?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுகா. காங்கேயநல்லூர் மற்றும் காட்பாடி ஆகிய கிராமங்களில் உம்முடியார் நிறுவனத்திற்குச் சொந்தமான மதராஸ் அலாய் மற்றும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் என்ற நிறுவனத்திடம் ஒப்புவிக்கப்பட்ட கையகப்படுத்தப்பட்ட 98.80 ஏக்கர் பட்டா நிலத்தையும் 51.61 ஏக்கர் புறம்போக்கு மற்றும் 4·36 ஏக்கர் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு புன்செய் நிலத்தையும் திரும்பக் கைக்கொள்வதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை,





உதயகிரி கோட்டையிலிருந்து பீரங்கி குண்டுகள் கடத்தப்பட்ட புகார் மீது நடவடிக்கை.

7—வினா 6720—திரு. டி. மணி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் உள்ள உதயகிரி கோட்டையிலிருந்து பீரங்கி குண்டுகள் கடத்தப்பட்டதாக புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

விடை—

(அ) அறிக்கை வந்துள்ளது.

(ஆ) காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் இக்குண்டுகள் கடத்தப்படுவதைத் தாங்களாகவே கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடத்தப்பட்ட பீரங்கிக் குண்டுகள் கைப்பற்றப்பட்டுப் பல்வேறு இடங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பாதுகாப்பாக தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகத்தில் வைக்க தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

DETAILS REGARDING STATE OWNED FINANCIAL CORPORATIONS WHICH HAVE BEEN ACCEPTING FIXED DEPOSITS.

8—*Question No.* 6794—THIRU S. RAJARAMAN: Will the Honourable Minister for Finance be pleased to State—

(*a*) the details of the State owned Financial Corporations which have been accepting fixed deposits from the public and its employees;

(*b*) the details thereof?

*Answer*:

(*a*) The following five State owned Corporations are accepting fixed deposits from the Public and its employees. No specific concession is given to the employees for deposits received from them.

(*i*) Tamil Nadu Industrial Investment Corporation.

(*ii*) Transport Development Finance Corporation.

(*iii*) Tamil Nadu Industrial Development Corporation.

(*iv*) Tamil Nadu Small Industries Development Corporations.

(*v*) Tamil Nadu Handloom Development Corporation.

(*b*) Detailed statement * is placed before the house.

[1984 மார்ச் 23

விடை—

(அ) பொது மக்களிடமிருந்தும் தன்னுடைய பணியாளர்களிடமிருந்தும் குறித்த கால வைப்பீட்டுத் தொகைகளைப் பின்வரும் மாநில அரசின் நிதியுதவிக் கழகங்கள் ஏற்றுக் கொள்கின்றன. பணியாளர்களிடமிருந்து பெறும் வைப்பீட்டுத் தொகைகளுக்காக சலுகை எதுவும் தனியே கொடுக்கப்படுவதில்லை—

(1) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.
(2) போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவிக் கழகம்.
(3) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.
(4) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்.
(5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்.

(ஆ) விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணியில் பொதுப்பணித்துறை
கண்மாய்களை செப்பனிடுதல்.

9—வினா எண். 7037—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி நிவாரணப் பணியில் பொதுப்பணித்துறை கண்மாய்களை செப்பனிட செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) சிவகாசித் தொகுதியில் எத்தனை கண்மாய்கள் செப்பனிடப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வறட்சி நிவாரணப் பணியின் கீழ் பொதுப்பணித்துறைக் கண்மாய்களின் மராமத்து, சிறு பாசனத் திட்டப் பணிகள், குளம் குட்டைகள் அமைத்தல் மற்றும் தூர் வாரி சீர்படுத்துதல், ஆகிய வேலைகளுக்கு மொத்தமாக ரூ. 12·25 கோடி ஒதுக்கப்பட்டது.

(இ) இப்பணியின் கீழ் சிவகாசித் தொகுதியில் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த புதுக்கோட்டை, மதிசேரி மற்றும் மங்களம் ஆகிய மூன்று கண்மாய்களும் மராமத்து செய்யப்பட்டன. ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொத்தனேரி மற்றும் புதுக்குளம் கண்மாய்களுக்கு மராமத்து வேலை மேற்கொள்ளப்பட்டன.

---

* 188–190ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1984 மார்ச் 23]

புனவாசல் கால்வாயின் குறுக்கே சிறு பாலம் கட்ட
ஒப்பந்தம்.

10—வினா எண். 7949—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புனவாசல் கால்வாயின் (வடக்கு கால்வாய்) குறுக்கே 9/6-ல் சிறுபாலம் கட்ட சமீப காலத்தில் ஒப்பந்தங்கள் ஏதேனும் கேட்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அதன் குறிப்புகள் என்ன?

விடை—

(அ) புனவாசல் வாய்க்கால் 9/6-ல் (வடக்கு கால்வாய்) சிறு பாலம் கட்டுவதற்கு தேவையான ஒப்பந்தப் புள்ளிகள் பாபநாசம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் 25—3—1982-ல் கோரப்டுள்ளது.

(ஆ) விரமாங்குடியிலிருந்து கொள்ளிடம் ஆற்றுக்கு செல்லும் சாலையின் குறுக்கே செல்லும் புனவாசல் வாய்க்கால் 1982-83 ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட்பட்டுள்ளது.

ஐயன்பேட்டை மருத்துவமனைக் கட்டிடம் கட்டும் பணி.

11—வினா எண். 8733—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் வட்டம், ஐயன்பேட்டை மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது?

விடை—

கட்டிடம் கட்டும் பணி முடிந்து விட்டது.

கோவை மாவட்ட செஷன்ஸ் கோர்ட் நூற்றாண்டு விழா.

12—வினா எண். 9061—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட செஷன்ஸ் கோர்ட் நூற்றாண்டு விழாவை அரசு கொண்டாட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விழா கொண்டாடப்படும் ?

(இ) அச்செலவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

[1984 மார்ச் 23

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) கோவை மாவட்ட செஷன்ஸ் கோர்ட் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது குறித்து கோவை மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கம் மட்டுமே முழுச் செலவும் ஏற்று விழாவைச் சிறப்பிக்கச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

சீர்காழி தாலுக்கா சரஸ்வதி வளாகத்திலுள்ள ஆதி திராவிட மக்கள்.

13—வினா எண். 9084—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, சீர்காழி தாலுக்கா, சரஸ்வதி வளாகத்திலுள்ள ஆதி திராவிட மக்களை மேற்படி கிராம சாதி இந்துக்கள் அடித்து இம்சை செய்ததினால் கிராமத்தை விட்டு வெளியேறி இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 19—3—1981 அன்று தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள சரஸ்வதி வளாகத்தில், பரமசிவ படையாச்சி என்பவருடைய பண்ணையில் வேலை பார்க்கும் ஆதி திராவிட இளைஞரான திரு. இளங்கோவன் என்பவர் பரமசிவத்தின் 16 வயதுடைய மகளான புனிதவதி என்பவரைக் கடத்திச் சென்று விட்டதாக ஆனைக்காரன்சத்திரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 55/81-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதன் தொடர்பாக, சாதி இந்துக்கள், ஆதி திராவிடர்களது தெருவிற்குச் சென்று இளங்கோவனைத் தேடியுள்ளதாகத் தெரிகிறது. அப்பொழுது அங்கிருந்த நெல் முதலியவைகளை எடுத்து வந்ததாக சாதி இந்துக்கள் மீது ஆதி திராவிடர்கள் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 60/81-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. சாதி இந்துக்கள் தங்களைத் துன்புறுத்தக் கூடும் என அஞ்சி, சில ஆதி திராவிடர் குடும்பத்தினர் அவ்வூரைவிட்டுச் சென்றுள்ளனர். வருவாய்த் துறை அதிகாரிகள் அங்கு சென்று, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளியேறிச் சென்ற அனைத்து ஆதி திராவிடக் குடும்பத்தினரும் தங்களது வீடுகளுக்குச் திரும்புவதற்கான நடவடிக்கை எடுத்தனர். 19—4—1981 அன்று, புனிதவதி மீட்கப்பட்டு, இளங்கோவன் கைது செய்யப்பட்டார். புலன் விசாரணைகளுக்குப் பிறகு குற்ற எண் 55/81-ல் உள்ள வழக்கு 20—11—1981 அன்று நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. குற்ற எண் 60/81-ல் உள்ள வழக்கு, தவறான தகவல் என்று முடிக்கப்பட்டு விட்டது. இருதரப்பினர் மீதும் அமைதி காக்கும் பொருட்டு, குற்ற விசாரணை முறைச் சட்டம், பிரிவு 107-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



1984 மார்ச் 23]

நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சி பஞ்சலிங்கபுரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுத்தல்.

14—வினா எண். 9162—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சி பஞ்சலிங்கபுரம் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈரோடு—கரூர் நெடுஞ்சாலை ஓரத்தில் குடியிருப்பதால் அவர்களுக்கு உடனடியாக நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி தொகுதி, நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சி, பஞ்சலிங்கபுரம் நத்தத்திலும், நெடுஞ்சாலை ஓரத்திலும் குடியிருக்கும் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்கும் பொருட்டு மொடக்குறிச்சி கிராமத்தில் ரி.ச. 186/4-ல் 1.24.0 ஹெக்டேரும், ரி.ச. 185.2-ல் 0.05.0 ஹெக்டேர் நிலமும் கையகப்படுத்த வேண்டி பூர்வாங்க விசாரணை நடவடிக்கையில் உள்ளது.

கொண்டபாளையம் கிராமத்தில் ஆஞ்சநேயர் மலைக்கு ரோடு போடும் திட்டம்.

15—வினா எண். 9185—திரு. கி. கோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கர் அடுத்த கொண்டபாளையம் கிராமத்தில் உள்ள ஆஞ்சநேயர் மலைக்கு ரோடு போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி திட்டத்திற்கு எவ்வளவு செலவு செய்யப்படும்.

[1984 மார்ச் 23

விடை—

(அ) சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் போக ஆஞ்சநேயசுவாமி மலைக்கு மலைச்சாலை அமைக்கும் பணி வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டு மண் வேலைக்கு மட்டும் ரூ. 14,000 சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மலைச்சாலையில் உள்ள பாறை உடைக்கும் வேலை மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் வேலைகளைச் செய்து முடித்து முழுமையாக சாலையை செப்பனிட்டு அமைக்க ரூ. 6 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆலயத்தின் முன்னேற்றம் கருதியும், ஆலய வருவாயை பெருக்குவதற்காகவும் ஆலய நிதியை செலவு செய்யாமல், இப்பணி தற்போது அரசு தன்னிறைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டு அரசின் நேரடிப் பார்வையில் நடத்தப்பட்டு வருகிறது.

### பூம்புகார் கலைக் கூடத்திலுள்ள கவிதைகள்.

16—வினா எண். 9220—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கலைக் கூடத்திலுள்ள கவிதைகள் பிற்காலத்தில் தவறான கருத்தைக் கொடுக்கும் என்ற காரணத்தைக் கருதி அவற்றை அகற்றும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எவ்வளவு நாளில் நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) பூம்புகார் கலைக் கூடத்திலுள்ள கவிதைகள் பொறிக்கப்பட்ட கல்லை அப்புறப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(ஆ) எழவில்லை.

### தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை மைய அரசு எடுத்துக் கொள்ளும் உத்தேசம்.

17—வினா எண். 9283—திரு. ந. சிவஞானம்; மாண்புமிகு முதல்அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தை மைய அரசு எடுத்துக் கொள்ள ஏதேனும் உத்திரவு வந்துள்ளதா ?

விடை—

இல்லை.



1984 மார்ச் 23]

### குளித்தலை வட்டம் பண்ணைப்பட்டி, நீர்த் தேக்கத் திட்டம் [பாசனக்குளம்] சீரமைக்கும் பணி.

18—வினா எண் 9464—திரு. எம். சின்னசாமி: : மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், பண்ணைப்பட்டி நீர்த் தேக்க திட்டம் (பாசனக் குளம்) சீரமைக்கும் பணி அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

விடை—

இக்குளத்தை ரூ. 15.80 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க அரசு 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒப்புதல் அளித்தது. இவ்வேலை தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

### 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனச் சட்டத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை.

19—வினா எண் 9581—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 1978, 1979, 1980, 1981 ஆண்டுகளில் என்ன ?

(ஆ) 1978, 1979, 1980, 1981 ஆண்டுகளில் இந்த நிறுவனங்களில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தின் கீழ் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சச் சம்பளம் கொடுக்கும் நிறுவனங்கள் எண்ணிக்கை என்ன ?

(ஈ) அதைப் பெறும் தொழிலாளர் எண்ணிக்கை என்ன ?

விடை—

(அ) 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனச் சட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1978 | .. | .. | 2,21,945 |
| 1979 | .. | .. | 2,14,013 |
| 1980 | .. | .. | 2,86,420 |
| 1981 | .. | .. | 2,78,123 |

[1984 மார்ச் 23

(ஆ) இந்த நிறுவனங்களில் வேலையில் உள்ள நபர்களின் எண்ணிக்கையாவது :—

| | | | |
|---|---|---|---|
| 1978 | .. | .. | 2,32,712 |
| 1979 | .. | .. | 2,36,497 |
| 1980 | .. | .. | 2,61,527 |
| 1981 | .. | .. | 2,64,492 |

(இ) குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் வரும் கடைகள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களாவது :—

குறைந்த அளவு ஊதியச் சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் 1980 ஆம் ஆண்டிலிருந்துதான் செயற்படுத்தப்படுகிறது. எனவே, 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளுக்கான விவரங்களுக்கு இடமில்லை. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளுக்கு விவரங்கள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1980 | .. | .. | 21,869 |
| 1981 | .. | .. | 24,516 |

(ஈ) குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் வரும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1980 | .. | .. | 1,81,390 |
| 1981 | .. | .. | 1,98,008 |

சிவகிரி கிராம இராஜசிங்கபேரி கண்மாய் மண்மூடி தூர்ந்து போனதால் தூர் வாருதல்.

20—வினா எண் 9696—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி கிராம இராஜசிங்கபேரி கண்மாய் தலைக்குளமாக இருப்பதால், அதிகமான மண்மூடித் தூர்ந்து போயிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) முழுமையாக தூர் வாருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இராஜசிங்கபேரி கண்மாயின் கரை, மற்றும் மடைகள் நல்ல நிலையில் உள்ளன. இக் கண்மாயின் ஆயக்கட்டு நிலங்கள் யாவும் ஏறக்குறைய முழுமையாக பாசனம் பெறுகின்றன. மேலும் தூர் வாருவதற்கான வரைமுறைகள் இக்கண்மாய்க்கு பொருந்தவில்லை. எனவே, இக் கண்மாயை தூர் வார இடமில்லை.



1984 மார்ச் 23]

கொலையுண்ட மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி மாணவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி.

21—வினா எண் 9888—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30–3–1981 அன்று மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் கொலை செய்யப்பட்ட அக் கல்லூரி மாணவர்கள் இருவரின் குடும்பத்துக்கும் அரசு ஏதேனும் நிதியுதவி செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 30–3–1981 அன்று மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் கொலையுண்ட மாணவர்கள் திரு. ஜம்புலிங்கம் மற்றும் திரு. சோமசுந்தரம் ஆகியோரின் குடும்பத்திற்கு, அவர்களது பொருளாதார நிலை, குடும்ப நிலைமை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, திரு. ஜம்புலிங்கம் குடும்பத்திற்கு ரூ. 5,000மும், திரு. சோமசுந்தரத்தின் குடும்பத்திற்கு ரூ. 2,000மும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது

இராணிப்பேட்டை தொகுதி வேப்பூர் கிராம ஈசுவரன் கோயில் பற்றிய குறிப்பு.

22—வினா எண் 19908—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதியிலுள்ள வேப்பூர் கிராமத்தில் உள்ள ஈசுவரன கோயில் பற்றிய குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) அந்த ஈசுவரன் கோவிலுக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது ?

விடை—

(அ) இராணிப்பேட்டை தொகுதி வேப்பூர் கிராமத்தில் உள்ள வசிஷ்டேஸ்வரர் ஆலயம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்குட்பட்ட பட்டியலில் சேராத ஆலயமாகும்

(ஆ) மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமாக மொத்தம் 2.45 ஏக்கர் நிலம் இருக்கிறது. இதில் செட்டித்தாங்கல் கிராமத்தில் சர்வே எண். 213இல் உள்ள 0.77 செண்ட் நன்செய் நிலம் பசலி 1387 முதல் 1391 வரை பசலி ஒன்றுக்கு ரூ. 130 வீதம் திரு. மாணிக்கம் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1391 பசலிக்குப் பிறகு பொது ஏலத்தில் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படும். வேப்பூர் கிராமத்தில் சர்வே எண். 105/1, 105/3 ஆகியவற்றில் உள்ள 0.38 ஏக்கர் நிலம் திரு. நந்தன் என்பவருக்கு 1391 பசலி ஆண்டு முடியும் வரை ஆண்டு குத்தகை ரு. 150 வீதம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. பசலி 1392 ஆண்டிலிருநது பொது ஏலத்தில் குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வேப்பூர் கிராமம் சர்வே, எண். 188-ல் உள்ள 1.30 ஏக்கர் நிலத்தில் 0.03 செண்ட் நிலம் 3 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு குடிசைகள் போடப்பட்டுள்ளது. ஆச்கிரமிப்பிலுள்ள நிலத்தை மீட்பதற்கு அறங்காவலர் குழுத் தலைவருக்கு உதவி ஆணையர் அறிவுரை வழங்கியும் அவர் இதுவரை யாதொரு நடவடிக்கையும் எடுக்காததால் ஆலய நிர்வாகம் செம்மையாக நடைபெற அறநிலைய சட்டப்பிரிவு 45(1)ன்கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்ய நடவடிச்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 1.27 ஏக்கர் நிலத்தில் ஆலயத்திற்குச் சொந்தமான தோப்பு உள்ளது. அதில் 17 இலுப்பை மரங்கள், 23 பனை மரங்கள், 1 புளிய மரம் மற்றும் 1 அரச மரம் உள்ளது.

### கிளியாற்றுப் பாலத்தை விஸ்தரித்தல்.

23—வினா 9992—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-மதுராந்தகம் நெடுஞ்சாலையில் மதுராந்தகம் அருகே கிளியார் ஆற்றின் குறுக்கே பாலத்தை விஸ்தரிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

தேசிய நெடுஞ்சாலை 45-ல் கி. மீ. 79—4-ல் கிளியாற்றின் குறுக்கே (மதுராந்தகம் அருகே) இருக்கும் பெரிய பாலம் திரும்பக் கட்டும் வேலையானது இந்திய அரசினால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்சப்பட்டுள்ளது. நிலம் உரிமை பெற்றதும் மத்திய அரசுக்கு பாலம் மற்றும் அணுகு சாலைக்கு விரிவான மதிப்பீடு அனுப்பி ஒப்புதல்பெற்றபின் பால வேலை தொடங்கப்படும்.



### திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான நிலம்

24—வினா 10027—திரு. பூ.மு. நரசிம்மமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது ?

(ஆ) அதன் மூலம் ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

விடை—

(அ) அருளமிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்திற்கு நஞ்சை 61.53 ஏக்கரும் புஞ்சை 84.14 ஏக்கரும் ஆக மொத்தம் 145.67 ஏக்கர் நிலம் இருக்கிறது.

(ஆ) குத்தகை கேட்பு பசலி ஆண்டு ஒன்றுக்கு ரூபா 21,566.

### தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் மருத்துவமனை ஏற்படுத்துதல்.

25—வினா 10236—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம் கண்டமங்கலம் வட்டாரத்தில் மருத்துவமனை ஏற்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இங்கு ஏழு படுக்கைகள் கொண்ட ஒரு அரசு மருத்துவமனை புதியதாகக் கட்டப்பட்டு 21—1—1982-லிருந்து செயல்பட்டு வருகிறது.

### செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி கருங்குழி-கிணார்-கீழ்வளம் ரோடு சீர் செய்தல்

26—வினா 10405—திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம தொகுதி, கருங்குழி-கிணார்-கீழ்வளம் ரோடு பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய எடுத்த நடவடிக்கை யாது

[1984 மார்ச் 23

விடை—

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின சரியான பெயர் கிணார்-கீழ்வளம் சாலை. இச் சாலையில் கி.மீ. 4/0-6/0 நீளத்திற்கு 1980–81 ஆம் ஆண்டு தார் புதுப்பித்தல் வேலை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் இச்சாலையில் உள்ள மற்ற பகுதிகளிலும் எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது.

### தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் திருவோணம் ஒன்றியங்களில் வறட்சிப் பகுதிகளில் நிவாரணப் பணிகள்

27—வினா 10578—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் யூனியன் திருவோணம் யூனியன் ஆகிய ஒன்றியங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் துவங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன வேலைகள் துவங்கப்பட்டு உள்ளன?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் யூனியன் திருவோணம் யூனியன் ஆகிய ஒன்றியங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட நிவாரணப் பணிகள் 1981-1982-இல் செய்யப்பட்டுள்ளன :—

(1) புதிய ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் கைப்பம்புகள் அமைத்தல்.
(2) திறந்த வெளி கிணறுகள் அமைத்தல் திறநத வெளி கிணற்றில் மற்றும் இதரப் பகுதிகளில் ஆழ் குழாய் அமைத்தல்.
(3) குளம், குட்டை, ஊரணிகள் ஆழப்படுத்துதல்.
(4) புதிய மண் சாலைகள் அமைத்தல்.
(5) சாலைகள் மேம்பாடு மற்றும் ரிப்பேர்.
(6) பஸ் ரூட் சாலைகளை மேம்பாடு செய்தல்.
(7) 50 ஏக்கர் மற்றும் குறைவாகவுள்ள ஆயக்கட்டுகள் உள்ள சிறுபாசன குளங்களை ஆழப்படுத்தி கரைகளை உறுதிப் படுத்துதல்.
(8) 50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு உள்ள சிறுபாசன ஏரிகள், குளங்களை மேம்பாடு செய்தல்.
(9) கல்லணைக் கால்வாய்களை பாசன வசதிக்கேற்றபடி சீர் செய்தல்.
(10) சிறுபாசன நீர் வகைகளின் அருகில் கிணறுகள்.
(11) ஏரிகளை தனிப் பழுதுபார்த்தல்.
(12) கொள்ளிடம் ஆற்றுக் கரைகள் பலப்படுத்துதல்.



1984 மார்ச் 23]

### 1977-ஆம் ஆண்டு முதல் 1981-ஆம் ஆண்டு வரை உள்ள நீர்ப் பாசனத் திட்டங்கள்

28—வினா 11021— திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த 1977–78 முதல் 1980–81 வரை புதியதாக எடுத்துக்கொண்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் யாது ?

(ஆ) ஏரிகள், அணைகள், தாலுக்கா வாரியாக எத்தனை ?

(இ) ஆய்வில் உள்ள திட்டங்கள் எத்தனை ?

(ஈ) இதன் மதிப்பீடு யாது ?

விடை.

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1977–78 முதல் 1980–82 வரை கீழ்க்கண்ட புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன :—

(i) குடியாத்தம் வட்டம், கூடநகரம் கிராமம், கூடநகரம் ஏரி வரத்துக் கால்வாய்க்கு தடுப்புச் சுவர் கட்டுதல்—மதிப்பீடு ரூ. 18,900.

(ii) ஆற்காடு வட்டம், பென்னகர் மடுவின் குறுக்கே உள்ள மண்கொண்டத்தை கற்கொண்டமாக மாற்றுதல்—1,60,000

(iii) செங்கம் வட்டம், காரம்பட்டு கிராமத்தின் கல்லாற்றின் குறுக்கே உள்ள மண்கொண்டத்தை கற்கொண்டமாக மாற்றுதல்—ரூ. 1,94,500.

(ஆ)

| வட்டம். | அணை. | ஏரி. |
|---|---|---|
| குடியாத்தம் .. .. | 1 | இல்லை. |
| ஆற்காடு .. .. | 1 | .. |
| செங்கம் .. .. | 1 | .. |

(இ) 55 சிறுபாசனத் திட்டங்கள் மற்றும் 5 பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்கள்.

(ஈ) சிறுபாசனத் திட்டங்களின் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 166.62 இலட்சங்கள் ; பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களின் உத்தேச மதிப்பீடு ரூ. 1,734 இலட்சங்கள்.

[1984 மார்ச் 23]

விளாத்திக்குளம் தாலுகா குமாரகக்னாபுரம் முத்தையாபுரம் கிராமத்தில் புதிய நீர்ப்பாசனக் குளம் அமைக்கும் திட்டம்.

29—வினா 11032—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தாலுக்கா, குமாரகக்னாபுரம், முத்தையாபுரம் கிராமத்தில் புதிய நீர்ப்பாசன குளம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) குமாரகக்னாபுரம் மற்றும் முத்தையபுரம் ஆகிய கிராமங்களில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவ்விரு திட்டங்களினால் பயனடையும் பரப்பைவிட அதிக பரப்பளவுள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டி உள்ளதாலும், இவை மிகவும் சிக்கனமற்ற திட்டங்களாக கருதப்பட்டதாலும், இத்திட்டங்கள் மேற்கொண்டு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

விளாத்திக்குளம் தாலுக்கா முத்துக்குமாரபுரத்தில் அணை அல்லது குளம் அமைக்கும் திட்டம்.

30—வினா 11039—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தாலுக்கா, முத்துக்குமாரபுரத்தில், அணை அல்லது குளம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளம் வட்டம், முத்துக்குமாரபுரம் கிராமத்தில் கல்லாறு ஓடையின் குறுக்கே ஒரு அணை கட்டுவதற்கான திட்டம் சிறுபாசனத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.



1984 மார்ச் 23]

முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம்.

31—வினா 11095—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை ரேஞ்சு பகுதியில் வனவிலங்கு சரணாலயம் எப்போது ஆரம்பிக்கப் பட்டது ?

(ஆ) இப்பகுதியில் என்ன என்ன இனங்கள் உள்ளன ?

(இ) இதற்கு வருடந்தோறும் எவ்வளவு செலவு செய்யப் படுகிறது.

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை வனச் சரகப் பகுதியில் 1962 ஆம் ஆண்டு வனவிலங்கு உய்விடம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இந்த வனவிலங்கு உய்விடத்தில் புலி, சிறுத்தை, சாதாரண குரங்குகள், சிங்கவால் குரங்குகள், ஸ்லெண்டர் லோரிஸ் கரடி, கடமான், புள்ளிமான், வரையாடு, வரியுள்ள பெரும் அணில், போன்ற மிருக இனங்கள் உள்ளன. மேலும், குயில், இரட்டை குருவி, மலை இருவாட்சி, துடுப்புவால் கரிக் குருவி, நீளவால் காக்கை, மிளகாய்ச் சிட்டு போன்ற பறவை இனங்களும் உள்ளன.

(இ) இந்த உய்விடத்திற்கான செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ரூ. |
|---|---|
| 1977-78 .. .. .. | 4,37,953 |
| 1978-79 .. .. .. | 5,17,170 |
| 1979-80 .. .. .. | 7,04,756 |
| 1980-81 .. .. .. | 10,75,131 |

தமிழகத்தில் பருத்திக் கழகம் அமைக்கும் திட்டம்.

32—வினா 11147—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பருத்திக்கழகம் (Cotton Corporation) அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : விரிவான பரிசீலனைக்குப்பின், தமிழகத்தில் தனி பருத்திக் கழகம் அமைக்கத் தேவையில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது.

[1984 மார்ச் 23

பாலாற்றின் குறுக்கே பள்ளிகொண்டா அருகில் கட்டும் திட்டம்.

33—வினா 11192—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) பாலாற்றின் குறுக்கே பள்ளிகொண்டா அருகே பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) வரும் நிதி ஆண்டில் வேலை துவக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பள்ளிகொண்டா பலமனேரி சாலையில் பாலாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் கட்டும் பணி அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. இப்பணி இனி வரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம், வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு "மாநிலங்களுக்கிடையே முக்கியத் திட்டத்தின்" கீழ் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

சாலை கிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

34—வினா 11597—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

இளையான்குடி ஒன்றியம் சாலை கிராமம் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

விடை—

இளையான்குடி ஒன்றியம் சாலை கிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது இல்லை.

1979-80 ஆண்டுகளில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டோர்.

35. வினா 11688—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) தண்டனை அடைந்தவர்கள் எத்தனை பேர் ?



1984 மார்ச் 23]

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | 1979 .. .. .. | 2,47,467 பேர் |
| | 1980 .. .. .. | 1,44,458 பேர் |
| | 1981 .. .. .. | 53,734 பேர் |
| (ஆ) | 1979 .. .. .. | 31,345 பேர் |
| | 1980 .. .. .. | 5,434 பேர் |
| | 1981 .. .. .. | 794 பேர் |

குருச்சாம்வலசு அருகில் கீழ்பவானி வாய்க்காலில் மேல்பாலம் கட்டுதல்.

36—வினா 11705—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை ஒன்றியம், முள்ளம்பட்டி ஊராட்சி குருச்சாம் வலசு சமீபம் கீழ்பவானி வாய்க்காலின் மேல் பாலம் கட்ட ரூ. 50 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கி, எப்போது முடியும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தலைஞாயிறு காவல் நிலைய காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

37.—வினா 11726—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு காவல் நிலைய காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை :—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு காவல்நிலைய காவலர்கட்குக் குடியிருப்புகள் கட்ட, திருமலம் கிராமத்தில் உரிய நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலஆர்ஜிதம் செய்யப்பட்டவுடன் குடியிருப்புகள் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

[1984 மார்ச் 23

பெண் காவலர் படையிலிருப்போர் எண்ணிக்கை.

38.—வினா 11728—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண் போலீஸ் படை விரிவுபடுத்தப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதில் எவ்வளவு பேர் உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், காவலர்களாக உள்ளனர் ?

விடை :—

(அ) ஆம். விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் விரிவு படுத்தப்படும்.

(ஆ) 1. உதவி காவல் ஆய்வாளர்கள் .. 60

2. தலைமைக் காவலர்கள் .. 74

3. காவலர்கள் .. .. .. 600

அன்னஞ்சியிலுள்ள பொதுக்கிணற்றிலிருந்து மின் இணைப்பு மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் எடுப்பதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.

39.—வினா 11769—திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், உஞ்சாம்பட்டி என்ற அன்னஞ்சி என்ற ஊரில் நத்தம் சர்வே 43/1 (பி)-ல் உள்ள பொதுக் கிணற்றில் தனியார் ஒருவர் மின் இணைப்பு வாங்கி விவசாயத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்துவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?



1984 மார்ச் 23]

விடை :—

(அ) மற்றும் (ஆ) : உஞ்சாம்பட்டி ஊராட்சி ஏற்படுத்துவதற்கு முன்பே இக்கிணறு சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் மேற்படி கிராமப் பொதுமக்களால் வெட்டப்பட்டதாகவும், மேற்படி கிணற்றை லேட்பீதாம்பரம் துளசி சேர்வை என்ற நபர் அனுபவித்த நாள் முதல் இன்று வரை பி. மெமோ கொடுத்து தண்டம் தீர்வை வசூல் செய்யப்பட்டும் வருகிறது. தற்சமயம் திரு. ரா. சிவாஜி என்பவர் வசம் இக்கிணறு உள்ளது. இக்கிணற்றை பொது மக்கள் பயன்படுத்துவதில் எவ்வித தடையும் இல்லை. கிணற்றைச் சுற்றி எந்தத் தடையும் ஏற்படுத்தவில்லை. கிணற்றிற்கு அருகில் சிமிண்டு தொட்டி உள்ளது. அந்தத் தொட்டியில் தேக்கப்படும் தண்ணீரைப் பொதுமக்கள் எடுத்துக் கொள்கிறார்கள். மேற்படி கிணற்றை குடிநீருக்கு எவ்வித குந்தகமில்லாமல் விவசாயத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் கிராம குடிநீர்த் திட்டம் மற்றும் உஞ்சாம்பட்டி ஊராட்சி குடிநீர்த்திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் குடிநீர் பெற்று வருவதால் கிராமத்தில் இப்போது குடிநீர் பிரச்சினை இல்லை.

வடமதுரை நல்லமனார் கோட்டை சாலையில் தார் போடும் செயற் குறிப்பு.

40.—வினா 11801—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் வடமதுரை—நல்லமனார் கோட்டை சாலையில் தார் போடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

[1984 மார்ச் 2௰

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சாத்தனூர் அணைகட்டியுள்ள இடத்தை வனத்துறையின் மூலம் பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கும் செயற்குறிப்பு.

41.—வினா 11917—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"சாத்தனூர் அணைகட்டியுள்ள இடத்தை வனத்துறையின் மூலம் பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா ?

விடை :—

ஆம்.

தஞ்சை மாவட்டத்தில் 2-சி பட்டா வழங்கப்பட்ட தென்னை மரங்கள் மூலம் கிடைத்த வருமானம்

42—வினா 11954—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தனிப்பட்டவர்களுக்கு 2-சி பட்டா கொடுக்கப்பட்டுள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதன்மூலம் அரசுக்கு வரும் வருமானம் எவ்வளவு?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,36,651 தென்னை மரங்களுக்கு 2-சி பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன்மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,72,544.72 வருமானம் கிடைக்கிறது.

சாகுபடிக்காக ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு.

43—வினா எண் 11993—திரு. பி. வெங்கடசுப்பிரமணியன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் மாவட்ட வாரியாக ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) சாகுபடிக்காக ஏற்கனவே ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ?



1984 மார்ச் 23]

விடை—

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வாரியாக 28—2—1982-ல் உள்ள ஒப்படை செய்யக் கூடிய நிலத்தின் பரப்பளவும், 1—7—1977 முதல் 28—2—1982 முடிய சாகுபடிக்காக ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவும்—

| | மாவட்டத்தின் பெயர். | 28—2—1982-ல் ஒப்படை செய்யக் கூடிய நிலத்தின் பரப்பளவு. | 1—7—1977 முதல் 28—2—1982 முடிய சாகுபடிக்காக ஒப்படை செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | ஏ. செ | ஏ. செ. |
| 1 | செங்கல்பட்டு .. | 2,614.26 | 4,873.10 |
| 2 | தஞ்சாவூர் .. | 4,162.22 | 5,846.82 |
| 3 | சேலம் .. | 41,517.14 | 16,887.54 |
| 4 | திருச்சிராப்பள்ளி .. | 15,419.85 | 14,475.90 |
| 5 | கோயம்புத்தூர் .. | 2,481.78 | 3,073.34 |
| 6 | மதுரை .. .. | 4,855.94 | 17,847.63 |
| 7 | தர்மபுரி .. .. | 73,752.31 | 25,103.36 |
| 8 | இராமநாதபுரம் .. | 14,124.70 | 14,826.14 |
| 9 | திருநெல்வேலி .. | 5,037.83 | 2,280.69 |
| 10 | வட ஆற்காடு .. | 22,007.01 | 3,329.91 |
| 11 | தென்னாற்காடு .. | 20,382.84 | 12,326.33 |
| 12 | கன்னியாகுமரி .. | 11.525.80 | 3,663.71 |
| 13 | நீலகிரி .. .. | 4,202.58 | 10,418.77 |
| 14 | புதுக்கோட்டை .. | 9,068.13 | 16,545.27 |
| 15 | பெரியார் .. .. | 12,925.58 | 84·60 |
| | மொத்தம் .. | 2,44,077.97 | 1,51,583.11 |

[1984 மார்ச் 2C

### திருநெல்வேலி மாவட்ட சப்-கோர்ட்டுகளில் அரசு கூடுதல் வழக்கு நடத்துனர்கள் நியமனம்.

44—வினா எண் 12011—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பல நீதிமன்றங்களில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல சப்-கோர்ட்டுகளில் அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர்கள் நியமிக்கப்படாமல் வழக்குகள் தேங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இக்குறைபாட்டை தீர்க்க அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1978 ஆம் ஆண்டு மத்திய சட்டத்தால் திருத்தப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 24 (6) பிரிவின்படி 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் அரசு வழக்கு நடத்துநர்கள்/அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள் ( Public Prosecutors / Additional Public Prosecutors ) அரசு உதவி வழக்கு நடத்துநர்கள் நிலை 1 ( Assistent Public Prosecutors Grade I ) பதவித்தரத்திலிருந்து நியமனம் செய்யப்பட்டனர் 1980 ஆம் ஆண்டில் குற்றவிடல் நடைமுறைச் சட்டக் கோவை திருத்தப்பட்டு அரசு வழக்கு நடத்துநர்கள்/ அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்களை வழக்கறிஞர்கள் சங்கத்தினரிடையேயிருந்து நியமனம் செய்வதற்கு வகை செய்யப்பட்டது. அதற்கேற்ப மாவட்டங்களில் மேலேகண்ட பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை தகுதிவாய்ந்த வழக்கறிஞர்களிடமிருந்து பெற்று அரசு வழக்கு நடத்துநர், அரசு கூடுதல் வழக்கு நடத்துநர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்திலும், அரசு வழக்கு நடத்துநர்/அரசு கூடுதல் வழக்கு நடத்துநர் பதவிகளெல்லாம் நிரப்பப்பட்டு விட்டன.

### கைத்தொழில், உடற்பயிற்சி, ஓவியம், தையல் ஆசிரியர்களாக பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு பயிற்சி ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு.

45—வினா எண் 12478—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''கைத்தொழில், உடற்பயிற்சி, ஓவியம், தையல் ஆசிரியர்களாக பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்களுக்கு ஒரு ஆண்டு பயிற்சி ஊதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா

விடை— இல்லை.



1984 மார்ச் 23]

### ஓலைகளில் செய்யப்படும் அழகிய பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம்.

46—வினா எண் 12486—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓலைகளில் செய்யப்படும் அழகிய பொருட்கள் அரசு மூலம் ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) 1977 முதல் 1981 முடிய வெளிநாடுகளுக்கு ஓலைகளினால் செய்யப்பட்ட பொருட்கள் எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதியாகிறது ?

விடை—

(அ) தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் பனை ஓலைப்பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

(ஆ) தற்சமயம் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் பனை ஓலைப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் ஏற்றுமதியாளர் ள் மூலமாக விற்பனை செய்துவருகிறது. 1977 முதல் 1981 முடிய அவ்வாறு ஏற்றுமதியாளர்களால் விற்பனை செய்யப்பட்ட பனைஓலைப் பொருட்கள் மதிப்பு பின் வருமாறு :—

| ஆண்டு. | | ஏற்றுமதி. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1977-78 | .. | 1.26 |
| 1978-79 | .. | 3.06 |
| 1979-80 | .. | 5.82 |
| 1980-81 | .. | 8.89 |

### 1981ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் சமபந்தி போஜனத்தில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை.

47—வினா 12729—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமபந்தி போஜனம் அளிப்பதன் நோக்கம் என்ன ?

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1981-ல் எத்தனை பேர்கள் கலந்து கொண்டனர் ?

(இ) அதற்கான செலவு எவ்வளவு ?

விடை:—

(அ) இந்துசமய ஆலயங்களில் சாதி பாகுபாடு, தீண்டாமை ஆகியவைகள் கிடையாது என்பதை உணர்த்தும் வகையில் தமிழகத் திருக்கோவில்களின் சார்பில் ஒவ்வொரு கோவிலிலும் 1981 ஆம் வருடம் சுதந்திரதினத்தன்று, இந்து சமயத்தை சார்ந்த ஆதிதிராவிட மக்கள் உட்பட அனைவரும் கலந்து கொள்ளும் சிறப்பு வழிபாடு நடத்தவும், சாதிவேறுபாடற்ற முறையில் ஏழை எளிய மக்கள் பங்குபெறும் பொதுவிருந்து நடத்தவும் இந்துசமய ஆலயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

(ஆ) சுமார் 56,000 பேர் கலந்து கொண்டனர்.

(இ) இவ்வகையில் ரூ. 93,200 செலவிடப்பட்டுள்ளது.

## திருவண்ணாமலையில் நடைபெற்ற பல்துறை விளக்கக் கண்காட்சி

48—வினா 12773—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

கார்த்திகை தீபத்தை முன்னிட்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற பல்துறை விளக்க கண்காட்சியில் இடம் பெற்ற அரங்குகளுக்கென் அரசு ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு ?

விடை—

திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்தை யொட்டி 1981-ல் நடைபெற்ற கண்காட்சியை நடத்துவதற்கென மொத்தமாக ரூ. 15,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தனிப்பட்ட முறையில் அரசு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

## மதுராந்தகம் நகரத்தில் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்தில் நீதிபதி நியமனம்

49—வினா 12811—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரத்தில் II class Magistrate பல மாதங்களாக இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

மதுராந்தகம் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றத்திற்கு ஒரு நடுவர் நியமிக்கப்பட்டு, அவர் 19—2—1982 லிருந்து அங்கே பணியாற்றி வருகிறார்.





## திருவாடனை வட்டம் சித்தனூர் பகுதியில் இரு கண்மாய்களை சீரமைக்கும் பணி.

50—வினா 12833—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் திருவாடனை வட்டம், சித்தனூர் விவசாயிகள் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தங்கள் பகுதியில் உள்ள இரண்டு கண்மாய்களை சீரமைப்பு செய்ய வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், சீரமைப்பு வேலை எந்த அளவில் உள்ளது?

விடை;—

(அ) ஆம்.

(ஆ) சித்தனூர் கண்மாயை ரூ. 1.90 லட்ச செலவிலும் முல்லிக்குடிக் கண்மாயை ரூ. 40,000 செலவிலும் துரித சிறு பாசனத் திட்டத்தின் (Accelarated Minor Irrigation Programme) கீழ் தரப்படுத்த விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம்மதிப்பீடுகள் சிறு பாசனத் தலைமை பொறியாளரால் அரசுக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டபின் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

## மதுராந்தகம் தொகுதியில் உள்ளாட்சித்துறையில் பராமரிக்கப்படும் ஏரிகள்.

51—வினா 13067—திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் உள்ளாட்சித் துறையில் பராமரிக்கப்படும் ஏரிகள் யாவை ?

(ஆ) அவைகளில் 1979, 1980, 1980-1981 மற்றும் 1981-1982 ஆம் ஆண்டுகளில் பராமரிக்க எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளன ?

விடை;—

(அ) மற்றும் (ஆ) விவரங்கள் அடங்கிய பட்டியல்கள்* இணைக்கப்பட்டுள்ளன.

## மதுராந்தகம் தொகுதியிலுள்ள ஏரிகள்.

52—வினா 13085.—திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் தொகுதியில் எத்தனை ஏரிகள் பொதுப் பணித் துறையின்கீழ் உள்ளன ?

(ஆ) அவைகளை, பராமரிக்க 1979-80, 1980-81 மற்றும் 1981-82-ல் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டு உள்ளது ?

---

*191-200ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது

[1984 மார்ச் 23

விடை:—

(அ) 132 ஏரிகள்.

(ஆ) இவற்றைப் பராமரிக்க கடந்த மூன்றாண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1979-80 | .. | .. | ரூ. 6,40,000 |
| 1980-81 | .. | .. | ரூ. 3,98,300 |
| 1981-82 | .. | .. | ரூ. 8,50,700 |

53—வினா 13093—திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் நீர்பெரு மேலகண்டை மற்றும் அத்திமானம் ஏரிகள் தூர்ந்து பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய எடுத்த நடவடிக்கை யாது ?

விடை;—

(அ) மற்றும் (ஆ) : (i) நீர்பேர் ஏரியில் உபரி நீர்ப் போக்கியை புதுப்பித்துக் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டது மற்ற மேம்பாட்டுப் பணிகள் வரும் கோடை காலத்தில் செய்யப்படும்.

(ii) மேல்கண்டை ஏரி மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ள ஏரியாகும். 1971 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இவ்வேரியில் தூர் வாரும் பணி பொதுப்பணித் துறையினரால் செய்து முடிக்கப்பட்டது.

(iii) அத்திமானம் ஏரியில் தூர் வாரும் பணி 1981 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டது.

தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கான பணிவிதிகள்.

54—வினா 13198—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் கல்வி கற்பிக்கும் பொறியியல் ஆசிரியர் மற்றும் மெக்கானிக் ஆசிரியர்க்கு பணிவிதி அறிவிக்கப்படவில்லையா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?



1984 மார்ச் 23]

விடை;—

(அ) தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சார்ந்த அரசுப் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் உள்ள அனைத்து பொறியியற் துறை ஆசிரியர்கள் மற்றும் மெக்கானிக் பதவிகள் அனைத்திற்கும் பணி நியமனம் குறித்த அமைப்பு விதிகள் ஏற்கனவே இருந்து வநதுள்ளன தற்போது அரசாணை எண். 2160 கல்வி நாள் 18—9—1981-ன் படி மெக்கானிக் பதவிகள் உள்ளிட்ட அனைத்துப் பதவிகளும் தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி சார்புப் பணியாளர் தொகுதியின் சிறப்பு விதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டு விதிகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை

விசாரணைக் கைதிகளுக்கு தினசரி உணவுப்படியை உயர்த்தும் உத்தேசம்

55—வினா 13284—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்கூட்டி கைது செய்யப்படுகிறவர்களுக்கோ, அல்லது வேறு வழக்குகளில் கைது செய்யப்படுகிறவர்களுக்கோ ரிமாண்டில் வைப்பதற்கு முன் ஒருவேளை உணவிற்கு நீதிமன்றங்களில் 75 காசுகள் என்பதை உயர்த்தித்தரும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

விடை—;

சாதாரண விசாரணை கைதிகளுக்கு வெளியூர்களில் ஒரு நாளைக்கு உணவுப்படி ரூ. 2.50 வீதமும், சென்னை நகரில் ரூ. 3.00 வீதமும், சிறப்பு விசாரணைக் கைதிகளுக்கு வெளியூர்களில் ரூ. 3.00 வீதமும், சென்னை நகரில் ரூ. 3.50 வீதமும் கொடுக்கப்பட்டு வந்தது. அரசு ஆணை எண். 1157, உள்துறை, நாள் 23—5—1981-ல் வெளியூர்களிலும், சென்னை நகரிலும், உணவுப்படி விகிதம் ரூ. 5.50 வீதம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது

கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகள் பெற்றுள்ள கடன் தொகை

56—வினா 13395—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்பெறும் கூட்டுறவு கடன் பற்றிய சர்வே மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், கூட்டுறது வங்கிகள் மூலம் விவசாயிகள் பெற்றுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவு ?

[1984 மார்ச் 23

**விடை—**

(அ) இம்மாநிலத்தில் கூட்டுறவு துறை மூலம் கூட்டுறவுக் கடன் பற்றிய சர்வே நடைபெறவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

இம்மாநிலத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் கூட்டுறவுத் சங்கங்கள் விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன் மற்றும் மத்திய காலக் கடன் வழங்கிய விபரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | ஆண்டு. | குறுகியக் காலக் கடன். | மத்தியக் காலக் கடன். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | |
| 1 | 1971-72 .. .. | 54.23 | 2.[illegible]9 |
| 2 | 1972-73 .. .. | 62.61 | 1.93 |
| 3 | 1973-74 .. .. | 76.60 | 2.22 |
| 4 | 1974-75 .. .. | 85.02 | 2.66 |
| 5 | 1975-76 .. .. | 100.20 | 2.65 |
| 6 | 1976-77 .. .. | 119.33 | 5.79 |
| 7 | 1977-78 .. .. | 120.69 | 6.44 |
| 8 | 1978-79 .. .. | 90.23 | 12.42 |
| 9 | 1979-80 .. .. | 37.16 | 5.54 |
| 10 | 1980-81 .. .. | 21.52 | 4.25 |
| 11 | 1981-82 (15-3-82 வரை) | 73.27 | 7.93 |

### தஞ்சாவூர் மாவட்டம், காவேரிக் கோட்டம், நாட்டார் பிரிவிலிருந்து சினிவாசநல்லூர் வாய்க்காலுக்கு புதிய வாய்க்கால் தலைப்பு ஏற்படுத்தும் திட்டம்

57.—வினா 13444—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், காவிரிக் கோட்டம், நாட்டார் பிரிவிலிருந்து சீனிவாச நல்லூர் வாய்க்காலுக்கு புதிய வாய்க்கால் தலைப்பு ஏற்படுத்த அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஏற்படுத்தப்படும் ?



1984 மார்ச் 23]

விடை;—

(அ), (ஆ) மற்றும் (இ) : சீனிவாச நல்லூர் வாய்க்கால் கடை மடை விவசாயிகள் தேவையான அளவு நீர் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் வாய்க்கால் தலைப்பை அரசலாற்றிலிருந்து நாட்டாற்றிற்கு மாற்றித் தருமாறு கோரினர். அவர்களது கோரிக்கை விரிவாக ஆராயப்பட்டது. வாய்க்காலில் போதுமான நீரை செலுத்துவதற்கு தேவையான நீர் மட்டம் ( Head of waters ) நாட்டாற்றில் இல்லை. ஆதலால் இந்த தலைப்பு மாற்றம் குறித்த ஆய்வு கைவிடப்பட்டது.

சமீபத்தில் கால்வாயின் முகப்பு பகுதி ஆழப்படுத்தப்பட்டு, கால்வாயின் முக்கியமான இடங்களில் மண் சரிவை தடுக்க சருக்கைகள் கட்டப்பட்டுள்ளன. கால்வாயிலும் தூர் எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளால் கடைமடைப் பகுதி வரை நீர்த் தட்டுப்பாடு இல்லாமல் செல்ல வழிவகை ஏற்பட்டுள்ளது.

### கும்பகோணம் பிரதம நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்கு குத்தகை நிலத்தை விலைக்கு வாங்க ஒதுக்கப்பட்ட தொகை பற்றிய விவரம்

58.—வினா 13478—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கும்பகோணம் பிரதம நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்கு தங்கள் குத்தகை நிலத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள 1980-81, 1981-82ம் ஆண்டுகளில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) ஆம் எனில் விவரமென்ன ?

விடை;—

(அ) மற்றும் (ஆ) : 1980-81 ஒன்றுமில்லை. 1981-82 ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### மீன்கல்கரடு பகுதியில் சிறிய நீர்த்தேக்க ஏரி அமைத்தல்

59.—வினா 13531—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டம், ராசிபுரம் வட்டம், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் கிராமத்தின் அருகிலுள்ள அணைப்பாளையம் கிராமத்தில் மீன்கள் கரடு பகுதியில் சிறிய நீர்த்தேக்க ஏரி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

[1984 மார்ச் 23

விடை;—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### பள்ளிப்பட்டு வட்டத்தில் வனவளர்ப்பு திட்டத்தினை அமுல்படுத்தல்

60.—வினா 13622—திரு. பி. எம். நரசிம்மன் : மாண்புமிகு செய்தி அறநிலைய துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் பள்ளிப்பட்டு தொகுதியில் ஏராளமான காட்டுப் பகுதியும் மலைப் பகுதியும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்னில், பள்ளிப்பட்டு வட்டத்தில் வன வளர்ப்பு (Forestry range) திட்டத்தினை அரசு அமுல்படுத்துமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ)—பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி தாலுக்காவில் 26, 979· 43 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். இதில் 23,011.22 ஏக்கர் நிலங்கள் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. தகுதியான இடங்களில் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. சுவீடன் உதவியுடன் இயங்கி வரும் சமூக நலத் திட்டத்தின் கீழ் திருத்தணியில் மேலும் ஓர் வனச்சரக அலுவலர் நியமிக்கப்பட்டு, மரங்கள் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

### பள்ளிப்பட்டு வட்டத்திலுள்ள அரசு புறம்போக்கு, பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை ஏழை விவசாய கூலிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் திட்டம்

61.—வினா 13635—திரு. பி. எம். நரசிம்மன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் அரசு புறம்போக்கு, பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாய கூலிகளுக்குப் பட்டா செய்துதர அரசிடம் திட்டம் உண்டா ?



1984 மார்ச் 23]

விடை:—

வருவாய்த் துறையின் நிலையான உத்தரவுகள் தொகுப்பின் படியும் மற்றும் நடைமுறையிலுள்ள உத்தரவுகள் படியும் விண்ணப்பதாரர்களின் தகுதியின் அடிப்படையிலும் அவ்வப்போது ஒப்படை கோரி வரும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. இந்த நிலையில் ஏழை விவசாய கூலிகளுக்குப் பட்டா செய்து தருவதற்கென தனியாக திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென்பதில்லை.

### உயர்நீதி மன்ற அலுவலகங்களில் பணிபுரியும் மலைவாழ் மற்றும் ஆதிதிராவிடர் எண்ணிக்கை

62—வினா 13649.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நீதிமன்ற அனைத்து துறைகளிலும் பணி செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

(ஆ) அவர்களில் ஆதி திராவிடர், மலைவாழ் மக்களின் எண்ணிக்கை யாது ?

விடை:—

(அ) சென்னை உயர்நீதி மன்ற அலுவலகங்களில் 992 நபர்கள் பணி செய்கிறார்கள்.

(ஆ) அவர்களில் 79 நபர்கள் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

### பின் தங்கிய இனத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

63.—வினா 13654—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த கல்லூரி மாணவர்களுக்கு ஒருவருக்குக் கொடுக்கப்படும் உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ?

**விடை:—**

(1) பின்தங்கிய இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு பிற்பட்டோர் நலத்துறை மூலம் கல்வி உதவித் தொகை ஆண்டு முழுவதற்கும் என்ற கணக்கில் வழங்கப் பெறுகிறது. உதவித் தொகை மாதா மாதம் வழங்கப் பெறுவதில்லை. உதவித் தொகை, மாணவர்கள் மேற்கொள்ளும் படிப்பைப் பொறுத்து மாறுபடுகிறது. உதாரணமாக குறிப்பிட்ட சில வகைப் படிப்பினை விடுதிகளில் தங்கி பயிலும் பின்தங்கிய மாணவர்களுக்கு பிற்பட்டோர் நலத்துறை மூலம் ஓர் ஆண்டுக்கு வழங்கப் பெறும்உதவித் தொகை கீழ்க்கண்டவாறு தரப்படுகிறது :—

| கல்விமுறை. | நகரம். | | புறநகர்ப் பகுதி. | |
|---|---|---|---|---|
| | குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பின்தங்கிய வகுப்பினர். | குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பின்தங்கிய வகுப்பினர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய்.) | (ரூபாய்.) | (ரூபாய்.) | (ரூபாய். |
| 1 கலை விஞ்ஞானம்— | | | | |
| பி.எஸ்.ஸி. முதல் ஆண்டு | 880·75 | 980·75 | 780·75 | 830.75 |
| எம்,எஸ்.ஸி. முதல் ஆண்டு | 1,082·00 | 1,182 00 | 982·00 | 1,032·00 |
| 2 தொழிற்கல்வி— | | | | |
| 1. மருத்துவம் முதல் ஆண்டு | 869·50 | 1,019·50 | 819·50 | 969·50 |
| 2. பொறியியல்.. | 1,050·00 | 1,200·00 | 1,000·00 | 1,150·00 |
| 3. தொழில் நுட்பக் கல்வி | 670.00 | 770.00 | 629.00 | 670.00 |



(ii) உண்டி, மற்றும் உறையுள் இவைகளுக்காக விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட அளவில் உதவித் தொகை (மாதம் ஒன்றுக்கு) வழங்கப்படுகிறது. பகுதி (1) கூறப்பட்டுள்ள மொத்தத் தொகையில் இந்தத் தொகை அடங்கியுள்ளது. மிகுதியுள்ளவை, புத்தகம், தேர்வுக் கட்டணம் போன்றவற்றிற்காக வழங்கப்படுபவை :—

| கல்வி முறை. | நகரம். | | புறநகர்ப் பகுதிகள். | |
|---|---|---|---|---|
| | குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட இனத்தவர். | குற்றப் பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட இனத்தவர் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய்.) | (ரூபாய்.) | (ரூபாய்.) | (ரூபாய்.) |
| 1. கலை/விஞ்ஞானம் சட்டம்.— | 70 | 60 | 55 | 50 |
| 2. மருத்துவம்/பொறியியல்/விவசாயம் மற்றும் பல+ | 75 | 60 | 70 | 55 |
| 3. தொழிற் கல்வி தொழில் நுட்பக் கல்வி | 60 | [illegible] | [illegible] | [illegible] |

[1984 மார்ச் 23

கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு வழங்கும் சம சிக்கன நிதி.

64.—வினா 13716—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கைத்தறி கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு முழுவதும் கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு வழங்க வேண்டிய (சமசிக்கன நிதி) நிதி கூட்டுறவு மத்திய வங்கிகளிடமிருந்து உடன் வழங்கப்படுமா ?

(ஆ) மொத்தம் எவ்வளவு தொகை ?

விடை:—

(அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ரூ. 82.98 இலட்சம்.

அரசு சார்பில் குத்துச்சண்டை பயிற்சியாளர் நியமிக்கும் செயற்குறிப்பு.

65.—வினா 13798—திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அளவில் குத்துச் சண்டைக்கு பயிற்சியாளர் அரசு சார்பில் நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நியமிக்கப்படுவர் ?

விடை:—

(அ) உண்டு.

(ஆ) அதற்கான நடவடிக்கை மாநில விளையாட்டு மன்றத்தால் எடுக்கப்படுகின்றது. தேசிய விளையாட்டு நிறுவனத்தில்(NIS) பயிற்சி பெற்றவர் ஒருவரை நியமிக்கும் உத்தேசம் உள்ளது.

முடையூர் சித்தேரியை விரிவாக்கும் திட்டம்.

66.—வினா 13801—திரு ஆர். தியாகரர்ஜன் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி இடையூர் கிராமத்தில் உள்ள முடையூர் சித்தேரியை விரிவாக்குவதற்காக ரூ. 1,10,000 ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை:—

(அ) மற்றும் (ஆ) : முடையூர் சித்தேரியின் கரையை ட்டி ஏரியின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்று பாதுப்பணித் துறையின் பரிசீலனையில் உள்ளது.



1984 மார்ச் 23]

நரி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல்

67.—வினா 13805—திரு. ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நரி ஓடையின் குறுக்கே மதுரவல்லி ஏரிக்கு அணைகட்ட ரூபாய் 1,62,000 ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை:—

(அ) சேவூர் கிராம எல்லைக்குள் நரியோடையின் குறுக்கே அணைக்கட்டு கட்டுவதற்கான திட்டம் ஒன்று தல அதிகாரிகளால் முடிவாக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இப்பணி எடுத்துக் கொள்ளத் தக்கதாக இருந்தால், ஒப்புதலுக்குப் பிறகு மேற்கொள்ளப்படும்.

1975 முதல் 1981 வரை மரண தண்டனை அளிக்கப்பட்டோர்

68.—வினா 13815—திரு. இல. பலராமன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 முதல் 1981 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் எத்தனை மரண தண்டனைகள் அளிக்கப்பட்டன ?

(ஆ) எந்தெந்த சிறைகளில் அளிக்கப்பட்டது ?

விடை:—

(அ) மற்றும் (ஆ): 1975 முதல் 1981 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 237 பேர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவ்வாண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றம் 57 பேர்களுடைய மரண தண்டனையை உறுதி செய்தது. மேலும் 1975-81 ஆண்டுகளில், கோவை மத்திய சிறையில் 5 பேர்களுக்கும், மதுரை மத்திய சிறையில் 4 பேர்களுக்கும், பாளையம்கோட்டை மத்திய சிறையில் 2 பேர்களுக்கும் சேலம் மத்திய சிறையில் 2 பேர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மத்திய சிறைகளில் ஒவ்வொருவருக்கும் ஆக மொத்தம் 15 பேர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

[1984 மார்ச் 23

### தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமப்பகுதிகளில் கட்டப்பட்ட மகளிர்களுக்கான நவீன கழிப்பிடங்கள்

**69.—வினா 13953—திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் எத்தனை நவீன கழிப்பிடங்கள் மகளிர்களுக்காக கட்டப்பட்டன ?

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் கட்டப்பட்டவை ஒன்றியம் வாரியாக ?

விடை:—

(அ) முதற்கட்ட 69 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் ஒன்றியத்திற்கு இரண்டு கிராமங்கள் வீதம் தாய்மார்களுக்கான கழிப்பிட வசதிகள் மொத்தம் 138 கிராமங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்ட 150 தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களிலும் ஒன்றியத்திற்கு இரண்டு கிராமங்கள் வீதம் மொத்தம் 300 கழிப்பிட வசதிகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 5 ஒன்றியங்களில் 10 கழிப்பிட வசதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.—

| ஊராட்சி ஒன்றியப் பெயர். | எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. கோட்டூர் .. .. .. .. | 2 |
| 2. திருத்துறைப்பூண்டி .. .. .. | 2 |
| 3. குத்தாலம் .. .. .. .. | 2 |
| 4. பூதலூர் .. .. .. .. | 2 |
| 5. கீழ்வேளூர் .. .. .. .. | 2 |
| மொத்தம் .. | 10 |



1984 மார்ச் 23]

### பெருந்துரை வட்டம் நல்ல கவுண்டன் பாளையத்தில் குடி தண்ணீர் குழாய் பதிக்கும் திட்டம்

**70—வினா 14111—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துரை வட்டம் ஊத்துக் குளி ஒன்றியம் செங்கப்பள்ளி ஊராட்சி நல்லகவுண்டன் பாளையம் ஆதி திராவிட மக்களுக்கு குழாய் கிணறு போட்டும், குடிதண்ணீர் குழாய் போடாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நல்லகவுண்டன்பாளையம் ஆதி திராவிடர் குடியிருப்புக்கு 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குழாய் பதிப்பதற்காக வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரத்தாகியபடியால் மீண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இது குறித்து துரித நடவடிக்கை எடுத்து வேலையை முடித்து விடுவதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஈரோடு வட்ட நிர்வாகப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

### விளாத்திகுளம் தொகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம்

**71—வினா 14134—திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஊர்களில் எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்க உத்தேசம் உள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நாகலாபுரம் நெசவாளர் கூட்டுறவு சங்கம் நாகலாபுரத்தில் 25 வீடுகளும், புதூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம், புதூரில் 50 வீடுகளும் கட்டிக்கொடுக்க உத்தேசம் உள்ளது.

[1984 மார்ச் 23

## தருமபுரி மாவட்டத்தில் மீன்குஞ்சுகள் வளர்க்கப்படும் ஏரிகள்.

72—வினா 14148—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை ஏரிகளில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன ?

விடை—

(அ) தருமபுரி மாவட்டத்தில், மீன்துறையின் பராமரிப்பில் உள்ள 10 ஏரிகளிலும் அம்மாவட்டத்தில் செயல்படும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் பராமரிப்பில் உள்ள 181 ஏரிகள் மற்றும் குளங்களிலும் மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படுகின்றன

## தஞ்சாவூரில் உள்ள இரு மருத்துவமனைகளிலும் பிண ஊர்திகள் பராமரிக்கப்படாதது

73—வினா 14225—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் உள்ள இரண்டு மருத்துவமனைகளிலும் பிணங்களை எடுத்துச் செல்ல பிண ஊர்திகள் இருந்தும் அது பராமரிக்கப்படாததினால் பொது மக்கள் அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதனைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) தஞ்சாவூரிலுள்ள இரண்டு மருத்துவ மனைகளுக்கும் சேர்ந்து ஒரு பிண ஊர்தி தஞ்சை ராசா மிராசுதார் மருத்துவ மனையில் இயங்கி வந்தது. அது சில பழுது பார்ப்பதற்காக தானியங்கி பொறியாளர் பட்டறையில் 28–2–1982 அனுமதிக்கப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு 23–4–1982 முதல் உபயோகத்திலிருந்து வருகிறது. மேலும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கும் புதிதாக ஒரு பிண ஊர்தி அரசால் வழங்கப்பட்டு, அவ்வூர்தி 14–7–1982 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



1984 மார்ச் 23]

## கோகிலாபுரம் முதலான கிராமங்களுக்கு பெரியாற்றிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் செயற்குறிப்பு.

74—வினா எண் 14250—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோகிலாபுரம், இராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, நாகைய்ய கவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு பெரியாற்றிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(அ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கபடும்?

விடை—

(அ) அக்கிராமங்களுக்கு சுருளியாற்றிலிருந்து (பெரியாறு அல்ல) குடிநீர் கொண்டு வர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டுள்ளது. )

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 24.98 இலட்சங்கள்.

(இ) தன்னிறைவுத் திட்டம் மூன்றாவது கட்டத்தில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படும் ?

## வம்பன் திருவரங்குளம் காலனிகளில் ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு.

75—வினா எண். 14295—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

புதுக்கோட்டை மாவட்டம் வம்பன் திருவரங்குளம் காலனிகளில் ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தற்போது வம்பன் திருவரங்குளம் காலனிகளில் ஆழ் குழாய் கிணறுகள் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு எதும் இல்லை.

[1984 மார்ச் 23

புதுக்கோட்டை மாவட்டம் நகரம் அம்புலி ஆற்றில் அணைகட்டும் திட்டம்.

76—வினா எண். 14311—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் நகரம் அம்புலி ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) சிறு பாசன தலைமைப் பொறியாளர் இத்திட்டத்தை ரூ. 11.10 இலட்ச மதிப்பீட்டில் நிறைவேற்ற அனுப்பியுள்ள ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மதுராந்தகம் சௌபார்மல் சௌக்கார் அரசினர் மேலநிலைப் பெண்கள் பள்ளியில் நாற்காலி பெஞ்சுகள் இல்லாமை.

77—வினா 14374—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் சௌபாக்மல் சௌக்கார் அரசினர் மேல்நிலைப் பெண்கள் பள்ளியில் மாணவிகள் அமர நாற்காலி, பெஞ்சுகள் இல்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவ்வசதி செய்து கொடுக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) நாற்காலிகள், பெஞ்சுகள் போதாமை பற்றி தன் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மற்றும் பழைய பள்ளிகளுக்கு மரத் தளவாடங்கள் வாங்க, அரசு நிதி நிலை காரணமாக தற்போது தடை விதித்துள்ளது.



1984 மார்ச் 23]

திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் திருநாகேஸ்வரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு கூட்டுறவுத்துறை மூலம் கடன் வழங்கும் செயற்குறிப்பு.

78—வினா எண். 14390—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள், திருநாகேஸ்வரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த நெசவாளர்கள் தங்களுக்கு கூட்டுறவுத்துறை மூலம் பட்டு கைத்தறி உற்பத்தி செய்ய கடன் வேண்டி அரசுக்கு மனு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை இருப்பினும் திருநாகேஸ்வர பகுதியில் உள்ள நெசவாளர்களுக்காக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச்சங்கம் மூலம் அவர்களுக்கு கடன் மற்றும் நூல் அளிக்கப்படும்.

திருவண்ணாமலையில் புதியதாக பெண்கள் கல்லூரி.

79—வினா எண். 14487—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் பெண்கள் கல்லூரி புதியதாக திறக்க வேண்டும் என்று அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

விடை—

இல்லை.

வள்ளியூர் ஒன்றியம் செட்டிக்குளம் சொத்தன்குளம் புதுமனைசாலை அமைத்தல்.

80—வினா எண். 14495—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் ஒன்றியம் செட்டிகுளம் சொத்தன்குளம்—புதுமனை சாலை போட கருங்கல் சல்லி அடிக்கப்பட்டது எப்போது ?

(ஆ) இவ்வளவு நாள் அது போடப்படாததன் காரணம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): 1979–80 நிதி ஆண்டில் கருங்கல் சல்லி அடிக்கப்பட்டது. போதிய மழையின்மையால் சாலையில் கல் விரிக்கப்படவில்லை. மேலும தன்னிறைவுத் திட்ட வேலைகளுக்கு முன்னுரிமை வழங்கி, பவர் ரோலர்கள் ஒதுக்கப்பட்டதால் மேற்படி வேலைக்கு பவர் ரோலர் ஒதுக்கீடு கிடைக்கவில்லை. இருப்பினும் 1981–82 நிதியாண்டில் பவர் ரோலரைப் பயன்படுத்தி சல்லி விரிக்கப்பட்டு சாலை சீர் செய்யப்பட்டுள்ளது.

சாத்துக்குடல் பஞ்சாயத்திலுள்ள அரிசன காலனியில் குடியிருக்கும் அரிசனங்களுக்கு மனை பட்டா கோரி மனுக்கள்

81—வினா எண். 14638—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம் சாத்துகுடல் பஞ்சாயத்திலுள்ள அரிசன காலனியில் குடியிருக்கும் சுமார் 2,000 அரிசனங்களுக்கு மனைப்பட்டா கோரி பல மனுக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரிசன மக்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்;

(ஆ) தென்னாற்காடு மாவட்டம்; விருத்தாச்சலம் வட்டம் சாத்துக்குடல் கிராமத்திலுள்ள 135 கூடுதலான ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கு 3.77 ஏக்கர் நன்செய் நிலங்கள் இடம் பெற்றுள்ளன. நன்செய் நிலங்களை கையகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.





நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு அளித்தல்

82—வினா எண். 14744—திரு. கே. உச்சி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள 11 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

விடை—

மின்வெட்டு தற்போது இல்லை.

கூடலூரில் பால்பண்ணை அமைத்தல்

83—வினா எண் 14754—திரு. கே. உச்சி: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூரில் உயர்ந்தரக பசுக்கள் முரா போன்ற எருமைகள் கொண்ட பால் பண்ணை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

தற்போது பால்வளத் துறை மூலம் கூடலூரில் உயர்ந்தரகப் பசுக்கள் முரா போன்ற எருமைகள் கொண்ட பால் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

தாமரைக்குளத்தில் பூமிதான இயக்கத்திற்கு கொடுக்கப்பட்ட நிலம்

84—வினா 14818—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியகுளம் வட்டம் தாமரைக்குளம் சர்வே எண். 2621 இல் 40.5 சென்ட் பூமிதான இயக்கத்திற்கு கொடுக்கப்பட்டதா ?

(ஆ) தற்போது அந்நிலம் யார் வசம் உள்ளது?

[1984 மார்ச் 23

விடை—

(அ) ஆம்.

(ஆ) தானமாக பெறப்பட்ட நிலம் 1962 ஆம் ஆண்டில் நிலமற்ற ஏழைகள் எட்டுப்பேருக்கு ஒதுக்கப்பட்டது. அவர்கள் அந்நிலத்தைப் பயிரிட்டு பயன்பெறாவண்ணம், நிலத்தை தானம் செய்தவரே தடைசெய்வதாக தெரியவருவதால் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுராந்தகம் தொகுதி நூலகங்களிலுள்ள புத்தகங்களின் மதிப்பு.

85—வினா எண் 14850—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் எத்தனை நூலகங்கள் உள்ளன ?

(ஆ) அவைகள் மூலம் 1980-81, 1981-82-ல் பயன் அடைந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) வாங்கப்பட்ட புத்தகங்களின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) 12.

(ஆ) பயனடைந்தவர்கள்—

| | | 1980-81 எண்ணிக்கை. | 1981-82 எண்ணிக்கை. |
|---|---|---|---|
| படிக்க எடுத்துச் சென்றோர் | .. | 43,408 | 38,524 |
| ஆராய்ச்சி செய்தோர் | .. | 26,875 | 28,681 |
| உபயோகித்தோர் ... | .. | 1,41,852 | 1,78,722 |
| | | 2,12,045 | 2,45,927 |

(இ) —

| | | | |
|---|---|---|---|
| 1980-81 | .. | ரூபாய் | 16,003.41 |
| 1981-82 | .. | ரூபாய் | 31,839.68 |



1984 மார்ச் 23]

சென்னை சட்டக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை.

86—வினா எண். 14902—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சட்டக்கல்லூரியில் தற்பொழுது ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள் ?

(ஆ) ஒவ்வொரு வகுப்பிலும் (Section) எவ்வளவு மாணவர்கள் பயில்கிறார்கள் ?

விடை—

(அ) தற்போது 300 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.

(ஆ) ஐந்து வகுப்புகள் ஒவ்வொன்றிலும் 60 மாணவர்கள் பயில்கிறார்கள் ?

1981-82 ஆம் ஆண்டு விளவங்கோடு தாலுக்காவில் மீனவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள்.

87—வினா எண். 15042—திரு. டி. மணி : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1981-82 ஆம் ஆண்டு விளவங்கோடு தாலுக்காவில் பூத்துறை, எரேமியன் துறை, நீரோடி போன்ற பகுதிகளில் மீனவர்களுக்கு எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன ?

விடை—

மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 1980-81 ஆம் ஆண்டில் விளவங்கோடு தாலுக்கா பூத்துறையில் 50 வீடுகள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அவைகளின் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இரயுமன் துறையில் 72 வீடுகள் கட்ட ஆணை வழங்கப்பட்டு அதில் 50 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 22 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளது. மற்றும் நீரோடி கிராமத்தில் 11 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 1981-82 ஆம் ஆண்டில் புதியதாக பூத்துறை, இரயுமன் துறை, நீரோடி முதலிய பகுதிகளில் மீனவர்களுக்கு வீடுகள் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

### சங்கராபுரம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலையம் ஏற்படுத்துதல்.

88—வினா எண். 15074—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்வதற்கு அறுவை சிகிச்சை நிலையம் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில் விரைவில் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

விடை—

(அ) சங்கராபுரம் மருத்துவ மனையில் குடும்பநல ஆண் அறுவை சிகிச்சை செய்வதற்கான வசதிகள் உள்ளன.

(ஆ) இம்மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. கட்டுமானப்பணி முடிந்தவுடன் பெண் அறுவை சிகிச்சை மேற்கொள்ளுவதற்கான வசதியும் ஏற்படும்.



### 1981 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் வீட்டு மனை வழங்கப்பட்டோர் எண்ணிக்கை.

89—வினா எண். 15146—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் வீட்டுமனை கேட்டு மனு செய்யப் பெற்ற மனுக்கள் எவ்வளவு?

(ஆ) அவர்களில் வீட்டுமனை பெற்றவர்கள் எத்தனைபேர்?

விடை—

(அ) 19,484

(ஆ) 18,820

### தேவக்கோட்டையை சுற்றி ஏற்படுத்தப்படும் புதிய நகரப் பேருந்து தடங்கள்.

90—வினா 15196—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவக்கோட்டையைச் சுற்றி எத்தனை புதிய நகரப் பேருந்து தடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன ?

(ஆ) அவற்றில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எத்தனை இடங்களில் நகரப் பேருந்துகளை விடும்?

(இ) தனியார் துறையினர் எத்தனை இடங்களில் நகரப் பேருந்துகளை விடுவார்கள் ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): தேவக்கோட்டையைச் சுற்றி இரண்டு புதிய நகரப் பேருந்து தடங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. இந்த இரண்டு வழித்தடங்களிலும் பாண்டியன் போக்கு வரத்துக் கழகமே பேருந்துகள் விடும்.

[1984 மார்ச் 23

வடாற்காடு, திருப்பத்தூர் மருத்துவமனையில் 1981 ஆம் ஆண்டு கருத்தடை செய்து கொண்டோர் எண்ணிக்கை.

91—வினா எண். 15212—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள அரசாங்க மருத்துவமனையில் 1981-82 ஆம் ஆண்டு கருத்தடை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட ரூபாய் எவ்வளவு ?

விடை:—

(அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் 1981-82 ஆம் ஆண்டு 19 ஆண்களும், 928 மகளிரும் கருத்தடை செய்து கொண்டனர். அதற்காக மொத்தம் ரூபாய் 1,46,205 செலவிடப்பட்டது.

1981 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்.

92—வினா 15357—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டில் எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது ?

(ஆ) கொள்முதல் நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்ட நெல் எவ்வளவு ?

(இ) அதில் விவசாயிகளுடைய நெல் எனக் கண்டு திருப்பிக் கொடுக்கப்பட்ட நெல் எவ்வளவு ?

விடை:—

(அ) 24,745 டன்கள்.

(ஆ) 5 குவிண்டால்.

(இ) எதுவும் இல்லை.



1984 மார்ச் 23]

சின்னப்பரூர் ரயில் நிலையத்திற்கு பேருந்து விடும் திட்டம்.

93—வினா 15437—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் மங்கலம்பேட்டை வழியாக சின்னபரூர் இரயில் நிலையத்திற்கு பஸ் விட அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலத்திலிருந்து மங்கலம்பேட்டை வழியாகச் சின்னபரூர் ரயிலடிக்கு பேருந்து விடும் திட்டம் ஏதும் இல்லை.

சென்னை நகரிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

94. வினா 15516—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கைத்தறி—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

விடை—

சென்னை மாநகரில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் 11 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

1. சைதாப்பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
2. சைதாப்பேட்டை ஜோதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
3. மந்தைவெளி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
4. வண்ணாரப்பேட்டை அறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
5. வண்ணாரப்பேட்டை தந்தை பெரியார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
6. சாதிக்பாட்சா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

[1984 மார்ச் 23

7. மைலாப்பூர் ஸ்ரீவெள்ளியங்கிரி விநாயகர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

8. கோடம்பாக்கம் மீனாட்சியம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

9. டாக்டர் இராதாகிருஷ்ணன் (சென்னை-7), நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

10. சூளை அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

11. வியாசர்பாடி வியாசர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

சென்னை புதிய வாழை நகர் பகுதியில் புதிய நுகர் பொருள் வாணிபக் கழக சில்லரை அங்காடிகள் அமைத்தல்.

95. வினா 15561—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சென்னை பின்னி பஞ்சாலைக்கு எதிரே உள்ள மங்களபுரம் புதிய வாழைநகர் பகுதியில் புதிய ரேசன் கடைகள் அமைத்துக் கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

மங்களபுரம் புதிய வாழைநகர் பகுதியில் 523 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த 523 குடும்ப அட்டைகள் அனைத்தும் அந்தப் பகுதிக்கு அருகாமையில் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ள கிருஷ்ணதாஸ் சாலையிலுள்ள நுகர் பொருள் வாணிபக் கழக சில்லரை அங்காடியில் இணைக்கப்பட்டுள்ளன. எனவே இப்பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க உத்தேசமில்லை.

கதர் வாரியம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கதர்த்துணிகள்.

96. வினா 15612—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கதர் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் கதர் துணிகளின் அளவு எவ்வளவு ?

(ஆ) வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பெறும் கதர் துணிகளின் அளவு என்ன ?



1984 மார்ச் 23]

விடை—

(அ) கதர் வாரியத்தினால் ரூபாய் 914.59 இலட்சம் மதிப்புள்ள 54.15 இலட்சம் மீட்டர் பருத்தி மற்றும் பட்டு ரக கதர் சென்ற ஆண்டில் (1981-82) உற்பத்தி செய்யப்பட்டது.

(ஆ) வெளி மாநிலங்களிலிருந்து ரூபாய் 158.93 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் (பெட்ஷீட், டெபஸ்டரி கோட்டிங் பிரிண்டெட் சில்க் புடவைகள், கம்பளி ரகங்கள் முதலியன விற்பனைக்காக சென்ற ஆண்டில் (1981-82) வாங்கப்பட்டது.

ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட வழங்கும் கடன்தொகை.

67. வினா 15720—திரு. ச. பாலகிருஷ்ணன் : திரு. வ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பொது பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆதி திராவிடர்களுக்கென்று வீடுகள் கட்ட அரசு கொடுத்து வருகிற கடன் தொகை பற்றாக்குறையாக இருப்பதாக கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) இந்தக் கடன் தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

விடை—

(அ) கிராம வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வீடுகட்ட வழங்கப்படும் கடன் தொகை போதுமானதாக இல்லை என்று அரசுக்கு கோரிக்கைகள் வநதன. மேற்படி திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுவந்த கடன் தொகையின் உச்சவரம்பை ரூபாய் 3,750 லிருந்து ரூபாய் 4,000 ஆக உயர்த்தி 18—1—1982 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) கடன் தொகை தவணைகளில் வழங்கப்படும்போது நிதிப் பற்றாக்குறையினால் காலதாமதம் நேரிட்டால் அரசு தன் நிதியிலிருந்து வழிவகை முன்பணத்தினை தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திற்கு வழங்கி, அனைத்து உறுப்பினர்களுக்கும் காலதாமதமின்றி கடன் பெற வழி செய்து வருகிற

[1984 மார்ச் 23

கல்லூரி மாணவர்களுக்கு கராத்தே பயிற்சியை கட்டாயப் பாடமாக்கும் திட்டம்.

98. வினா 15744—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கல்லூரி மாணவர்கட்கு கராத்தே விளையாட்டு பயிற்சி கட்டாயப் பாடமாக்கப்படும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

விடை—

இல்லை.

உதகையில் தனியார் கட்டிடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்கள்.

99. வினா 15756—திரு. கே. உச்சி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகையில் தனியார் கட்டிடங்களில் நடக்கும் அரசு அலுவலகங்கள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கான மாத வாடகையின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களின் எண்ணிக்கை 32.

(ஆ) அவைகளுக்கான மாத வாடகையின் மொத்த மதிப்பு ரூபாய் 18,143.

கிளை நூலகங்கள் ஏற்படுத்தக் கடைபிடிக்கப்படும் முறைகள்.

100. வினா 15785—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிளை நூலகங்கள் ஏற்படுத்த என்ன முறைகள் (Norms) கடைபிடிக்கப்படுகின்றன ?

(ஆ) 1982 ஆம் ஆண்டில் புதிய கிளை நூலகங்கள் எத்தனை அமைக்கப்பட உள்ளன ?



1984 மார்ச் 23]

விடை—

(அ) 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் நூலகச் சட்ட விதி 45-ன் படி ஒரு இடத்தில் கிளை நூலகம் திறக்க அங்கு மக்கட் தொகை 5,000 அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

(ஆ) திட்ட மானியத்தின் கீழும் நூலக ஆணைக்குழு நிதியிலிருந்தும் 21 கிளை நூலகங்கள் திறக்கப்படவுள்ளன. இவை தவிர, 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 275 இடங்களில் நூலக ஆணைக்குழுக்களின் நிதி நிலைக்கு ஏற்ப, கிளை நூலகங்கள் திறக்கவும், பொது நூலக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்(.

2. தகவல் கோரல்.

[அ] இராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விளக்கக் கூட்டம்.

திரு. ப. நெடுமாறன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராம பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கைப் பிரதிகள் கட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்படும் என்று முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கிடையில், 8-4-1984 அன்று தமிழகம் எங்கும் ராம் பிரசாத் ராவ் கமிஷன் பற்றி விளக்கக் கூட்டங்கள் நடத்தப் போவதாக ஆளும் கட்சித் தரப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிஷனுடைய அறிக்கை உறுப்பினர்களுக்கு கிடைக்காத நிலையில், வெளியிலே இருப்பவர்களுக்கு எப்படி கிடைக்கிறது ? அதைப்பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டசபையில் வைக்கப் பட்ட கருத்தையொட்டித்தான் அவர்கள் விளக்கக் கூட்டம் போடப் போகிறார்களே தவிர, வேறு அல்ல. அவர்களைக் கூட்டம் போடக் கூடாது என்று சொல்ல முடியாது.

[1984 மார்ச் 23

[ஆ] உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே ஏற்கனவே எம். பி. பி. எஸ்., மருத்துவத் துறையில் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருந்தாலும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்க வேண்டும். உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. ரா. கிருஷ்ணன் : நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு வாக்குறுதியைக் கொடுக்க முடியாது. எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதியைப் பற்றி முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியை கொடுக்க முடியாது.

[இ] உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து உங்கள் மூலமாக அரசிடமிருந்து விடை பெறலாம் என்று விரும்புகிறேன். உட்கார வைத்து விடாதீர்கள். மாநகராட்சி தேர்தல் சம்பந்தமாக இட ஒதுக்கீடு தவறானது என்று நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமாக பதில் சொல்வதற்கு அமைச்சர் இங்கே இல்லை. நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.



1984 மார்ச் 23]

(முற்பகல் 10-10).

திரு. அ. ரகுமான்கான் : எங்களைப் போன்றவர்களுக்கு இதைத் தவிர வேறு வேலை இல்லை. நான் ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது வேண்டுமானாலும் எழுந்து கேள்வி கேட்பது என்பது முறையல்ல. எங்கேயும் அனுமதிக்கப்படுவது கிடையாது. (குறுக்கீடு). நீங்கள் சொல்வது சரியாக இருந்தால் அனுமதிக்கப்படும். இல்லை என்றால், ''எக்ஸ்பஞ்ச்'' செய்துவிடுவேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சொல்வது சரியாக இல்லை என்றால், ''எக்ஸ்பஞ்ச்'' செய்யுங்கள். அதைப் பற்றி கவலையில்லை. நான் விதிகளுக்கு உட்பட்டுத்தான் கேட்கிறேன். ஒரு தகவல் என்ற முறையில், பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. நகராட்சி மன்றங்களிலே இட ஒதுக்கீடு செய்யப்பட்டது சம்பந்தமாக, தேர்தல் சம்பந்தமாக நீதிமன்றத்திலே வழக்கிருக்கிறது. இன்றைக்குக் கூட பல வழக்குகள் வர இருப்பதாகக் கேள்வி. இதற்கிடையில் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் வெளியிலே இருந்து கொண்டு இருக்கிறது. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ? ஒரு வேளை ஸ்டே கொடுத்து விட்டால், முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, பழைய முறைப்படி தேர்தல் நடக்கும் என்று, அதன்படி நடக்குமா ? என்ற தகவலை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன முக்கியத்துவம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) தேர்தல் என்றால் எல்லோருக்கும் முக்கியம் தான். நீங்கள் இதற்கு என்று முறையாக நோட்டீஸ் கொடுங்கள். இந்த அவையில் பல வருடங்களாக இருக்கிறீர்கள். நோட்டீஸ் கொடுங்கள், அது தான் முறை. இதற்குப் பதில் சொல்வதற்கு இங்கே அமைச்சர் அவர்கள் இல்லை.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### எ ஹுர் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தி. கா. நல்லப்பன், பொ. உத்திராபதி, ஏ. டி. கருப்பையா, செ . சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மற்றும் ரா. உமாநாத் ஆகியோர் " எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு, சிங்கரேணி நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரி வருவது தடைப்பட்டு உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் " என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. தி. கா. நல்லப்பன் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கரேணியிலிருந்து அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி வரவில்லை என்ற செய்தியைப் பார்க்கின்றபோது, ஒரு அதிர்ச்சியான செய்தியாக இருக்கிறது. காரணம் இன்றைய தினம் மின்சாரம் இல்லாமல், தொழில் துறையாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, வேறு ஏனையத் துறைகள் எதுவாக இருந்தாலும், மின்சாரம் இல்லாமல் செயல்பட முடியாத ஒரு நிலையிருக்கிறது. நிலக்கரியை அனுப்பாததற்கு சுரங்கங்கள் சொல்லக் கூடிய காரணம், மின் துறை 1.75 கோடி ரூபாய் கடன் பாக்கி கொடுக்க வேண்டும். அந்தக் காரணத்தாலே நிலக்கரியை அனுப்புவதற்கு தடை செய்வதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில் பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் இந்தத் துறை முக்கியம் என்ற முறையிலே அதற்கும் முன்னுரிமை கொடுத்து குறிப்பிட்ட அளவிற்கு நிதியை ஒதுக்கியிருந்தால், இந்த மாதிரியான நிலைமை வராமல் இருக்கும். இருப்பினும் பல்வேறு துறைககளிலே நாம் செய்யக்கூடிய செலவுகளில், இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், எண்ணூர் அனல் மின்





நிலையத்தைப் பொறுத்த வரையிலே, 5 யூனிட்டுகள் செயல்பட இருந்தாலும் தற்போது அங்கே இருக்கக்கூடிய மின் உற்பத்தித் திறனைப் பொறுத்த வரையில், 450 மெகா வாட் திறன் கொண்டதாக இருந்தாலும், இன்றைய தினம் அங்கே உற்பத்தித் திறன், 2 மின் யூனிட்டுக்களில் 90 மெகா வாட் உற்பத்தியாகிக் கொண்டு வருகிறது. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறபோது 60 ஆயிரம் டன் நிலக்கரி எங்களிடத்தில் கைவசம் இருக்கிறது. கூடுமான வரையில் நாங்கள் அதை ஓரளவு சரிக்கட்ட முடியும் என்ற நிலையிலே அதிகாரிகளுடைய பதில் இருந்தாலும், இது தேவையை அடிப்படையாக வைத்து மின்சாரம் உற்பத்தி செய்கிற அளவுக்கு நிலக்கரி கைவசம் இல்லாத ஒரு நிலை, நிலக்கரியைப் பொறுத்துத்தான் எண்ணூர் அனல் மின் உற்பத்தி செய்கிற சூழ்நிலையில், ஏற்கனவே மின்சாரம் முழுமையாக கிடைக்கவில்லை, பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, முழுமையாக மின்சார உற்பத்தியைப் பற்றி அவை உறுப்பினர்கள் பேச வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்தலைவர் அவர்களே, சிங்கரேணியிலிருந்து வரவேண்டிய நிலக்கரியை அவர்கள் தர மறுத்து விட்டார்கள். அவர்கள் தர மறுத்ததற்கு சொல்லக் கூடிய காரணம், அவர்களுக்கு 13/4 கோடி ரூபாய் ஏற்கனவே பாக்கியிருக்கிறது. பழைய கடனுக்கு பண்டைய கடன் வேறு வேண்டுமா என்று தர மறுத்திருக்கிறார்கள். ஆகவே நிலக்கரியை தர முடியாது என்று தான் அவர்கள் சொல்லி இருப்பதாக எனக்கு தகவல்கள் கிடைத்திருக்கிறது. 13/4 கோடி ரூபாய் கட்டித்தான் காரணமாக இன்று நிலக்கரி வந்து சேரவில்லை நிலக்கரி வந்து சேராததன் விளைவாக ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த எணணூர் அனல் மின் நிலையத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் கையிருப்பு 60 ஆயிரம் டன். அதற்குப் பிறகு ஒரு வாரம் கழிந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

அதிலே பேர்பாதி கழிந்தது போக இப்போது 30 ஆயிரம் டன் 40 ஆயிரம் டன் நிலக்கரி கையிருப்பிலே இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது மின்சார வாரியத்தோடு இது சம்பந்தமாக தொடர்பு

கொண்டு, பணம் கட்டத் தவறியதற்கு ஏதாவது விவரங்கள் கிடைக்குமா என்று விசாரித்தபோது, அங்கேயிருந்து கிடைத்த தகவல், எங்களிடம் கையிலே பணம் இல்லை எப்பொழுதும் அரசாங்கம் எங்களுக்கு பணம் கொடுத்து உதவும். இந்தத் தடவை பணம் உதவி செய்வதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகியது. இன்னும் வந்து சேரவில்லை. அப்படி வந்து சேராதது தன் காரணமாகத்தான் நாங்கள் பணம் கட்ட முடியாத ஒரு இக்கட்டான நிலையிலே இருக்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அப்படி சொல்வது சரிதானா என்பதைப் பற்றிக் கூட நாம் விரிவாக ஆராய வேண்டியிருக்கிறது.

ஏனென்று சொன்னால், இதைப்பற்றி நாம் இந்த மன்றத்திலே பல தடவை பேசியிருக்கிறோம். கேள்விகள் கேட்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் பதில் கூட சொல்லியிருக்கிறார்கள். பல தொழிற்சாலைகள் மின் கட்டணத்தைக் கட்டாமல் லட்சக் கணக்கில் பாக்கி வைத்திருக்கிறார்கள். அவைகளை காலா காலத்திலே வசூலிப்பதற்கான முறையிலே மின்சார வாரியம் கொஞ்சம் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்திருந்தால், அந்த பாக்கிகள் எல்லாம் வசூலிக்கப்பட்டிருக்கும். அதற்குப் பதிலாக அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போவார்கள் என்றெல்லாம் நாம் நினைத்து கொஞ்சம் லீனியன்டாக இருந்துவிடுகிறோம். கடைசியிலே என்ன ஆயிற்று என்றால், பல்வேறு விதமான முறைகளிலே அந்தத் தொழிற்சாலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, ஆகவே விதிவிலக்குக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லி பல கோடி ரூபாயை அவர்களுக்கு வஜா செய்ததாக கடந்த கால சரித்திரத்தில் கூட இருக்கிறது. இன்னும்கூட பல அப்படி பெண்டிங்காக இருக்கின்றன இப்படி இருக்கிறது நிலைமை. அரசாங்கம் என்ன செய்கிறது ?

ஏதாவது ஒரு ஏழை விவசாயி பம்பு செட்டு போட்டுக் கொண்டு விவசாயம் செய்கிறபோது பணம் கட்டவில்லை என்றால், அல்லது அடிஷனல் டெப்பாசிட்டை குறிப்பிட்ட தேதியில் கட்டவில்லை என்றால், உடனடியாக வந்து பியூஸ் பிடுங்கிவிடுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது).





மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானமா என்ன ? எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வராததைப் பற்றியது. நிலக்கரியில் எங்கேயிருந்து பியூஸ் பிடுங்குவது ? ஏதாவது பேசி ரெக்கார்ட் பண்ண வேண்டும் என்று பண்ணினால், எதிர்காலத்தில், திரு சொரணம் அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்று படித்துப் பார்த்தால், அப்போது ரொம்ப சங்கடமாக இருக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : நான் அப்படியெல்லாம் பேச மாட்டேன். எதற்குச் சொன்னேன் என்றால், பணம் இல்லாததினால் தான் பழைய பாக்கியை கட்டவில்லை. தொழிற்சாலை முதலாளிகளிடமிருந்து முறையாக வசூல் பண்ணியிருந்தால் பிரச்சினையே வந்திருக்காது என்பது ஒரு அயிட்டம். பல அயிட்டங்களிலே அது ஒரு அயிட்டம். இன்னொன்று, மாநில அரசாங்கத்திற்கு பணமில்லாத பிரச்சினை ஏன் வருகிறது என்று சொன்னால், ஏற்கெனவே மத்திய சர்க்காரிடம் ஓவர் டிராப்ட். அந்தப் பணத்தையே அவர்கள் மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாகக் கட்டி முடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசிடமிருந்து உதவி கிடைக்காத நிலை. நம் மாநிலம் மட்டுமா ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறது? பல மாநிலங்களுக்கும் ஓவர் டிராப்ட் இருக்கிறது. ஏன் மத்திய அரசாங்கமேகூட ஓவர் டிராப்ட்டில்தான் இருக்கிறது.

(முற்பகல் 10-20)

அவர்கள் எங்கெங்கேயெல்லாம் கடன் வாங்குகிறார்கள். அதைப் போல் நாமும் வாங்குகிறோம். அப்படியிருக்கிற காரணத்தினாலே மத்திய அரசாங்கத்தினுடைய நிர்ப்பந்தமும் இதிலே இருக்கிறது. மத்திய சர்க்காருடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக மார்ச் 31-ஆம் தேதிக்குள் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் மாநிலம் உதவி செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. பணமும் கட்டப்பட்டு கரியும் பெறப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட வேண்டும்: இப்பொழுது 5 யூனிட்டுகளில் இரண்டு யூனிட்டுகள்தான் வேலை செய்கின்றன. 3 பழுதுபட்டிருக்கின்றன. உற்பத்தி 90 மெகா வாட் தான். 360 மெகா வாட் உற்பத்தி இல்லை. இந்த விஷயங்களைப்பற்றி எல்லாம் விரிவாகப் பேசி

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1984 மார்ச் 23

வாதித்து ஒரு முடிவு செய்து மின்சார உற்பத்தியைச் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்த இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் வாரிய நிதி நிலைமையைப் பொறுத்தவரையில் இடர்பாடுகள் நிறைய இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதைப்பற்றி அந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது நிறையப் பேசுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இருப்பினும் சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் அனுப்புகிற நிலக்கரிக்கு அவ்வப்போது இயன்ற அளவுக்கு நம்மால் பணம் தரப்படுகிறது. அண்மையில்கூட 68 லட்சம் ரூபாய் சிங்கரேணி நிறுவனத்திற்கு 7—3—1984ல் கொடுக்கப்பட்டது. மேலும் 51,60,000 ரூபாய் 14—3—1984-ல் சிங்கரேணி நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கணக்கின்படியே இன்னும் நாம் தரவேண்டியது 89.81 லட்ச ரூபாய் தான். ஆகவே அது ஒரு பெரும் தொகையல்ல. ஆயினும் நிலக்கரி வரத்தைப் பொறுத்தவரையில் அக்டோபர் மாதம் 77,784 டன் நிலக்கரி கிடைத்தது. நவம்பரில் 57,236 டன் ; டிசம்பரில் 65,934 டன், ஜனவரியில் 98,450 டன். ஆகவே ஜனவரியில் அந்த அளவுக்கு உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள் என்கிறபோது நாம் அவ்வப்போது பணத்தைத் தரவில்லை என்றால் செய்திருக்கமாட்டார்கள். பிப்ரவரியில் அது குறைந்து 38,110 டன், மார்ச் 15 வரை 1,144 டன், பிப்ரவரி மாதம் 8-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை தொழிலாளர்களின் தகராறு காரணமாக சிங்கரேணி சுரங்கத்தில் வேலை நிறுத்தம் இருந்தது. மேற்கொண்டு நிலக்கரி ஏற்றுவதில் தாமதம் இருந்து வந்தது. சிங்கரேணி சுரங்கத்திலிருந்து இந்த மாதம் நிலக்கரி குறைவாக வந்திருப்பது சம்பந்தமாக சிங்கரேணி நிறுவனத்திடனும் ரயில்வேயினுடனும் மின் வாரிய அதிகாரிகள் தொடர்புகொண்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆகவே எப்போதும் அவர்கள் நமக்கு தருகிற அளவுக்குத் தருவதை உயர்த்துவார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு.



13624

1984 மார்ச் 23] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாண்புமிகு உறுப்பினர் விவரங்களை எடுத்[illegible]. தற்போது 61,087 டன் கையிருப்பு இருக்கிற[illegible] மின் உற்பத்தி இயந்திரங்களில் இரண்டு இயந்திரங்கள் இயங்கி வருகின்றன. மற்ற மூன்று, 110 மெகாவாட் மின் உற்பத்தி இயந்திரங்கள் பராமரிப்புப் பணிக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் நாம் பயன்படுத்துகின்ற நிலக்கரி ஒரு நாளைக்கு சுமார் ஆயிரம் டன். இருந்தாலும் மற்ற இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகிறபோது நிலக்கரி தேவை அதிகரிக்கும். உடனடியாக எத்தகைய ஒரு பிரச்சினையும் மின் உற்பத்தியில் இப்போது ஏற்படவில்லை. ஒருவகையிலே பழுது பார்க்க இயந்திரங்கள் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அதிகமான அளவுக்கு நாம் நிலக்கரியைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இல்லாமல் இருந்தாலும் மின் உற்பத்தி இயந்திரங்கள் இயங்குகிற அளவுக்கு நாம் வேண்டிய நிலக்கரியைப் பெற்று தேக்கி வைப்பது மிகவும் முக்கியமான காரியம். அது குறித்து ஏற்கெனவே மின் வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்போது மின் உற்பத்தி செய்வதில் நிலக்கரி இல்லாமல் இருப்பதால் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. நிலக்கரி அனுப்பாததற்கு நாம் பணம் அனுப்பாதது காரணம் என்று சொல்வது அவ்வளவு சரியான காரணம் அல்ல. இப்படிப்பட்ட நிலவரங்கள் இருக்கிற காரணத்தினால் இதற்கு மேலும் இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டிய அவசியம் இராது என்று நம்புகிறேன். ஆகவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதை, பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(Thiru K. S. G. Haja Shareef rose)

Mr. SPEAKER: Do you want to say anything after the Hon. Minister's explanation?

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, the crux of the problem is because you owe nearly about a crores of rupees to them, they are not in a position to keep these outstanding—such a huge amount—to a considerable extent and therefore they are not selling the coal. It may not be very high for the Board, since the Hon. Minister knows that the Government are giving doles to the

[Thiru K. S. G. Haja Shareef] [1984 மார்ச் 23

extent of Rs. 2,500 crores to the Board and this amount will be a very very insignificant figure. But it is a significant figure as far as the collieries are concerned. So, I would suggest that the Hon. Minister may kindly devote his attention to see that there is no outstanding to that extent and that they do not feel constrained to send the coal here.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 4. கவன ஈர்ப்பு.

#### (அ) தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, செ. சிவசாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், மு. அப்பாதுரை, என்.ஏ. பூங்காவனம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ''தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் பட்டயப் படிப்பில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு இதுவரை சான்றிதழ் வழங்கப் பெறாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகின்ற மருந்தியல் பட்டயப் படிப்பில் 1981 ஆம் ஆண்டு சேர்ந்த முப்பது மருந்தியல் பட்டயப் படிப்பு மாணவர்கள் பயிற்சியை முடித்து 1982 ஆம் ஆண்டு நவம்பரில் இறுதி தேர்வில் கலந்து கொண்டார்கள். மேற்சொன்ன



1984 மார்ச் 23] [டாக்டர் எச். வி. ஹண்டே

30 மாணவர்களில் 10 மாணவர்கள் தேர்வில் வெற்றியடைந்தனர். அந்தப் பத்து மாணவர்களுக்கும் தற்காலிக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மீதமுள்ள இருபது மாணவர்கள் 1983 ஆம் ஆண்டு மே திங்களில் நடத்தப்பட்ட தேர்வில் கலந்து கொண்டனர். தேர்வில் கலந்து கொண்ட இருபது மாணவர்களில் ஒன்பது மாணவர்கள் வெற்றி பெற்றனர். அந்த மாணவர்களுக்குத் தற்காலிக சான்றிதழ் அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் டி. பார்மசியில் 1981 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 80-க்கும் மேற்பட்டவர்கள் தேர்வு பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் கோவையில் உள்ள மருத்துவக் கல்லூரியில் டி. பார்மசியில் வெற்றி பெற்றவர்களுக்கு எல்லாம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் எல்லாம் வேலையில் சேர்ந்து இருக்கிறார்கள். அரசு வேலையில் சேரவில்லை என்றாலும்கூட தனியார் மருத்துவ கடைகளில் அல்லது மற்ற இடங்களில் வேலை வாய்ப்பு பெற்று இருக்கிறார்கள். ஆகவே இந்த தஞ்சை மருத்துவக் கல்லூரியில் 80-க்கும் மேற்பட்ட மாணவர்கள் 1982-ல் படிப்பை முடித்தும் கூட இதுவரை சான்றிதழ்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிற காரணத்தால் அவர்கள் தனியார் கடைகளிலோ அல்லது வேறு இடங்களிலோ பணியில் சேர முடியாமல் இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு காரணம் அந்த தஞ்சை மருத்துவக் கல்லூரியில் தனியாக ரீடர் போடவில்லை என்றும் தனியாக பார்மசி துறை அங்கு அமைக்கவில்லை என்றும் இதன் காரணமாக இந்திய பார்மசி கவுன்சில் அங்கீகாரம் அளிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இந்த குறைகளை எல்லாம் போக்கி உடனடியாக இந்த 80 மாணவர்களுக்கு, படிப்பை முடித்தவர்களுக்கு சான்றிதழ்கள் கொடுப்பதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டைச் செய்து ஏதாவது ஒரு பணியில் அவர்கள் அமர்வதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பார்மசி கவுன்சிலில் President, Pharmacy Council of India ஒரு அதிகாரி இருக்கிறார். இதற்கு பார்மசி கவுன்சில் அனுமதி கொடுக்க வேண்டும். பார்மசி கவுன்சில் அனுமதி கொடுப்பதற்கு தாமதப் செய்தார்கள். சில குறைபாடுகளை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். இவைகளை எல்லாம் நீங்கள் நிவர்த்தி செய்ததற்கு பின் தான் அனுமதி கொடுப்போம் என்று சொன்னார்கள்.

(முற்பகல் 10-30)

ஆகவே, உடனடியாக டீனிடத்தில் இந்தக் குறைகளைக் களையச் சொல்லியிருக்கிறோம். உத்தரவு போட்டிருக்கிறோம். வலியுறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல, உடனடியாக அந்த நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுக்குச் சான்றிதழ்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இந்த மருந்தியல் பட்டயப் படிப்பில் தேர்வு பெற்றவர்களுக்கு அதாவது 1982 ஆம் ஆண்டு தேர்வு பெற்றவர்களுக்கு, 10 மாணவர்களுக்குத் தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இதேகாலத்தில், கோவை மாவட்டத்தில் இந்தப் பட்டயப் படிப்பு துவக்கப்பட்டு, அங்குள்ள மாணவர்களுக்கு முழுமையான, அதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரே காலத்திலே துவக்கப்பட்ட இரண்டு மருத்துவக் கல்லூரிகளில் ஒரு கல்லூரியில் இம்மாதிரி நிலைமை ஏற்படவும், மற்றொரு கல்லூரியில் இம்மாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்கவும் காரணம் என்ன? குறிப்பாக, தஞ்சையிலுள்ள கல்லூரியில் பார்மசி பேராசிரியர்— பார்மசி ரீடர் என்று கருதுகிறேன்— அவர் நியமிக்கப்படாத காரணத்தினால்தான பல்வேறு குறைபாடுகள் நிவர்த்திக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாகத்தான் சான்றிதழ் வழங்கப்படுவதில் தாமதம் என்றும் சொல்லப்படுகிறது. பார்மசி கவுன்சில் ஆப் இந்தியாவின் அங்கீகாரம் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. அதையெல்லாம் போக்குவதற்கு பார்மசி ரீடர் ஒருவரை நியமிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் **உடனடியாக** கோவையிலே கொடுத்ததைபோல **இந்த** **மாணவர்களுக்கும்,** முழுமையான சான்றிதழ் வழங்கி இவர்களின் எதிர்காலத்தை உடனடியாகப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சரவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டிப்ளமா இன் பார்மசியைப் பொறுத்தவரையில் சிக்கல் என்னவென்றால், பார்மசி கவுன்சில் ஆப் இந்தியா என்ற தனி நிறுவனம் இருக்கிறது, அது அங்கீகாரம் கொடுக்கவில்லையென்றால் சில பிரச்னைகள் வருகின்றன.

Pending the ratification by the Pharmacy Council we have given the Certificate.

நாம் சர்ட்டிபிகேட் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். பார்மசி கவுன்சில் ஆப் இந்தியா ரேட்டிபை செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பார்மசி கவுன்சில் ஆப் . இந்தியாவின் அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் படித்து முடித்த பிறகும் அந்த மாணவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிப்பது சரியில்லை. இதைப்பற்றி யாரிடத்தில் சொல்லி நோவது? இன்று தமிழகம் முழுவதும் இருக்கின்ற இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்னொரு நல்ல செய்தியையும் சொல்கிறேன். பார்மசி கவுன்சில் ஆப் இந்தியா ரேட்டிபிகேஷன் செய்யக் கூடியவரையில் காத்திராமல் நாம் தற்காலிகச் சான்றிதழின அடிப்படையில் அரசாங்கத்தில் பணியில் அமர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை,—இது சிவசாமி அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதால் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் 1981 ஆம் ஆண்டு 30 பேர்கள் படித்ததில், பத்து மாணவர்கள் வெற்றி பெற்றதாகவும் 20 பேர்கள் 1982 ஆம் ஆண்டு படித்ததில் 9 மாணவர்கள் வெற்றி பெற்றதாகவும் அறிவித்தார்கள். அவர்களுக்குத் தற்காலிகச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதாகவும்

அமைச்சரவர்கள் சொன்னார்கள். நிரந்தரச் சானறிதழ்கள் வழங்காமல் இருப்பதற்கான காரணம் பார்மசி கவுன்சில் ஆப் இந்தியா என்ற தனி நிறுவனம் அனுமதி வழங்காத காரணத்தினால் சான்றிதழ்களை வழங்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இப்படிப்பட்ட கோர்ஸை ஆரம்பிக்கின்ற நேரத்தில், பார்மசி கவுன்சில் ஆப் இந்தியாவின் அனுமதியைப் பெறாமலேயே இதை ஆரம்பித்தார்களா? ஆரம்பித்த பிறகு அந்தக் கவுன்சில் சொல்லியிருக்கின்ற கண்டிஷன்களுக்கு ஏற்றாற்போல் நடக்காத காரணத்தினால்தான் அனுமதி வழங்கப்படவில்லையா? இனி இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பார்மசி கவுன்சில் ஆப் இந்தியாவின் அனுமதி கிடைத்த பிறகுதான் நாம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் தாமதம் ஆகும். நமக்கு டிப்ளமா பார்மசிஸ்ட்ஸ் பற்றாக்குறையாக இருக்கிறார்கள். ஏராளமாக வேண்டும். திரு. சிவசாமி அவர்களுக்குச் சொன்னதைப்போல, அவர்களைப் பணியில் அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய அனுமதிக்காகக் காத்திருந்தால் தாமதம் ஆகிவிடும். We thought that they will automatically ratify it. உடனடியாகச் செய்து விடுவார்கள் என்று நினைத்தோம். ஆனால் அது ஒரு பிரச்னையாக ஆகி விட்டிருக்கிறது. அவரவர்களுக்கும் தங்கள் ஆர்கனைசேஷனைப் பொறுத்தவரையில் தாங்கள் சொன்னால்தான் நடக்கும் என்ற நிலைமை இருக்குமோ என்னவோ தெரியவில்லை. ஆகவே இந்த ஒரு விஷயத்திற்காகத்தான் அவர்கள் ரேட்டிபை பண்ணவில்லை. ஆகவே அவர்களிடம் போய் உடனடியாகச் செய்யவேண்டும் என்று சொன்னபோது உடனடியாகச் செய்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே இந்தப் பிரச்சினையை பெரிய பிரச்சினையாக ஆக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 3 ஆண்டுக்காலம் அந்த மாணவர்களுக்கு வீணாகக் கழிந்து விட்டது. ஆகவே அந்த அந்த சான்றிதழ் வழங்கப்பட்டவுடன் அந்த மாணவர்களுக்கு வேலை உத்தரவாதம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் கேட்டபோது நான் பதில் கொடுத்திருக்கிறேன். ஆகவே அதே பதில் இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரியில் அந்த மாணவர்களுக்கு உரிய நேரத்தில் சான்றிதழ் வழங்கப்படாததன் காரணத்தால் கடந்த இரண்டாண்டுக் காலங்களுக்கு மேலாக அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுடைய குடும்பமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு சான்றிதழ் கொடுப்பதற்காக பொறுப்பு ஏற்றுக்கொள்கின்ற வகையில் மேலும் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவுகின்ற வகையிலும் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வாக்குறுதியை ஒரு பெரிய நிவாரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான நினைக்கிறேன்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, எஸ். ரெத்தினராஜ், பொ. விஜயராகவன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

*திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு, ஏழுதேசம், பைங்குளம், நீண்டகரை, மணவாளக் குறிச்சி, குளச்சல், தருமபுரம், ஈத்தாமொழி போன்ற கிராமங்களில் கயிறு தொழில் செயல்படாததால் மக்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

[திரு. இரா. அருணாசலம்] [1984 மார்ச் 23

அறிக்கை.

குமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டு பருவமழை தவறிய காரணத்தால் தேங்காய் விளைச்சல் பாதித்து, தேங்காய் மட்டைகள் கயிறு தொழிலுக்கு கிடைக்காததினால் கயிறு தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொல்லங்கோடு மற்றும் பைங்குளம் கயிறு கூட்டுறவு சங்கங்கள் செயலற்ற நிலையில் இருப்பதைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொல்லங்கோடு சங்கத்தை உயிரூட்ட கயிறு வாரிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. கயிறு வாரியத் தலைவர் மற்றும் தொழில் மைய அலுவலர்கள் இது குறித்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

பைங்குளம் சங்கத்தை உயிரூட்டும் நடவடிக்கைகள்பற்றிய சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது.

நீண்டகரை, தருமபுரம் கிராமங்களில் கயிறு சங்கங்கள் ஏதும் இல்லை.

1980-க்குப் பிறகு கயிறு தொழில் தமிழ் நாட்டில் புத்துயிர் பெற்று வருகிறது. கீழ்க்கண்ட புதிய சங்கங்கள் 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு, அங்கத்தினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

| வரிசை எண். | சங்கத்தினர் பெயர். | பதிவு செய்த தேதி. |
|---|---|---|
| 1 | கூட்டாலமூடு .. .. .. .. | 06-03-1982 |
| 2 | இணையம் .. .. .. .. .. | 06-03-1982 |
| 3 | குருசடி .. .. .. .. .. | 02-03-1982 |
| 4 | ஏழுதேசம் .. .. .. .. | 03-09-1982 |
| 5 | மணவிளை .. .. .. .. | 30-08-1982 |
| 6 | தென் மண்டல தென்னை நார் உற்பத்தி சங்கம், ஈத்தாமொழி, | 25-03-1983 |



1984 மார்ச் 23] [திரு. இரா. அருணாசலம்]

மேலே குறிப்பிட்ட முதல் 5 கயிறு பின்னும் சங்கங்களுக்கு அரசு பங்குத் தொகையாக ரூ. 50,000 வீதம் ரூ. 2.50 லட்சம் வழங்கப்பட்டது. தென் மண்டல நார் உற்பத்தி சங்கத்திற்கு ரூ. 1.50 லட்சம் அரசு பங்குத் தொகையாக வழங்கப்பட்டது.

ஏழுதேசம் சங்கம் : ஆதி திராவிட மக்களுக்கு கயிறு பாய் நெய்யும் சங்கமாக பதிவு செய்து ரூ. 125 மாத உபகாரச்சம்பளத்தில் ஈத்தாமொழியில் 25 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 94 செண்டு புறம்போக்கு நிலம் எடுத்து, ஆரம்ப கட்டமாக உடன் வேலை துவக்க ரூ. 49,900 செலவில் தொழிற்கூடம் கட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. கயிறு பாய் நெய்வதில் பயிற்சி தவிர கயிறு முறுக்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். விரைவில் 100 ஆதி திராவிட மக்கள் உற்பத்தியில் ஈடுபட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக அரசு இச்சங்கத்திற்கு ரூ. 2.55 லட்சம் மானியமாக வழங்கியுள்ளது. மொத்தத்தில் இச்சங்கத்தில் 100 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

ஈத்தாமொழி : இந்த கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான கயிறு பள்ளிக் கட்டிடங்கள் உள்ளன. இந்நிறுவனத்தில் 50 தொழிலாளர்கள் கயிறு பாய் பின்னுதல் தொழிலில் வேலை செய்து வருகின்றனர். மேலும் திட்டங்கள் வகுத்து உற்பத்தியும், வேலை வாய்ப்புகளும் அபிவிருத்தி செய்யப்படும்.

ஈத்தாமொழி தென்மண்டல தென்னை நார் பிரிக்கும் சங்கம்: இச்ச சங்கத்திற்கு அரசு பங்குத்தொகையாக ரூ. 1.50 லட்சம் வழங்கியது. தவிர நிர்வாக இயக்குநர் ஒருவரது சேவையையும் அரசு அளித்துள்ளது. இவரது சேவையைக் கொண்டு அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் மட்டைகள் ஊறவைத்து நார் பிரிக்கும் தொழிலை மேம்படுத்தி இக்கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படும்.

[திரு. இரா. அருணாசலம்] [1984 மார்ச் 23

**அம்மாண்டிவிளை :** இக்கிராமத்தில் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த, மெஸ்ஸர்ஸ் டாக்புளோர் தனியார் நிறுவனம் சுமார் 1,000 கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து வந்தது. இந்நிறுவனத்திற்குத் தேவையான இரு பிரி கயிறுகளை உற்பத்தி செய்து தர, அரசு பயிற்சித் திட்டத்தில் கிராம இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால் இந்நிறுவனத்திற்கான ஏற்றுமதி அனுமதி(Export Inspection Agency)யினால் தடைபட்டுவிட்டதால், இப்பிராந்தியத்தில் தொழில் பாதிக்கப்பட்டது. இதுபற்றி கயிறு வாரியத்தின் நிர்வாகக் குழுவில் உள்ள தமிழகப் பிரதிநிதிகள் நிர்வாகக் கூட்டங்களில் கோரிக்கைகள் எழுப்பியுள்ளனர். இந் நிறுவனத்திற்கு தேவையான அனுமதியினை வழங்கிடவும்' விரைவில் மீண்டும் செயல்பட வகைசெய்யுமாறும் மத்திய அரசை, தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இது மத்திய அரசு மற்றும் கயிறு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகளின் காரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் கயிறு தொழில் அபிவிருத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு நீண்ட அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இந்தக் கயிறு தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பது அந்த மாவட்டத்தில் மட்டும் உள்ள பிரச்சினை அல்ல. தஞ்சை சேலம், வடாற்காடு, நெல்லை ஆகிய தமிழகத்திலுள்ள பல்வேறு மாவட்டங்களில் உள்ள பல ஆயிரம் தொழிலாளர்களையும் இந்த நிலைமை பாதித்திருக்கின்றது என்பது மேலெழுந்த வாரியாக் இருக்கின்ற நிலைமை. இந்த அறிக்கையிலே தேங்காய் மட்டைகள் கிடைக்காததால் கயிறு தொழில் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி தேங்காய் மட்டை இல்லாமல் இருந்தாலும்கூட இருக்கின்ற தேங்காய் மட்டைகளை எல்லாம் சேகரித்து அதை மையப்படுத்தி, இது ஒரு கிராம குடிசைத் தொழிலாக இருப்பதன் காரணத்தால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அனைவருக்கும் தேங்காய் மட்டை கிடைக்கக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா ?



1984 மார்ச் 23 [திரு. டி. மணி]

இரண்டாவது கேள்வி இதனை நவீனப் படுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கடந்த வருடத்திலே விவாதம் நடைபெற்றபோது நான் சொல்லி இருந்தேன். அப்படி நவீனப்படுத்தி மாநிலத்தில் உள்ள 3 மாவட்டங்களிலும் தேங்காய் மட்டை நாரையும், ரப்பரையும் பயன்படுத்தி மெத்தைகள் தயாரித்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் தான் இந்த கயிறு தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் அப்போதுதான் இந்தத் தொழில் அழிந்துவிடாமல் பாதுகாக்க முடியும்.

மூன்றாவதாக.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, ஏழுதேசம் கிராமத்திலே ஆரம்பிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அங்கே எந்தவிதமான வேலைகளும் சங்கத்தின் மூலமாக அப்படி ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கவில்லை. ஆகவே தவறான தவகலைத் தந்திருக்கிறார்கள். ஏழுதேசம் கிராமத்தில் கயிறு தடுக்கு, கயிறு பாய் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு பருவ மழை தவறிய காரணத்தினால் தேங்காய் உற்பத்தி பாதித்தது என்பது உண்மை. அதன் காரணமாக தேங்காய் மட்டைகள் இல்லை. அதனால் கயிறுத் தொழில் பாதிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் அதை ஊக்குவிக்கின்ற வகையில் சங்கங்கள் அமைத்து, அவற்றின் மூலமாக, அரசு உதவி செய்து வருகின்றது. தற்போதைய நிலையில் நல்ல நிலைமை ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது.

(முற்பகல் 10-40)

அதே சமயத்தில் ஏற்றுமதியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். முன்பு டாக்ப்ளோர் என்ற கம்பெனி ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. கேரள அரசு தன்னுடைய கயிறுத் தொழில் பாதிக்கப்படுகிறது என்ற சூழ்நிலையைத் தெரிவித்த காரணத்தால் உடனடியாக அது நிறுத்தப்பட்டது. மீண்டும் அதைத் தொடர்ந்து நடத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

5. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன் :

(1) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் (1979-80) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை.

(3) பொதுத் துறை நிறுவனங்களின் செயலாக்கத்தினை விரிவான மதிப்பீடு செய்வதற்காக தணிக்கைக் குழுக்கள் (Audit Boards) ஏற்படுத்துவது குறித்த மேற்படி குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை.

(4) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை.

6. முன் பண மானியக் கோரிக்கைகள்—1984-85—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

முன்பண மானியக் கோரிக்கைகளும் அதற்கான அறிவிப்பும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ; முன்பே அறிவித்தபடி 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது 27-3-1984 அன்று வாக்கெடுப்பு வரும்.



7. இறுதித் துணை மதிப்பீடுகள் 1983-84—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். 1983-84 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், எதிர்பாக்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், வறட்சி, வெள்ளம் போன்ற தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் உருவானதாலும், தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சிலவற்றில் அதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாலும், மக்களின் நலனுக்காகச் சில புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளதாலும், இந்தத் துணை மதிப்பீடுகளை தற்பொழுது அவைமுன் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 1130.10 கோடியில் ரூ. 220.24 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 909.86 கோடி மூலதன, கடன் கணக்கிலும் வருகின்றன. துணை மதிப்பீடுகள் மூலம் சேர்க்கப்பட்டுள்ள மொத்தக் கூடுதல் தொகை குறித்த விவரங்களும், அதற்கான காரணங்களும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமான இனங்களை இங்கு கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட கடும் வறட்சியிலிருந்து இம்மாநிலம் விடுபட்டு வரும் நிலையில், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெருவெள்ளத்தாலும், பிப்ரவரி, மார்ச் திங்களில் பெய்த பெருமழை காரணமாகவும் இம்மாநிலம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இந்நிலையைச் சமாளிக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, அரசு ஏற்கனவே ரூ. 37.54 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் மேற்கொண்டும் ரூ. 7.64 கோடி செலவிட அரசு இப்போழுது அனுமதி வழங்கியுள்ளது. இதில் சாலைகளையும், பாலங்களையும் பழுது பார்ப்பதற்காக ரூ. 13.60 கோடியும், பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 8.00 கோடியும், கருணை அடிப்படையில் உதவித் தொகையும், ஏனைய பொருட்களும் அளிக்கும் வகையில் ரூ. 15.26 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்வேறு பழுது பார்ப்புப் பணிளை மேற்கொள்வதற்கும், சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடன் கால அளவை மாற்றியமைக்கவும், வேளாண்மை இடு பொருட்களை வழங்குவதற்கும், நகராட்சிகளுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உதவுவதற்காக எஞ்சிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

3. கல்வி முன்னேற்றத்திற்கு முதன்மை அளித்து, மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் இம்மாநில அரசின் தலையாய கொள்கையாகும். அண்ணா போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் மாணவர்களுக்கு அளித்துள்ள கட்டணச் சலுகை தொடர்பாக, அவற்றிற்கு உதவித் தொகை அளிப்பதற்காக, அரசு ரூ. 6.19 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் அரசு இடையறாது நாட்டம் செலுத்தி வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தயாரிக்கும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி அளிப்பதற்காக, அவற்றிற்கு உதவித்தொகை வழங்கும் வகையில், அரசு, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக ரூ. 9.86 கோடியை தற்பொழுது ஒதுக்கியுள்ளது.

5. கிராமப்புற நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், ரூ. 8.90 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், கிராமப்புற இணைப்புச் சாலைகளை அமைக்க ரூ. 3 கோடியும், பாசனத் திட்டங்களை நிறைவேற்ற ரூ. 3 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது; ரூ. 2.9 கோடி மண்வள—நீர்வள பாதுகாப்புப் பணிகளுக்காகவும், நில மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் என்றும், சமுதாயத்திற்குப் பயன் தரும் நிலையான சாலைகளையும் பாசன வாயில்களையும் உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் கிராமப்புற சத்துணவுக் கூடங்களுக்குக் கூடுதலாகச் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு, அரசு ரூ. 48.17 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது.

7. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு ரூ. 36 கோடி ஒதுக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக ரூ. 3.95 கோடி செலவிடப்படும். இந்தக் கூடுதல் செலவும் இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.





8. ரோட்டரி துளையிடும் கருவிகளை வாங்குவதற்கு அரசு ரூ. 99 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது. இது மேற்பரப்பு நீர், நிலத்தடி நீர் வள நிறுவனங்களை வலுப்படுத்தும். இச்செலவின் ஒரு பகுதி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானிய மீதத்திலிருந்து மறு நிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் பெறப்படும்.

9. பூம்புகார் கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவி வகையில் ரூ. 1.10 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் பெரிய அளவிலான கப்பல்களை வாங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அனல் மின் உற்பத்திக்குக் குறைந்த செலவில் நிலக்கரியைக் கொண்டு வருவதற்குப் பேருதவியாக இருக்கும்.

10. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதிலும், உழவர்களின் நலனைப் பாதுகாப்பதிலும் அரசு முழுக்கவனம் செலுத்தி வருகிறது. தஞ்சாவூர், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் புதிய கடன்களை வழங்குவதற்காக இவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 கோடி என்ற வீதத்தில் அவற்றிற்கு ரூ. 2 கோடி வழிவகை முன்பணம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இச்செலவு துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 1983-84ஆம் ஆண்டில் 31 நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றிற்கு ரூ. 5 கோடி (மானியமாக ரூ. 4.44 கோடியும், கடனாக ரூ. 0.56 கோடியும்) வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 5 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்ட பிறகு, இத்தொகை மேற்படி நிதியில் ஈடு செய்யப்படும்.

12. இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளின் மொத்த விற்பனையை அரசு மேற்கொள்வது என்று முடிவு செய்துள்ளது. இருப்புகளுக்காக நிலுவையாக உள்ள பட்டிகளுக்குத் தொகை கொடுப்பதற்காகக் கூடுதலாக ரூ. 1.5 கோடி செலவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

13. இந்தத் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தொடர்பான முக்கியமான சில திட்டங்களை மட்டுமே நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். இதில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 23

(முற்பகல் 10-50).

8. அறிவிப்புகள்

(அ) துணை மானியக் கோரிக்கைகள். 1983-84, வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவு குறித்த துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பேரவை விதி 205-ன் கீழ் 24-3-1984 மாலை 3 மணிக்குள் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

9. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—
(தொடர்ச்சி).

(அ). கோரிக்கை எண் 22— கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக்-கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,97,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 23,97,66,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100."

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரு நகரங்களில் பாதுகாப்பற்ற முறையில் மாடுகள் வெளியில் திரிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தவும், அவைகளை அரசே காப்பாற்ற பண்ணை அமைக்கவும் நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,97,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1984 மார்ச் 23]

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கால்நடை (பசு) வளர்ப்புப் பண்ணை ஆரம்பிக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,97,66,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, பெருந்துறை பேரூராட்சி வேட்டுபாளையத்தில் கால்நடை கிளை ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ, 23,97,66,000-ல் ரூ, 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண். 30— சமூக நலன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 68,66,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 68,66,90,000 under Demand No. 30—Social Welfare be reduced by Rs. 100".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சமூக நலத்துறை மூலம் நடத்தப்படும் பாதுகாப்புப் பள்ளிகளில் தங்கிப் படிக்கும் மாணவிகளுக்கும், குழந்தைகளுக்கும் மாதச் செலவுக்காக தற்போது கொடுக்கும் தொகை மிகக் குறைவாக உள்ளதால் அதனை உயர்த்த நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,66,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[1984 மார்ச் 23

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை தகுதி படைத்த அனைவருக்கும் வழங்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,66,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, தகுதி பெற்ற அனைத்து ஊனமுற்றோர், விதவை ஆகியோருக்கு உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,66,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் ** புத்தகமாக அச்சிடப்பெற்று, அவைமுன் வைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிட்டுள்ள கருத்துகளை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, கடைசியாக என்னுடைய உரையைக் கூறுகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. சமூக நலன் கால்நடை வளர்ப்பு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

மாநில சமூக நல வாரியத்தில் 30 உறுப்பினர்கள் கொண்ட ஒரு போர்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அந்த போர்டு 'ரீ கான்ஸ்டிடியூட்' செய்யப்படாமல் 15 நபர்களை வைத்துக்கொண்டு சரியாக இயங்காமல் இருக்கிறது. உடனடியாக எல்லா உறுப்பினர்களையும் அதிலே நியமித்து, முழுமையான கமிட்டியாக அதை அமைத்து, அதை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

---

** 201–230, 231–276-ம் பக்கங்களில் இணைப்புகள் V VI ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



1984 மார்ச் 23]

சமூக நல வாரியத்தின் கீழ் பிளாக் லெவலில், ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 மாதர் சங்கங்கள் அமைக்கப்பட்டு, செயல்படுகின்றன. ஆனால் தற்போது அவை அனைத்தும் இயங்காமல் உள்ளன அடிப்படையான அந்தச் சங்கங்களை நல்லமுறையில் முடுக்கிவிட்டு இயங்க வைத்தால் நீங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியுள்ள அத்தனை காரியங்களையும் நல்ல முறையில் செய்ய முடியும் என்ற கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாதர் சங்கத்தில் நல்லமுறையில் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் ; கிராமத் தொழில்களை கற்றுக் கொடுக்க வேண்டும் ; மாதர்களால் செய்யப்படுகின்ற அனைத்துக் காரியங்களுக்காகவும் உதவியாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் அந்த மாதர் சங்கங்கள் பதிவு செய்யப்படாமல், நல்ல முறையில் காரியங்கள் செய்ப்படாமல் சரியாக இயங்காமல் இருக்கின்றன. அவைகளை நல்லமுறையில் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் தையல் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில் பச்சமலை பகுதி இருக்கிறது. அங்கே 32 கிராமங்கள் இருக்கின்றன. படித்த பெண்களும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு தையல் பயிற்சியும் அளிக்கப்படவில்லை ; தையல் இயந்திரமும் கொடுக்கப்படவில்லை. இந்தத் தொழில் செய்வதற்கு அவர்கள் நல்ல ஆர்வமாக இருக்கிற காரணத்தால் அங்கே தையல் நிலையத்தை எற்படுத்தி, நல்ல முறையில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேவை இல்லங்களைப் பொறுத்த வரையில், 1984-85 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்க இருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதைப் பின் தங்கிய பகுதியாக இருக்கிற ஆத்தூர் தாலுகாவில் ஆத்தூரில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சோஷியல் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் என்று அலுவலர்கள் பிளாக் லெவலில் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், இருக்கிறார்களா இல்லையா என்ற தகவல் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுடைய பணி என்ன, அவர்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பது என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கே கூட தெரியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களை நல்ல முறையில் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அந்தப் பணியிலே நியமனம் செய்யப்படும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்படுகிறதா, 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதையும் சற்று கவனித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிலோனிலிருந்து அகதிகளாக நிறைய பேர் வந்திருக்கிறார்கள். அகதிகளாக வந்த ஆண்களுக்கு 3,000 ருபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கேயிருந்து வந்த விதவைகளுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டும் கூட அவர்களுக்கு கொடுக்க வழிவகை இல்லை. அந்த விதவைகள் வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ வழிவகைச் செய்ய வேண்டும், உதவி செய்ய வேண்டுமென்று ஏற்பாடுகள் இருந்தாலும் கூட அவர்கள் அந்த உதவியைப் பெறுவதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன.

விதவைகள் மறுமணம் செய்து கொண்டால், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் கொடுக்கின்ற சான்றிதழை வைத்துக் கொண்டு அவர்களுக்கு உரிய தொகையை வழங்க வேண்டும்.

விதவையின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் அந்தப் பணத்தை வாங்குவதற்கு 1,500 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இதை நானே கண்டிருக்கிறேன். அவர்களுக்கு மாங்கல்யம் செய்வதற்கு தொகை கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன் ரசீது பெற்றுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் ரெஜிஸ்டர் செய்தவர்களிடமிருந்து ரசீது வாங்க வேண்டுமென்று சொல்வதால், அதைப் பெறுவதிலே பல சிரமங்கள் ஏற்படுகின்றன. அதற்கே 1,500 ரூபாய் செலவாகிவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கவனித்து தக்க எளிமையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் சத்துணவு மையங்களில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று பலமுறை சொல்லியிருக்கிறார்கள். தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக நான் இல்லை என்று சொல்லி வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்களும் அடிக்கடி இதைக் கூறினார்கள். நாங்கள் கிராமப்புறங்களிலிருந்து வருகிறோம். அதனால் அந்த மையங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் கண்டறிந்த தகவலைக் கொடுக்கிறோம் அதை நீங்கள்





ஏற்று, பரிசீலனை செய்ய வேண்டும். பிள்ளைகள் அதிகமாக வரவில்லை. ஆனால் சாப்பாடு போடும்போது 100 குழந்தைகள், 150 குழந்தைகள் என்று கணக்கு எழுதி வைத்துக் கொள்கிறார்கள், நான் இப்படிச் சொல்வதால் ஏதோ சத்துணவுத் திட்டத்தை குறை கூறுகிறேன் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். கிராமப்புற மக்கள் முழுமையாகப் பயன் பெற வேண்டும். அங்கே பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். நீங்கள் சுற்றுப் பயணம் செல்லும்போது, மற்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ளச் செல்லும்போது நீங்கள் செல்லும் இடங்களில் இந்த மையங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணித்துப் பாருங்கள், குறைகளை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

சத்துணவு மையத்தில் வேலைசெய்கின்ற அமைப்பாளர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவானது. அவர்கள் சத்துணவு அலுவலகத்திற்கு சம்பளப் பட்டியலை எடுத்துக் கொண்டு நான்கைந்து முறை செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதற்காக அவர்களுக்கு பயணப் படிகள் வழங்கப்படுவதில்லை. மாதச் சம்பளமான ரூ. 150-ல் அவர்கள் வாழ்க்கையை நடத்தமுடியாத சூழ்நிலையில், பல தவறுகள் செய்வதற்கு ஆளாக்கப்படுகிறார்கள். அந்தத் தவறுகளைச் செய்வதற்கு அரசாங்கமும் ஒரு காரணமாக இருக்கிறது என்ற நிலை இல்லாமல் இருப்பதற்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் நூற்பு மையம் ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்திலே என்னுடைய தொகுதியில் அடங்கியுள்ள ஆத்தூர் தாலுக்காவில் அதை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திண்டிவனம் தொகுதி மரக்காணம் பஞ்சாயத்து யூனியன் வரகுபட்டி கிராமத்தில் போதிய குழந்தைகள் இருந்தும் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்படவில்லை. அதை உடனே அமுலாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே யூனியனைச் சேர்ந்த வைரம்பேட்டையில் சிறார்களெல்லாம் தொலை தூரம் சென்று உணவு பெற வேண்டிய நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, வைரம்பேட்டை கிராமத்தில் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1984 மார்ச் 23

அடுத்து, கண் இழந்தோருக்கு பல திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தும், அது அவர்களுக்கு சரியான முறையில் சென்று அடையவில்லை. அவர்கள் அதற்காக பதிவு செய்து கொண்டால், அரசுப் பயன்கள் அனைத்தும் அதாவது சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஐ.ஆர்.டி.பி யில்—எல்லா உறுப்பினர்களும் அதைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். அதை உண்மையாகச் சொல்ல வேண்டுமெனறால் ——— அங்கே உளள ஆணையர்களும், கிராம ஊழியர்களும்தான் அதை அனுபவிக்கிறார்கள். அவர்கள் மூலமாகச் சான்றிதழ்கள் பெற்று வங்கிகளில் கடன் கேட்டால் கூட பலம் உள்ளவர்கள், வசதி பெற்றவர்கள் தான் பெற முடிகிறதே தவிர, அரசு நினைப்பது போல், சாதாரண மக்கள், கீழ்தட்டிலே உள்ள மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள அந்த மக்கள் ஆகியவர்களுக்கு கண்டிப்பாகச் சென்றடையவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அதையும் சற்றுத் திருத்தி அமைத்து, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சப்சிடியை பாங்கிற்கு அனுப்பி, அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மறு வாழ்வு இல்லம் ஒன்று தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. அங்கு, 50, 60 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த மறு வாழ்வு இல்லத்தில் 40, 50 பேர் இருக்கிறார்கள். அந்த 40, 50 பேரை வேறு இல்லங்களுக்கு அனுப்பி விட்டு, எங்களுக்கு பாலிடெக்னிக் ஒன்றை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் ஒரே ஒரு பாலிடெக்னிக்கு தான் இருக்கிறது. சேலம் ஜில்லாவில் உள்ள மாணவர்கள் மற்ற இடங்களுக்குச் செல்லும்போது, அவர்கள் ஜில்லாவில் உள்ளவர்களுக்குத்தான் முன்னுரிமை என்று சொல்கிறார்கள். மேலும் மற்ற ஜில்லாக்களில் உள்ள மாணவர்களுடன், மதிப்பெண் பெற்று, போட்டி போட்டு படிக்கக் கூடிய சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. நீண்ட தூரம் சென்று படிப்பதற்கு பொருளாதாரச் சிக்கல் வருகிறது என்ற காரணத்தினால், அதில் தனிக் கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடிப்பார்வையில் எங்களுக்கு ஒரு பாலிடெக்னிக் அமைத்துக் கொடுப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 23] [திருமதி தா. இராசாம்பாள்]

ஒட்டுமொத்தமாக சமூக நலன் என்று சொன்னால், பெண்களின் முன்னேற்றம் எனபதைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்தப் பெண்களுக்கு கொடுத்திருக்கிற அந்த வசதிகள் அனைத்தும் கிடைப்பதற்கு, என்னைப் போல் பெண்களை அணுகுவதற்குக் கூட அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சமூக நல அதிகாரிகளுக்கு ஒரு சட்டம் போட்டாலும், அரசு ஆணையானது, 1–4–1984 முதல் நடைமுறைப்படுத்தவேண்டுமென்று நீங்கள் போட்டாலும் கூட, இந்தத் தேதிக்குள் இந்தச்சட்டம் அமுல்படுத்தப்படவேண்டும் என்றும், எவ்வளவு பேர்கள் இதனால் பலன் அடைந்தார்கள் என்றும் ஒரு ரிப்போர்டை அரசு தரப்பிலே இருந்து கேட்கவேண்டும். அப்படியில்லையென்றால், அரசாணை போட்டும் கூட 1, 2, 4 ஆண்டுகள் ஆனாலும் கூட நடைமுறைப்படுத்த முடியாது. 1982-லே போட்ட அந்த அரசாணையை 1984 வரையில் நடைமுறைப்படுத்தாத சூழ்நிலை இன்று இருக்கிறது. நாம் இங்கே சட்ட மன்றத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிட்டோம் என்ற திருப்தி இருந்தால் போதாது. ஆக அந்த நலன்கள் அவர்களுக்குச் சென்று அடையவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்பிற்காக மருந்துகள் கொடுக்கப்படுகிறது. அந்த மருந்துகளை வாங்கும்போது, கால்நடை மருந்தகங்களில் கொடேஷன் மூலமாக மருந்துகளை வாங்குகிறார்கள். அப்படி வாங்குகிறபோது, அது நல்ல தரமுள்ளதாகவோ, நல்ல விளைவுகளை உண்டுபண்ணக்கூடிய அளவிலோ இருப்பதில்லை, நேர்மையான வழிகளிலும் வாங்கப்படுவதில்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்னை மத்திய மருந்துக் கிடங்கு மூலமாக வாங்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொட்டேஷன் மூலம் வாங்குவதை நிறுத்திவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், ஒரு மருந்தகத்தில் உள்ள மருந்துகளை அதில் பணியாற்றும் டாக்டர்கள் தனியான பிராக்டிஸின்போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அரசு ஆணை இருக்கிறது. ஆனால் அப்படிப் பயன்படுத்திய மருந்தின் விலையை சலான் மூலமாக திருப்பிக் கொடுக்க வேண்டும் என்கிற நிலை

[திருமதி தா. இராசாம்பாள்] [1984 மார்ச் 23

இருந்தும் கூட எனக்குத் தெரிந்த வரையில் ஒரு 5 ரூபாய் கூட இந்த வகையில் அரசுக்கு வந்திருக்காது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையில் மருந்துகள் எதுவுமே எடுக்கப்படவில்லையா அல்லது தனியாக பிராக்டீஸ் செய்யும் டாக்டர்கள் இதை உபயோகப்படுத்தவே யில்லையா? அங்கு எவ்வளவு மருந்து கொடுக்கப்பட்டது, எவ்வளவு வினியோகிக்கப்பட்டது, மீதம் இருப்பது எவ்வளவு என்று இந்த நிலைகளையெல்லாம் கண்டு பிடித்து ஒழுங்கு செய்யவேண்டும்.

அடுத்து, கால்நடைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்யும் திட்டம். இதில் அந்த கால்நடைகள் இறந்தால், அதை போஸ்ட் மார்ட்டம் செய்ததற்கு சான்றுகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு 20 ரூபாய் டாக்டர்களுக்கு கொடுத்தால்தான் போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் அவர்கள் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த சர்டிபிகேட் கொடுத்தால்தான் இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைக்கும் என்ற நிலை. பாவம் அந்த ஏழை கிராமவாசி என்ன செய்வான். ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் பெறுமான கால்நடை இறந்து விட்டபோது அவன் என்ன செய்யமுடியும். அப்போது அவனிடம் ரூபாய் 20 கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கும். போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் வாங்க உடனடியாக பணத்திற்கு எங்கு போவான்; 20 ரூபாயை கொடுக்க முடியாதா என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் ஆயிரம் இரண்டாயிரத்திற்கு நிலத்தை அடகு வைத்து செலவு செய்கிற அந்த ஏழை விவசாயிக் சில நேரம் ஒரு ரூபாய் கூட கிடைக்க முடியாத இயல்பானசூழ்நிலை ஏற்படும். ஆகவே நீங்கள் இந்தத் துறையின் மூலம் இன்ஷ்யூர் செய்யும்போது, டாக்டர்களுடைய கட்டணச் சான்றுக்கு பணம் தரப்படுகிறது. இந்த போஸ்ட்மார்ட்டத்திற்கான பணத்தை அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிடமிருந்தே வாங்கும் வழியை உருவாக்கி, அவன் அந்த கால்நடைகளுக்காக மரணச் சான்றிதழ் பெறும்போது அவனிடமிருந்து எந்தவித பணமும் பெறாமல் டாக்டர்கள் அவனுக்கு சான்றிதழ்களை கொடுக்க வேண்டும் என்ற அந்த வகையில் இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 23] [திருமதி தா. இராசாம்பாள்]

அடுத்து, இந்த கால்நடை மருந்தகங்களில் பி. வி. எஸ்.சி படித்த டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எம்.பி. பி.எஸ். டாக்டர்களுக்கு அளிக்கும் சம்பளத்தை விட குறைவாக இருக்கிறது. மிக வித்தியாசமாக இருக்கிறது. அவர்களுக்கு முதல் பே கமிஷனிலே 50 ரூபாய் வித்தியாசம் இருந்தது. இரண்டாவது பே கமிஷனில் 100 ரூபாய், மூன்றாவது பே கமிஷனில் 150 ரூபாய் என்று வித்தியாசம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இப்போது 4-வது பே கமிஷன் வரப்போகிறது. அதிலாவது இந்த வித்தியாசத்தைப் போக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சிலவகை எம். பி. பி. எஸ். டாக்டர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு காலரா மலேரியா போன்ற தொற்று நோய்கள் வராமல் இருக்கவும், வருவதற்கு முன் அவர்கள் முன் ஜாக்கிரதையாக தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவும் ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். அந்த அலவன்ஸை கால்நடை மருத்துவர்களுக்கும் கொடுக்கவேண்டும். ஏனென்று சொன்னால், அவர்களைவிட மிக அதிகமாக இவர்கள் கொடிய நோயுள்ள கால்நடைகளுடன் பழகுகிறார்கள். ஆகவே இவர்களுக்கும் அந்த தொற்று நோய் வருவதற்கான ஆபத்து இருக்கிறது, இல்லை என்று சொல்ல முடியாது. நான் கேட்பது டாக்டர்களுக்கு மட்டும் அல்ல, அந்த டிபார்ட்மென்டில் பணி புரியக் கூடிய டாக்டர்கள் மற்றும் லைஃப் ஸ்டாக் அசிஸ்டென்ட்ஸ் ஆகிய அனைவருக்குமே இந்த ரிஸ்க் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலுக்கா அளவில் உள்ள பெரிய டிஸ்பென்சரிகளில் மூத்த டாக்டர்களை பதவி உயர்வு தந்து நியமித்து, கால்நடைகளின் வைத்தியத்தை தரமுள்ளதாக ஆக்கவேண்டும். இல்லை என்று சொன்னால், நடைமுறையில் வைத்தியம் செய்யும்போது பல சிக்கல்கள், நிறைய புகார்களும் வருகின்றன. ஆகவே, அந்த வகையில் இந்த வைத்தியத்தின் தரத்தை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கேந்திர கிராமத்திட்டம் என்ற பெயராலே ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்கிறேன். முதல்நிலை கால்நடை ஆய்வாளர்களை வெளி மாவட்டங்களில் பணிபுரிய வைத்து இடம் மாற்றி அமைப்பது நல்லது என்று ஒரு வகையில் பார்த்தாலும் பல இடங்களில் உள்ள துணை நிலையங்கள் அதனால் மூடப்பட்டன. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் உள்ள பல இடங்களில் அங்குள்ள ஆய்வாளர் மாற்றப்பட்டுவிட்டதால் சேலம் மாவட்டத்தில் நிறைய கிராமங்களில் துணை நிலையங்கள் மூடிக்கிடக்கின்றன.

[திருமதி தா. இராசாம்பாள்] [1984 மார்ச் 23

உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில் கூட இலுப்பாநத்தம் என்ற ஊரில் மூடப்பட்டு விட்டது. அப்படி மூடப்பட்ட டிஸ்பன்ஸரியை 6 மாதத்திற்குள் திறக்க வேண்டும் இல்லையென்றால் அரசு ஆணை பெற்றுத்தான் அதை மீண்டும் திறக்க முடியும் என்று இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கேந்திர கிராமத்திட்டம் ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும்போது, பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகளை அளித்த பிறகு முதநிலை கால்நடை ஆய்வாளர்களை டாக்டர்களை அங்கே அனுப்பி இருக்கவேண்டும் அவர்களை மாற்றி அனுப்பியபிறகு வேண்டுமானால்கூட பயிற்சியாளர்களை அங்கே அந்த இடத்திலேயே நியமிக்கலாம். ஆனால் எந்தவகையிலும் இல்லாமல் துணை நிலையங்களையே மூடிவிடுவதால், அங்கே உள்ள ஏழை உழவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கால்நடைகளை ஓட்டி வந்து வைத்தியம் செய்து கொண்டிருந்த அந்த நிலைக்கு பெரிய சோதனை தடை வந்துவிடுகிறது. கால்நடை ஆய்வாளர்களுக்கு சூப்பர்வைசர் பிரமோஷன் கொடுக்கிறார்கள். பல நேரங்களில் நிர்வாகத்தில் உள்ளவைகளை

(முற்பகல் 11,10).

சட்டமன்றத்திலே பேசவேண்டுமென்று சொன்னால் என் போன்றவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இருந்த போதிலும் இவைகள் எல்லாம் விடப்படுகின்றன. இந்தக் கோரிக்கை அரசுக்கு வரவில்லையா? ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது. அவர்களுக்கு சூப்பர்வைசர் பதவி கொடுக்க வேண்டும். பட்டதாரிகளை கால்நடை விரிவாக்க அலுவலர்களாக அவசர நேரத்திலே நியமித்ததன் விளைவாக சுமார் 200 கால்நடை மருந்தகங்கள் காலியாக விடப்பட்ட நிலையில் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே உள்ள கறவை மாடுகள், ஆட்டு மந்தைகள், உழவு மாடுகள் பராமரிப்பு என்பது மிகவும் பாதிக்கப்பட்டு கிராமப்புறங்களிலே பொருளாதாரமே சீர்குலைந்த நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நிலையை எடுக்கும்போது மிகவும் ஜாக்கிரதையாக கிராமத்திலே உள்ள மக்கள் அரசாங்கத்தை எந்தவிதத்திலும் சாடுகின்ற சூழ்நிலை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தடுப்பு ஊசியாளர்கள் சுமார் 300 பேர்கள் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களில் 100 பேர்களை மட்டும் பொறுக்கியெடுத்து பணிக்காலத்தை கணக்கில் எடுக்காமல், முன்பின் சேர்ந்தவர்கள் என்ற நிலைமை இல்லாமல், அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மற்ற 200 பேர்களுக்கு இதுவரையில் பயிற்சி அளிக்கப்படவில்லை. இடங்கள் காலியாக இருந்தும் கூட பலர் வேலையில்லாமல் இருந்தும்கூட பிரமோஷன் கவனிக்கப்படாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.



1984 மார்ச் 23] [திருமதி த. இராசாம்பாள்]

என் தொகுதிக்கு அருகாமையிலே சின்ன சேலத்தில் ஒரு பண்ணை இருக்கிறது. அதிலே ஓங்கோல் மாடுகள் வைத்து நல்ல முறையிலே பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். அங்கே இருக்கிற சிரமம் தண்ணீர் பற்றாக்குறை. தண்ணீர்ப் பற்றாக்குறை நிலை வரும்போதெல்லாம் இங்கே பணியாற்றக்கூடியவர்களை வேலை நீக்கம் செய்து விடுகிறார்கள். அந்தப் பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருப்பதால் இந்தப் பண்ணையில் பலர் வேலை செய்து பிழைக்கிறார்கள். தண்ணீர் பற்றாக்குறை இருப்பதால் அடிக்கடி அவர்கள் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள். அந்தப் பண்ணை மூலமாக பிற்படுத்தப்பட்ட—தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் பலன் அடைகிறார்கள். ஆகவே தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்திலே வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாட்டுத் தீவனம் 50 சதவீதம் மானிய விலையில் கொடுப்பதாக இந்த கொள்கை விளக்க ஏட்டில் இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டம் மட்டுமல்ல, எல்லாத் தொகுதிகளிலேயும் குறிப்பாக ஆத்தூர் தாலுகாவிலே என்னுடைய தலைவாசல் தொகுதியிலே வெள்ளப் பாதிப்பு கடுமையாக ஏற்பட்டு நெற்பயிர் சேதம் அடைந்து விட்டது. அதனால் தீவனம் இந்த ஆண்டு கடுமையான சோதனையாக இருக்கும்போல் தெரிகிறது. 15 ஆண்டுகளாக வறட்சியால் வாடிய அந்த மக்களுக்கு இன்றைக்கு வெள்ளச் சேதம் ஏற்பட்டு தீவனம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்களுக்கும் மாட்டுத் தீவனம் மானிய விலையில் கிடைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திண்டிவனம் தொகுதியில் எள்ளிமூர் அல்லது மாரம்பேட்டையில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களிலே சத்துணவு மையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் என்னுடைய தொகுதியில் தியாகனூர் தெற்குப் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் சத்துணவு மையம் ஏற்படுத்தப்படவில்லை. அங்கே அது ஏற்படுத்தப்பட வேண்டுமென்று பலமுறை விண்ணப்பம் கொடுத்தும் கிடைக்கவில்லை. புதிதாக சத்துணவு மையங்கள் திறக்க இயலாது என்று சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்ற முடியுமே தவிர புதியதாகத் திறக்க முடியாது என்று சொன்னதாக கேள்விப்படுகிறேன். அவசரம் அவசரமாக சத்துணவு மையங்கள் திறக்கப்பட்ட காரணத்தினால் சில இடங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் அந்தப் பகுதியில் சத்துணவு மையம் ஏற்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பலவீனத்தின் பள்ளத்தாக்கிலே வீழ்ந்து கிடக்கும், ஏரெடுத்து பாடுபட்டு இந்த நாட்டிற்குச் சோறு தரும் விவசாயப் பெருங்குடி மக்கள் ஒருபுறம் வறட்சியாலும், மறுபுறம் வெள்ளத்தாலும் பாதிக்கப்படும் நேரங்களில் எல்லாம் அவர்களுக்கு சோறு தருகின்ற துறையாக இருக்கின்ற கால்நடை வளர்ப்புத் துறைக்கு 23 கோடியே 97 இலட்ச ரூபாய் மர்னியத் தொகையை வழங்குகின்ற இந்தக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை இங்கே சொல்ல விழைகிறேன். முதலாவதாக கடந்த 3 ஆண்டுக் காலமாக தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்—இந்தத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு அரசுகள் பாராமுக்மாக இருந்தபோது—இன்றைக்கு அதையெல்லாம் சீர்படுத்தி பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாவதாக ஊராட்சி ஒன்றியங்களிலே கால்நடை உதவி மருத்துவர்களை விரிவாக்க பணியாளர்களாக நியமித்தது. இரண்டாவதாக கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநராக அந்தத் துறையைச் சார்ந்த மருத்துவம் படித்த ஒருவரை விஞ்ஞான அறிவு படைத்த ஒருவரை நியமித்தது. அப்படி நியமித்ததன் மூலம் வெட்டர்னரி கவுன்சிலுக்கு தலைவராக இருப்பதற்கு தகுதி படைத்தவராக உள்ள ஒருவரை அந்தப் பதவியில் நியமித்தது சாலச் சிறந்ததாகும். இதுபோன்று பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறபோது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகத்திலே 3 ஆண்டுகள் கழித்து துவங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி—தமிழகத்தைப் பொறுத்தவரை கால்நடைக் கல்லூரி 1903 ஆவது ஆண்டிலே தொடங்கப்பட்டது. அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் 1906 ஆவது ஆண்டுதான் வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டது — ஆனால் என்ன காரணத்தாலோ வேளாண்மை பல்கலைக் கழகம் என்று பல்கலைக் கழகத்தை உருவாக்கி கால்நடை பராமரிப்புத் துறையை கால்நடை மருத்துவத் துறைக்கு அதைப் பின் நோக்கி தள்ளுகின்ற சூழ்நிலையை இதை ஏற்படுத்தியவர்கள் கடந்த முறை இந்த மாமன்றத்தில் அமர்ந்து இருந்த எதிர்க்கட்சி துணைத் தலைவர் மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் அதை ஒப்புக் கொண்டார்கள். வேளாண்மை பல்கலைக் கழகத்தோடு கால்நடை பராமரிப்புத் துறையை கால்நடை மருத்துவக் கல்லூரியை சேர்த்தது தவறுதான் என்று இந்த மாமன்றத்தில் அவராக ஒப்புக் கொண்டார்கள். ஆனால் இந்த நிலையில் நான் கேட்பது எல்லாம் மீண்டும் அதை பிரித்து தனியாக உருவாக்க வேண்டும் என்பது அல்ல. இன்றைக்கு மறைந்து வருகின்ற இந்த சூழ்நிலையில் மீண்டும் ஒரு கூடுதலான கால்நடை மருத்துவ கல்லூரி உருவாக்கப் போவதாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கால்நடை பராமரிப்புத் துறையோடு சம்பந்தப்பட்டு இருக்கின்ற காரணத்தால் இந்த மானியக் கோரிக்கையில் நான் அந்தக் கருத்தைச் சொல்கிறேன். இரண்டாவது கல்லூரி ஆரம்பிக்கும்போது பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களை உள்ளடக்கிக் கொண்டு இருக்கின்றன. அந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரியை இரண்டாவது கல்லூரியையும் சேர்த்து இன்னும் பல்வேறு துணை டிப்ளமோ கோர்ஸ் என்று சொல்லப்படுகின்ற அதாவது பால் பண்ணை என்று தனியாக ஒரு டிப்ளமோ கோர்ஸையும் கோழி வளர்ச்சி துறைக்கு ஒரு தனியாக டிப்ளமோ கோர்ஸையும் அதேபோல் ஆடு வளர்ப்புக்கு டிப்ளமோ கோர்ஸையும் உருவாக்கி வெட்டர்னரிக்கு என்று கால்நடை மருத்துவத்துக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தமிழக முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக் கொள்கிறேன். மருத்துவத் துறைக்கு என்று தனியாக பல்கலைக்கழகம் உருவாக்கித் தர இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு என்று தனியாக ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே 2 ஆவது ஆக பம்பாயில் இருக்கின்ற இறைச்சிக் கழகத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் உருவாக்கப் போகிறோம் என்று சொல்லி அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. 2 ஆண்டுகளாக முனைப்போடு திட்டங்கள் போடப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த இறைச்சிக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு அது முறையாகச் செயல்படும்போது இங்கே நமக்கு அதற்கு அறுப்பதற்கு வேண்டிய ஆடுகள் இருக்கிறதா, மாடுகள் இருக்கின்றதா என்று கணக்கிட்டுப் பார்க்கும்போது வேறு மாநிலங்களில் இருந்து இங்கே கொண்டு வர வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி கொண்டு வரும்போது அந்த மாநில அரசுகள் அதற்கு தடை விதிக்குமானால் நாம் அதற்கு என்ன செய்யப் போகிறோம் என்ற ஒரு நிச்சயம் அற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த முறைகளை எல்லாம் மாற்றி அமைப்பதற்காக தமிழகத்தில் ஆடு வளர்ச்சியை ஊக்குவிக்க இன்றைக்கு உலக வங்கி மூலமாகவும், பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலமாகவும் அதை உருவாக்கப் போவதாக சொல்லியிருக்கிறார்கள் இந்த நிதிநிலை அறிக்கையில். நான் இவைகளை எல்லாம் வரவேற்கும்போது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆட்டுப் பண்ணை அதாவது மேச்சேரி, மாண்டியா போன்ற இனங்களைக் கொண்ட ஆட்டுப் பண்ணை உருவாக்கி அந்த ஆடுகளை நேரிடையாக நாமே வளர்த்து அதை ஆதி திராவிட மக்களாக இருந்தாலும், ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்களாக இருந்தாலும்,

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1984 மார்ச் 23

ஆட்டுப் பண்ணை வைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் வருகின்ற பட்டதாரி இளைஞர்களாக இருந்தாலும் அல்லது வேறு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஆட்டை நேரிடையாகத் தருகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இங்கே சப்சிடி ரேட் என்று ஐ.ஆர்.டி.பி.யில் கொடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி இராசாம்பாள் அவர்கள் இங்கே கூறினார்கள். ஒரு சந்தையில் வாங்கப்படுகின்ற ஆடுகள், மாடுகள் திரும்பத் திரும்ப அதே சந்தைக்கு வந்து விற்கப்படுகின்றன, வாங்கப்படுகின்றன என்ற சூழ்நிலைதான் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றும் வகையில் புள்ளிவிவரங்களை எடுப்பதன் மூலம், கூடுதலான மாடுகளையும், ஆடுகளையும் பெருக்குவதற்குத் திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

கோழி வளர்ப்புத் துறையைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கால்நடைப் பராமரிப்புப் படிப்பைப் பொறுத்த வரையிலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிற் கல்வியைக் கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். பள்ளிகளிலேயிருந்து இளைஞர்களுக்கு தொழிற் கல்வியைக் கொண்டு வருவதாக அறிவித்தார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரிதும் உதவுகின்ற வகையில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு போன்றவைகளை தொழிற் கல்வியில் பாடமாக வைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோழி வளர்ப்பைப் பொறுத்த வரையில் தமிழகத்தின் கடந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபொழுது அந்தக் கோழித் தீவனங்களுக்கு வரிகளை நீக்கியிருப்பதும், மின்சாரக் கட்டணச் சலுகை அளித்திருப்பதும் விவசாயப் பெருங்குடி மக்கள் கோழி வளர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டு புதிய திட்டங்களை உருவாக்கிக் கொள்வதற்குச் சாதகமாக இருக்கிறது.

நான் கடந்த சட்டமன்றத்திலேயும் குறிப்பிட்டேன், இந்த முறையும் திரும்பவும் சொல்ல நினைக்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் தனியாக வைத்திருக்கின்ற கோழிப் பண்ணைகள் இலாபகரமாகச் செயல்படுகின்றன. அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் கோழி வளர்ப்புத் துறை ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் என்ற முறையில், முறைப்படுத்தப்பட்ட முறையில், முட்டை இந்த விலைக்குத்தான் விற்கப்படுகிறது ; இந்த விலைக்குத்தான் உற்பத்தியாளர்களிடம் வாங்கலாம், நுகர்வோர்களுக்கு இந்த விலைக்குத்தான் விற்கலாம் என்ற முறை



1984 மார்ச் 23] [டாக்டர் கே. பி. இராமலிங்கம்]

இருந்தால்தான் சென்னையைப் போன்ற பெரு நகரங்களில் வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கு இலாபகரமாக இருக்கும், அதைப் போலவே உற்பத்தியாளர்களுக்கும் சாதகமாக அமையும். எனவே, ரெகுலேட்டட் மார்க்கெட்டிங்கை இந்த ஆண்டாவது உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில் இதற்காகத் தனியாக மானிய கோரிக்கையை வைத்தாலும்கூட இது ஏதோ வேளாண்மைத் துறையின் துணை மானியமாக இருப்பதைப் போலத்தான் தெரிகிறது. இதற்கு என்று வேளாண்மைத்துறையில் அடிஷனல் செக்ரட்டரீஸ் இருக்கிறார்கள். கால்நடைப் பராமரிப்புத் துறைக்குத் தனியாக செயலாளரை நியமிக்க வேண்டும். அதற்குக் கூடுதலாகச் செலவு ஏற்படும் என்றால், அடிஷனல் செக்ரட்டரீஸ் போன்றவர்களை இதற்காகத் தனியாக ஒதுக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்வது பல்வேறு விதங்களில் உதவிகரமாக இருக்கும். காரணம், அப்படிப் பட்டவர்கள் இந்தவொரு துறையில் மட்டும் முழுத் திறனையும் காட்டுவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, இந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்களாக இருக்கின்ற அட்டென்டென்ட்ஸ் என்பவர்கள் பத்து வருடங்களாக வேலை செய்கிறார்கள். ஆனால், அவர்களை இன்னமும் பல்வேறு மருத்துவமனைகளில் நிரந்தரமாக்காமல் தற்காலிகமாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று, அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை உதவி மருத்துவர்கள் இருபது வருடங்களாகப் பணிபுரிந்திருந்தாலும்கூட அவர்கள் துணை இயக்குநர்களாக வருவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஒட்டுமொத்தமாக 1,500 பேர்கள்தான் இருக்கிறார்கள். 15 ஆண்டுகள், 10 ஆண்டுகள் பணி செய்திருந்தாலும் அவர்களைத் துணை இயக்குநர்களாகப் போடலாம் என்று மற்றத் துறைகளில் இருப்பதைப் போல இதற்கும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஈடுசெய்யும் விடுப்பு என்ற வகையில் பல்வேறு ஹாலிடேஸ் விடப்பட்டிருந்தது. அதைச் சில இடங்களில், சில மாவட்டங்களில் அமுல்படுத்துகிறார்கள் ; பல மாவட்டங்களில் அமல்படுத்தத் தயங்குகிறார்கள். இதை முறைப்படுத்தி, தமிழகம் முழுவதும் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1976-இல் 300 தடுப்பூசியாளர்கள் (வேக்சினேட்டர்ஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 100 பேர்களுக்குக் கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு விட்டது. அவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எஞ்சியுள்ள 200 தடுப்பூசியாளர்கள் (வேக்சினேட்டர்ஸ்) இருக்கிறார்கள். அந்த 200 பேர்களுக்கும் பயிற்சி அளித்து கால்நடை ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி அந்த 200 பேர் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்போது இன்றைக்குத் தமிழகத்திலே பல்வேறு நோய்கள் இருக்கின்றன என்பதால் அதற்காக வேக்ஸினேட்டர் தேவை என்பதால் அந்த இடத்திலே புதிதாக வேக்ஸினேட்டர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அடுத்து, ஒரு மிகப் பெரிய பிரச்சினை. 1972 ஆம் ஆண்டு தமிழகத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் தாலுக்காவில் புக்கத்துறை என்ற இடத்திலே கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்டுவதற்காக ஒப்பந்தம் விடப்பட்டு அந்த ஒப்பந்தத்தை எடுத்தவர் கடந்த 12 ஆண்டுக்காலமாக அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கவில்லை. அதை அரசுக்கும் ஒப்படைக்கவில்லை. *** ***

இன்னும் அங்கே மருத்துவமனை செயல்படவில்லை. கட்டிடம் கட்டித்தரப்படவில்லை. ஆகவே, அந்த நபர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒன்று அவர் அந்த மருத்துவமனையைக் கட்டித்தர வேண்டும். இல்லை என்றால் மற்றவருக்கு அந்த ஒப்பந்தத்தைத் தந்து அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டும். *** ***

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பேசுகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பிரமுகர்கள் எல்லாக கட்சியிலும்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்ன கட்சியைச் சேர்ந்தவர் என்று பெயர் சொல்கிறார்கள். அவையில் இல்லாதவர்களைப் பற்றிச் சொல்வது சரியல்ல. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) :** அவையில் இல்லாதவர்களைப் பற்றியும் அவர்களுடைய பெயரையும் குறிப்பிடக்கூடாது. பொதுவாக ஒப்பந்தக்காரர்கள் என்று சொல்லுங்கள், குறிப்பிட்டுச் சொன்ன பெயர் நீக்கப் பெறுகிறது.





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டைக் கூறினார்கள். அதாவது 12 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கான்ட்ராக்டர் ஒரு ஒப்பந்தத்தை எடுத்தார் ; அவர் அந்த வேலையைச்செய்து முடிக்கவில்லை என்று சொல்லி இருக்கிறார். * * ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்பெசிபிக்காக, குறிப்பிட்டுச் சொல்லியிருப்பது அவைக்குறிப்பிலே இருக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—
தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே, அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது என்றும் அலிகேஷன் இருந்தால் அதற்கான ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் பேசவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப் பெற்றுள்ளது. எனவே, அவர் குறிப்பிட்ட பெயர், மற்றவை நீக்கப்படுகிறது.

(முற்பகல் 11-30)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் ;** இப்பொழுது செங்கற்பட்டு மாவட்டமும் இருக்கிறது, மதுராந்தகம் தாலூகாவும் இருக்கிறது, புக்கத்துறை ஊரும் இருக்கிறது. அந்தப் புக்கத்துறையிலே கட்டி முடிக்கப்படாத கால்நடை மருத்துவமனையும் இருக்கிறது. அதற்கு வாங்கிய பணத்தைப் பொறுத்தவரை அதற்கான தஸ்தாவேஜீகளும் இருக்கின்றன. ஆகவே, பெயரை மட்டும் விட்டுவிடுகிறேன். 1972லே யார் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள் என்பது இந்த நாட்டுக்குத் தெரியும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும். ஆகவே, இங்கே அதற்காக வரிந்துகட்டிக் கொள்வதால், அந்தப் பெயரை மறைத்து விடுவதால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்பதை மட்டும் சொல்லி, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே இருந்தவர்கள் தான், இந்தச் சமுதாயத்தைப் பழித்தவர்கள் தான், இந்தச் சமுதாயத்திலே வாழத் தகுதியற்றவர்களாக இருப்பவர்கள்தான் மற்றவர்களைப் பார்த்து ஏசுகின்ற சூழ்நிலையில் இந்த மன்றத்திலே அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், இந்தத் தமிழகத்தினுடைய ஆட்சிப்பொறுப்பிலே இருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் நாட்டிலே வாழ்கின்ற, குடிசையிலே பிறந்தவர்கள் வளர வேண்டுமென்பதற்காகவும் பல்வேறு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

---

***மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1984 மார்ச் 23

கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரை, புதிய புதிய திட்டங்களைக் கொண்டு வந்து இன்றைக்கு இறைச்சிக் கழகம் போன்றவைகளையெல்லாம் உருவாக்குவதன் மூலமாக, சமுதாயத்தை வெற்றிகரமான ஒரு விவசாய சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இன்றைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை மட்டும் சொல்லி, வாய்ப்பளித்த அத்தனை பேர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு.பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இன்றையதினம் கால்நடை, சமூகநலன் மானியக் கோரிக்கைகள் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களே கூட, கொடுத்திருக்கின்ற குறிப்புகளுடைய முன்னுரையிலே கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் அனைத்தும் கிராமப்புற மக்கள் குறிப்பாக, சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பொருளாதார நிலைமையை அதிகரிக்கச்செய்யும் நோக்குடன் அரசினால் செயல்படுத்தப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் தவறில்லை. ஆனால், இன்றையதினம் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளுமே சமுதாயத்திலே மிக அடித்தட்டிலே இருக்கிற நலிந்தபிரிவினரை, பொருளாதாரத்திலே கை தூக்கி விடுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. சென்ற ஆண்டுக் கூட நாங்கள் எல்லாம் இந்த மானியக் கோரிக்கையிலே பேசினோம். ஆனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நாங்கள் சொல்கின்ற சில குறைபாடுகளை மனதிலே இருத்தி செய்யவேண்டும். அதிலும் குறிப்பாக, இன்றையதினம் இந்த கால்நடை இலாகாவினுடைய இயக்குநராக வந்திருக்கிறவர், இந்த இலாகாவினுடைய அடிமட்டத்திலேயிருந்து உயர்ந்து வந்திருக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் இந்த இலாகா இன்னும் செம்மையாகச் செயல்பட வேண்டுமென்று நாங்கள் எல்லாம் விரும்புகிறோம். அதுவும் கிராமப்புறத்திலே இருந்து வந்திருக்கிற விவசாயிகளாகிய எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கால்நடை, விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதை நன்கு அறிவோம். பல நேரங்களில் விவசாயிகளுடைய கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்து விடுமேயானால், விவசாயக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்—பொருளாதாரத்திலே மிக நலிவுற்ற அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் பாதிக்கப்படுகின்றன என்பதை நாம் எல்லாம் நன்கு அறிவோம்.



1984 மார்ச் 23] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இங்கே கூட நான் ஏற்கனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே சொன்னபோது, வட ஆற்காடு மாவட்டத்திலே இந்த ஆண்டு கோமாரி நோயினாலே கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்தக் கிராமத்திலேதான் வந்தது, இந்தக் கிராமத்திலே இல்லை என்று இல்லை. மாவட்ட முழுவதுமே—கோமாரி நோய்—எல்லா கிராமங்களிலேயும் பரவி, ஏர் உழ பயன்படுத்துகின்ற காளை மாடுகளானாலும் சரி, பசுவானாலும் சரி, கன்றுகளானாலும் சரி, இந்தக் கால்கோமாரி, வாய்கோமாரி நோயினால் பாதிக்கப்பட்டு, விவசாயமே எங்களுடைய மாவட்டத்திலே ஸ்தம்பித்துப் போய்விட்ட ஒரு நிலைமை இந்த ஆண்டு ஏற்பட்டுவிட்டது என்றேன். அமைச்சர் அவர்கள் கூட அந்த நேரத்திலே பதில் அளித்த பொழுது அதிகமான உயிர்ச்சேதம் இல்லையென்று சொன்னார்கள். அதிகாரிகள் எல்லாவற்றையுமே, சரியான புள்ளிவிவரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்க முடியாது. பசுவுக்கு அந்த நோய் பீடிக்கப்படுமேயானால், அந்தப் பாலை அருந்துகின்ற கன்றுகள் உடனே இறந்துவிடுகின்ற தன்மையை நாம் எல்லாம் கண்கூடாகப் பார்த்தோம். அதைக் காப்பாற்றவே முடியவில்லை. அதிலும் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இன்றையதினம் மத்திய அரசானாலும், மாநில அரசானாலும்—வங்கிகளின் மூலமாக ஏராளமான விவசாயிகளுக்கு அந்தக் கறவை மாடுகள், கன்றுகள் இறந்துவிடுமேயானால் அவர்கள் எப்படி அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும்? நாம் எந்த நோக்கத்திற்காகக் கொடுத்தோமோ அந்த நோக்கம் சரிவர நிறைவேறவில்லையென்பதை நான் இந்த நேரத்திலே நினைவு கூர விரும்புகிறேன். காரணம் அதற்குச் சரியான மருந்து இருக்கிறதா என்று எங்களைப் போன்றவர்களுக்கு அந்த அதிகாரிகளால் சொல்ல முடியவில்லை. நம்முடைய சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் சித்த வைத்தியத்திலே மிக்க ஆர்வம் உள்ளவர்கள். அந்த நேரத்திலே எங்களுக்கு சொன்ன பதிலில் அவர்கள் வேப்பெண்ணெய் தடவுங்கள் என்று சொன்னார்கள். பல விவசாயிகள் அந்த நேரத்தில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு வேப்பெண்ணெய் தடவினார்கள் என்பது தான் உண்மையான நிலைமை. ஒரு காலகட்டம் வரையில் அந்த நோய் இருந்து பிறகு அது குணமாகி அந்த கால்நடைகள் பழைய நிலைமைக்கு வர பல மாதங்கள் ஆகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக கோடை இருந்தாலும் இந்த வியாதி வருகிறது; அதிகமாக மழை இருந்தாலும் இந்த வியாதி வருகிறது. இதைப் போக்குவதற்கு நிரந்தரமாக ஒரு திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்த வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட இங்கே அடிக்கடி சொல்வார்கள். சில மாவட்டங்களில் கோமாரி நோய்க்கு மருந்தை மானிய விலையில் தருகிறோம்; சில மாவட்டங்களில் மருந்தை அப்படி தருவதில்லை என்று சொல்வார்கள். இதிலே சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்பதில்லை. கால்நடைகளுக்கு நோய் என்று சொன்னால் அரசாங்கம் மானிய விலை தருகிறோம் என்று

சொல்வது கூட தவறு. இலவசமாகவே எல்லாக்கால்நடைகளுக்கும் இந்தத் தடுப்பு ஊசியை போட வேண்டும். அப்படிப் போடவில்லையென்றால், சிறிய விவசாயிகளுக்கு மட்டுமே போடுவோமேயானால் பெரிய விவசாயிகள் அல்லது நடுத்தர குடும்பங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு அந்த வாய்ப்பு இல்லையென்று சொல்கிறபோது அந்த வியாதி மற்ற கால்நடைகளுக்கும் தொத்துகிற சூழ்நிலை இன்றையதினம் இருந்து 'வருகிறது. இதை அரசாங்கம் உணரவேண்டும். இன்றைக்கு கால்நடைகள் ஆடானாலும், மாடானாலும் அவைகள் நல்லமுறையில் வளர்வதற்கு நாம் ஊக்கம் அளிக்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த மேய்ச்சல் நிலங்கள் இன்றைய தினம் கிராமப்பகுதிகளில் இருக்கிறதா என்றால் இல்லை. அந்த விவசாயிகள் கால்நடைகளை எங்கே கொண்டுபோய் மேய்க்க இயலும் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஏற்கெனவே, பழைய காலங்களில் மேய்ச்சல் நிலங்கள் என்று புறம்போக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவைகள் எல்லாம் தனியார் ஆக்கிரமிப்பிலே வராத அளவிற்கு சட்டம் இயற்றி அதைப் பாதுகாக்கிற ஒரு தலையாய கடமை அரசாங்கத்திற்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1977 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையில் கால்நடைகளுடைய இனவிருத்தி 2.7 சதவீதம்தான் இருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு பெரிய அதிகரிப்பு என்று நாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம் இதற்கு அளிக்கப்படுகிற கடன்கள் அல்லது மானிய விலையில் கொடுக்கிற கடன்கள் முதலியவற்றை இன்னும் சரியான முறையில் இந்த இலாக்காவிலே கண்காணித்து இருப்போமேயானால் இன்னும் அதிகமான அளவிலே கால்நடைகள் அபிவிருத்தி அடைந்திருக்கக்கூடும். கொடுத்திருக்கிற புள்ளி விவரங்கள் அதிகமாக இனவிருத்தி இல்லையென்பதைத்தான் காட்டுகிறது என்பதையும் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் பொதுவாக சமுதாயத்தில் ஆடானாலும், மாடானாலும் அல்லது கோழியானாலும் அசைவ உணவாக இருக்கின்றன. ஒரு காலத்தில் சைவம் சாப்பிடுபவர்கள் அதிகமாக இருந்தாலும், இன்றைய தினம் சைவத்தை விட அசைவம் சாப்பிடுகிறவர்கள்தான் அதிகம் என்ற வகையில் சமுதாயத்தில் நிலைமைகள் வளர்ந்து வருகின்றன. பலபேர்களுடைய இல்லங்களில் அசைவம் செய்யமாட்டார்கள். அவர்கள் ஒட்டல்களில்தான் அசைவம் சாப்பிடுகிற சூழ்நிலை இருந்து வருகிறது. இன்றைய தினம் ஆட்டு இறைச்சியோ மாட்டு இறைச்சியோ, அல்லது கோழி இறைச்சியோ அதனுடைய விலைகள் மிக அதிகமான அளவில் ஏறிக்கொண்டே போகிறது. கோழி வளர்ப்பதற்கென்று நம்முடைய வாரியங்கள் இருக்கின்றன. ஆடு, மாடு, கோழி



முதலியவற்றை அதிகமான அளவில் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் மக்களுக்கு இந்த உணவுகள் நியாய விலையில் கிடைக்க வேண்டும். இவ்வளவு விலை ஏறி இருக்கிறபோது, ஆடோ, மாடோ, கோழியோ அவற்றை வளர்க்கிறவர்களுக்கு அந்தப் பணம் போய் சேர்கிறதா என்றால் இல்லை ; வியாபாரிகளிடத்தில் அதிகமாகப் பணம்போய் சேர்கிற சூழ்நிலை இன்றைய தினம் இருந்து வருகிறது. இதைப் போக்குவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை முதலியவற்றை அரசாங்கம் பல இடங்களில் நடத்துகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளில் ஏராளமான மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றன. அவை தரைக்காடுகள்; அங்கே நம்முடைய அரசாங்கம் ஆட்டுப் பண்ணையோ, மாட்டுப் பண்ணையோ அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துகொள்ளவேண்டும்.

[முற்பகல் 11-40]

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒரு டாக்டர் அவர்கள் குஜராத் மாநிலத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் என்னைச் சந்தித்துப் பேசியபோது சொன்னார்கள். குஜராத் மாநிலத்தில் பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே நம்முடைய கால்நடை டாக்டர்களைப் போட்டு, அவர்களுக்கு அங்கே வேலைவாய்ப்பு கொடுத்து, அங்கேயிருக்கிற கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் ஏற்படுமானால் உடனடியாக அதைப் போக்கும் பணியில் குஜராத் மாநிலத்தில் செய்து வருகிறார்கள். அந்த வகையிலே நம்முடைய பால்பண்ணைகளிலே இத்தகைய முறையைக் கொண்டுவருவதற்காக இங்கே இருந்த அதிகாரிகளை குஜராத் மாநிலத்திற்கு அனுப்பி அந்தத் திட்டத்தின் செயல்பாட்டை அறிந்து வந்து இங்கே நிறைவேற்றுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டமும் சமூக நலத்தில் வருகிறது. நான் கூட சத்துணவுத் திட்ட அமைச்சரிடத்தில் பேசுகிறபோது சொன்னேன். இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்பதைப்பற்றி கருத்து வேறுபாடு இல்லை. ஏற்கனவே இருந்த குழந்தை

(திரு.பெ.சு திருவேங்கடம்) [1984 மார்ச் 23

காப்பகங்கள், அதேபோன்று பல்வேறு இலாக்காக்களின்கீழ் நடைபெற்று வந்த உணவுக்கூடங்களையும் ஒன்றாகச் சேர்த்து முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். ஆனால், இது முறையாகக் கொடுக்கப்படுகிறது என்றால் நிச்சயமாக அது நல்ல பலனை அளிக்கும். ஆனால், அப்படி இல்லை என்கிற நிலைமையை எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களில் செல்கிறபோது நேரடியாகப் பார்த்து அறிந்த விவரங்கள் மூலம் சொல்ல முடியும். அது சரிவர நடைபெற வேண்டுமென்பதற்காக அமைச்சரின் கவனத்திற்கு நான் இதைக் குறிப்பாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

நாங்கள் பல கிராமங்களுக்குச் செல்கிறபோது பார்த்திருக்கிறோம். இந்தக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற அளவிற்கு அங்கே சத்துணவு கொடுக்கப்படுவதில்லை. காரணம் அதைக் கண்காணிக்க சரியான அதிகாரிகள் இல்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால், அந்தத் திட்டம் அவரின் நேரடிப் பார்வையில் செயல்படுத்தப் படுகிறது. ஆகவே உணவு கொடுப்பவர்கள் அதிகாரிகளையும் மதிப்பதில்லை. சில கிராமங்களில் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டித் தலைவர் சொன்னால்கூட அவர்கள் சரிவரக் கொடுப்பதில்லை. ஏதாவது சொன்னால் அங்கே இருக்கின்ற அமைப்பாளர்கள் நீங்கள் யார் என்னைக் கேட்க, வெளியேறுங்கள் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொன்னோம். இவைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னோம். இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னால், இந்தத் திட்டத்திற்காக அரசால் ஒதுக்கப்படுகின்ற பணம் சமுதாயத்தில் அடித்தட்டில் உள்ள ஏழை எளியவர்களின் குழந்தைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொன்னால், அது சரியாக நடைபெறுகிறதா என்று கண்காணிக்கக்கூடிய கடமை அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே அங்கே பணியாற்றும் அமைப்பாளர்களுக்கு மாதம் 150 ரூபாய்தான் தரப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அது முழு நேர வேலையில்லை, ஆகவே, 150 ரூபாய்க்கு மேலே அதிகப்படுத்திக் கொடுக்க இயலாது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் காய்கறி வாங்க, விறகு வாங்க, மற்றவைகள் வாங்க பணம் 4 மாதத்திற்கு ஒரு முறைதான் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவர்கள் வாங்குகிற 150 ரூபாய் சம்பளத்தில்



1984 மார்ச் 23] (திரு.பெ.சு. திருவேங்கடம்)

இவைகளையெல்லாம் எப்படி அவர்கள் முன்பணம் போட்டு வாங்கிக்கொள்ள முடியும்? இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் ஆகவே, அவற்றை வாங்குவதற்கு அமைப்பாளர்களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள துரிஞ்சாபுரத்தில் இப்படிப்பட்ட நிலையிருக்கிறது. தற்போதுள்ள விலைவாசியில் அமைப்பாளர்களால் முன்பணம் போட்டு இவற்றை வாங்க முடியாது. இதை மாவட்ட ஆட்சித்தலைவரின் கவனத்திற்கும் ஈர்த்திருக்கிறோம். ஆகவே, இதற்காக அவர்களுக்கு உடனடியாக ரூபாய் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதரவற்ற விதவைகள், முதியோர், விவசாயிகள் ஆகியோருக்கு உதவித் தொகை ரூ. 35 வழங்கப்படுகிறது. அவர்களுக்கு மத்தியான வேளையில் சத்துணவும் போடப்படுகிறது. இது எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லை. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்கூட சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஏராளமான விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு, அவைகள் அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டு, அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, அந்த விண்ணப்பங்கள் எல்லாம் நியாயமானவைதான், ஏற்றுக்கொண்டு உதவித் தொகை அளிக்கலாம் என்று சிபார்சு செய்யப்பட்டு, கோட்டாட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன. உடனே அங்கே 2,000 பேர், 3,000 பேர் என்று நோட்டுப் புத்தகத்தில் சாங்ஷன் செய்து எழுதி வைத்துக்கொள்கிறார்கள். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு உதவி கிடைக்காமல் இருக்கிறது என்று குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், நிதிப்பற்றாக்குறை, அதிக நிதி ஒதுக்கினால்தான் கொடுக்க முடியும், நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள். தகுதி பெற்ற அத்தனை பேர்களுக்கும் உதவி கிடைக்கக்கூடிய அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

நேரம் இல்லாததால் சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நம்முடைய சர்வீஸ் சென்டர்களில் பணம் செலவிடுகிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு அது போதுமானதல்ல. இன்றைக்கு அதிக அளவில் விலைவாசி ஏறியிருக்கிறது. துணிகளுக்கு 35 ரூபாய், உணவுக்கு 35 அல்லது 36 ரூபாய் என்று கொடுக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் இந்தப் பணம் போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது, ஆகவே அவர்களுக்கு அளிக்கப்படும் இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

(திரு. பெ. சு. திருவேங்கடம்) [1984 மார்ச் 2

மறுவாழ்வு இல்லங்களைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. வேறு ஒரு இலாகாவில் வரும் என்று சொல்கிறார்கள். இருந்தபோதிலும் இப்போதே சொல்கிறேன், அதற்கும் தொகையை உயர்த்த வேண்டும். தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களில் இப்போது மோர் வழங்கப்படுவதில்லை, நிறுத்தி விட்டார்கள். விலைவாசி ஏறிவிட்டதால் மோர் வழங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள் அதிகாரிகள். எனவே, மோர் வழங்குவதை நிறுத்தக்கூடாது. மீண்டும் கொடுக்க தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டும்.

அடுத்து, வேலைவாய்ப்புப் பிரச்சனை. கண் தெரியாது, சமுதாயத்தில் ஊனமுற்றவர்கள், காது கேளாதவர்கள், கை கால் ஊனமுற்றவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சைக்கிள் வண்டி தருவது, காது கேளாதவர்களுக்கு அதற்கான கருவி வாங்கித் தருவது போன்ற திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். அது இப்போது குறைவாகத்தான் நடக்கிறது. தேவை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதிகமான அளவுக்கு அவற்றை வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்

சென்னை மாநகரில் கண் தெரியாத படித்த பட்டதாரிகள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்கவில்லை. நன்றாகப் பார்வை உள்ள பட்டதாரிகள் நிறையபேர்களுக்கு வேலை கிடைக்காமல் இருப்பது ஒருபக்கம். பார்வையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்காத நிலை இன்னொரு பக்கம் இருக்கிறது. தங்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று சென்னை மாநகரில்கூட ஊர்வலம், உண்ணாவிரதம் இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து உறுதிமொழி எல்லாம் கொடுத்தார்கள். அவர்களுடைய கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அவர்களுடைய முக்கிய கோரிக்கை, எல்லாவிதமான வேலைகளையும் நாங்கள் செய்வோம், எங்களுக்கு எல்லா வேலைகளிலும் ஒரு சதவீதம் ஒதுக்கித்தர வேண்டும் என்பது. அரசாங்கம் அதை ஏற்று, இந்த ஒரு சதவீதம் வேலைவாய்ப்பை சட்டப்பூர்வமாக ஆக்கி, ஒதுக்கீடு செய்து கொடுக்கும்படிகேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்றேன். நன்றி வணக்கம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல வாய்ப்பளித்தற்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 23] (திரு. கு. அ. செங்கோட்டையன்)

அருமை அண்ணன் திருவேங்கடம் அவர்கள் பேசும்போது கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம் பற்றியும், இந்த நோயினால் கால்நடைகளை இழந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் இங்கே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் இந்த நோயைத் தடுக்கின்ற வகையில் நீலகிரி மாவட்டத்தில் அந்த மாவட்டம் முழுவதிலும் தடுப்பூசி போட்டு, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் இந்த கோமாரி நோயைத் தடுப்பதற்காக ஓராண்டு காலத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து இந்த நோய் வரக்கூடாது என்று சொல்லி, இந்த நோயைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில்.

அதைப்போன்று இந்த ஆண்டு பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், திருச்சி மாவட்டம் போன்ற மாவட்டங்களில் இந்த நோயைத் தடுப்பதற்கு இந்த அரசு 1983-84 ஆம் ஆண்டுக்கு ஏறத்தாழ 1,99,00,000 ரூபாய் ஒதுக்கீடு செய்து, அக்கரையோடு செயல்பட்டிருக்கிறது. அதைப்போன்று பல்வேறு திட்டங்களை ஏழை எளிய விவசாயிகள், கால்நடை வைத்திருக்கிற விவசாயிகள் நலம் பெறுவதற்காக அதிக அக்கறை எடுத்து, இந்த அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இன விருத்தி கன்றுகளை உற்பத்தி செய்கின்ற இந்தத் திட்டத்தின் கீழ், புதிய ரகக் கால்நடைகளை உற்பத்தி செய்வதன் மூலம், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறது இந்த அரசு.

(முற்பகல் 11-50)

வேறு மாநிலங்களிலுள்ள கால்நடைகளின் விந்துகளைச் சேகரித்து, அதன்மூலம் இங்கே இருக்கின்ற கால்நடைகளின் உற்பத்தியைப் பெருக்குவதோடு, பால் உற்பத்தியையும் அதிகமாக்குகிற அளவிற்கு நம்முடைய அரசு செயலாற்றிக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில், கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் கன்று வளர்ப்புத் திட்டம் சி. ஆர். எஸ். ஸ்கீம் என்ற அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு 5,000 கன்றுகளை வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் அந்த மாவட்டங்களில் செயலாற்றும்போது, பெரியார் மாவட்டத்திற்கு 500 கன்றுகளை வளர்ப்பதற்கு மான்யத்தைத் தந்திருக்கிறார்கள், சேலம், கோவை ஆகிய மாவட்டங்களுக்கு 5,000 இன விருத்திக்கன்றுகளை உற்பத்தி செய்ய மான்யம் அளித்ததுபோல, பெரியார் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் வாழ்க்கையிலே மறுமலர்ச்சியை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசுத் துறைச் செயலாளர்கூட இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் வருகின்ற ஆண்டிலாவது அதைக் கொடுக்கவேண்டுமென்று

(திரு. கு. அ. செங்கோட்டையன் [1984 மார்ச் 23

கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்து பெரியார் மாவட்டத்
திலும் பால் உற்பத்தியில் ஓரளவிற்கு மறுமலர்ச்சியை உண்டாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குஜராத் மாவட்டத்தில் உள்ள ஆனந்த் திட்டத்தைப்போல்
பெரியார் மாவட்டத்திலும் ரூ. 1,50,000 செலவில் 50 இலட்சம்
லிட்டர் பால் பெறுகின்ற அளவிற்கு பால் பெருக்குத் திட்டம்
ஒன்றை உருவாக்கி, விவசாயிகள் தங்கள் வாழ்க்கையிலே ஒரு
மறுமலர்ச்சியை அடையும் விதத்தில் இந்த அரசு செயலாற்றிக்
கொண்டிருக்கிறது. எனவே கன்று வளர்ப்புத் திட்டத்தில் அந்த
மாவட்டத்திற்கு 5,000 கன்றுகளைக் கொடுப்பதன் மூலம் அங்
குள்ள விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை ஓரள
விற்கு உயர்த்துகின்ற அளவிற்கு இந்தத் திட்டத்தைச் செயல்
படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய சத்துண
வுத்திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, மாண்புமிகு
அண்ணா கூறும்போது ஒரு கருத்தினை இங்கே சொன்னார்கள்.
சத்துணவுத் திட்டத்தில் ஊழல் நடந்திருக்கிறது, குறைபாடு
இருக்கிறது என்று சொல்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்
களை செலவு செய்யும் பொழுது ஓரிரு இடங்களில் குறைபாடுகள்
இருக்கத்தான் செய்யும். அந்தக் குறைபாடுகளைக் களையும்
விதத்தில் கமிட்டி அமைத்து, அங்கே சட்டமன்ற உறுப்பினர்
களையும் மற்ற முகாம்களிலே இருப்பவர்களையும், அங்கத்
தினர்களாக ஆக்கி, அவர்கள் சென்று பார்வையிடலாம். தவறு
இருக்குமேயானால் அதிகாரிகளிடத்திலே சுட்டிக்காட்டலாம்
என்ற கருத்தைப் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தெரி
வித்திருக்கிறது.

2 வயது முதல் 4 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு
ஊட்டச் சத்துக் குறைந்து விட்டதால், அவர்கள் முன்னேற
முடியாத நிலை இருக்கிறது. நல்ல அறிவு பெறமுடியவில்லை.
எனவே அவர்கள் ஓரளவு கல்வி அறிவைப் பெறவேண்டுமென்ற
அடிப்படையில், சத்துணவுத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்
கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 10 வயது வரையிலுள்ள
குழந்தைகள் நல்ல சத்துணவைப் பெறுவதன் காரணமாக
அறிவைப் பெருக்குகிறார்கள். அந்த வகையில் இன்றைய
தினம் ஏழைக் குழந்தைகளுக்கு, ஏங்கித் தவிக்கும் குழந்தை
களுக்கு நாம் சத்துணவு அளிக்கிறோம். இந்தியத் துணைக்
கண்டத்திலே மட்டுமல்ல, உலகத்திலேயுள்ள அனைத்து நாடு
களும் போற்றுகின்ற வகையில் இந்த திட்டத்தை உருவாக்கி
யிருக்கிறார்கள். அன்னை தெரசா கூட இதைப் போற்றி புகழ்ந்
திருக்கிறார்கள். அந்த வகையில் இந்த சத்துணவுத் திட்டம்
இன்றையதினம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.



1984 மார்ச் 23] (திரு. கு. அ. செங்கோட்டையன்)

அதேபோல் குழந்தைகள் நலனுக்காக 1982 டிசம்பர்
வரையில், குழந்தைகள் காப்பகத்திற்காக ரூ. 50 லட்சம்
செலவு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்தவேண்டும், ஏழைக் குழந்தைகள் கல்வியறிவு
பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, புரட்சித் தலைவருடைய
அரசு செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கின்ற அதே நேரத்தில்,
முதியோருக்கும் முன்னாள் இராணுவத்தினருக்கும், ஏறத்தாழ
1,53,000 பேர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தைப்
புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். என்
பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படை
யில் இராணுவத்திலே பணியாற்றிவிட்டு, பின்னர் அவர்கள் ரிடை
யர் ஆகிச் செல்லுகின்ற நேரத்தில், அவர்களுடைய வாழ்க்கையில்
மறுமலர்ச்சியை உருவாக்குகின்ற வகையில் இந்தத் திட்டத்தை
இந்த அரசு செயல்படுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்
புரட்சித் தலைவர் அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
அந்த அளவிற்கு ஏழை மக்களுக்காக பல்வேறு திட்டங்களை உரு
வாக்குகின்ற வகையில் இன்றைய தினம் நிறைவேற்றிக் கொண்
டிருக்கிறார்கள்.

அதே போல் ஈரோட்டில் கோழி நோய்க் கண்டறியும்
ஆய்வுக் கூடம் ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது. ஏழைத் தொழி
லாளர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை
அடைய வேண்டும் என்ற வகையில், இறைச்சி பெரும் அளவிற்குக்
கிடைக்கும் வகையில், கோழி உற்பத்தியை அதிகமாகச் செய்ய
வேண்டுமென்று இந்த ஆராய்ச்சிப் பண்ணையின் மூலமாக, ஒவ்
வொரு மாதமும் 50 முதல் 75 கிராமங்கள் வரை போய்ப்
பார்த்து, கோழிகளுக்கு வருகின்ற நோயைத் தடுக்கின்ற வகையில்
தனியார் வைத்திருக்கின்ற கோழிப் பண்ணைகளிலுள்ள கோழி
களுக்கு என்ன நோய் ஏற்பட்டாலும், அதையும் தடுக்கின்ற
வகையில் இந்த ஆராய்ச்சிக் கூடம் இன்றைய தினம் விளங்கிக்
கொண்டிருக்கிறது.

உண்மையிலே இது பாராட்டத் தகுந்த ஒன்றாகும்.
அதைப் போல் 1983-84 ஆம் ஆண்டு, ஆதி திராவிட
மக்களுடைய நலனைக் கருதி இந்த அரசு இந்த ஆண்டு மட்டும்
5 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, கோழி வளர்ப்பு,
பசு இனங்கள் வளர்ப்பு, ஆடுகள் வளர்ப்பு போன்றவைகளுக்காக
பல்வேறு திட்டங்களை உருவாக்கியும் அதற்குத் தீவனங்களை
உற்பத்தி செய்து அவர்களுக்கு இலவசமாகத் தரவேண்டும் என்று
ஒரு திட்டத்தின் அடிப்படையில் இந்த அரசு செயலாற்றிக்
கொண்டு வருகிறது. அந்த அடிப்படையிலே, இந்த அரசைப்

(திரு. கு. அ. செங்கோட்டையன்) [1984 மார்ச் 23

பொறுத்த வரையிலும், கால்நடையாக இருந்தாலும், கோழி வளர்ப்புத் திட்டங்களாக இருந்தாலும், பால் உற்பத்தி செய்கின்ற திட்டங்களாக இருந்தாலும், அவைகள் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்ற முறையில், இன்று நடவடிக்கைகளை எடுத்துச் செயலாற்றிக் கொண்டு வருகிறது. கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில் 'மொபைல் வேன்' இருக்கிறது. ஆனால் இது ஒரு டிவிஷனுக்கு ஒன்று என்ற வகையில்தான் இருக்கிறது. ஒரு டிவிஷனிலே இருக்கின்ற மொபைல் வேன் 9 ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று செயலாற்ற வேண்டியிருக்கிறது. ஒரு ஒன்றியத்திலே 200, 250 கிராமங்கள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் ஒரு நாளைக்கு அவர்களால் 10 கிராமங்களுக்கு மட்டும்தான் சென்று சிகிச்சை அளிக்க முடிகின்றது. எனவே, இந்த நிலைமையை மாற்றி, கால்நடை மருந்துவர்களுக்கு மொபைல் வேன், 1½ லட்சம் செலவு செய்து வாங்கிக் கொடுப்பதைக் காட்டிலும், மோட்டார் பைக் ஒன்றை, ரூ. 10 ஆயிரம் செலவானாலும் பரவாயில்லை என்று வாங்கிக் கொடுத்தால், அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள அத்தனை கிராமங்களுக்கும் ஒரே வாரத்தில் சென்று, அங்கே உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கவும், அங்குள்ள அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் அது உதவியாக இருக்கும். எனவே, அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், தாளவாடிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மலைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் புரட்சித் தலைவர் அவர்கள் அத்தனை பகுதிகளிலும், பாதை வசதிகளைச் செய்து விட்டார்கள். பாதை வசதிகளைச் செய்து விட்டாலும், அங்கே இருக்கிற கால்நடைகளுக்கும், மக்களுக்கும் சிகிச்சை அளிக்க முடிகிறதா என்றால், இல்லை. ஆகவே அங்கே இருக்கின்ற கால்நடைகளுக்கும் மக்களுக்கும் சிகிச்சை அளிக்கின்ற வகையில், அங்கே நடமாடும் கால்நடை மருத்துவமனைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று, அங்கே உள்ள இணை இயக்குநரிடமிருந்து அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டே அங்கே நடமாடும் மருத்துவமனையை உருவாக்கி, அங்கே இருக்கின்ற அந்த மலைவாழ் மக்கள், பின்தங்கிய மக்கள் ஆகியோருக்குப் பயன் அளிக்கின்ற வகையில், நடமாடும் மருத்துவமனையை, மருந்தகத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 23] (திரு. கு. அ. செங்கோட்டையன்)

அதே போல் பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே காங்கேயம் போன்ற பகுதிகளில் நல்ல இன விருத்திக் கன்றுகளை உற்பத்தி செய்கின்ற பகுதியாக அது இருக்கிறது. நல்ல காளைகளை உற்பத்தி செய்கின்ற இடமாக இருக்கிறது. அதே போல் பவானி போன்ற பகுதியில் அங்கே விவசாயப் பண்ணை இருந்து கொண்டிருந்த நிலையை மாற்றி, இன்றைய தினம் அது பவானிசாகருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே 100 ஏக்கர் நிலங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை இருக்கின்றன. அதே போல் பெரியார் மாவட்டம் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில்-தமிழ்நாட்டின் இணையத்திலேயிருந்து-போடிக் காளையிலேயிருந்து உர விந்துகள் தயாரிக்கின்ற நிலைமை அங்கே உருவாக்கப்பட இருக்கிறது. ஆகவே, பெரியார் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைக் கல்லூரியை உருவாக்கினால் இது மையத்திலே இருக்கின்ற காரணத்தால், திருச்சி, சேலம், கோவை, நீலகிரி போன்ற மாவட்டங்களில் இருப்பவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் அதை அங்கே உருவாக்கித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு வேண்டிய வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன. எனவே, அதை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பவானி சாகரிலே இருப்பவர்கள், பின்தங்கிய மக்களாக இருக்கிறவர்கள், அந்தப் பகுதி ஓரளவிற்கு மலைப் பகுதியாக இருந்தாலும், அந்தப் பகுதியிலே கால்நடைகளை நிறைய உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு அவர்கள் உற்பத்தித் திறனை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே இருப்பவர்களுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லை. அவர்கள் பாரஸ்ட் இடங்களிலே 1 ரூபாய், 2 ரூபாய் செலவு செய்து 6 மாதத்திற்கு ஒருமுறை வரி போல் கட்டியதற்குப் பிறகுதான், அவர்கள் தங்களுடைய கால்நடைகளை அந்த மேய்ச்சல் நிலங்களில், பவானிசாகரில் உள்ள பாரஸ்ட் நிலங்களில் மேய்ப்பதற்கு அனுமதிக்கப்படுகிற நிலைமைகள் அங்கே இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் கூட இன விருத்திக் கன்றுகளை உற்பத்தி செய்கின்ற முறையில், அந்த விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற முறையில் இதை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சமூகநலத் துறையைப் பொறுத்த வரையில், பல்வேறு மாவட்டங்களில், இந்தத் துறையின் மூலமாக, ஊனமுற்றவர்கள், கண்ணற்றவர்கள், கை, கால் இல்லாதவர்கள், இப்படிப்பட்ட பல்வேறு துறைகளிலே இருப்பவர்களுக்கு பள்ளிகள் நிறுவப்பட இருக்கின்றன. அதைப் பெரியார் மாவட்டத்திலே உருவாக்கினால், கோவை, பெரியார் மாவட்டத்திலே இருப்

பவர்களும், சேலத்திலே இருப்பவர்களும், அதை ஒரு மையமாகக் கருதி, அங்கே தங்களுடைய குழந்தைகளைச் சேர்த்து, அவர்களுடைய கல்வி அறிவைப் பெருக்குவதற்கு ஒரு நல்ல வழிவகை இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளைப் பொறுத்த வரையில், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் டென்மார்க் போன்று, இன்றைய தினம் மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்று செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 32 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைய தினம் தான் ஓரளவிற்கு இந்தியாவிலே முன்னேறியிருக்கிறது என்று சொன்னால், எட்டே எட்டு ஆண்டுக் காலத்தில் பால் வளத்தைப் பெருக்குகினற வகையில் தமிழகத்தில் அத்தனை இடங்களிலும், பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களை உருவாக்கியுள்ளார்கள். அங்கேயே பால் பவுடர் தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலமாக கால்நடைகளுக்கு நல்ல முறையில் பயன் அளித்து. அந்தக் கால்நடைகளால் வருகின்ற பல்வேறு பயன்களைப் பெறுகின்ற அளவிற்கு, விவசாயிகள் இன்றைய தினம் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை அமைக்கிற வகையில் அரசு பல்வேறு திட்டங்களை அந்தப் பகுதியிலே உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தனமக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

(நண்பகல் 12-00)

*திரு. பி. ஈஸ்பரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் கூறுவதற்காக நான் முன் வருகிறேன். ஏற்கனவே அரசுத் தரப்பிலே இந்த மானியக் கோரிக்கைகள் பற்றிய அறிக்கைகளை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ரொம்ப சிரமப்பட்டு அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். உண்மையிலேயே பாராட்டுகிறேன். பேசிய நண்பர்கள் கூட அதுபற்றி ஏதாவது சொல்வார்கள் என்று நினைத்தேன். நான் அதைப் பாராட்டுகின்ற அதே நேரத்திலே, சென்ற ஆண்டு அதாவது 1983-84லே இந்த முதியோர்களுக்கான உதவித் தொகைக்கு 16.70 கோடி என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை,-விலைவாசி ஏறியிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமான ஆட்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி இந்த மன்றத்திலே நண்பர்கள், உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்களே, ஆகவே அதிகமாக அறிவித்திருக்கிறார்களா என்று எதிர் பார்த்தேன். ஆனால் இந்த அறிக்கை என்ன சொல்கிறது என்று சொன்னால்,-11.20 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறது.



இதனாலே, முன்னாலே நாம் எவ்வளவு ஆட்களுக்கு கொடுத்துக் கொண்டு வந்தோமோ அவர்களில் மூன்றிலே இரண்டு பேர்களுக்கு மட்டும் தான கொடுக்க முடியும். ஒருவருக்கு கிடைக்காது. அதிகபடுத்தப்பட வேண்டியது குறைக்கப்பட்டிருக்கிறதே, இது ஏன? சபாநாயகருடைய முடிவுக்கே விட்டுவிடுகிறேன். கிட்டத்தட்ட 16.70 கோடியிலே, 5.50 கோடி குறைக்கப்பட்டிருக்கிறது. இதிலே சொல்லும்போது என்ன வருகிறது? மத்திய அரசாங்கத்திடமிருந்து, இதற்காக ஒதுக்கியதில் ஒரு சதவீதம்தான் நீங்கள் செய்யலாம் எனறு சொல்லுகிறார்கள் என்று வருகிறது. அந்த ஒரு சதவீதம் எனபது எங்கே ? எதிலே ? மொத்த ஜனத் தொகையில் ஒரு சதவீதமா அல்லது இருக்கிற முதியோர்களின் எண்ணிக்கையில் ஒரு சதவீதமா என்பது தெளிவாக இல்லை. பொதுவாக சொல்லியிருக்கிறார்கள். அம்மையாரும் கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள கூட போன தடவை இதற்குப் பதில் சொல்லுகையில் போகிற போக்கிலே சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அந்த ஒரு சதவீதம் கணக்குப்படி பார்த்தால் 42 ஆயிரம் தான் வருகிறது. நாங்கள் ஒன்றும் மத்திய சர்க்கார் சொல்வதை கேட்கிற ஆட்கள் இல்லை. நாங்கள் 1 இலட்சத்து 99 ஆயிரத்து அறு நூற்று சொச்சம் கொடுக்கிறோம் எனறு சொல்லுகிறார்கள். வரவேற்கிறோம். இவ்வளவும் எதிலிருந்து அந்தக் கணக்கு வருகிறது ? முதியோர்கள், இளம் விதவை, வயோதிகர்கள் அவர்களிலேயே ஊனமுற்றவர்கள், இப்படி பல ஐட்டங்களும் சேர்ந்து இந்த ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து சொச்சம் வருகிறது. அதில் விவசாயக் கூலியும் சேர்ந்து வருகிறது.

இவ்வளவும் சேர்ந்து வந்ததற்குப் பிறகு, 5.50 கோடி கட் ஆனால், இறந்து போனவர்களுக்கு பதிலாக வேறு ஒருவருக்கு கொடுப்பீர்களே உதவிப் பணம், அதற்கு கூட ஆபத்தான நிலைமை வந்து நிற்கிறது என்று நான் கருதுகிறேன். இது ஒரு ஐட்டம். இன்னொரு ஐட்டம், வேடிக்கையான விஷயம் என்னவென்றால், மத்திய சர்க்காருக்கு ஏற்கனவே ரொம்ப கருமித்தனம். நண்பர்கள் யாருமே இல்லை என்று நினைக்கிறேன். இருந்திருந்தால், கூப்பாடு போட்டிருப்பார்கள். (குறுக்கீடு) இருக்கிறார்களா? பரவாயில்லை. நாம் அரிசி ஒரு லட்சம் டன் கேட்டால் 20 ஆயிரம் சொல்கிறார்கள், அவ்வளவு கருமித்தனம் பண்ணக்கூடிய மத்திய சர்க்கார் கூட, ஒரு நபருக்கு 60 ரூபாய் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. நாம் கொடுப்பது எவ்வளவு ? 35 ரூபாய்தான். அந்த 25 ரூபாய் இல்லையா என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போகிற போக்கிலே, ஓடுகிற ஓட்டத்திலே அப்படியே சொல்லிவிட்டு போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் பேசிய பிற, எங்களுக்குப் பேச சந்தர்ப்பம் இருக்காதே. அப்போது என்ன சொன்னார்கள் தெரியுமா ?

(திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்) [1984 மார்ச் 23

ஐயா 35 ரூபாய் கொடுக்கிறோம். அவர்களுக்கு மத்தியானம் சாபபாடு வேறு கொடுக்கிறோம். கொடுக்கிற சாப்பாட்டுக்கு இது இத்தனை கிராம், அது இத்தனை கிராம் என்று ஒரு கணக்கு வேறு போட்டு, இதெல்லாம் ஒரு 90 பைசா. இதே டவா விட்டோம் ? அவர்களுடைய மானத்தைக் காக்க வேட்டி சேலைகள் கொடுக்கிறோம். ஆமா. அப்ப இத்தையெல்லாம் சேர்த்துக் கூட்டினால் அது 71 ரூபாய்க்கு மேலே போயிடறது. ஆகவே மத்திய சர்க்காரை விட ஜாஸ்தியாகவே கொடுக்கிறோம் என்று சொல்றீங்க. உண்மைதான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நீங்கள் வேஷ்டி சேலைகள் கொடுக்கிறது எல்லாம் உண்மை தான். இல்லை என்று மறுக்கவில்லை. சாப்பாடு போடுவதும் ஓரளவிற்கு உண்மைதான். ஆனால் எவ்வளவு பேர்கள் போய் வாங்குகிறார்கள் என்பது வேறு விஷயம். இப்ப அதற்குள்ளே போனால், மற்ற விஷயங்களுக்குள் போக முடியாது. அதனாலே போகவில்லை. நான் எனன சொல்றேன் என்றால், சாப்பாடு எல்லாம போடுவதைவிட, மொத்தமாகவே அந்த 70 ரூபாயைக் கையிலே கொடுத்து விடுங்கள். அவனே வேஷ்டி எடுத்துக்கொள் வான். தேவையானதை வாங்கிக் கொள்வான். அதையாவது முதலிலே செய்யுங்களேன். அப்படி செய்தால்தான் ஓரளவு சரியாக இருக்கும். ஏனென்றால் சாப்பாட்டிலே சிக்கல்கள் இருக்கு. வேஷ்டியிலே பல விஷயம் இருக்கு.

** ஆகவே அந்தப் பிரச்சினையை ஒட்டிய அந்த வாசகங்கள், பேச்சுக்கள் அத்தனையும் நீக்கப்படுகின்றன.

(கூச்சல், குழப்பம்)

*  *  *  *  *

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். நான் என் அறையில் இருந்து கொண்டே எல்லா வற்றையும் கேட்டுக்கொண்டிருந்தேன் (குறுக்கீடுகள்).

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, முக்கால் மணி நேரம் நடைபெற்ற விவாதத்தை எல்லாம் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமெனறு துணைச் சபாநாயகர் தீர்ப்பளித்துள்ளார். அது சரியல்ல. (குறுக்கீடுகள்).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 23]

(பிற்பகல் 12–40)

திரு. சோ. அழகர்சாமி : நாங்கள் சொல்வது, அவர்கள் மறுத்தது, இடையிலே நடந்த விவாதம் எல்லாம் இருக்கட்டும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் அமைதியாக உட்கார வேண்டும். திரு. சொரணம் அவர்கள் பேசும்போது ** என்று சொல்லி * * என்று சொல்லி இந்தப் பிரச் சினையைச் சொன்னதனால் தான் தேவையற்ற இந்தச் சர்ச்சை எழுந்தது. **என்று சொல்லாமல் அந்த விபரங் களைச் சொல்லி இருந்தால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது. இந்த ஒரு சிறு பிரச்சினை வெளியே போய், நம்மைப் பற்றி ஒரு தவறான கருத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதற்காகத் தான் துணைச் சபாநாயகர் அதை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறார். அதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்).

திரு. என். சங்கரய்யா : ** என்ற வார்த்தை இருந்தால் நீக்குங்கள் ; ஆட்சேபணை இல்லை. மற்றவை எல்லாம் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவை எல்லாம் அதை யொட்டி எழுந்த தேவையற்ற விவாதங்கள்தான். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும். இது ஒரு சின்ன விஷயம். இதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கா தீர்கள்.

திரு. என். சங்கரய்யா : எல்லாவற்றையும் நீக்கியதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சொரணம் பேசியது எல்லாவற்றையும் நீக்கவில்லை. அவர் ** என்று குறிப் பிட்டுச் சொன்னது முதல் இதுவரை நடந்த தேவையற்ற சர்ச்சை கள் அனைத்தும் நீக்கப்பெறுகின்றன (குறுக்கீடு). திரு. சொரணம் தொடர்ந்து பேசலாம் (குறுக்கீடு). தனிப்பட்டவர் மீது குற்றச்சாட்டு கூற வேண்டுமென்றால் முன்அனுமதி பெற்று விதிமுறைப்படிதான் அவைமுன் பேச வேண்டும், திரு. சொரணம் *** என்று குறிப்பிட்டுப் பேசியதை திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். வேண்டு மென்றால் நடவடிக்கைக் குறிப்பையே காட்டுகிறேன் (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற் பகல் 12.05 முதல் 12.43 மணி வரை நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நீக்கப்பெற்றன.

திரு. என். சங்கரய்யா : பொதுவாக மக்கள் பிரச்சினையைப் பேசுகிறபோது, எங்களுடைய பேச்சுரிமை பாதிக்கப்படுகிறது. அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருடைய பேச்சுரிமையும் தடுக்கப்பெறவில்லை. யாரும் பேச்சுரிமையைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். (குறுக்கீடுகள்).

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

(இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்பு செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்திருந்தால், அதை நான் தடுக்கவில்லை. முன் அறிவிப்பின்றி தனிப்பட்டவர் மீது எப்போது வேண்டுமானாலும் குற்றம் சாட்டலாம் என நினைப்பது தவறு. அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இப்பிரச்னை இதோடு முடிகிறது. அடுத்து, திரு. பாலகிருஷ்ணன் பேசுவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சமூகநலன்—கால்நடை பராமரிப்பு பற்றிய மான்யக் கோரிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உரையைத் தொடர்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், அண்ணாவின் அரசு, சமூகத்திலே எண்ணற்ற, ஆதரவற்ற அனாதைகளுக்கு, விதவைகளுக்கு, உடல் ஊனமுற்றவர்களுக்கு, முதியவர்களுக்கு ஆக்கபூர்வமான உதவிகளைச் செய்வதைத் தன்னுடைய கடமையாக ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்துவதிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, செயலாற்றிக்கொண்டு வருகிறது. விதவைகளுடைய குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கி, விதவைகளுடைய மகளுக்கு திருமணம் செய்ய, பல உதவிகளை இந்த அரசு செய்து



வருகிறது. விதவைகளுடைய மறுமணத்திற்கு ஊக்கம் அளித்து, அவர்களுக்குப் பல உதவிகளை இந்த அரசு செய்து கொண்டுவருகிறது. ஏழைகளுக்கு உதவுவதில், புரட்சித் தலைவர் அரசு தன்னை அதிலே ஈடுபடுத்திக் கொண்டு, அக்கறை கொண்டு செயலாற்றிக் கொண்டு வருகிறது. அதற்கு எடுத்துக்காட்டாக, பல சமூகநலத் திட்டங்களில், சத்துணவுத் திட்டம் மிகவும் ஒரு உன்னதமான திட்டமாகும். அந்தத் திட்டத்தின் மூலம், அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை ஆதிதிராவிட மக்களோடு, உழைக்கும் மக்களோடு, அன்றாடம் பழகி, அவர்களுக்குப் பல வகைகளில், உதவி செய்துவருவது இந்தத் திட்டத்தின் சிறப்பு முக்கியத்துவத்தைப் பற்றி எல்லோருக்கும் நன்கு தெரியும். குற்றம் சொல்பவர்கள் இந்தத் திட்டத்தின் அவசியத்தை ஆராய்ந்துசி சிறப்பாக செயல்படுத்திக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக, யாரோ சொல்வதைக் கேட்டு, குற்றம் சுமத்துவது, முறையற்றது, நெறியற்றது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தின் மூலமாக குழந்தைகளுக்கு உணவு வழங்குவதோடு, எண்ணற்ற ஏழை எளிய மக்களுக்கும், விதவைகளுக்கும், வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது, என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதுபோல் வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு பல இடங்களில் பல வகைகளில் இந்த அரசு உதவி செய்துகொண்டு வருகிறது. அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொண்டு வருகிறது. ஆனால் இந்த வசதிகளைச் செய்து கொடுக்கின்ற நேரத்திலே சிலர் அதாவது இடைத்தரகர்கள் இதைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக இதுபோன்றத் இடைத்தரகர்கள், 1975—76ஆம் ஆண்டுகளிலே போலி குடும்ப அட்டைகளை, போலி பாஸ்போர்ட்டுகளைத் தாங்களே தயார்செய்து, சுமார் 11½ லட்சம் ரூபாய்க்கு மேலே திருச்சி மாவட்டம், துறையூர், முசிரி போன்ற பகுதிகளிலே மோசடி செய்திருக்கிறார்கள். இதுபோன்ற காரியத்தைத் தமிழகம் முழுவதும் இந்த இடைத்தரகர்கள் செய்து வருகிறார்கள். எனவே இதற்கு மாநில அரசும், மத்திய அரசும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அகதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் அகதிகளுக்காக வழங்கப்படும் வியாபாரக் கடனை அவர்கள் தாயகம் திரும்புகின்றபோது, துறைமுகத்திலே தருவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும். வீடு கட்டுவதற்கு வழங்கப்படும் தொகையை நேரடியாக அவர்களுக்கு வழங்காமல், அரசே கான்ட்ராக்டர்கள் மூலமாகக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ச. பாலகிருஷ்ணன்) [1984 மார்ச் 23

அடுத்து உடல் ஊனமுற்றவர்களுக்காக ஒரு பள்ளியை பெரியார் மாவட்டத்திலே அமைத்துக் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொளகிறேன்.

அடுத்து, கால்நடைப் பராமரிப்புத்துறையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க பல நடவடிக்கைகள் இந்த அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்போரில் பெரும்பாலானவர்கள் மிகவும் ஏழை எளியவர்களாக இருப்பதால், அவைகளைப் பராமரிப்பதற்காக ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. செயற்கை முறை மூலம் பிறக்கும் கன்றுகளுக்கு பிரதி மாதம் ரூ. 10 வீதம், அவைகள் 3 வயதாகும் வரையிலும், அதற்குப் பிறகு ரூ. 5 வீதம் மானியத் தொகை வழங்கப்படுகிறது. கால்நடைப் பராமரிப்பு மூலம் சிறந்த கால்நடைகளை உற்பத்திச் செய்வதை ஊக்குவிப்பதற்காக கால்நடைக் கண்காட்சிகள், விளக்கக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. அதற்காக கன்றுகள் அணிவகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் உயர் ரக இனக் கன்றுகள் உற்பத்தி ஊக்குவிக்கப் படுகின்றன. கிராமப்புறத்திலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், விவசாயக் கூலிகள், ஓய்வு நேரத்திலே தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள, ஆடு மற்றும் 'கோழி வளர்ப்பிலே ஈடுபட்டு வருகிறார்கள். அதற்கு அரசு பல சலுகைகளையும், உதவிகளையும் செய்து வருகிறது. கறவை மாடுகள் வாங்குவதற்கு, மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் வழங்கப் படுகின்றன. கோழிப் பண்ணைகளை வைப்பதற்கு அரசு கடன உதவி வழங்கி வருகிறது. கோழி வளர்ப்பிலே தேவையான உதவிகளை வழங்க, குஞ்சு பொறிக்கும் இரண்டு நிலையங்களும், 29 கோழி விஸ்தரிப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. கோழி வளர்ப்போருக்கு உதவ 10 கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவைகள் வங்கிகளிலேயிருந்து உதவிகளையும் அரசினுடைய உதவிகளையும், பெறுவதற்கு உதவிகள் செய்து வருகின்றன.

ஈரோட்டிலே கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் கோழிகளுக்கு ஏற்படும் நோயை ஆய்ந்து அறிந்து அதை நீக்குவதற்குத் தேவையான வழிமுறைகளைப் பொது மக்கள் அறிந்து பயன் பெற உதவிகரமாக இருக்க இந்த அமைப்புகள் இயங்கி வருகின்றன.

அதேபோல் பன்றி வளர்ப்போருக்கு பல உதவிகள் வழங்கப் படுகின்றன். கால்நடைகளை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் கால்நடைகளைத் தாக்கும் நோய்களைத் தவிர்க்கவும் அவைகளுக்குச் சிகிச்சை அளிக்கவும், நோய்த்தடுப்பு முறைகளை அமுல்படுத்தவும் அரசு தீவிரமாக செயலாற்றி வருகிறது. 1983–84ஆம் ஆண்டிலே 26 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன.



1984 மார்ச் 23] [திரு. ச. பாலகிருஷ்ணன்]

மூன்று மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகவும், 2 மருத்துவ மனைகள் பிரதம மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப் பட்டு உள்ளன. கால்நடைச் சொந்தக்காரர்களுக்கு உதவுகின்ற முறையிலே அவைகளுக்குக் கூடுதல் மருத்துவ வசதிகள் செய்யப் பட்டு உள்ளன. கால்நடை நோய் நீக்கப் பணிகளுக்காக பிற மாநிலங்களில் செலவிடப்படும் தொகையைவிட தமிழகம் கூடுதலாக தொகையை செலவழித்துக்கொண்டு வருகிறது என்பதை நான பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனைகளுக்கு தக்க சமயத்திலே மருந்துகள், உபகரணங்கள் கிடைக்க, செங்கல்பட்டு, நாமக்கல், பேரூர், பாளையங்கோட்டை ஆகிய இடங்களிலே மருந்து கிடங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன. கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோயான வெக்கை நோயை வேரறுக்க, 17 மாவட்டக் குழுக்களும், 16 சோதனைச் சாவடிகளும், 10 கண்காணிப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு புதிதாக 20 கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்புகள் வரவேற்கத்தக்கது. இந்த மருந்தகங்களிலே இரண்டை அமைச்சர் அவர்கள் எனனுடைய தொகுதியான கொடுமுடி ஒன்றியம் கந்தசாமிப் பாளையத்திலே தற்போது கால்நடைக் கிளை நிலையமாக இயங்கி வருகின்ற அந்தக் கிளை நிலையத்தில் மருந்தகமாக அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மொடக்குறிச்சி ஒன்றியத்தில் அனுமன் பள்ளி என்ற ஊரிலே இருக்கின்ற கிளை நிலையத்தையும் மருந்தகமாக அமைந்துத்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர், அவர்கள் சென்ற ஆண்டு ஈரோடு நகருக்கு ஒரு விழாவிற்கு வருகை தந்தபோது அங்கே மேடையிலேயே வாக்குறுதியாகச் சொல்லிவிட்டு வந்தார்கள். நிச்சயமாக உங்கள் தொகுதியிலே மருந்தகம் அமைத்துத் தருகிறேன் எனறு சொனனார்கள். எனவே அந்த வாக்குறுதியை இநத ஆண்டு நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே அந்த 2 கிளை நிலையங்களையும் மருந்தகங்களாக ஆக்கித்தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மொடக்குறிச்சி ஒன்றியத்திலே கஸ்மா பேட்டையிலேயும், விளக்கத்தியிலேயும் முன்பு கிளை நிலையங்கள் இயங்கி வந்தன. ஆனால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னால் அந்தக் கிளை நிலையங்களை அங்கேயிருந்து எடுத்து விட்டார்கள். மீண்டும் அந்த ஊர்களிலே கால்நடை கிளை நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல பெரியார் மாவட்டத்திலே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டு அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அங்கே கால்நடைகள் அதிகமான அளவிலே இருக்கின்றன. அதேபோல சித்தோடை என்ற ஊரிலே பெரிய பால்பவுடர் தொழிற்சாலை இயங்கி வருகிறது. அதேபோல் ஈரோட்டிற்கும், ஈரோட்டிற்கு அருகிலே இருக்கின்ற ஊர்களிலே கோழிப் பண்ணைகள் ஏராளமாக இருக்கின்றன. கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடுகள் வளர்ப்பதிலே அந்தக் கிராம மக்கள் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகிறார்கள். எனவே அந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் ஏற்பாடு செய்துதரவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையில் பேச அனுமதி அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சமூக நலத்துறையில் பெரும்பகுதியான நல்ல காரியங்கள் நடைபெற்று வந்தாலும் என்னுடைய பகுதியில் இன்னும் சில காரியங்கள் இன்னும் நடைமுறைக்கே வராத நிலையில் இருக்கின்றன. அவைகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டிய காலகட்டத்தில் இருக்கிற காரணத்தால், என்னுடைய பகுதியில் சமூக நலத்துறையைப் பொறுத்த வரையில் இன்னும் சில புதிதான நல்ல காரியங்களைச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொளகிறேன்.

கால்நடைகள் மிகவும் தேவையானதொன்றாக மனிதனுக்கு இருக்கின்ற சூழ்நிலையில், அவைகளை வெளி மாநிலங்களுக்கு ஓட்டிச் செல்கிற நிலைமைகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும். அதேநேரத்தில் கால்நடை வளர்ச்சியும் நம் மாநிலத்தில் குன்றி வருகிறது. எனவே கால்நடை வளர்ச்சியில் அதிகக் கவனத்தை அரசு செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடை வளர்ச்சியில் அதிக கவனத்தை முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், விவசாயிகளிடத்திலும் கால்நடைகள் அழிந்து கொண்டு வருகின்றன. ஆகவே கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, கால்நடைகளை வளர்ப்பதிலும் அக்கறை காட்ட வேண்டும். இன்னும் கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களிலிருந்து அவைகளைத் தடுப்பது



கால்நடை மருந்தகங்களில் அதற்கான மருந்துகளை குறித்த நேரத்தில் கிடைக்கச் செய்வது போன்ற காரியங்களையும் அரசு மேற்கொள்ளவேண்டும்.

இதற்கு உதாரணம் சொல்லப்போனால் என்னுடைய தொகுதியிலே காளை நோய் என்ற தொத்து நோய் பரவி, கால்நடைகள் மிகவும் சேதமடைந்திருக்கிற நேரத்தில் அங்கே உள்ள மருத்துவர்களிடையே சென்று அதற்கு நிவாரணம் கேட்கிற நேரத்தில், அதற்குரிய மருந்து கிடைக்கவில்லை. ஆகையினால் வரவழைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படி அவர்கள் சொன்ன காரணத்தினால், இந்த மழைக காலத்தில் ஏற்பட்ட அந்தக் காளை நோயினால் கால்நடைகள் பெரிதும் சேதமடைந்திருக்கின்றன. ஆகவே மருந்துகளைப் பொறுத்தவரையில், அங்கே உள்ள வைத்தியர்கள் மருந்து இல்லாத காரணத்தால், இந்த வைத்தியத்தை எங்களால் செய்ய முடியவில்லை என்று சொல்லும் நிலையை அரசு தவிர்க்க வேண்டும். அதற்கு அரசு குறிப்பிட்ட நேரத்தில் போதுமான மருந்துகளை அனுப்ப அனுமதி வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்த சமூக நலத்துறையால் கொண்டு வரப்பட்ட பல நல்ல திட்டங்கள் இன்னும் என்னுடைய தொகுதியில் நிறைவேற முடியாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதி பின்தங்கிய பகுதியாக இருக்கிற காரணத்தினால், இந்த நல்ல திட்டங்களை என்னுடைய பகுதிக்குக் கட்டாயம் அமல் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சமூக நலக் காடுகள் வளர்ப்பது போன்ற திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த திட்டத்திலே பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு மிகக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பணியாளர்கள் 250 ரூபாய்தான் சம்பளம் பெருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அங்கே பணியில் இருக்கக்கூடிய நபர்கள் ஒரு நாளைக்கு காலையிலே சைக்கிளை எடுத்துச் சென்றால் அவர்களுக்கு வண்டி வாடகை மட்டும் 2 ரூபாய் 3 ரூபாய் ஆகிறது ஆகவே அவர்கள் சம்பளத்தில் 100 ரூபாயைச் சைக்கிளுக்காக மட்டும் செலவழித்தால் அவர்கள் வாழ மீதிப் பணம் எப்படிப் போதும்? 250 ரூபாய் சம்பளத்தைவைத்துக் கொண்டு காடுகளிலே திரிகின்ற பணியைச் செய்பவர்கள், 100 ரூபாய் வண்டிக்கு வாடகை மட்டும் செலுத்தி விட்டு, எப்படிப் பிழைக்க முடியும்? ஆகவே அவர்கள் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்கள் கேட்பது நியாயம். ஆகவே, அவர்களுக்கு சம்பளம் உயர்த்தி கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, ஜெய் ஹிந்த்.

(பிற்பகல் 1-00)

திரு. சு.முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் கால்நடைத்துறை மீது நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நலத் துறையிலே பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்பதற்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பெண்களுக்காக ஒரு தனிப் பல்கலைக் கழகத்தை அமைத்துத் தந்ததை வரவேற்று இந்த நேரத்திலே இந்த சட்டமன்றத்தின் வாயிலாக தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைப்போல் பெண்கள் முன்னேற்றத்திற்காக தமிழக அரசின் மூலமாக சமூக நலத் துறை மூலமாக பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. தாய்சேய் நல விடுதிகளை எடுத்துக்கொண்டால் எல்லா கிராமங்களிலேயும் தாய்-சேய் நல விடுதிகளை அமைக்கத் தேவையான கட்டடங்களைத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கிற சூழ்நிலையை தமிழ்நாடு பூராவும் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னால் பெண்களுக்காக குறிப்பாக இந்த அரசு நன்மைகளைச் செய்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவிலேயே பல இடங்களிலே வரதட்சணைக் கொடுமையால் பல நேரங்களிலே விரும்பத் தகாத சம்பவங்கள் ஏற்படுகிற சூழ்நிலைகளை பத்திரிகை வாயிலாகப் படித்து வருகிறோம். வரதட்சணைக் கொடுமையை ஒழிப்பதற்காக நம்முடைய அரசு பொதுமக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர்கள் இந்தச் சமுதாயத்திலே மிகவும் கஷ்டப்படுகிற நிலை இருப்பதால் அந்த மக்களுக்கு உதவி செய்கிற முறையிலே காது கேளாதோர் அதுபோன்ற குறை உள்ளவர்களுக்கு ஏற்கனவே அரசு பள்ளிகளை அமைத்துத் தந்திருக்கிறது. அந்தப் பள்ளிகளின் மூலமாக ஏராளமான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய வகையிலே உதவிகளை இன்னும் அதிகமாக அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி தொகுதியிலே கொட்டாரம் என்ற இடத்திலே உள்ள சமூக நலத் துறை காதுகேளாதோர் பள்ளிக்கு அமைச்சர் அவர்கள் விஜயம் செய்தார்கள். அங்கே கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அப்கிரேட் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



உடல் ஊனமுற்றவர்கள் பென்ஷனைப் பொறுத்தவரையில் 1-1-84 வரை 13,373 பேர்களுக்கு பென்ஷன் வழங்கியிருப்பதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கொடுக்கப்படுகிற பென்ஷனுக்கு ஒரு வயது வரம்பு 45 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு எந்தவித உதவியும் இல்லாமல் சிறுவயதில் இருந்தே பாதிக்கப்பட்ட அவர்களுக்கு கிராமப்புறங்களிலே ஏராளமான எண்ணிக்கையில் இருக்கும் அவர்களுக்கு வயது வரம்பை குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைத் துறையை எடுத்துக்கொண்டால் கோமாதா, குலமாதா என்று சொல்வார்கள். இந்தத் துறையைப்பற்றி விரிவாகப் பேசுவதற்குக் கூடுதலான நேரம் அளிக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பசுவதைத் தடைச் சட்டம் தீவிரமாக இந்தியாவிலே அமல்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை சென்ற முறை பேசியபோது நான் சொன்னேன். அந்த வகையிலே இந்தியா முழுமையும் பசுவதைத் தடைச் சட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படக் கூடிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஐ. சி. டி. பி. ஸ்கீம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஸ்கீமை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐ. ஆர். டி. பி. ஸ்கீம் மூலமாக தமிழக அரசு ஏற்கனவே கறவை மாடுகள், பசு மாடுகள் சமுதாயத்திலே நலிந்தவர்கள் பெறுகிற வகையில் கடன் தொகை வழங்கப்படுகிறது. இன்னும் அவைகளைப் பரிபாலிப்பதற்கான முறையிலே மருந்துகள் போன்றவைகளை வாங்குவதற்குத் தேவையான பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது.)

### 8. அறிவிப்புகள் (தொடர்ச்சி) —

#### (ஆ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று 23-3-84 கூடிய அலுவல் ஆய்வு குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நடவடிக்கைகள் குறித்த நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

24-3-84—சனிக்கிழமை முதல்
28-3-84 புதன்கிழமை முடிய } ஏற்கனவே அறிவிக்கப் பட்டபடி.
29-3-84 வியாழக்கிழமை
30-3-84 வெள்ளிக்கிழமை

ஆகிய கிழமைகளில் மானிய கோரிக்கை எண் 15—காவல்துறை எண் 16—தீ அணைப்புப் பணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படி. மற்றும் எண் 2 —மாநில ஆயத்தீர்வைத் துறை.

31-3-84 ஏற்கனவே அறிவிக்கப்பட்ட எண் 35—நுகர் பொருள் வழங்கல் இந்த மானிய கோரிக்கைக்குப் பதிலாகக் கீழ்க்கண்ட மானிய கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படு கின்றன. மானிய கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம், எண் 14—சிறைச்சாலைகள்.

மற்ற மானிய கோரிக்கைகள் குறித்து பின்னர் அறிவிக்கப் படும்.

### 9. வரவு-செலவுத் திட்டம் 1984-85-வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 30—சமூக நலன்—தொடர்ச்சி.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை தொடர்பாக சில கருத்துக்களை இந்த மன்றத்தில் நான் வைக்க முற்படுகிறேன். சமுதாயத் துறையில் நலிந்தவர்கள் ஏற்றம் பெறுவதற்கு சில நல்ல திட்டங்களை இந்த அரசு இங்கே வைத்து இருக்கின்ற குறிப்புகளின் வாயிலாக அறிமுகம் செய்திருக்கிறது. நலிந்தவர்கள், வயது முதிர்ந்தவர்கள், விதவைகள், ஊனம் உற்றவர்கள் இவர்களுக்கு எல்லாம் பென்ஷன் வழங்குகின்ற திட்டத்தை இந்தக் குறிப்பில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது தொடர்பாக மதிப்பிற்குரிய நண்பர் திரு. முத்துக் கிருஷ்ணன் அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். ஏறத்தாழ 13 ஆயிரத்திற்கும் அதிகமான பேர்கள் இதனால் பயனடைந்து இருக்



கிறார்கள் என்று சொன்னார்கள். இது தொடர்பாக நான் சொல்லிக்கொள்வது இதே அளவு உதவி பெறுவதற்கு தகுதி படைத்தவர்கள் பல ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதே வசதி செய்து தரப்படவில்லை என்ற குறைபாட்டை நான் கூறிக்கொள்கிறேன். இதே தகுதி படைத்தவர்கள் எங்களுக்கும் இதைக் கொண்டு வரவேண்டும் என்ற ஏக்க பெருமூச்சோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ இந்தப் பட்டியலில் வருகின்றவர்களில் 3-ல் ஒரு பகுதிக்குக்கூட இந்த நிதி உதவி அளிக்க முடியவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாங்கள் அணுகுகிறபோது குறிப்பிட்ட தொகை அரசு எங்களுக்கு தந்து இருக்கிறது. அதை மட்டும் பங்கிட்டுக் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அரசைக் கேட்டுக்கொள்வது எல்லாம் தகுதிப் படைத்தவர்கள் இந்த உதவி பெறுவதற்கு லாயக்கானவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை முதலில் கணக்கு எடுத்து அதற்கு பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை பராமரிப்புத் துறையில் பணியாற்றுகின்ற தோழர்களின் சில குறைபாடுகளை இந்த மன்றத்தில் நான் வைக்கிறேன். கால்நடை மருத்துவர்களுக்கு தங்களுக்கு இருக்கின்ற சம்பள விகிதத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கிறார்கள். சாதாரண மருத்துவர்களுக்கு சம்பள விகிதம் 750 ரூபாய் என்று ஆரம்பிக்கிறபோது கால்நடை மருத்துவர்களுக்கு வெறும் 600 ரூபாய் இன்றைய தினம் ஆரம்பிக்கிறது. முதலாவது சம்பள கமிஷன் ஊதியத்தை நிர்ணயிக்கிறபோது ஆரம்பத்தில் மருத்துவ பட்டதாரிகளுக்கு 275 ரூபாய் என்று நிர்ணயித்தது. கால்நடை மருத்துவ பட்டதாரிகளுக்கு 225 ரூபாய் என்று நிர்ணயித்தது. இதில் ஏற்றத்தாழ்வு 50 ரூபாய் மட்டும் தான். அடுத்து இரண்டாவது சம்பள கமிஷன் ஊதியத்தை நிர்ணயிக்கிறபோது ஆரம்பத்தில் மருத்துவ பட்டதாரிகளுக்கு 525 ரூபாய் என்று நிர்ணயித்தது. கால்நடை மருத்துவ பட்டதாரிகளுக்கு 425 ரூபாய் என்று நிர்ணயித்தது. இதில் ஏற்றத் தாழ்வு 100 ரூபாய். இப்போது 3-வது சம்பளக் குழு நிர்ணயித்து இருக்கிறபடி சாதாரண மருத்துவர்களுக்கு ஆரம்ப சம்பளம் 750 ரூபாய். கால்நடை மருத்துவர்களுக்கு 600 ரூபாய். இதில் ஏற்றத்தாழ்வு 150 ரூபாயாக இருக்கிறது. எனவே அவர்கள் தந்து இருக்கிற கோரிக்கை ஏறத்தாழ ஓரே தகுதியின் அடிப்படையில் பயின்று வருகின்ற நாங்கள், வேலை செய்கின்ற நாங்கள், இந்த வேறுபாட்டுக்கு நாங்கள் உட்படுத்தப்படக் கூடாது. அவர்கள் சம்பளமே எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பி. முகமது இஸ்மாயில்] [1984 மார்ச் 23

(பிற்பகல் 1–10.)

கால்நடை மருத்துவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் பதவி உயர்விற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவாக இருக்கிறது. கால்நடை மருந்தகங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பதவி உயர்வு பெற வசதியில்லாமல் இருக்கிறது. ஏறக்குறைய இருபதாண்டுகள் வரையில் பதவி உயர்வு பெறக் காத்திருக்கின்ற நிலைமை இருக்கிறது. கால்நடைப் பெருக்கம் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலத்தில் அதிகமான மருந்தகங்களை ஏற்படுத்தி, இந்தக் கால்நடை மருத்துவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிஸ்க் அலவன்ஸ் வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண டாக்டர்கள் என்றால், மனிதர்களைத் தொட்டுப் பார்க்கிறார்கள் ; பேச முடிந்தவர்கள், அவர்களிடமிருந்து நோயின் தன்மைகளைப் பற்றிக் கேட்டறிந்து என்ன நோய் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் கால்நடைகள் பேச முடியாது. அந்த இனத்தோடு தொடர்பு கொண்டு அந்தக் கால்நடைக்கு என்ன நோய் என்று கண்டுபிடித்து, தொட்டுத் தடவிப் பார்த்துக் கண்டுபிடித்து வைத்தியம் செய்ய வேண்டும். சிலநேரங்களில் தொற்று நோய்க்குக்கூட அவர்கள் ஆளாக வேண்டியிருக்கிறது. எனவே, அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, ஏனைய காவல் துறை, மருத்துவத் துறைகளுக்குத் தருவதைப் போன்று, அவர்களுக்கும் ரிஸ்க் அலவன்ஸ் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் ; அது நியாயமான கோரிக்கை என்றுதான் எனக்குப் படுகிறது. இதை அமைச்சரவர்களுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

விரிவாக்கப் பணியாளர்கள் பல கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். கால்நடை எல்லோருக்கும் பலன் தருகிறது. கிராமங்களுக்கும் செல்கின்றது. எனவே, ரோடு வசதி, வாகனப் போக்குவரத்து வசதியில்லாத போதிலும்கூட அந்தப் பணியில் இருப்பவர்கள் செல்ல வேண்டியிருப்பதால் அவர்கள் தங்களுக்கு வாகன வசதி வேண்டி மோட்டார் சைக்கிள் கடன் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் சொன்னதைப்போல ஏனைய துறைகளுக்கு இருப்பதைப் போல, பல்கலைக் கழகம் கால்நடைத் துறைக்கும் வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.



1984 மார்ச் 23] (திரு. பி. முகமது இஸ்மாயில்)

கால்நடைத் துறையில் பணியாற்றும் தோழர்களின் பிரச்னைகளைப் பற்றி நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தக் குறைகளை அரசாங்கம் பரிவுடன் கவனித்து அவைகளைத் தீர்ப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கால்நடை வளர்ப்பு, சமூக நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய விவாதத்தைத் தொடங்குகின்றேன். கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், கால்நடைச் செல்வங்களை இந்த நாட்டின் முக்கிய செல்வமாகக் கருதுகிறோம். அதேநேரத்தில், கால்நடைத் துறையில் பணியாற்றுகின்றவர்கள் மிகவும் உன்னிப்பாகவும், கவனிப்பாகவும் நடக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தில் நடந்து முடிந்த இரண்டு கூட்டத் தொடர்களில் கால்நடையைப் பொறுத்தவரையில் நான் பல கோரிக்கைகளை வைத்திருக்கின்றேன். அதில் கால்நடைத் துறையைச் சேர்ந்தவர்கள் இயக்குநர்களாக வர வேண்டும் என்று கோரியிருந்தோம். அந்த அடிப்படையில் மாண்புமிகு முதல்வரவர்களும், இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரவர்களும் ஒரு முடிவை எடுத்து அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் இயக்குநராக அமர்த்தப்பட்டு, அதிலே இருப்பவர்கள் வெட்டர்னரி கவுன்சிலில் அங்கத்தினர்களாக இருக்கக் கூடிய அளவிற்கு நல்ல முடிவை எடுத்திருக்கிறார்கள். அதற்காக முதல்வரவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கால்நடைத் துறையில் பணியாற்றும் டாக்டர்களுக்குக் குறிப்பிட்ட சம்பளம் என்று வைத்திருக்கிறோம். ஆனால் மனிதர்களுக்கு இருக்கும் மருத்துவர்கள் தனிப்பட்ட முறையிலே மருத்துவமனை வைத்தும், பலவகைகளில் சம்பாதிப்பதற்கு வழியிருக்கிறது. ஆனால் இவர்கள் அதிலே எந்தவிதமான பிரதிபலனும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே அவர்களுடைய சம்பளத்தையும், அடிப்படைச் சம்பளத்தையும் உயர்த்த வேண்டும். அந்தத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் எல்லாம் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால் கால்நடைகளைப் பார்த்து மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்றால் அவர்கள் கிராமங்களுக்குச் செல்வதற்கு வாகன வசதியில்லை. ஆகவே அவர்களுடைய சம்பளத்திலே பிடித்துக் கொள்கின்ற வகையிலே அதற்காக ஒரு தொகையை ஒதுக்கி, அவர்களுக்குக் கடன் கொடுக்கின்ற வகையிலே நிலைமைகளை ஏற்படுத்தி அவர்கள் வாகன வசதி பெற

(திரு. எஸ்.சிவராமன்) [1984 மார்ச் 2

வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் துறை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கால்நடை பற்றி நாம் கண்காட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் கண்காட்சியை வருஷத்திற்கு ஒரு முறைதான் நடத்துகிறோம். அந்தக் கண்காட்சி சில பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளது. சில பகுதிகளில் நடக்கவில்லை. கால்நடை கண்காட்சி நடத்தி அங்கே அவர்களுக்குப் பரிசு தருவதற்கெல்லாம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஆனால் அந்தக் கண்காட்சிகளை வட்டார அளவில் நடத்துகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளைப் பற்றி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக நாம் பிரச்சாரம் செய்கிறோம். அந்தப் பிரச்சாரத்திற்காக நாம் செய்தி, விளம்பரத் துறையை எவ்வாறு பயன்படுத்துகிறோமோ அதே போன்று தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றி பிரச்சாரம் செய்வதற்காக ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பிரச்சாரக் குழுவை ஏற்படுத்தி கால்நடைகளை வளர்க்கும் விதம், அவற்றால் ஏற்படும் பயன் ஆகியவற்றைப் பற்றி நல்ல முறையில் பிரச்சாரங்களைச் செய்வதற்குரிய வழிவகை செய்ய வேண்டும்.

கால்நடை ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு தரப்பட வேண்டும் என்று பல காலங்களில் அவர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு ஜி.ஓ. போடப்பட்டிருக்கின்றது. ஆனால் தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் வருகின்ற போதுதான் அவர்களுக்குப் பதவி உயர்வு தரப்படுகின்றது. திட்டம் முடிந்தவுடன் அந்தப் பதவி உயர்வு போய்விடுகின்றது. ஆகவே அவர்களுக்கு நிரந்தரமான பதவி உயர்வு கொடுத்து அவர்களுக்கு நிரந்தரச் சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அடுத்து லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர் என்று சொல்லக் கூடியவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களுக்கும் ஆய்வாளர்களுக்குரிய பதவி உயர்வைக் கொடுக்க வேண்டும்.

அடுத்து தீவனப் பயிர்களை ஊராட்சி ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அந்தத் தீவனப் பயிர்கள் சரியான முறையில் கிராமங்களுக்குச் செல்லவில்லை. விவரம் தெரியாத ஏழை எளிய மக்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் இந்தத் தீவனப் பயிரைப் பற்றி விளக்கி அதற்குத் தேவையான நாற்றுக்களையும் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்து மாடுகளை நல்ல முறையில் செழிப்பாக வளர்ப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.



984 மார்ச் 23] (திரு. எஸ். சிவராமன்)

அடுத்து கால் நடை மருந்தகங்களை மருத்துவமனையாக்குவது பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சின்னசேலம் தொகுதியில் நைனார்பாளையத்தில் இருப்பது ஒரு சப் சென்டராக இருக்கின்றது. அப்படி இருப்பதை மாற்றி ஒரு கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க வேண்டும். அப்படி இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் மங்களூருக்கு அல்லது சின்னசேலத்திற்குத்தான் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. அங்கெல்லாப் செல்ல வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 20, கிலோ மீட்டர் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆகவே அங்கே ஒரு கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க வேண்டும்.

அம்மாபேட்டையில் ஒரு தற்காலிக மருந்தகம் இருக்கின்றது. அங்கே நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்குரிய வழிவகை செய்ய வேண்டும். ஐ.ஆர்.டீ.பி. திட்டத்தின் மூலமாக கால்நடை வளர்ப்பு குறித்து பிரச்சாரம் செய்கிறோம். இது ஒரு மத்திய அரசின் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஆடு வளர்க்க பல வழிவகைகளைக் கண்டிருக்கிறார்கள். சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் ஆடு வளர்ப்பதற்காகக் கடன் வழங்கப்படும் என்று சொல்லி இருந்தார்கள். ஆனால் அங்கே யாருக்கும் கடன் கொடுக்கப்படவில்லை. அந்த நிதியினை வேறு இடத்திற்கு மாற்றி விட்டார்கள். ஆகவே மீண்டும் பரிசிலனை செய்து அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய ஏழை எளிய மக்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் ஆடு வளர்ப்பதற்காக உதவுகின்ற வகையில் ஆடு வளர்ப்பு விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலம் கடன் வழங்க வேண்டும். நிலமற்றவர்களுக்கும் கடன் கொடுக்க வேண்டும்.

அடுத்து காய் கறி உற்பத்தியாளர் சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். சத்துணவுத் திட்டம் போன்றவற்றிற்காக இந்த காய் கறி உற்பத்தியாளர் சங்கங்களிலே காய் கறிகளை வாங்குகின்ற போது அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கின்றது. ஆனால் ஓப்பன் மார்க்கெட்டிலே விலை குறைவாக இருக்கின்றது. காய் கறி உற்பத்தியாளர் சங்கங்களிலே வாங்குகின்றபோது அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டி இருப்பதால் அங்கே பல ஊழல்கள் நடக்கின்றன. அந்த ஊழல்களைக் கண்காணிக்கின்ற வகையில் சத்துணவுத் திட்ட மையங்களில் பணியாற்றுகின்ற பொறுப்பாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் தகுதியான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு உரிய முறையில் வேலை கொடுத்து, அதற்குத் தகுதியான நல்ல சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(முற்பகல் 1-20)

ஊராட்சி ஒன்றியங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை விஸ்தரித்து கொண்டு வருகிறோம். அதற்காக சத்துணவு மையங்களில் அமைப்பாளராகவும், பொறுப்பாளராகவும், இருப்பவர்களைக் கட்டாயப்படுத்தி நீங்கள் இரண்டு கேஸ்கள் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இல்லை என்று சொன்னால், பணி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்று சொல்லி ஒன்றிய ஆணையர்களே, இதிலே இருக்கிற பணியாளர்களை நிர்ப்பந்தம் செய்கிறார்கள். நிர்ப்பந்தம் செய்கின்றபொழுது அவர்கள் வாங்கக் கூடிய சம்பளம் ரூ. 150. குடும்பக் கட்டுப்பாட்டிற்கு வரக் கூடியவர்களுக்கு ஊக்கமாகக் கொடுக்க வேண்டியது ரூ. 200. ரூ. 150 சம்பளம் கொடுக்கிறார்கள், ரூ. 200 ஊக்கமாகக் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் எங்கே செல்வார்கள் ? இதனால் சத்துணவுக் கூடத்திலே வேலை செய்யக் கூடியவர்கள், ஊழல் செய்தால் தான் அந்தப் பணத்தைச் சம்பாதிக்க முடியும். ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஆட்களை அழைத்து வர வேண்டுமென்றெல்லாம் சொல்லாமல், அவர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். அவ்வாறு விதிவிலக்கு அளித்தால் தான் சத்துணவுக் கூடம் நல்ல முறையில் செயல்பட வாய்ப்பாக அமையும்.

அதோடு மட்டுமல்ல, அங்கே இருக்கிற கிராமச் சேவகர்களுக்கு சத்துணவுப் பணியாளர்கள் ஒவ்வொரு மாதமும் ரூ. 20 கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பணி நீக்கம் செய்வோம் என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு வழி வகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் வேலூரிலே ஒரு வரவேற்பு இல்லம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த வரவேற்பு இல்லத்திற்கு வாடகை வேண்டுமென்று சொல்லி, கட்டிடத்தினுடைய சொந்தக்காரர் திரு. பலராம ரெட்டியார் ஒரு மனுவை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார் ; ரிஜிஸ்தர் தபாலில் கொடுத்திருக்கிறார் ; நேரடியாகச் சொல்லியிருக்கிறார். அவருக்கு வாடகைப் பணம் கடந்த 12 மாதமாகக் கொடுக்கப்படவில்லை. ரூ. 10,320 வாடகைப் பணம் பாக்கியிருக்கிறது. அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும். அதனுடைய நகலை நான் அமைச்சரிடத்திலே கொடுக்க இருக்கிறேன். அதைப் பரிசீலித்து அவர்களுக்கு வாடகைப் பணம் முழுவதும் கொடுக்க வேண்டும்.

உடல் ஊனமுற்றோர், அல்லது வயது வந்தோர்க்கு உதவித் தொகை கொடுக்கின்றோம். உதவித் தொகை கொடுக்கின்ற பொழுது, அந்த தாலுகாவிலே யார், யார் இறந்து விட்டார்களோ, அப்படி இறந்த பிறகுதான் அவர்களுக்குப் பதிலாக, வேறு உடல் ஊனமுற்றோருக்கோ, அல்லது வயதானவர்களுக்கோ பென்ஷன் கொடுக்கிறார்கள். அதை மாற்றி, இறந்தாலும் இறக்கவில்லையென்றாலும், எத்தனை மனுக்கள் கொடுக்கப்படுகின்றனவோ, அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து, யார், யார் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்ற உண்மை நிலையை அறிந்து அவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை வழங்க





வேண்டும். அந்த எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும், தொகையையும் உயர்த்த வேண்டும். அந்த உதவித் தொகையை எதிர்பார்த்து, உதவித் தொகை வரும், வரும் என்று இருப்பவர்கள், உதவித் தொகை வருவதற்குள்ளாக இறந்து விடுகிறார்கள். ஆகவே, அவற்றை உடனடியாகப் பரிசீலனை செய்து, உதவித் தொகையை அதிகரிக்கவேண்டும், எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி தாலுகாவிலே அரசாங்க கால் நடை மருத்துவ மனை இருக்கிறது. ஒரு தாலுகாவில் அரசு மருத்துவ மனை இருக்கிறது என்று சொல்லும்போது, அங்கே தண்ணீர் வசதியில்லை. தண்ணீர் வசதியில்லாத காரணத்தால் அங்கே ஓவர் ஹெட் டாங்க் அமைத்து, ஆழ் துளை குழாய்க் கிணறு மூலமாக அதன் தண்ணீரை மேலே ஏற்றி, அங்கே வருகின்ற ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்தக் கால் நடை மருத்துவ மனைக்குத் தண்ணீர் வசதி அவசியம் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

தஞ்சை மாவட்டத்திலே குடந்தை வட்டம், நீலத்தநல்லூர் என்ற இடத்திலே கால்நடைச் சந்தைகள் இருக்கின்றன. மிகப் பெரிய உயர் ரகம் உள்ள மாடுகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தச் சந்தைக்கு வருகின்ற கால் நடைகளுக்கு மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்காக அந்தப் பகுதியிலே மருத்துவ மனை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதி அமைச்சருடைய சொந்த மாவட்டத்தில் இருக்கிறது. ஆகவே, அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்., நன்றி வணக்கம்.

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். இந்த இரண்டு துறைகளைப் பொறுத்த வரைக்கும் 16 உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒன்பது உறுப்பினர்கள் கால்நடை பராமரிப்புத் துறை பற்றியும், சமூக நலத் துறை பற்றியும் கருத்துக்களைத் தெரிவித்து, நல்ல பல திட்டங்களைப் பராட்டியும், தங்களுடைய தொகுதிகளுக்கு வேண்டிய கோரிக்கைகளைப் பற்றியும் பேசி இருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்த வரைக்கும், சமூக நலத் துறை பொறுத்த வரைக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, ஏழை, எளிய மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் ; பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்கள்

(திருமதி கோமதி சீனிவாசன்) [1984 மார்ச் 23

பொருளாதாரத்தைப் பெற வேண்டும் : அவர்கள் நிரந்தரமான வருமானத்தைப் பெற வேண்டும் என்ற அடிப்படையில் செய்து, அதன் வாயிலாக மக்கள் பயனடைந்து கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அந்த அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 23 கோடியே 97 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதைப் போல சமூக நலத் துறைக்கு 68 கோடியே 66 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

இன்றைக்கு சமூக நலத் துறையைப் பொறுத்த வரைக்கும் ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், குழந்தைகள் நலன், ஊனமுற்றவர்கள் போன்ற சமுதாயத்தில் யார் புறக்கணிக்கப்படுகிறார்களோ அப்படிப்பட்ட மக்களை எல்லாம் சமுதாயம் ஏற்றுக்கொள்கிற அளவிற்கு செய்ய வேண்டும். அப்படி செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்கு பொருளாதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் தான் அவர்கள் சமுதாயத்திற்கு ஏற்றவர்களாக ஆவார்கள். இதை எல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சமூக நலத் துறையின் மூலமாக பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அதைப் போலத்தான் கால்நடை பராமரிப்புத் துறையிலும் ஏற்படுகிற பலன்கள் ஏழை மக்களுக்குப் போய் சேர வேண்டுமென்ற திட்டமாகத் தான் அதுவும் காணப்படுகிறது. குறிப்பாக ஒரு கறவை மாடு வாங்கி அதை வளர்த்து அவர்கள் பாதுகாக்க வேண்டுமென்றால் அதன் மூலமாக அவர்களுக்கு வருமானம் கிடைக்க வேண்டும். இதை எல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் ஆடு வளர்த்தல், கால்நடைகள் வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற திட்டங்களை வகுத்து அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே முதலில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு சிறந்த கருத்தை நமக்கு எல்லாம் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். '' ஏழையின் சிரிப்பிலே இறைவனை காண வேண்டுமென்று '' ; ஒரு பழமொழியைக் கூடச் சொல்வார்கள், உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என்று ; அதைப் போல மகாகவி பாரதியார் அவர்கள் சொன்னார்கள், '' தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் '' என்று ; இப்படி இதை எல்லாம் வரிசைப்படுத்திப் பார்க்கிற போது ஒரு மனிதனுக்கு உணவு கொடுப்பது அந்த உணவு அவனுக்கு உடல் நலத்தை வளர்ப்பதற்கும், தேக ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கும், சிந்தனைச் சக்தியை வளர்ப்பதற்கும், ஆத்ம சக்தியை வளர்ப்பதற்கும், அறிவுத் திறமையை வளர்ப்பதற்கும் பயன்பட வேண்டும். அந்த அடிப்



1984 மார்ச் 23] (திருமதி கோமதி சீனிவாசன்)

படையில் கொண்டு வரப்பட்டது நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய மிகச் சிறப்பான சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாக இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : '' தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில் தான் இன்று அந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக, சமூக நலத் துறை மூலமாக, 2 வயதில் இருந்து 4 வயது வரைக்கும் உள்ள 23 லட்சம் குழந்தைகள் இன்றைக்குச் சத்துணவு பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள்? சத்துணவை மட்டும் தான் இவர்கள் பெறுகிறார்களா, கல்வியும் கற்கிறார்களா என்று. இந்தத் திட்டத்தின் மூலம் அவர்கள் எந்த வகையில் வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள் என்பதை நாம் கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிராமங்களில் முன்பு குழந்தைகள் காணப்பட்ட சூழ்நிலையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது அந்தக் குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் உணவைப் பெற்ற பிறகு எப்படி வளர்ச்சி அடைந்து இருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த இரண்டையும் சிந்தித்துப் பார்த்தால், நிச்சயமாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம் என்று நீங்கள் நிச்சயமாகச் சொல்வீர்கள் என்று கருதுகிறேன்.

இது சத்துணவுத் திட்டம் மட்டுமல்ல, அறிவுக்கு வழிகாட்டும் திட்டமாகவும் இருக்கிறது. இலவசக் கல்வி கொடுக்கும் திட்டமாகவும் இருக்கிறது. உடல் நலனைப் பாதுகாப்பதற்கும், சுகாதார வசதியைச் செய்து கொடுப்பதற்கும், மற்றும் பல வகைகளிலும் அவர்களுக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் வளர்ச்சியையும், அறிவையும், திறமையையும் கொடுக்கின்ற அளவிற்கு இந்தத் திட்டம் பயன்படுகிறது என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே நமது அருமை சகோதரி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராசாம்பாள் அவர்கள் பேசுகிறபோது சமூக நல விரிவாக்க அலுவலர்களின் பணிகள் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய பணி என்ன என்று தெரியவில்லை என்று சொன்னார்கள். ஊராட்சி ஒன்றிய நிலையில் சமூக நலத் துறையால் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களையும் அவர்கள் மேற்பார்வையிட்டு வருகிறார்கள். அதைப் போலவே, ஒன்றிய ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்ற மதிய உணவு மையங்களை அவர்கள் பார்வை

(திருமதி சோமதி சீனிவாசன்) [1984 மார்ச் 23

யிடுகிறார்கள். இதைத் தவிர சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு என்று ஒன்றிய ஆணையாளரால் தரப்படும் இதர பணிகளையும் அந்த விரிவாக்க அலுவலர்கள் செய்து வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தைக்கூட அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சத்துணவு மையங்கள் எல்லாம் ஆதித் திராவிடர்களுக்கென அந்தக் குழந்தைகள் அதிகம் வாழும் பகுதிகளில் அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். நமது முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவரவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம் ஆதி திராவிட மக்களுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும், ஜாதி மத வேறுபாடின்றி எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும் வகையில் இருக்கிறது. எல்லாக் குழந்தைகளும் நல்ல முறையில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற அளவில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் ஒரு குழந்தைகள் நல மையத்தை அமைக்க வேண்டும் என்று கூடக் கேட்டார்கள். ஒரு குழந்தைகள் நல மையத்தை அமைக்க வேண்டுமானால் அங்கே 75 குழந்தைகளுக்கு மேல் இருக்க வேண்டும். 75 குழந்தைகளுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக அந்த இடத்தில் சத்துணவுக் கூடம் அமைக்கப்படும் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் சகோதரி இராசாம்பாள் அவர்களுக்கு நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சமூக நல வாரியத்தைப் பற்றி அருமை சகோதரி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சமூக நல வாரியம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்படுகிறது. மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்துதான் இந்த வாரியத்தை திருத்தி அமைத்து வருகின்றன. இந்த வாரியத்தை திருத்தி அமைக்கும் கருத்து இந்த இரு அரசுகளின் தொடர்பில் இருந்து வருகிறது. விரைவில் திருத்தி அமைக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால்வாடிகளில் பணிபுரியும் அமைப்பாளர்கள் சம்பளத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். முன்னால் அமைப்பாளர்கள் எவ்வளவு சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள், இப்போது எவ்வளவு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அவர்கள் 90 ரூபாய் தான் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதை மாற்றி அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் இப்போது அவர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 175 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, அதை அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழு நேர ஊழியர்



1984 மார்ச் 23] (திருமதி சோமதி சீனிவாசன்)

களாக இன்னும் ஆக்கப்படவில்லை. அப்படி இருந்தாலும் 175 ரூபாய் அவர்களுக்கு மாதச் சம்பளம் இப்போது வழங்கப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயாக்கள் 30 ரூபாய் தான் முன்னால் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் 60 ரூபாய் பெறுகிறார்கள். நீங்கள் ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அது என்றைக்கும் செய்ய முடியாத ஒன்று. கொஞ்சம், கொஞ்சமாக, இருக்கின்ற நிதி வசதிக்கு ஏற்பத்தான் செய்ய முடியும். அந்த அடிப்படையில்தான் செய்ய முடியும் என்பதில் நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டும்.

அதைப் போன்று இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். கால்நடை மருந்துகள் வாங்குவதில் தரமான, நல்ல மருந்துகளை வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். ''பர்ச்சேசிங் கமிட்டி'' என்று வல்லுநர் குழு ஒன்று இருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில்தான் தரமான மருந்துகள் வாங்கப்படுகின்றன. தரக்குறைவான மருந்துகள் இது வரையில் வாங்கப்படவில்லை, இனிமேலும் வாங்க மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவர்களுக்கு சம்பள விகிதத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதியக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரையின் பேரில் தான் அரசு அலுவலர்களுடைய சம்பள விகிதத்தை நிர்ணயிக்க முடியும். ஊதியக் குழு நிர்ணயிக்கும் சம்பளத்தை எல்லோருக்கும் அரசு வழங்கும்.

அடுத்து நமது அருமை சகோதரர் டாக்டர் கே. பி. இராமலிங்கம் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கால்நடை பராமரிப்புக்கு என்று செயலகத்தில் ஒரு செயலர் நியமிக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். வேலைப் பளுவைக் கணக்கிட்டு, நிதி வசதியையும் பார்த்து தலைமைச் செயலகத்தில் துறைகள் பிரிக்கப்படுகின்றன. சமீபத்தில் கூட சில துறைகள் பிரித்து அமைக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட சத்துணவுத் திட்டத்தில் எவ்வளவு கட்டிடங்கள் இருக்கின்றன என்பது பற்றி கேட்டார்கள். அந்த விவரங்களைத் தர நான் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமப்புறங்களில் உள்ள மையங்கள் மொத்தம் 22,928. அவற்றில் அரசுக் கட்டிடம் 4,325. உள்ளாட்சித் துறைக் கட்டிடம் 2,936 வாடகை இல்லாத கட்டிடம் 4,612. வாடகைக் கட்டிடம் 5,980. தற்காலிகக் கொட்டகைகள் 5,075. அதைப்போன்று நகர்ப்புற மையங்கள் 4,931. அவற்றில் உள்ளாட்சித் துறைக் கட்டிடம் 4,536. தற்காலிகக் கொட்டகைகள் 395.

(திருமதி கோமதி சீனிவாசன்) [1984 மார்ச் 23

(பிற்பகல் 1-40)

இந்தச் சத்துணவுத் திட்டத்தை நமது அன்னை தெரசா அம்மையார் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் கொண்டுவரவேண்டுமென்று கூட அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல காஷ்மீர் முதல்வர் டாக்டர் பருக் அப்துல்லா அவர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். வைத்தியா மற்றும் பல மாநில முதலமைச்சர்களும், மற்றும் பல்வேறு தலைவர்களும் இந்த திட்டத்தை வெகுவாகப் பாராட்டி இருக்கிறார்கள். ஜெனரல் வைத்தியா அவர்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு நல்ல பாராட்டுக் கடிதத்தைக் கூட எழுதியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, கோமாரி நோயைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது கோமாரி நோய் அதிகமாக இருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் கோமாரி நோய் வந்து அதிகமான மாடுகள் இறக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே தெரிவித்தார்கள். மழைக்காலத்திலும், கோடைக்காலத்திலும், காற்றாலும் வருகின்ற நோய் இது என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இந்த நோய் எப்படி ஏற்படுகின்றது என்று நாம் பார்க்கின்றபோது, ஒரு வகையான வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது என்பது தெரியவருகிறது. இந்தக் கிருமியில் சுமார் 65 இனங்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் முக்கியமானவை ஓ.ஏ.சி., ஏ.சி.யா-1 போன்ற நான்கு இனங்களாகும். கோமாரி நோய் ஒரு மாட்டிற்கு வந்திருக்கின்றது என்றால், அதனுடைய அறிகுறிகள் எப்படி இருக்கும் என்றால், அதனுடைய நாக்கு, உதடு, காம்பு, மடிகள் இவைகளில் கொப்பளங்கள் ஏற்படும். வாயிலிருந்து எச்சில் வடிந்துகொண்டேயிருக்கும். கால்களில் கொப்பளங்கள் ஏற்பட்டு, சிவந்த புண் ஏற்படும். தீவனம் சரியாக சாப்பிடாது. கால்கள் நொண்டும். அவற்றிற்கு அதிக காய்ச்சல் இருக்கும். அந்தக் கால்நடையினுடைய கன்றுகள் இந்த நோயினால் அதிகமாக இறப்பதற்கு வாய்ப்புள்ளது. இந்தக் கிருமியிலிருந்து முக்கியமாக இந்த நோய் வராமல் பாதுகாக்க வேண்டுமென்றால், அதற்கு தடுப்பு ஊசி போடவேண்டும். நோய் வருவதற்கு முன்பே பாலிவேனின் ஊசி போட வேண்டும். இந்தத் தடுப்பு ஊசி வருடத்திற்கு இரண்டு முறை போடவேண்டும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று இரண்டு முறை ஆண்டொன்றுக்குப் போட வேண்டும். 1982-ம் ஆண்டுக் கணக்குப்படி, தமிழகத்தில் 2,47,06,192 கால்நடைகள் இருந்தன. எல்லாக் கால்நடைகளுக்கும் மேற்கூறியவாறு நாம் ஆண்டுக்கு இரண்டு முறை தடுப்பு ஊசி போட வேண்டும்



1984 மார்ச் 23] (திருமதி கோமதி சீனிவாசன்)

என்றால், அதற்கு ரூ. 18 கோடி செலவாகும். ' அதைக்கூடச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள்—இந்தக் கோமாரி நோய்க்கு தடுப்பு ஊசியை இலவசமாகப் போடவேண்டுமென்று கேட்டார்கள். குறுநில விவசாயி, சிறு விவசாயி, வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மட்டும் மானிய விலையில் கொடுத்து, வசதி படைத்தவர்களுக்கு முழு விலையில் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். இலவசமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றால், தமிழகத்தில், இந்தத் தடுப்பு ஊசிமருற்தை உற்பத்தி செய்யமுடியவில்லை. அதற்கு வேண்டிய நிதியும் இல்லை. உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், நிதி வேண்டும். ஆகவே அதை ஆராய்ந்து பார்த்து, அதற்குத் தேவையான இடத்தையும் பார்த்து, இந்தத் தடுப்பு ஊசி மருந்தை இங்கே உற்பத்தி செய்வதற்கு இங்கு வழி வகைகள் இருக்கின்றனவா என்று பார்த்துத்தான், அதையெல்லாம் நாம் செய்யமுடியும். இதையெல்லாம் பார்க்கிறபோது, குறுநில விவசாயி, சிறு விவசாயி, வேளாண்மைத் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு இந்த தடுப்பு ஊசி மருந்தை பாதி விலையில் கொடுக்கப்படும். அந்தப் பாதி விலையும், மாநில அரசும், மத்திய அரசும் பகிர்ந்து கொள்ளும் அளவில் இந்த தடுப்பு ஊசி மருந்து கொடுக்கப்படுகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது வட ஆர்க்காட்டில் கூட இந்த நோய் அதிகமாகப் பரவி இருக்கின்றது. அதற்கு தடுப்பு ஊசி போட்டீர்களா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். 36 ஆயிரம் ரூபாய்க்கு அரசு அனுமதி வாங்கி இப்போது தடுப்பு ஊசி போடும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வட ஆர்க்காட்டில் நடந்து கொண்டிருக்கின்றது.

அதைப்போல் இன்னும் இந்த கோமாரி நோய் வராமல் தடுப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 1983-84 முதல், 1989-90-க்குள் நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சி, ஆகிய மாவட்டங்களைக் கோமாரி நோயற்ற மண்டலங்களாக மாற்றும் பொருட்டு, திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இதற்காக செலவாகும் தொகை 2 ஆயிரம் லட்சத்தில், தேசிய பால் பண்ணை வாரியம் 1,800.36 லட்சமும், இம்மாநில அரசு 199·64 லட்சமும் பகிர்ந்து கொள்ளும். இந்தத் திட்டத்தின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 34 லட்சம் பெறுமான முள்ள கால் நடைகள் இறப்பிலிருந்து காப்பாற்றப்படும் என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அரசின் கொள்கையான வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தில் இந்தத் திட்டமும் செயல்படுத்தப்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இந்த மருத்துவமனைகள், மருந்தகங்கள் இவைகளிலே எல்லாம் மருந்துகள் போதுமான அளவிற்கு கொடுக்கப்படவில்லை என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். பிரதம மருத்துவமனைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபாய் வரையிலும் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. கால் நடை மருத்துவமனைகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரையில் மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. கால் நடை மருந்தகத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகிறது. நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் மருந்துகள் கொடுக்கப்படுகிறது. கிளை நிலையத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் வரையில் மருந்துகள் கொடுக்கப்படுகிறது. இதிலே உள்ள வேறுபாட்டை நாம் பார்க்கின்றபோது மற்ற மாநிலங்களுக்கும், நம்முடைய தமிழகத்திற்கும் உள்ள வித்தியாசங்களைப் பார்க்கின்றபோது, மருத்துவமனைக்கு தமிழ் நாட்டில் 25 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது. கேரளாவில் 12 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது. ஆந்திராவில் 9 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது.

அதைப்போலவே மருந்தகங்களுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் 20 ஆயிரம் ரூபாய் அளவிற்கு மருந்துகள் கொடுக்கப்படுகிறது. ஆந்திராவிலே 4,500 ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கிறார்கள். நடமாடும் மருந்தகங்களுக்கு எவ்வளவு மதிப்புள்ள மருந்துகள் என்றால், தமிழ்நாட்டிலே 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகின்றவ. கேரளாவிலே 8 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் கொடுக்கப்படுகிறது. ஆந்திராவிலே 4,500 ரூபாய் மதிப்புள்ள மருந்துகளைக் கொடுக்கிறார்கள். இதிலேயிருந்து பார்க்கிறபோது இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில்தான் மருத்துவமனைகளிலே, மருந்தகங்களிலே, நடமாடும் கால்நடை மருந்தகங்களிலே, கிளை நிலையங்களிலே அதிகமாக மருந்துகளைக் கொடுத்து கால்நடைகளுக்கு பாதுகாப்பைத் தருகின்றார்கள். என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே கால்நடைப் பண்ணைகளைப் பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது 9 பண்ணைகள் இருக்கின்றன. இன்னும் பண்ணைகளை அமைக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். பண்ணைகளை அமைக்க வேண்டும் என்றால், அதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும். நல்ல தண்ணீர் வசதி வேண்டும். நல்ல போக்குவரத்து வசதிகள் வேண்டும். தகவல் தொடர்பு மிகவும் அவசியம். அதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பண்ணையிலும், கால்நடைகளின் பிரிவு, தீவிர நோய்ப் புலனாய்வு பிரிவு, உறைவிந்து வங்கி, பயிற்சி மையம், பெரும் மருத்துவமனை, தீவன



உற்பத்திப் பிரிவு, சாண எரிவாயு ஆலை ஆகியவைகள் இருக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் ஒரு பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்றால், அரசுக்கும் செலவு அதிகமாகக் காணப்படுவதால், நிதி நிலையைப் பார்த்து, ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இன்றைக்கு அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் தீவன உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தீவன உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். கால்நடைகளுக்கு தீவன உற்பத்தி மூலமாக இன விருத்தியை அதிகமாகச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவேதான் திவன விதை உற்பத்தி திட்டம் என்ற ஒரு திட்டத்தை இயற்றி, அதன் மூலமாக கால்நடை பராமரிப்புத் துறை தீவன உற்பத்தியை பெருக்கிக் கொண்டிருக்கிறது.

நடப்பு ஆண்டில் 40 லட்சம் புல் துணுக்குகளையும், 15 டன் தீவன விதைகளையும் உற்பத்தி செய்து வினியோகித்திருக்கிறோம். ஹேசூர் மற்றும் மாதவரத்தில் உள்ள பண்ணைகளில் 4.07 லட்சம் ரூபாய் செலவில் மேலும் தீவன உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஈச்சங்கோட்டைப் பண்ணையில் புல் கரணைகள் மற்றும் தீவன விதைகளையும், உற்பத்தி செய்வதற்காக 2.93 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடப்பு ஆண்டில் 11 லட்சம் புல் கரணைகள் வினியோகிக்கப்பட்டுள்ளன.

மேலும் புல் துணுக்குகள், பசும் தீவன தழை தரும் மரம் செடிகள் தண்டுகள் புல்வெட்டும் கருவி வழங்குவதற்கும், மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கும் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் தீவன உற்பத்தியை பெருக்க 3.86 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆடு வளர்ப்பைப் பற்றியும் இங்கே கூறினார்கள். ஆடு வளர்ப்பு மிகவும் சிறப்பாக செய்ய வேண்டும். கடந்த ஆண்டு மானிய கோரிக்கையின் மீது பேசுகிறபோது நான் குறிப்பிட்டேன். ஆடு வளர்ப்பில் இந்தியாவிலே மிகவும் சிறப்பாக தமிழகம் தான் செய்திருக்கிறது. அதை உலக வங்கி, மத்திய நிபுணர் குழு கூட பாராட்டியிருக்கிறது என்பதைக் கூட நான் இந்த சட்டசபையிலே கூறியிருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு சிறப்பு மத்திய உதவித் திட்டம் என்று ஒரு திட்டம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

[திருமதி கோமதி சீனிவாசன்] [1984 மார்ச் 23

இந்தத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பு மற்றும் சீரான கறவை மாடுகள் பராமரிப்பு மூலம் ஆதிதிராவிட மக்கள் மேம்பாடு அடையும் பொருட்டு ரூ. 50.28 லட்சம் செலவில் திட்டம் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தஞ்சாவூர், திருச்சி, செங்கல்பட்டு, மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட இருக்கின்றது. பயனடையும் ஒவ்வொருவரும் 20 பெட்டை செம்மறியாடுகளும், ஒரு கிடா ஆடும் கொண்ட ஒரு அலகு அமைக்க வேண்டும். இதற்கு தேவைப்படும் மூலதனம் ரூ. 4,000. இதில் பாதி வங்கிக் கடனாகவும் பாதி அரசு மான்யமாகவும் வழங்கப்படும். பயனடையும் ஆதி திராவிடர்களில் 50 சதவீதம் ஆண்கள். 50 சதவீதம் பெண்கள். இந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் ஆண்களையும் பெண்களையும் சரிசமமாக வைத்து நடவடிக்கைகளை இன்றைக்கு தமிழக அரசு எடுத்திருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊனம் உற்றோர்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊனம் உற்றோர்களுக்கு பல வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இன்னும் பல திட்டங்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்ட இந்த 3 சதவீத ஒதுக்கீடு பற்றியும் குறிப்பிட்டு அவர்களுக்கு அதை செய்து கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். நான் இங்கே ஒரு கருத்தை குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

1977-க்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊனம் உற்றோர்களுக்காக என்னனென்ன செய்திருக்கிறார்கள் என்று நாம் பார்க்கப்போனால், அப்போது நிதி ஒதுக்கீடே 1 லட்சம் ரூபாய்தான். ஊனம் உற்றோர்களுக்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியதில், கருவிகள் என்னென்ன கொடுத்தார்கள் என்று பார்த்தால், 3 சக்கர வண்டிகள், மற்றும் காதுகேட்கும் கருவிகள் வழங்குதல், மற்றும் முட்டுக்காடு தொழிற் பயிற்சி நிலையம் மூலம் தொழிற் பயிற்சி அளித்தல்.

ஆனால் தமிழக முதல்வர்கள் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவி ஏற்றதற்குப் பிறகு இந்த ஊனம் உற்றோர்களுக்காக எவ்வளவு திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறபோது, உண்மையிலேயே ஆச்சரியப்படுகின்ற அளவுக்குத்தான் அவர்கள் அந்தப் பயன்களை அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். 1977-க்கு முன்பு அப்போது 1 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு செய்தார்கள். இன்றைக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால், 129 லட்சம். ஒரு கோடியே 29 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஊனம் உற்ற அந்த சகோதரர்களை நமது தமிழக முதல்வர் டாக்டர் புர்ட்சித் தலைவர் அவர்கள் பாதுகாத்து அவர்களுக்கு எல்லா நலன்களையும் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் மறு



1984 மார்ச் 23] [திருமதி கோமதி சீனிவாசன்]

வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த திட்டங்களைப்பற்றிக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். ஊனம் தடுப்பு நடவடிக்கைகள், மறுவாழ்வு அளிப்பதற்கான சிறப்பு பள்ளிகள் நிறுவுதல், சுயவேலை வாய்ப்பு நிதி உதவி, கல்வி உதவித் தொகை வழங்குதல் ஆகியவை. மேலும் 6 சிறப்புப் பள்ளிகளும், 7 பயிற்சி நிலையங்களும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 1-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. செயற்கை அவயம் பொருத்தும் துணை நிலையங்கள் இரண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காது கேட்கும் தன்மையை சோதிக்க மருத்துவ நிலையங்கள் மூன்று புதிதாக துவக்கப்பட்டிருக்கின்றன. இதுதவிர 5 மண்டல மறுவாழ்வு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றோரை அரசு உதவித் தொகையுடன் தொழில் பழகுனராக அதாவது அப்ரண்டிஸ் ஆக நியமித்து அவர்களுக்கு மாதம் 150 ரூபாய் கொடுத்தபிறகு அந்த நிறுவனத்தில் பணியில் அமர்த்தும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. படித்த கண்பார்வையற்றோர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்து 3 ஆண்டுகளுக்கு வேலை கிடைக்காமல் இருப்பவர்களுக்கு மாதம் ரூ. 50 உதவிப் பணம் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதைக்கூட தளர்த்தலாமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் இப்போது தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்போது போட்டு இருக்கிற திட்டம். 8 ஆம் வகுப்பு படித்திருந்தால் போதும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஒரு ஆண்டு இருந்தால் போதும் அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கலாம் என்ற பரிந்துரையை ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல இடங்களில் ஊனம் தடுப்பு, முகாம்கள் நடத்தப்பட்டு 1.3 லட்சம் குழந்தைகள் இளம்பிள்ளை வாதம், தட்டம்மை ஆகிய நோய்களிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கு என்று ஒரு சிறப்புப் பள்ளி மதுரையில் துவக்கப்பட்டு இன்று சுமார் 100 குழந்தைகள் கல்வி மற்றும் மருத்துவ வசதியும் பெற்று வருகின்றனர்.

அரசுத் துறைகளிலும், அரசினைச் சார்ந்த நிறுவனங்களிலும் உடல் ஊனமுற்றோர்களுக்கென 3 சதவீத இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதைப்போல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; அதன் மூலமாக 8 திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு சேர்த்து பல சிறிய திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்காக 163.84 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்

(திருமதி கோமதி சீனிவாசன்) [1984 மார்ச் 23

கிறது. அதிலே எவ்வளவு பெண்கள் பயன் அடைகிறார்கள் என்றால் கிட்டத்தட்ட 6 ஆயிரம் பெண்கள் பயன் அடைகிறார்கள். இந்தப் பெண்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதோடு அவர்கள் பொருளாதாரத்தை பெருக்குகின்ற அளவுக்கு இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

இந்தக் கழகம் 9–12-1983 அன்று பதிவு செய்யப்பட்டு செயல் பட்டு வருகிறது. கீழ்க் கண்ட திட்டங்கள் மகளிரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தீட்டப்பட்டுள்ளன.

1. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 200 மகளிருக்கு கறவை மாடுகள் 25 சதவீத மானியத்தில் இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டத்தில் வழங்கப்படும். மானிய வகைக்கு செலவாகும் தொகை ரூபாய் 2.7 லட்சம்.

2. மேற்கூறிய திட்டத்தின் கீழ் 400 மகளிருக்கு மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ரூ. 16 லட்சம் செலவில் செம்மறி ஆடுகள் வழங்கப்படும்.

3. 750 ஆதி திராவிடர் பெண்களுக்கு சுமார் 30 லட்சம் ரூபாய் செலவில் செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் செம்மறி ஆடு வளர்க்கும் திட்டம்.

4. 100 ஆதி திராவிடர் பெண்களுக்கு சுமார் 4.4 லட்சம் செலவில் கோழி வளர்ப்புத் திட்டம் செங்கற்பட்டு, கோவை வட ஆற்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் (200 பறவைகள் ஒரு யூனிட்).

5. சுமார் 2,000 நகர்ப்புற ஆதி திராவிடர் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு மற்றும் அதற்கான பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இதற்காகும் செலவு சுமார் 44 லட்சம் ரூபாய்.

6. நார்வே நாட்டின் நிதி உதவியுடன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு பெற கீழ்க் கண்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

எலக்ட்ரானிக்ஸ் பயிற்சி அளித்து வேலையில் அமர்த்துதல் பயன் பெறுவோர்—140 பேர். பாத அணிகளின் மேல் கூடுகள் தயாரிப்பில் பயிற்சி வேலையில் அமர்த்துதல்—40 பேர். மரப் பொருள்கள் தயாரித்தலில்—100 பேர். அச்சு மற்றும் புத்தகம் கட்டுதலில்—75 பேர்.



1984 மார்ச் 23] [திருமதி கோமதி சீனிவாசன்[

7. இந்திய தொழில் நுட்ப கழகத்தின் ஊரக வளர்ச்சி மையத்தின் உதவியோடு 100 பெண்களுக்கு பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு ரூ. 5.7 லட்சம் செலவிடப்பட இருக்கிறது.

8. செங்கற்பட்டு மாவட்டத்தில் 300 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூ. 14.32 லட்சம் செலவில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவற்றில் சில, பொம்மை தயாரித்தல், பிளாஸ்டிக் பாய் தயாரித்தல், சேலைக்கு கையால் பிரிண்ட் போடுதல் முதலியன.

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நல பள்ளிகளில் ப்யிலும் மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களை தயாரிக்கும் பணியை பதினைந்து எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் சங்கங்களுக்கு கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் 750 பெண்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கும். திருச்செந்தூர் மற்றும் வில்லிவாக்கத்தில் உள்ள சேவை இல்லம் மற்றும் பெண்கள் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிக்கும் சிறார்களுக்கான உடைகளையும், துணி பொம்மைகளையும் அதிக உற்பத்தி செய்து அதற்கான சந்தையை விரிவுபடுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

கிராமப்புறத்திலுள்ள மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுத் திட்டம் 20 பகுதிகளில் தர்மபுரி மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும் செயல்பட ஆணை இடப்பட்டுள்ளது. இதனால் 800 மகளிர் பயன் நல்குவர் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் 6 ஆயிரம் பெண்கள் இந்த பெண்கள் வேலை வாய்ப்பு முன்னேற்றக் கழகத்தின் மூலமாக வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இங்கே இன்னொரு குறைபாட்டை சொன்னார்கள். கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வேண்டும் என்றும் அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் வேண்டும் என்றும் சொன்னார்கள். மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு நிதி நிலையை அடிப்படையாக வைத்து அதற்கு ஏற்ப அடுத்த ஆண்டு கொடுக்கலாம் என்ற ஒரு ஆணை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போலவே ரிஸ்க் அலவன்ஸ் 4 ஆவது ஊதிய குழுவில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு 10 ஆயிரம் ரூபாய் கட[illegible] கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதோடு [illegible]டும் அல்லாமல் அதை பராமரிப்பதற்கு அலவன்ஸ் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைத்தான் முன்பே சொன்னேன் நிதித் துறையின் பரிசீலனையை ஏற்று தற்போதைய நிதிநிலை நெருக்கடியை நாம் கவனத்தில் கொண்டு இந்த கருத்துருவை

[திருமதி கோமதி சீனிவாசன்] [1984 மார்ச் 23

ஒரு ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ரிஸ்க் அலவன்ஸ் சம்பந்தப்பட்ட கோரிக்கை 4-வது ஊதியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கலாம் என்று நிதித் துறை பரிந்துரை செய்துள்ளது. ஊதிய உயர்வும் அப்படித்தான். ஊதிய உயர்வும் 4-வது ஊதிய குழுவில் வைக்கப்பட்டிருக்கிறது. பிறகு கால்நடை ஆய்வாளர்களுக்கு சூப்பிரவைசர் புரமோஷன் கேட்கிறார்கள். அதைப் போலவே டாக்டர்களும் ஏதாவது செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். தடுப்பு ஊசியாளர்களுக்கு மறுபடியும் பயிற்சி ஆரம்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறார்கள். இது எல்லாம் ஆய்வில் இருக்கின்ற திட்டங்கள். 15 ஆண்டுகளுக்கு மேல் கால்நடை உதவி மருத்துவர்களாக பணி புரிந்தவர்களுக்கு பதவியில் உயர்வு வாய்ப்பை அளிக்கும் வகையில் கோட்ட தலைமை மருத்துவமனைகளில் பணியாற்றும் 56 உதவி மருத்துவர் பதவிகளை உதவி இயக்குநர் பதவியாக தரம் உயர்த்தி தருருவத அரசு ஆய்வு செய்து வருகிறது. 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் கிரேடு-1 கால்நடை ஆய்வாளர்களாக இருப்பவர்களைக் காலியாக உள்ள மேற்பார்வையாளர் பதவிகளில் அமர்த்துவதற்கான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறையிலுள்ள 303 தடுப்பூசியாளர்களில் ஏற்கனவே 100 பேர்களைத் தேர்ந்தெடுத்து கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியளித்து கால்நடை ஆய்வாளர்கள் இரண்டாம் நிலையாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 203 பேர்களில் முதுநிலைக்கேற்ப 100 தடுப்பூசியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியளித்து கால்நடை ஆய்வாளர்களாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கால்நடை மருந்தகங்களெல்லாம் கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் மருந்தகங்கள், கிளை நிலையங்கள் இவற்றையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு பஞ்சாயத்து யூனியனில்—ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து தீர்மானம் வரவேண்டும். அதற்கு ஒரு ஏக்கர் நிலம் வேண்டும். முதல் கால்நடை மருந்தகமாக இருந்தால் 25 சதவீதத்தை பஞ்சாயத்து யூனியன் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அரசு 75 சதவீதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும், அதனுடைய கட்டிட செலவுத் தொகையில்.



1984 மார்ச் 23] (திருமதி கோமதி சீனிவாசன்)

இரண்டாவது கால்நடை மருந்தகமாக இருந்தால் பஞ்சாயத்து
யூனியன் 50 சதவீதம் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதைப்
போல அரசு 50 சதவீதம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மூன்றா
வது கால்நடை மருந்தகமாக இருந்தால் 75 சதவீதம் பஞ்சாயத்து
யூனியன் ஏற்றுக்கொள்ள வேண்டும்; 25 சதவீதம் அரசு ஏற்றுக்
கொள்ள வேண்டும். நான்காவது கால்நடை மருந்தகமாக இருந்
தால் முழுச் செலவையும் பஞ்சாயத்து யூனியனே ஏற்றுக் கொள்ள
வேண்டும். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தோடு அரசுக்கு வந்தால்
நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் கால்நடை மருந்தகங்கள் அமைத்
துக் கொடுக்க வாய்ப்புகளைச் செய்து கொடுக்க முடியும். மொத்
தம் 20 கால்நடை மருந்தகங்கள்தான் இந்த ஆண்டு திறக்கப்படும்.
அது எத்தனைபேர்கள் கொடுத்திருக்கிறார்களோ, நான் சொன்ன
அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானங்கள் வந்திருந்
தால் நிச்சயமாக அவர்களுக்கெல்லாம் கால்நடை மருந்தகங்கள்
அமைத்துக்கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மருத்துவக் கல்லூரிகளைப் பற்றிப் பல உறுப்
பினர்களும் இங்கே பேசினார்கள். கால்நடை மருத்துவக் கல்
லூரி ஒன்று அமைக்கப்படும். கால்நடை மருத்துவக் கல்லூரி
அமைக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு இடம் வேண்டும்.
அதனுடைய சுற்றுப்புறம் சரியான முறையில் அமைக்கப்பட்டு
இருக்க வேண்டும். நீர் வசதி அதிகமாக இருக்க வேண்டும்;
போக்குவரத்து வசதி அதிகமாக இருக்க வேண்டும்; கால்நடை
களும் அதிகமாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில்
தஞ்சையும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். மற்றும் ஈரோடும்
கொடுத்திருக்கின்றார்கள். தஞ்சாவூரில் நான்கு பண்ணைகள்
இருக்கின்றன. கொற்கை பார்ம்; ஒரத்தநாடு பண்ணை; ஈச்சங்
கோட்டை பண்ணை; பக்கத்தில் புதுக்கோட்டை பண்ணையும்
இருக்கிறது. ஈச்சங்கோட்டை பண்ணையிலும் அதுவும் திரவ
நைட்ரஜன் உறை விந்து தயாரிக்கும் நிலையம் ஒன்று ஆரம்பிக்
கப்பட்டு அந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையில், வெற்றிகர
மாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் இருப்பதால்
கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஆராய்ச்சி செய்ய
இதுவும் பயன்படக்கூடிய சூழ்நிலை இருக்கும். இருந்தாலும்
இவையெல்லாம் அனுசரித்து, நன்றாக ஆராய்ந்து, எந்தயிடத்தில்
கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்பதை அரசு
பின்னர் அறிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன், டி. மணி, தி. கா. நல்லப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

'' மானிய கோரிக்கை எண் 22—கால் நடைவளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,97,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 2-10]

கோரிக்கை எண். 30—சமூக நலன்.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன், ரா. கிருஷ்ணன், மு. அப்பாதுரை ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 68,66,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 24-3-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
—எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

76. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் (1979-80) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

77. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1976-77, 1977-78-ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொதுநிறுவனங்கள் குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை(தமிழ், ஆங்கிலம்).

78. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாக்கத்தினை விரிவான மதிப்பீடு செய்வதற்காக தணிக்கைக் குழுக்கள் (Adit Board) ஏற்படுத்துவது குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

79. இந்திய தணிக்கைத் துறை தலைவரின் 1974-75 1975-76-ஆம் ஆண்டுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான எட்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி ஆறாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

80. கோரிக்கை எண் 22—கால்நடை பராமரிப்புப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85. (தமிழ், ஆங்கிலம்.)

81. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் 1984-85. (தமிழ், ஆங்கிலம்).

82. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பணிகள் விவரம் பற்றிய அறிக்கை.(தமிழ்,ஆங்கிலம்.)

83. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

84. கோரிக்கை எண் 30—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984—85 (தமிழ், ஆங்கிலம்.

85. சமூக நலம் பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1984-85, (ஆங்கிலம்.).

86. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும்-விடைகளும். (நான்காம் பட்டியல்.)

# இணைப்பு I.

(....38..-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 4-வினா எண் 4454-க்கான விடையைக் காண்க:—
29—2—1981-ஆம் நாள் வரை பதிவு செய்து காத்திருக்கும் மொத்த ஆசிரியர் எண்ணிக்கை.

| மாவட்டம் | இரண்டாம் நிலை ஆசிரியர். | முதல் நிலை ஆசிரியர். | கிண்டர் கார்டன் ஆசிரியர். | தமிழ் ஆசிரியர். | ஏனைய மொழி ஆசிரியர். | எம்.இ.டி | பி.பி.இ.டி. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 சென்னை .. .. | 724 | 47 | 37 | 357 | 59 | .. | .. |
| 2 செங்கற்பட்டு .. | 686 | 66 | 18 | 154 | 30 | .. | .. |
| 3 வட- ஆற்காடு .. | 1,543 | 4 | 4 | 179 | 4 | .. | .. |
| 4 தென் ஆற்காடு .. | 531 | 21 | 37 | 308 | .. | .. | .. |
| 5 புதுக்கோட்டை .. | 126 | 12 | .. | 116 | .. | .. | .. |
| 6 திருச்சி .. .. | 1,510 | 18 | 21 | 175 | 1 | .. | .. |
| 7 தஞ்சாவூர் .. | 494 | 21 | 13 | 572 | .. | .. | .. |
| 8 மதுரை .. .. | 2,554 | 108 | 7 | 403 | 6 | .. | .. |
| 9 இராமநாதபுரம் .. | 1,034 | 47 | .. | 223 | .. | .. | .. |
| 10 சேலம் .. .. | 985 | 26 | 14 | 277 | 3 | .. | .. |
| 11 தர்மபுரி .. .. | 523 | 1 | .. | 123 | 10 | .. | .. |
| 12 கோயம்புத்தூர் .. | 820 | 30 | 12 | 358 | 7 | .. | .. |
| 13 பெரியார் .. .. | 1.026 | 12 | 3 | 128 | .. | .. | .. |
| 14 உதகமண்டலம் .. | 348 | 1 | .. | 71 | 1 | .. | .. |
| 15 திருநெல்வேலி .. | 1,634 | 40 | 33 | 207 | 2 | .. | .. |
| 16 கன்னியாகுமரி .. | 915 | 8 | 55 | 459 | 4 | .. | .. |
| 17 இ.ஒ.பி.எச்., சென்னை-35* | 10 | 1 | 2 | 2 | .. | 1 | .. |
| 18 பி.இ.இ.ஓ., சென்னை-35† | .. | .. | .. | .. | .. | 10 | 819 |
| 19 யூ.இ.ஐ.ஜி.பி., சென்னை-25‡ | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 20 யூ.இ.ஐ.ஜி.பி., மதுரை‡ | .. | .. | .. | .. | .. | 7 | 158 |
| 21 யூ.இ.ஐ.ஜி.பி.அ. நகர்‡ | .. | .. | .. | .. | .. | 24 | 6 |
| மொத்தம் .. | 15,467 | 463 | 256 | 4,112 | 127 | 42 | 983 |

*உடல் ஊனமுடையோர்க்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகம்.
†தொழில் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம்.
‡பல்கலைக் கழக வேலைத் தகவல் அறிவிப்பு நிலையம்.

| மாவட்டம். | எம்.பி.இடி. | பி.இ.டி. | உடற்பயிற்சி ஆசிரியர். மேல்நிலை | உடற்பயிற்சி ஆசிரியர். கீழ்நிலை | தொழிற் பயிற்சி ஆசிரியர். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 சென்னை .. | .. | .. | 16 | 113 | 303 | 1,656 |
| 2 செங்கற்பட்டு .. | .. | 367 | 16 | 66 | 293 | 1,696 |
| 3 வட ஆற்காடு .. | .. | 942 | 6 | 255 | 220 | 3,157 |
| 4 தென் ஆற்காடு .. | .. | 604 | 57 | 37 | 269 | 1,864 |
| 5 புதுக்கோட்டை .. | .. | 135 | 15 | 12 | 130 | 546 |
| 6 திருச்சி .. | .. | 740 | 104 | 25 | 350 | 2,944 |
| 7 தஞ்சாவூர் .. | .. | 790 | 6 | 103 | 297 | 2,296 |
| 8 மதுரை .. | .. | 1,136 | 141 | 92 | 486 | 4,933 |
| 9 இராமநாதபுரம் | .. | 425 | 5 | 86 | 200 | 2,020 |
| 10 சேலம் .. | .. | 688 | 11 | 163 | 234 | 2,401 |
| 11 தர்மபுரி .. | .. | 322 | 2 | 70 | 286 | 1,342 |
| 12 கோயம்புத்தூர் .. | .. | 625 | 5 | 92 | 294 | 2,243 |
| 13 பெரியார் .. | .. | 283 | 8 | 58 | 115 | 1,638 |
| 14 உதகமண்டலம் | .. | 261 | 33 | 12 | 203 | 930 |
| 15 திருநெல்வேலி .. .. | | 915 | 19 | 142 | 556 | 354 |
| 16 கன்னியாகுமரி .. .. | .. | 862 | 61 | 176 | 282 | 2,826 |
| 17 இ.ஒ.பி.எச்., சென்னை-35* .. | .. | 26 | ... | ... | 10 | 52 |
| 18 பி.இ.இ.ஒ., சென்னை-35† .. | 13 | 1,195 | .. | ... | ... | 2,757 |
| 19 யூ.இ.ஐ.ஜி.பி., சென்னை-35‡ | .. | .. | .. | .. | .. | .. |
| 20 யூ.இ.ஐ.ஜி.பி., மதுரை‡ .. | 10 | 245 | .. | .. | .. | 480 |
| 21 யூ.இ.ஐ.ஜி.பி., அ.நகர்‡ .. | 2 | 68 | .. | .. | .. | 100 |
| மொத்தம் .. | 25 | 11,349 | 510 | 1,502 | 4,528 | 39,364 |

* உடல் ஊனமுடையோர்க்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகம்.

† தொழில் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம்.

‡ பல்கலைக் கழக வேலைத் தகவல் அறிவிப்பு நிலையம்.

## இணைப்புகள் II.

(38-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 4—வினா எண். 4454-க்கான விடையைக் காண்க :—)

(அரிசன வகுப்பு.)

| மாவட்டம். (1) | | இரண்டாம் நிலை ஆசிரியர். (2) | முதல்நிலை ஆசிரியர். (3) | கிண்டர் கார்டன் ஆசிரியர். (4) | தமிழ் ஆசிரியர். (5) | ஏனைய மொழி ஆசிரியர். (6) | பி.பி.இ.டி. (7) | எம்.இ.டி. (8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சென்னை .. | .. | 81 | 4 | .. | 1 | .. | .. | .. |
| 2 செங்கல்பட்டு | .. | 68 | 17 | 7 | 5 | .. | .. | .. |
| 3 வடஆற்காடு | .. | 187 | .. | .. | 16 | .. | .. | .. |
| 4 தென்ஆற்காடு | .. | 82 | 1 | 7 | 14 | .. | .. | .. |
| 5 புதுக்கோட்டை | .. | 4 | .. | .. | 3 | .. | .. | .. |
| 6 திருச்சி | .. | 226 | .. | .. | 22 | .. | .. | .. |
| 7 தஞ்சாவூர் | .. | 20 | 1 | .. | 10 | .. | .. | .. |
| 8 மதுரை .. | .. | 79 | 1 | 1 | | .. | .. | .. |
| 9 இராமநாதபுரம் | .. | 109 | 5 | .. | 2 | .. | .. | .. |
| 10 சேலம் .. | .. | 162 | 2 | .. | 5 | .. | .. | .. |
| 11 தர்மபுரி ... | .. | 30 | .. | .. | 3 | .. | .. | .. |
| 12 கோயம்புத்தூர் | .. | 43 | 5 | .. | 9 | .. | .. | .. |
| 13 பெரியார். | .. | 41 | 3 | .. | 1 | .. | .. | .. |
| 14 உதகமண்டலம் | .. | 47 | .. | .. | 4 | .. | .. | .. |
| 15 திருநெல்வேலி . | .. | 127 | 3 | 3 | 1 | .. | .. | .. |
| 16 கன்னியாகுமரி | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | .. |
| 17 இ.ஒ.பி.எச். சென்னை35* | | .. | .. | .. | .. | .. | 1 | .. |
| 18 பி.இ.இ.ஒ.சென்னை-35† | | .. | .. | .. | .. | .. | .. | 18 |
| 19 யூ.இ.ஐ.ஜி.பி.சென்னை-35‡ | | | .. | .. | .. | .. | .. | .. |
| 20 யூ.இ.ஐ.ஜி.பி. மதுரை‡ | | .. | .. | .. | .. | .... | .. | 3 |
| 21 யூ.இ.ஐ.ஜி.பி. அ.நகர்‡ | | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | | 1,307 | 43 | 19 | 103 | .. | 1 | 21 |

* உடல் ஊனமுடையோர்க்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகம்.

† தொழில் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம்.

‡ பல்கலைக் கழக வேலைத் தகவல் அறிவிப்பு நிலையம்.

| மாவட்டம். (1) | | | உடற்பயிற்சி ஆசிரியர். எம்.பி.இ.டி. (9) | பி.இ.டி. (10) | மேல் நிலை. (11) | கீழ்நிலை. (12) | தொழிற் பயிற்சி ஆசிரியர். (13) | மொத்தம். (14) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சென்னை | .. | .. | .. | — | — | 1 | .. | 26 |
| 2 செங்கல்பட்டு | .. | .. | .. | 14 | 5 | 4 | 26 | 146 |
| 3 வடஆற்காடு | .. | .. | .. | 25 | .. | 37 | 15 | 280 |
| 4 தென்ஆற்காடு | .. | .. | .. | 44 | .. | 1 | 20 | 169 |
| 5 புதுக்கோட்டை | .. | .. | .. | 15 | 4 | .. | 29 | 55 |
| 6 திருச்சி | .. | .. | .. | 91 | 2 | .. | 8 | 349 |
| 7 தஞ்சாவூர் | .. | .. | .. | 32 | .. | .. | 27 | 90 |
| 8 மதுரை | .. | .. | .. | 53 | 1 | 1 | 21 | 164 |
| 9 இராமநாதபுரம் | .. | .. | .. | 12 | .. | 7 | 37 | 172 |
| 10 சேலம் | .. | .. | .. | 13 | .. | .. | 23 | 205 |



| மாவட்டம். (1) | | | எம்.பி.இ.டி. (9) | பி.இ.டி. (10) | மேல் நிலை. (11) | கீழ்நிலை. (12) | தொழிற் பயிற்சி ஆசிரியர். (13) | மொத்தம். (14) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 தர்மபுரி | .. | .. | .. | 5 | .. | .. | 17 | 55 |
| 12 கோயம்புத்தூர் | .. | .. | .. | 4 | .. | .. | 20 | 81 |
| 13 பெரியார் | .. | .. | .. | 2 | .. | .. | 25 | 72 |
| 14 உதகமண்டலம் | .. | .. | .. | 3 | .. | .. | 3 | *57 |
| 15 திருநெல்வேலி | .. | .. | .. | 11 | .. | .. | 18 | 163 |
| 16 கன்னியாகுமரி | .. | .. | .. | 8 | .. | .. | 42 | 53 |
| 17 இ.ஒ.பி.எச். சென்னை-35* | | .. | .. | 3 | .. | .. | 2 | 6 |
| 18 பி.இ.இ.ஒ. சென்னை-35† | | .. | .. | 61 | .. | .. | 1 | 80 |
| 19 யூ.இ.ஐ.ஜி.பி. சென்னை-35‡ | | | .. | .. | .. | .. | .. | .. |
| 20 யூ.இ.ஐ.ஜி.பி., மதுரை‡ | | .. | .. | 24 | .. | .. | .. | 27 |
| 21 யூ.இ.ஐ.ஜி.பி., அ.நகர்‡ | | .. | .. | 9 | .. | .. | .. | 9 |
| மொத்தம் | .. | .. | .. | 429 | 12 | 51 | 334 | 2,320 |

*உடல் ஊனமுடையோர்க்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம்.

†தொழில் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம்.

‡பல்கலைக்கழக வேலைத் தகவல் அறிவிப்பு நிலையம்.

[1984 மார்ச் 23

இணைப்பு III.

(42......ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 8—வினா எண் 6794க்கான விடையைக்காண்க:—)

விவர அறிக்கை.

பின்வரும் கால அளவுகளில் நிதியுதவிக் கழகங்களிடம் வைப்பீடு செய்துள்ள தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: —

அ. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

31—3—1981 ஆம் நாள் நிலவரப்படி, வைப்பீடுகளின் வகைப்பாடு :

1. பொதுமக்கள்.

| கால அளவு. | | தொகை. (இலட்சத்தில்) |
|---|---|---|
| இரண்டாண்டுகளுக்கு குறைவாக | .. | 29,927.68 |
| ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு | .. | 2,11,06,474.56 |
| பத்து ஆண்டுகளுக்கு குறைவாக | .. | 1,22,654.76 |
| பத்து ஆண்டுகளுக்கு குறையாமல் | .. | 4,15,491.86 |
| பன்னிரண்டு ஆண்டுகளுக்கு குறையாமல் | | 20,000.00 |
| | | 2,16,94,548.86 |

மொத்தம் ரூபாய் 216.95 இலட்சம்.

2. பணியாளர்கள்—இல்லை.

(ஆ) போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவிக் கழகம் 30-6-81 ஆம் நாள் நிலவரப்படி, வைப்பீடுகளின் வகைப்பாடு

1. பொது மக்கள் :

| கால அளவு. | | தொகை. (இலட்சத்தில்) |
|---|---|---|
| ஒரு ஆண்டு | .. .. .. | 846.30 |
| இரண்டு ஆண்டுகள் | .. .. | 107.02 |
| மூன்று ஆண்டுகள் | .. .. .. | 1,243.36 |
| மொத்தம் | .. | 2,196.68 |



1984 மார்ச் 23]

2. பணியாளர்கள் —இல்லை.

இ. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்: 30-6-1981 ஆம் நாள் நிலவரப்படி, வைப்பீடுகளின் வகைப்பாடு:—

| கால அளவு. | | தொகை. (இலட்சத்தில்.) பொது மக்கள். | பணியாளர்: |
|---|---|---|---|
| 1–2 ஆண்டுகள் | .. .. .. | 52.18 | .. |
| 2–3 ஆண்டுகள் | .. .. .. | 12.55 | 0.05 |
| 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் | .. | 1,70.52 | 0.12 |
| மொத்தம் | .. | 2,35.25 | 0.17 |

மொத்தம் ரூ. 235.42 இலட்சம்.

ஈ. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் : 30-6-1981 ஆம் நாள் நிலவரப்படி, வைப்பீடுகளின் வகைப்பாடு.

1. பொதுமக்கள்

| கால அளவு. | | தொகை. (இலட்சத்தில்.) |
|---|---|---|
| ஒரு ஆண்டு | .. .. .. .. .. | 3.76 |
| இரண்டாண்டுகள் | .. .. .. .. | 1,03 |
| மூன்றாண்டுகள் | .. .. .. .. | 6.98 |
| மொத்தம் | .. | 11.77 |

2. பணியாளர்கள்—இல்லை.

உ. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் : 30-6-1981 ஆம் நாள் நிலவரப்படி, வைப்பீடுகளின் வகைப்பாடு:—

1. பொது மக்கள் :

| கால அளவு. | தொகை. |
|---|---|
| | ரூபாய். |
| ஓராண்டு | 35,500 |
| மூன்றாண்டுகள் | 9,800 |
| ஐந்தாண்டுகள் | 50,000 |
| ஆறு ஆண்டுகள் | 1,50,000 |
| பத்து ஆண்டுகள் | 1,00,000 |
| பன்னிரண்டு ஆண்டுகள் | 2,50,000 |
| மொத்தம் | 5,95,300 |

மொத்தம் ரூபாய் 5,95 இலட்சம்

பணியாளர்கள்—இல்லை.



## இணைப்பு IV.

(67 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட 51-வினா எண் 13067-க்கான விடையைக் காண்க.)

மதுராந்தகம் தொகுதி, லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் உள்ளாட்சித் துறையில் பராமரிக்கப்படும் ஏரிகள் பற்றிய விவரங்கள்.

| கிராமத்தின் பெயர். | சிறு பாசன ஏரியின் பெயர் | ஆயக்கட்டு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆட்சி விளகம் | தரங்கள் | 5 |
| கடலூர் | குட்டை | 8 |
| கடலூர் | மடுவு | 26 |
| கடுகுப்பட்டு | பள்ளத்தாங்கல் | 8 |
| கானத்தூர் | பக்களம் குட்டை ஊற்று. | 19 |
| கானத்தூர் | பிள்ளையார் குட்டை ஊற்று. | 14 |
| கானத்தூர் | தண்ணீர் குட்டை ஊற்று. | 38 |
| கானத்தூர் | குள்ளு ஊற்று | 33 |
| கருப்பூர் | பல்லவன் குளம் வரவு வாய்க்கால். | 17 |
| கருப்பூர் | பாலாறு ஆற்றுப்படுகை தண்ணீர் நிலத்திற்கு வரும் வாய்க்கால். | 11 |
| கீமார் கொல்லை | தாங்கல் | 61 |
| கொடப்பட்டினம் | படார்குட்டை ஊற்று | 1 |
| தொடப்பட்டினம் | பள்ளன்குழி பொய்கை | 21 |
| கூவத்தூர் | தாங்கல் | 8 |
| லத்தூர் | ரங்கம்மாள் தாங்கல் | 12 |
| லத்தூர் | தாங்கல் | 15 |
| லத்தூர் | மலையம்பட்டு தாங்கல். | 13 |
| மடவிளாகம் | அண்டனேரி தாங்கல் | 12 |
| மடவிளாகம் | குப்பத்து தாங்கல் | 13 |
| மடவிளாகம் | ஏரி | 67 |
| மடவிளாகம் | பெரிய ஏரி | 76 |
| மடவிளாகம் | .... | 6 |
| மடயம்பாக்கம் | சித்தேரி | 70 |
| மடயம்பாக்கம் | பொனேரி | 15 |
| மல்ரோஜாகுப்பம் | இகா ஏரி | 12 |
| நெடுமரம் | மூலமடுவு | 9 |

[1984 மார்ச் 23

| கிராமத்தின் பெயர். | சிறு பாசன ஏரியின் பெயர். | ஆயக் கட்டு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மல்ராஜகுப்பம் (தாங்கல்) | .. | 17 |
| நெடுமரம் | நஞ்சனேரிதாங்கல் | 6 |
| நீலமங்கலம் | ஊடை | 23 |
| நீலமங்கலம் | கிளியார் மடுவு | 8 |
| நெல்வாய் | கிளியார்மடுவு | 9 |
| நெல்வாய் | மஞ்சனேரி | 19 |
| பச்சம்பாக்கம் | பசவ நத்தம் தாங்கல் | 37 |
| பாலூர் | தாங்கல் | 98 |
| பாலூர் | பெரிய ஏரி | 34 |
| பேக்கரணை தாங்கல் | .. | 76 |
| பேக்கரணை ஏரி | ஏரி | 76 |
| பெருமாள்சேரி | பொய்கைமடுவு | 48 |
| பொறஞ்சேரி | பொய்கைமடுவு | 4 |
| சத்தியமங்கலம் | மஞ்சநேரி | 74 |
| சத்தியமங்கலம் | மஞ்சநேரி | 30 |
| சீவாடி சித்தேரி | .. | 20 |
| தேலூர் | தாங்கல் | 30 |
| திருவாதூர் | சித்தேரி | 66 |
| வடக்கு வாயலூர் | ஈசாபுத்தேரி | 66 |
| வடபட்டினம் | பிள்ளையார் குளம் | 64 |
| வடபட்டினம் | பள்ளம்தாங்கல் | 43 |
| வடபட்டினம் வெங்கேரி. | .. | 84 |
| வேப்பஞ்சேரி | பொய்கைமடுவு | 39 |

பழைய ஜமீன் ஏரிகள் :

| கிராமத்தின் பெயர். | ஆயக் கட்டு. |
|---|---|
| (1) | (2) |
| கருக்காமலை தாங்கல் | 80 |
| கொடூர் ஏரி | 75 |
| கொளத்தூர் ஏரி | 94 |
| கீழச்சேரி ஏரி | 40 |
| கீழச்சேரி ல்ாங்கல் | 40 |
| குமாரகுப்பம் ஆடுதாங்கல் | 19 |
| நெற்குணப்பட்டு ஏரி | 9 |



1984 மார்ச் 23]

| கிராமத்தின் பெயர். | ஆயக் கட்டு |
|---|---|
| (1) | (2) |
| பழைய ஜமீன் ஏரிகள்—தொடர்ச்சி. | |
| மாளச்சேரி ஏரி | 90 |
| பவஞ்சூர் தாங்கல் | 90 |
| பெரும்பாக்கம் தாங்கல் | 36 |
| சீகினாங்குப்பம் தச்சன் பட்டறை தாங்கல் | 29 |
| சுண்டிவாக்கம் தாங்கல் | 32 |
| சுண்டிவாக்கம் ஏரி | 65 |
| தொண்டமநல்லூர் ஏரி | 28 |
| தாதங்குப்பம் ஏரி | 95 |

1979 முதல் 1982 வரை ஆண்டு வாரியாக பராமரிக்க செலவு செய்யப்பட்ட தொகை :—

| ஆண்டு. | தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| சிறு பாசன ஏரிகள் :— | | |
| 1979–80— | | |
| குமாரகுப்பம் ஆடுதாங்கல் | 3,000 | 00 |
| பவுஞ்சூர் தாங்கல் | 2,578 | 00 |
| பேக்கரணைத் தாங்கல் | 3,000 | 00 |
| வேப்பஞ்சேரி பொய்கை மடுவு | 2,984 | 00 |
| மொத்தம் | 11,562 | 00 |
| 1980–81— | | |
| கடுகப்பட்டு தாங்கலில் ஒரு மதகு கட்டுதல் | 2,953 | 00 |
| பேக்கரணை ஏரியில் உள்ள சுவர்கள் பழுது பார்த்தல். | 3,368 | 00 |
| தொண்டமநல்லூர் பழுதுபார்த்தல் | 1,466 | 00 |
| தொடூர் ஏரி பழுது பார்த்தல் | 938 | 00 |
| சண்டிவாக்கம் ஏரி பழுது பார்த்தல் | 2,883 | 00 |
| தாதங்குப்பம் ஏரி பழுது பார்த்தல் | 3,000 | 00 |
| மொத்தம் | 14,606 | 00 |

1981-82—

| | தொகை. | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| பெருமாள்சேரி ஏரி பழுதுபார்த்தல் .. | 3,000 | 00 |
| கீழச்சேரி தாங்கல் பழுதுபார்த்தல் .. | 2,988 | 00 |
| சத்தியமங்கலம் மஞ்சனேரி பழுதுபார்த்தல். | 2,638 | 00 |
| கீழச்சேரி ஏரி பழுதுபார்த்தல் .. .. | 534 | 00 |
| மொத்தம் .. | 9,160 | 00 |

பழைய ஜமீன் ஏரிகள்:—

1979-80—

| | | |
|---|---|---|
| குமாரகுப்பம் நாகா தாங்கல் .. .. | 1,325 | 00 |
| நரியூர் ஏரி .. .. .. .. | 1,648 | 00 |
| மொத்தம் .. | 2,973 | 00 |

1980-81—

| | | |
|---|---|---|
| நரியூர் ஏரி பழுதுபார்த்தல் .. .. | 2,160 | 00 |
| செய்யூர் வெள்ளேரி பழுதுபார்த்தல் .. | 2,843 | 00 |
| மொத்தம் .. | 5,003 | 00 |

1981-82—

| | | |
|---|---|---|
| மருதேரி ஏரி மதகு பழுதுபார்த்தல் .. | 2,990 | 00 |

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஏரிகள் பற்றிய விவரங்கள்.—

1. சித்தேரி.
2. பெரிய ஏரி.
3. புத்தேரி.
4. ஓட்டேரி.
5. வண்ணான்தாங்கல்.
6. ஏரி.
7. அச்சிகாட்டுமடுவு.



மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்ப(ட்டு வரும்) ஏரிகள் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

8. மடுவு.
9. அகத்திப்பட்டு தாங்கல்.
10. எத்திப்பட்டு தாங்கல்.
11. மடுவு.
12. இசா ஏரி.
13. ஸ்பிரிங்காணல்.
14. ஏரி.
15. மடுவு.
16. தாங்கல்.
17. மாமத்தூர் காணல்.
18. மடுவு பாபில்.
19. புதுப்பட்டு தாங்கல்.
20. பாச்சேரி தாங்கல்.
21. சித்தேரி.
22. தாங்கல்.
23. ஏரி.
24. பூதூர் விஜயன் தாங்கல்.
25. தர்மாபுரம் தாங்கல்.
26. மடுவு.
27. கானம்.
28. ஏரி.
29. பிலிபார் நதி.
30. அத்திமானம் இதர ஏரி மற்றும் மடுவு.
31. ஏரி.
32. தாங்கல்.
33. சித்தேரி.
34. கிளார் ஏரி.
35. கானல்.
36. அணைக்கட்டு கால்வாய்.
37. புக்கத்துரை ஓடை.
38. சித்தேரி.
39. பெரிய ஏரி.
40. ஏரி (தாங்கல்).
41. ஏரி.
42. ஏரி.
43. ஆற்று வரைவு கால்வாய்.
44. தாங்கல்.

[1984 மார்ச்

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஏரிகளைப் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

45. தாங்கல்.
46. ஏரி.
47. ஏரி.
48. ஏரி.
49. தாங்கல்.
50. பெரிய ஏரி.
51. ஓடை.
52. மடுவு.
53. பெரிய ஏரி.
54. தக்கதுரை தாங்கல்.
55. ஏரி.
56. ஏரி.
57. பழைய ஏரி.
58. தாங்கல்.
59. குட்டை.
60. தென் பாதி தாங்கல்.
61. காட்டேரி.
62. ஏரி.
63. சித்தேரி.
64. பெரிய ஏரி.
65. தாங்கல்.
66. புத்தேரி.
67. மஞ்சள் ஏரி.
68. புத்தேரி.
69. சித்தேரி.
70. தாங்கல்.
71. ஏரி.
72. ஈசா தாங்கல்.
73. பெரிய ஏரி.
74. குளம்.
75. தாங்கல்.
76. ஏரி.
77. மடுவு பாமின்.
78. தாங்கல்.
79. தாங்கல்.
80. ஏரி.
81. ஏரி.



1984 மார்ச் 23]

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஏரிகள் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

82. சித்தேரி.
83. ஒட்டன்தாங்கல்.
84. கீழ தாங்கல்.
85. கொசவன் தாங்கல்.
86. பாம்பன் தாங்கல்.
87. ஏரி.
88. தாங்கல்.
89. கூழமங்கலம் ஏரி.
90. பெரிய ஏரி.
91. புத்தேரி.
92. ஏரி.
93. ஒட்டன்தாங்கல்.
94. செம்பாக்கம் ஏரி.
95. ஏரி.
96. தாங்கல்.
97. ஏரி மற்றும் தாங்கல்.
98. தாங்கல்.
99. தாங்கல்.
100. தாங்கல்.
101. ஏரி.
102. பெரிய ஏரி.
103. சித்தேரி தாங்கல்.
104. சித்தேரி.
105. ஏரி.
106. மருதேரி வரவு கால்வாய்.
107. மருதேரி.
108. வேலகுரதான் ஏரி.
109. சித்தேரி.
110. பெரிய ஏரி.
111. கோலன் தாங்கல்.
112. ஏரி (சித்தேரி).
113. ஏரி.
114. காவம்பாக்கம் ஏரி.
115. ஏரி.
116. சித்தேரி தாங்கல்.

[1984 மார்ச் 23

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஏரிகள் பற்றிய விவரங்கள்—தொடர்ச்சி.

117. மலைகான்டு ஏரி.
118. முதுகரை ஏரி.
119. வரைவு கால்வாய்.
120. ஒட்டன்தாங்கல்.
121. ஏரி.
122. பாச்சேரி தாங்கல்.
123. ஒழப்பாக்கம்.
124. வேப்பன் தாங்கல்.
125. வண்ணான் தாங்கல்.
126. ஏரி.
127. கீழத்தாண்டை ஏரி.
128. மேலகாண்டை ஏரி.
129. சித்தேரி.
130. தாங்கல்.
131. தாங்கல்.
132. ஏரி.
133. திருமுடி தாங்கல்.
134. காவான்கரணை ஓடை.
135. ஓடை பாபின்.
136. பாப்பன் தாங்கல்.
137. கிவின் பாமினி.
138. கீழப்பட்டு ஏரி.
139. கடப்பன் தாங்கல்.
140. ஏரி.
141. மதகு பாமின்.
142. ஓரை ஏரி.
143. பெரிய ஏரி.
144. ஊத்துக்குளி தாங்கல்.
145. நாகம்மை பெரிய ஏரி.
146. பெரிய ஏரி.
147. நாகமலை சித்தேரி.
148. வாணியக்குட்ன .
149. வெள்ளரை ஏரி.
150. ஏரி.
151. சித்தேரி.
152. ஏரி.



1984 மார்ச் 23]

ஆண்டு வாரியாக செலவு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரங்கள்.

| ஆண்டு. | ஏரிகளின் விவரம். | செலவு செய்யப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய் |
| 1979-80 | விச்சூரி ஏரி பராமரிப்பு .. .. | 1,465.0 |
| | நாகம்மை பெரிய ஏரி பராமரிப்பு | 187.00 |
| | வில்வராயநல்லூர் ஏரி பராமரிப்பு.. | 669.00 |
| | காத்தமை சித்தேரி தாங்கல் பராமரிப்பு. | 1,776.00 |
| | காத்தமை மழை சந்து ஏரி .. | 808.00 |
| | மதகு புதுப்பித்தல் .. .. | .. |
| | காத்தமை மழை சந்து ஏரி பராமரிப்பு | 1,868.00 |
| | மேலகாண்டை தாங்கல் பராமரிப்பு | 2,410.00 |
| | குன்னத்தூர் பெரிய ஏரி பராமரிப்பு | 1,636.00 |
| | சூரை வாணியன்தாங்கல் பராமரிப்பு | 1,337.00 |
| | புழுதிவாக்கம் வெண்ணகுத்தம் ஏரி பராமரிப்பு. | 1,249.00 |
| | மேலகாண்டை ஏரி பராமரிப்பு .. | 2,494.00 |
| | நேத்தப்பாக்கம் கூழமங்கலம் ஏரி பராமரிப்பு. | 1,497.00 |
| | மருவலம் பூதேரி பராமரிப்பு .. | 1,185.00 |
| | நெல்வாய் பூதேரி மதகு புதுப்பித்தல். | 12,763.00 |
| | மேல்மா தாங்கல் பராமரிப்பு .. | 1,127.00 |
| | சாலையூர் கூழந்தாங்கல் பராமரிப்பு | 2,210.00 |
| | முருகரை ஏரி மதகு புதுப்பித்தல் .. | 1,898.00 |
| | ஆமையம்பட்டு ஏரி மதகு புதுப்பித்தல். | 8,797.00 |
| | நாகமலை ஏரி மதகு புதுப்பித்தல் | 9,763.00 |
| | பெருவேலி ஏரி மதகு புதுப்பித்தல் | 1,500.00 |
| | | ரூ 56,639.00 |

| ஆண்டு. | ஏரிகளின் விவரம். | செலவு செய்யப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய் |
| 1980-81 | சாத்தமை ஏரி மதகு புதுப்பித்தல் | 9,224.00 |
| 1981-82 | காவாதூர் சித்தேரி பராமரிப்பு .. | 6,976.00 |
| | சித்தாமங்கலம் தாங்கல் பராமரிப்பு | 2,960.00 |
| | அண்டவாக்கம் வாணியன் தாங்கல் | 7,648.00 |
| | மேல்மா தாங்கல் பராமரிப்பு .. | 7,726.00 |
| | கோடித்தண்டலம் தாங்கல் பராமரிப்பு. | 12,316.00 |
| | மங்கலம்பூதேரி தாங்கல் பராமரிப்பு. | 12,520.00 |
| | நெல்லி பெரிய ஏரி பராமரிப்பு .. | 14,276.00 |
| | நெல்லி கூழந்தாங்கல் பராமரிப்பு .. | 7,366.00 |
| | பள்ளியகரம் தெம்பாக்கம் பராமரிப்பு. | 14,888.00 |
| | அண்டாவக்கம் பூதேரி பராமரிப்பு | 9,427.00 |
| | அண்டாவக்கம் ஓட்டேரி பராமரிப்பு | 12,331.00 |
| | நெல்லி பெரிய ஏரி பராமரிப்பு .. | 19,594.00 |
| | சூரை வாணியந்தாங்கல் .. .. | 11,713.00 |
| | | 1,39,741.00 |



## இணைப்பு V.

(116 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கால்நடைப் பராமரிப்பு கொள்கை விளக்கம்.

### I. முன்னுரை.

கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் அனைத்தும் கிராமப் புற மக்களின், குறிப்பாக, சிறுவிவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தின் நலிந்த பிரிவினரின் பொருளாதார நிலையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் அரசினால் செயல்படுத்தப்படுகின்றன. இது தவிர, கால்நடை உபதொழில்கள் மூலம் கிராமப்புறங்களில் கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

கால்நடைப் பராமரிப்பு நம் மாநிலத்திலுள்ள விவசாயிகளின் முக்கிய உபதொழிலாகும். இது அவர்களுக்கு மிகவும் தேவைப் படும் கூடுதல் வருமானத்தை அளிக்கிறது. பால், இறைச்சி, முட்டை போன்ற நுகர்பொருட்கள் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. நம் மாநிலத்திலுள்ள கால்நடை வளர்ப்போர், அவர்களுடைய கால்நடைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்தி, அதன் மூலம் அவர் தம் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு பற்பல வழிகளில் கால்நடைப் பராமரிப்புத்துறை பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற அத்தியாவசிய மருத்துவப் பணிகளை இத்துறை அளிக்கிறது. இவை தவிர, உள்ளூர் ஆவினங்களின் வம்சமரபை மேம்படுத்துவதற்குத் தேவைப்படும் அயலினக் காளைகள், கலப்பினங்கள் மற்றும் தூய தரமுயர்ந்த நாட்டினக் காளைகள் போன்ற இதர வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

மேலும், கால்நடை தீவனப் பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கேந்திர கிராமத் திட்டங்களின் மூலம் மானிய விலையில் விதைப் பொருட்கள் மற்றும் புல் நறுக்குகளை வழங்குவதுடன், ஊக்கத் தொகையும் அளிக்கப்படுகிறது. செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் பிறந்த உயர்ரகக் கிடேரிக் கன்றுகளை வளர்க்கும் பொருட்டு கன்று மானியத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட கன்றுகளுக்கு மானியம் வழங்கப் படுகிறது. சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம், மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்

டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய வற்றின் மூலம் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டங்களின் மூலம் கறவை மாடுகள் வளர்க்க உதவிகள் அளிக்கப்படுகின்றன.

### கால்நடை அபிவிருத்தி.

நாட்டின் நல்வாழ்வின் அடையாளம் கால்நடைச் செல்வத்தின் வளர்ச்சியே. எனவே, கால்நடை உற்பத்தியின் ஏற்றத்திற்காக அரசு மிகச் சிறப்புடன் முனைந்துள்ளது. பால், இறைச்சி, முட்டை மற்றும் உழைப்புத் திறன் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான தரமுள்ள பசுவினம், ஆட்டினம், பன்றியினம் மற்றும் கோழியினம் ஆகியவற்றைத் தர முயர்த்தி அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதற்கான வகையில், கால்நடை அபிவிருத்திக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடை வளர்ப்புக் கொள்கையின் சுருக்கம் பின்வருமாறு :—

(1) நம் மாநிலத்திலுள்ள சமவெளிப்பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் முறையே அயலினங்களான ஜெர்சி மற்றும் ப்ரீசியன் காளைகளின் விந்தைக்கொண்டு கலப்பின அபிவிருத்தியால் உள்ளூர் ஆவினங்கள் தரமுயர்த்தப்பட்டு, 50 சதவிகிதம் அயலின மரபும், 50 சதவிகிதம் உள்ளூர் மரபுடைய வம்சாவழி உருவாக்கப்படுவதுடன் கூடுதல் பால்உற்பத்தி சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி ஆகிய இரட்டை நோக்கங்களை நிறைவேற்றுதல்.

(2) உள்நாட்டு இனங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் ஹலிக்கார் இனங்கள் நம் மாநிலத்தில் அவற்றின் பிறப்பிடங்களில் பாதுகாக்கப்படுவதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட இன விருத்தி மூலம் மேம்படுத்துதல்.

(3) இன்னமும் குறிப்பிடத் தக்கத் திறனுள்ள உழைப்பு வர்க்கங்களின் உழைப்புத் திறன் அவற்றின் பிறப்பிடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இனவிருத்தி மூலம் மேம்படுத்துதல்.

(4) உள்ளூர் எருமையினங்களை முர்ரா, சுருத்தி போன்ற எருமை இனங்களுடன் தரமுயர்த்தல்.

(5) ஆவின வளர்ப்பில் படிப்படியாக, உறைவிந்து தொழில் முறையைக் கையாளுதல்.

(6) இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இம் மாநிலத்தில் ஆட்டினங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் இன விருத்தி செய்தல்.



(7) கால்நடை வளர்ப்பின் ஒருங்கிணைந்ததோர் பகுதியாக தீவனப்பயிர் நாற்றுகள், விதைகளை உற்பத்தி செய்து, தீவனப் பயிர் சாகுபடியை அபிவிருத்தி செய்தல்.

(8) நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான சிறந்த மருத்துவ வசதிகள் அளித்தல்.

(9) குறுகிய காலத்தில் மாநில முழுமையும் படிப்படியாக உறைவிந்து தொழில் நுட்பத்தை விஸ்தரிக்கப்படுதல்.

### II. வளர்ச்சித் திட்டங்கள்.

(1) மேற்கண்ட கொள்கையின் அடிப்படையில், மாநிலத்தில் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்கள் அனைத்தும் திட்டப்பட்டு, செயற்படுத்தப்படுகின்றன. செயற்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் நோக்கமும், முன்னேற்றமும் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) கேந்திர கிராமத் திட்டம்.

கலப்பின விருத்தி அல்லது தரஇனவிருத்தி, மற்றும் கலப்பற்ற இனவிருத்தி மூலம் அந்தந்தப் பகுதிகளில் பால் மற்றும் உழைப்பு வர்க்க ஆவினங்களின் தரத்தை மேம்படுத்துவதே கேந்திர கிராமத் திட்டங்களின் நோக்கமாகும். இத்திட்டம் மொத்த இனவிருத்தி எண்ணிக்கையான சுமார் 10,000 பசுக்களும் பெண் எருமைகளும் உள்ள ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இக்கிராமங்களிலுள்ள தரமற்றக் காளைகள் அனைத்துக்கும் ஆண்மை நீக்கம் செய்யப்படுவதுடன், கேந்திர கிராம வட்டாரங்களில் பராமரிக்கப்படும் காளைகளைக்கொண்டு செயற்கை முறை கருத்தரிப்பு மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது. இது தவிர, சினைப் பரிசோதனை, கன்று பிறப்பு சோதனை, தடுப்பூசி போடுதல், நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், பசுந்தீவனம் பயிரிடுவதற்கு ஊக்கத் தொகை அளித்தல் மற்றும் சிறந்த கன்றுகளை நன்முறையில் பராமரிப்பதில் ஊக்கமளிப்பதற்காக கன்று மானியம் அளித்தல் போன்ற பணிகளும் இத் திட்டத்தின்கீழ் ஆற்றப்படுகின்றன. இவ்விதமாக மூலப்பொருட்கள் அளிக்கப்படுவதுடன் விஸ்தரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 620 கிளை நிலையங்களுடன் கூடிய 62 கேந்திர கிராம வட்டாரங்கள் இயங்கி வருகின்றன.

(3) கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம்.

கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் நெருக்கமான நகர்களிலும் மற்றும் நகர்ப்புறப்பகுதிகளிலும் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கால்நடைப் பராமரிப்பு, தீவனமுறைகள், நோய்த்தடுப்பு, விற்பனை வசதிகள், மற்றும் தீவனப் பயிர் வளர்ப்புபோன்ற ஒட்டுமொத்த வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பால்வள அபிவிருத்திக்கான அணுகுமுறைக்கருத்துக்கள் அனைத்தையும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் அளிக்கப்படுகின்றன. நல்ல பால்வளப் பகுதிகளடங்கிய நகர்களிலும், நகர்ச் சுற்றுப்புறங்களிலும் முதலாவது இத்திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சிறந்த அயலினக் காளைகளைக் கொண்டு பசு இனங்களையும், முர்ரா காளைகளைக் கொண்டு எருமையினங்களையும் தரமுயர்த்துவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். தீவனப் பயிர் கிடைப்பதற்கான வழிவகைகளை அதிகரிக்கச் செய்து போதுமான சத்துள்ள தீவனங்கள் கிடைக்கும்படிச் செய்தல், தக்க மருத்துவ வசதிகள் அளித்தல், பால் வள விஸ்தரிப்புப் பணிகளாற்றுதல் போன்றவைகளும் திட்டத்தின் இதர பணிகளாகும்.

ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் இனவிருத்திக்கேற்ற 50,000 பசுக்களும், எருமைகளும் உள்ளன. மதுரை கால்நடை அபிவிருத்தித் திட்டம் மட்டும் இனவிருத்திக்கான 1,00,000 பசுக்களையும், எருமைகளையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்தின் கீழும், 2 மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களும், அவை ஒவ்வொன்றின் கீழும் 25 கிளை நிலையங்களும் உள்ளன. மதுரைத் திட்டத்தின்கீழ் மட்டும் மத்திய விந்து சேகரிப்பு நிலையமும், 4 செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களும் உள்ளன. செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களில் கலப்பற்ற அயலினக் காளைகளும், கலப்பினக் காளைகளும் மற்றும் சிறந்த தரமுள்ள இந்திய இனக் காளைகளும், முர்ரா காளைகளும் பராமரிக்கப்படுகின்றன. இக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் தரமான விந்து, செயற்கை முறை இனவிருத்தி மூலம் உள்ளூர் ஆவினங்களின் தரத்தினை உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

கால்நடை வளர்ப்போரில் பெரும்பான்மையோர் மிகவும் எளியவர்களாக இருப்பதால், செயற்கை முறை இனவிருத்தி மூலம் பிறக்கும் சிறந்த உயர் ரகக் கன்றுகளைத் தகுந்த முறையில் பராமரிப்பதற்கான ஊக்கத் தொகைகள் கொடுப்பதன் மூலம் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதன்படி, செயற்கை முறை மூலம் பிறக்கும் கன்றுகளின் உரிமையாளர்களுக்கு கன்று ஒன்றுக்கு பிரதி மாதம் ரூ. 10 வீதம், அவைகள் 3 வயதாகும் வரை அல்லது பருவம் எய்தும் வரை இதில் எது முன்னதோ அது வரை, மானியம் அளிக்கப்படுகிறது. அக்குறிப்பிட்டக் காலம் முடிவுறும்போது, மாதமொன்றுக்கு ரூ. 5 வீதம் மொத்தமாக மானியத் தொகை வழங்கப்படுகிறது. விவசாயிகளும், கால்நடை உரிமையாளர்களும் கால்நடை தீவனப் பயிர் சாகுபடி செய்வதில் ஊக்குவிக்கும் பொருட்டு திட்டப்பகுதிகளில் மானிய உதவி போன்றவைகள் வழங்கப்படுகின்றன.



தற்போது 10 கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் முறையே மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, பண்ருட்டி, தாம்பரம் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இதில், சிதம்பரம் திட்டம் 1983-84 ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகும்.

(4) பொலி காளை நிலையங்களும், உறை விந்து தொழில் நுட்ப விஸ்தரிப்பும்.

நம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் முறையே 59 பொலி காளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களில் உயர் ரகத் தரமான அயலினக் காளைகளும், கலப்பினக் காளைகளும் மற்றும் தரமான உள்நாட்டு இனக் காளைகளும் பராமரிக்கப்படுகின்றன. இந்த நிலையங்களில் சேகரிக்கப்படும் விந்து துறையின் பல்வேறு நிறுவனங்களில் ஆற்றப்படும் செயற்கை முறை இனவிருத்திப் பணிக்காக விநியோகிக்கப்படுகிறது.

திரவ விந்துக்குப் பதிலாக உறை விந்தைப் பயன்படுத்துவது ஆவின வளர்ப்பில் அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். முன்னோடித் திட்டமாக, சைதாப்பேட்டை, காஞ்சீபுரம், இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் செங்கற்பட்டு ஆகிய ஐந்து இடங்களிலுள்ள நிலையங்களில் உறைவிந்து செயற்கை முறைக் கருவூட்டல் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்தில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், ஈச்சங்கோட்டையில் அமைக்கப்பட்ட உறை விந்து வங்கியும், அபிஷேகப்பட்டியில் நிறுவப்பட்டுள்ள திரவ நைட்ரஜன் மற்றும் உலர் நிலையம் 1983-84ல் உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியின்கீழ் மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு, வட ஆற்காடு, பெரியார், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 211 நிலையங்களில் உறை விந்து முறையைக் கையாளுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆக தமிழகத்தில் 226 நிலையங்களில் தற்போது

உறை விந்து முறை கையாளப்பட்டு வருகிறது. இது தவிர, பால் பெருக்குத் திட்டத்தைச்சாரா, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள 400 கால்நடை மருத்துவ நிலையங்களில், ரூ. 117.31 இலட்சம் செலவில், 7 இலட்சம் இனப் பெருக்கப் பசுக்களையும், எருமைகளையும், உறை விந்து தொழில் நுட்பத்தின் கீழ் கொண்டு வருவதற்கானப் பணிகளும் முன்னேற்றத்திலுள்ளது.

இந் நவீன தொழில் நுட்பத்தை வெற்றிகரமாகக் கையாளும் நோக்குடன் இது வரை 567 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும், 497 கால்நடை ஆய்வாளர்களுக்கும் இம்முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 135 கால்நடை ஆய்வாளர்களுக்கு 1983-84 ஆம் ஆண்டில் இம்முறையில் பயிற்சி அளிக்கப்படும்.

(5) வம்சாவழி ஆய்வுத் திட்டம் :

ஒசூர் பண்ணையில் சிவப்பு இன சிந்தி காளைகளுக்காக துவங்கப்பட்ட வம்சாவழி ஆய்வுத் திட்டம், மாநிலத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தாய்-மகள் பசுக்களின் பால் உற்பத்தியை ஒப்பிட்டுப் பார்த்து, அதன் மூலம் தந்தையின் உற்பத்தித் திறன் தன்மையை ஆய்வு செய்வதாகும். இதுவரை ஆறு காளைகள் அடங்கிய 5 தொகுதிகளின் சோதனை முடிவடைந்துள்ளது. இவ்விதம் ஒவ்வோராண்டும் 5—6 வம்சாவழி சோதனை செய்யப்பட்ட காளைகள் கிடைக்கப் பெற்று, அவை மாநிலத்திலுள்ள பொலி காளை நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. பால் உற்பத்திக்கான சிறந்த காளைகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு இத் திட்டம் உதவுகிறது.

ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஏற்படுத்தப்பட்டுள்ள முர்ரா எருமையினங்களுக்கான வம்சாவழி ஆய்வுத் திட்டத்தின் நோக்கம், எருமைப்பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தரமுள்ள முர்ரா எருமை காளைகளைப் பெறுவதேயாகும். முதல் தொகுதியாக 100 பெண் எருமைகளுக்கு 4 முர்ரா காளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து பெறப்படும் கிடேரிகள் கன்று ஈன்ற பின்னர், தாய்-மகள் பசுக்களின் பால் அளவு ஒப்பிடப்பட்டு, அதன் மூலம் தந்தையின் பால் உற்பத்தி ஆற்றல் மதிப்பிடப்படும்.





(6) கால்நடை கண்காட்சிகளும், விளக்கக் காட்சிகளும் :

நவீன முறையில் கால்நடை இனப் பெருக்கம் செய்தல், தீவனமிடுதல், பராமரித்தல், போன்றவற்றில் விவசாயிகளுக்கு போதிய அறிவு அளிக்கும் வகையில் வருடந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் அரசினால் கால்நடைக் கண்காட்சிகளும், விளக்கக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் பொதுமக்களின் மனதில் கால்நடை வளர்ப்பைப் பற்றிய ஆர்வம் உண்டாவதுடன் கால்நடை வளர்ப்போரிடையே போட்டி மனப்பான்மையும் உருவாக்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கேந்திர கிராம திட்டப் பகுதிகளில் கால்நடை கண்காட்சிகளும், கன்றுகளின் திரள் அணிவகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

(7) ஆடு வளர்ப்பு ;

கால்நடை வளர்ப்போர் அனைவரிலும் ஆடு வளர்ப்போரே கிராமப் புறங்களிலுள்ள மிகவும் நலிந்த பிரிவினர் ஆவர். என்வே அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கால்நடை பராமரிப்பில் சிறந்த கவனம் செலுத்தவேண்டியது அவசியமாயுள்ளது. ஆகவே, ஆடு வளர்ப்புத் திட்டங்கள் அனைத்தும் கிராமப்புறங்களிலும், மலைப்பகுதிகளிலும் வாழும் நலிந்த சமுதாயத்தினரின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் தீட்டப்படுகின்றன. இறைச்சி வர்க்க ஆடுகள் சமவெளிப்பகுதிகளிலும், கம்பளி வர்க்க ஆடுகள் மலைப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றன.

சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு மானியம், தொழில்நுட்ப உதவி போன்ற அரசின் உதவியுடன் ஆடு வளர்ப்பு சிறு பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இலாபகரமான வேலை வாய்ப்பை உருவாக்க உதவும் வகையில் சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

[1984 மார்ச் 23

சின்ன சேலத்திலும் மற்றும் சாத்தூரிலும் இயங்கும் ஆட்டுப்பண்ணைகளிலும், மாவட்டக் கால்நடை பண்ணைகளுடன் இணைக்கப்பட்டுள்ள 4 ஆடு வளர்ப்பு நிலையங்களிலும் உள்ளூர் இனங்களான கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர், மேச்சேரி மற்றும் மாண்டியா ஆகியவை பராமரிக்கப்படுகின்றன. இப்பண்ணைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனவிருத்தி மூலம் இவ்வினங்களின் தரம் மேம்படுத்தப்படுகிறது. மேச்சேரி, மாண்டியா இனக்கிடாக்களைக் கொண்டு இனமறியப்படாத நாட்டினங்களின் தரம் உயர்த்தப்படுகிறது. ஓசூரிலுள்ள கால்நடைப் பண்ணையில், கோரிடேல் மாண்டியா இனங்களுடன் கலப்பினம் செய்வது பற்றி ஆய்வு நடைபெறுகிறது.

ஆடுகள் கிராம சமுதாயத்தின் நலிந்த பிரிவினரால் பராமரிக்கப்படுவதால், எந்தவொரு ஆடுவளர்ப்பு நடவடிக்கையையும் மேற்கொள்ளும் முன்பு முதலாவது அவர்களை ஒன்றமைக்க வேண்டியது அவசியமாகும். அந்நோக்கைக் கருத்திற் கொண்டு, ஆடுவளர்ப்போரின் பயனுக்காக கிராம அளவில் ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்படுகின்றன. தற்போது தமிழகத்தில் 787 சங்கங்கள் உள்ளன. இதில் 39 சங்கங்கள் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் கீழும், 287 சங்கங்கள் சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டங்களின் கீழும், 189 சங்கங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டு திட்டதின் கீழும், 4 சங்கங்கள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 3 சங்கங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், 265 சங்கங்கள் இதர திட்டங்களின் கீழும் இயங்கி வருகின்றன.

பெருமளவில் குடற்புழு நீக்கம் செய்வதின் மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டமொன்று 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 3.75 இலட்சம் செலவில் செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. தமிழக முழுவதுமுள்ள ஆடுகளுக்கு நோய் நீக்கப் பணிகள் அளிக்கும் திட்டமொன்று 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 34.53 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த தரமுள்ள இறைச்சி, தோல் மற்றும் கம்பள உற்பத்திக்குத் தடையாக இருக்கின்ற உண்ணிகளும் குடற்புழுக்களும் ஒழுங்கான வரையறுக்கப்பட்ட இடைவெளியில் நீக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1982-83-ல் ரூ. 34.53 இலட்சமும், 1983-84-ல் ரூ. 17.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டது.

சமீப காலத்தில் நம் மாநிலத்தில் ஆடு வளர்ப்பு பெருமளவில் விரும்பப்படுவதால், ஆடு வளர்ப்போருக்குக் குறுகிய காலப் பயிற்சியளிக்கும் திட்டமொன்று அமல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் 1982-83-ல் 400 இளைஞர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு பயனடைந்தனர். 1983-84-ல் மேலும் 400 இளைஞர்கள் பயிற்சிக்கப்படுவார்கள்.



1984 மார்ச் 23]

(8) வெள்ளாடு வளர்ப்பு :

வெள்ளாடு வளர்ப்பில் முதற்படியாக, புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப்பண்ணையில் வெள்ளாடு இனவிருத்தி நிலையமொன்று நிறுவப்பட்டு, அங்கு தலைச்சேரி வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டின் வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்தும் நோக்குடன், தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ நிலையங்களில் ஜமுனாபாரி, தலைச்சேரி வெள்ளாட்டுக் கிடாக்கள் பராமரிக்கப்பட்டு, கலப்பினப் பெருக்கம் செய்யப்படுகிறது.

இராமேஸ்வரத்திலுள்ள நாட்டின வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கானத் திட்டமொன்று 1982-83-ல் ரூ. 0.51 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வெள்ளாடு இனப்பெருக்கத்திற்காக 50 சதவிகிதம் செலவில் சிறந்த ஜமுனாபாரி வெள்ளாட்டுக் கிடாக்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதுவரை ஆடு வளர்க்கும் 50 பேருக்கு ஜமுனாபாரி வெள்ளாட்டுக் கிடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஆடு அபிவிருத்தித் திட்டம் :

உலகவங்கியின் உதவியுடன் தமிழகத்தில் துவக்க உருவாக்கப்பட்டத் திட்டம் முதற்கட்டமாக வடஆற்காடு, தென்னாற்காடு, சேலம், செங்கற்பட்டு மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ரூ. 1,613.13 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். தற்போது, இத்திட்டத்திற்காக பம்பாய் வேளாண்மை நிதிக் கழகத்தினால் தயாரிக்கப்பட்ட தொழில்திறன் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் நோக்கங்கள், தரமுள்ள இறைச்சி வர்க்க ஆடுகளை அபிவிருத்தி செய்வதற்கும், அயலின ஆடுகளை இறக்குமதி செய்வதற்கும், அயலின ஆடுகளின் இனவிருத்திப் பண்ணைகள் மற்றும் கிடாப் பெருக்கப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கும், இனப்பெருக்கத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடுவளர்ப்போருக்குக் கிடாக்களை விநியோகிப்பதற்கும் தேவையான மேய்ச்சல், தீவனப் பயிர் அபிவிருத்தி போன்ற வசதிகள் அனைத்தையும் அளிப்பதேயாகும்.

கூட்டுறவுப் பயிற்சிக்கு அலுவலர்கள் அனுப்புதல் :

தற்போது தமிழகத்தில் 787 ஆடுவளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள கால்நடை உதவி இயக்குநர்களாலும் கால்நடை உதவி மருத்துவர்களாலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இச் சங்கங்களைத் திறம்பட செயல்படுத்துவதற்காக கூட்டுறவு சங்க விதிமுறைகள், சட்டங்கள் ஆகியவற்றில் கால்நடைப் பராமரிப்புத் துறையிலுள்ள 300 அலுவலர்களுக்குப் பயிற்சி யளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 20 கால்நடை உதவி இயக்குநர்களுக்கும், 40 கால்நடை உதவி மருத்துவர்களுக்கும் 30 நாட்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சி யளிக்கப்படும். படிப்படியாக இதர அலுவலர்களுக்கும் பயிற்சி யளிக்கப்படும். கூட்டுறவு சங்கங்களை வெற்றிகரமாக செயல் படுத்துவதற்கு இப்பயிற்சி பெரிதும் உதவும்.

செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளிடையே இனப் பெருக்க மற்றும் இறப்பு விகிதத்தை மதிப்பீடு செய்து, தகுந்த மாதிரியை வரையறுக்கும் திட்டமொன்று மத்திய அரசின் உதவியுடன் 1983-84-ல் செயலாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் ஆய்வு, ஆடுகளின் ஆயுள் கால அட்டவணை தயாரிக்கவும், ஆட்டினத் தொகையை வரும் ஆண்டுகளுக்குக் கணிக்கவும் உதவுகிறது. இத் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

(9) கோழி வளர்ப்பு :

சாதாரணமாகக் கிராமப்புறங்களில் கோழிகள் வீடுகளின் பின்புறங்களில் வளர்க்கப்படுகின்றன. கோழி வளர்ப்பில் பொதுமக்களுக்குத் தேவையான தகுந்த வழிகாட்டியாக இம்மாநிலத்தில் 2 குஞ்சுபொரிக்கும் நிலையங்களும், 29 கோழி விஸ்தரிப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் கலப்பற்ற வெள்ளை லெக்கார்ன் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இனப்பெருக்கத்திற்கான கோழிகளையும் முட்டைகளையும் இந்நிலையம் விற்பனை செய்கிறது.



கோழி வளர்ப்போருக்கு உதவும் வகையில் 10 கோழி வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் செயற்படுத்தப்படுகின்றன. கோழி வளர்ப்புக் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கு தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனுதவி பெறுவதற்கு இச்சங்கங்கள் உதவுகின்றன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங் கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் மூலம் ஏராளமான கோழி வளர்ப்புப் பிரிவுகள் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஈரோட்டில் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடமும் இயங்க ஆரம்பித்துள்ளது. இக்கூட்டத்தில் பணிபுரியும் அலுவலர் கள் ஒரு மாதத்தில் 50 முதல் 75 கிராமங்கள் மற்றும் தனியார் கோழிப் பண்ணைகள் ஆகியவற்றைப் பார்வையிடுகின்றனர். அவ் விடங்களில் பல்வேறுவிதமான நோய்வாய்ப்பட்ட கோழிகளின் மாதிரிகளை சேகரித்து குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் நோய் கள் பற்றி ஆய்வு செய்கின்றனர். பொதுமக்களுக்கு ஏற்றவிதத் தில் பயன்பெறும் பொருட்டு, இக்கூடம் நோய் மாதிரிகளை அதிக அளவில் சேகரித்து, ஆய்வு செய்யும் பணிகள் அதிகரிக்கப் பட்டு வருகின்றன.

(10) பன்றி வளர்ப்பு

சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களால் பன்றிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நாட்டினப் பன்றிகளின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தமிழகத்தில் இயங்கும் 6 பன்றி வளர்ப்புப் பிரிவுகளிலும், வெள்ளை யார்க்ஷையர் பன்றிகள் பராமரிக்கப்படுகின்றன.

நாட்டினப் பன்றிகளைத் தரமுயர்த்துவதற்குத் தேவையான இனப் பெருக்கத்திற்கான ஆண் பன்றிகளை இந்நிலையங்கள் விநியோகிக்கின்றன. சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பன்றிவளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

### (11) நாய் இனப்பெருக்க நிலையம்.

நாய் இனப்பெருக்க நிலையமொன்று சைதாப்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனையில் இயங்கி வருகிறது. மறைந்துபோகும் நிலையிலிருந்த நாட்டினங்களான இராஜபாளையம், கோம்பை போன்ற இன நாய்களைப் பாதுகாத்து, காவல்துறையினருக்கும், விருப்பமுள்ள பொதுமக்களுக்கும் கிடைக்கும் வகையில் ஆவன செய்வதே இந்நிலையத்தின்நோக்கமாகும். 1983-84-ம் ஆண்டில் இதுவரை 11 இராஜபாளையம் நாய்க் குட்டிகளும் 4 கோம்பை நாய்க்குட்டிகளும் விற்கப்பட்டு அதன் மூலம் ரூ. 4,750 வரவு கிடைத்துள்ளது.

### (12) பசுந்தீவனப் பயிர் வளர்ப்பு.

ஆவின வளர்ப்பில் கவனிக்கப்படவேண்டிய முக்கிய கூறு பசுந்தீவனம் உற்பத்தி செய்வதேயாகும். இதன் மூலம் மாடு ஒன்று கொடுக்கும் பாலின் அளவை அதிகரிக்கச் செய்வதுடன், பால் உற்பத்திக்காகும் செலவையும் பெரிதும் குறைக்கலாம்.

அரசு பண்ணைகளிலுள்ள மாடுகளுக்குத் தேவையான பசுந்தீவனத்தை உற்பத்தி செய்யும் வகையில் மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் அனைத்திலும் பசுந்தீவனப் பயிர் உற்பத்திக்குத் தக்க முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மக்களுக்கு புல்நறுக்குகளும் தீவன விதைகளும் விற்கப்படுகின்றன. இரண்டாவதாக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திலுள்ள கோல்கிரேன், குருத்துக்குளி பண்ணைகளிலும் மற்றும் உதகமண்டலத்திலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும் மிகுதியான பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாவதாக தற்போதுள்ள 8 பசுந்தீவன விதை உற்பத்தி நிலையங்களிலும் பசுந்தீவன வளர்ப்புக்கான நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. இவற்றுள் ஒசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையிலும், மாதவரத்திலுள்ள அரசு பால்வளப் பண்ணையிலும் ஆக 2 நிலையங்கள் 1983-84 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும். மேலும் தற்போதுள்ள கால் நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் மானிய விலையில் புல்நறுக்குகளும் மற்றும் தீவன விதைகளும் கிடைக்கும்படிச் செய்வதுடன், இலவச அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. விவசாயிகளைப் பசுந்தீவன உற்பத்தியில் நாட்டங்கொள்ளச் செய்யும்படியாக சென்ட் ஒன்றுக்கு மானியமாக ரூ. 4 ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.



### (13) சிறப்புத் திட்டங்கள்.

பொதுவாக செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களைத் தவிர எளிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் சிறப்புத் திட்டங்களும் அரசினால் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின் சுருக்கம் கீழே கொடுக்கப்படுகிறது;

#### (1) சிறப்பு கால்நடை உற்பத்தித் திட்டம்.

இத்திட்டம் கன்றுகளைப் பராமரிப்பதிலும் ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதிலும் சிறு குறுநில விவசாயிகள் வேளாண் தொழிலாளர்களுக்கு உதவுகிறது. இத்திட்டம் பல்வேறு நிர்வாகத்தால் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகின்றன:—

| திட்டம். | நிர்வாகம். | மாவட்டங்கள். |
|---|---|---|
| (1) ஆடு உற்பத்தித் திட்டம். | கால்நடைப் பராமரிப்புத் துறை. | வடஆற்காடு, சேலம் மற்றும் திருநெல்வேலி. |
| (2) பன்றி உற்பத்தித் திட்டம். | கால்நடைப் பராமரிப்புத்துறை. | வட ஆற்காடு மற்றும் மதுரை. |
| (3) கன்று வளர்ப்புத் திட்டம். | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சம்மேளனம். | வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை. |
| (4) கோழி உற்பத்தித் திட்டம். | தமிழ் நாடு கோழி வளர்ச்சி நிறுவனம். | செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம் மற்றும் மதுரை. |

ஆடு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 20 பெட்டைகளும், ஒரு கிடாவும் அடங்கிய பிரிவு ஒன்றுக்கு ஆகும் மொத்தத் தொகையான ரூ. 4,000-ல் சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,000-ம், குறுநில விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் ரூ. 1,330-ம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் விவசாயிகள் பொருளாதார நிலையில் பெரிதும் ஏற்றம் பெற்றிருப்பதால், இத்திட்டத்திற்குப் பொது மக்களிடையே நல்ல வரவேற்புள்ளது. 1983-84-ம் ஆண்டில் மாவட்டமொன்றுக்கு 400 பிரிவுகள் வீதம் 1,200 ஆடு வளர்ப்புப் பிரிவுகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பன்றி உற்பத்தித் திட்டத்தின் கீழ் 3 பெட்டைப் பன்றிகள் அடங்கிய பிரிவு ஒன்றுக்கு ஆகும் மொத்த தொகையான ரூ. 5,000-ல் சிறு விவசாயிகளுக்கு ரூ. 1,250-ம், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு ரூ. 1,665-ம் மானியமாக வழங்கப்படுகிறது. 1983-84ஆம் ஆண்டில் 50 பன்றி வளர்ப்புப் பிரிவுகளை எற்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மொத்தச் செலவாகிய ரூ. 2,088-ல் ரூ. 1,044 சிறு விவசாயிகளுக்கும், குறுநில விவசாயி களுக்கும், ரூ. 1,392 வேளாண் தொழிலாளர்களுக்கும் மானிய மாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்தியதின் விளைவாக, திட்டத்தின் கீழுள்ள கன்றுகள் வளர்ந்து கன்று ஈனும்போது, ஒரு கறவைக்குக் கறக்கும் பாலின் அளவு 2,100 லிட்டரிலிருந்து 3,300 லிட்டராக அதிகரித்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 5,000 கன்றுகள் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோழி உற்பத்தித் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்றுக்கு ஆகும் மொத்த தொகையான ரூ. 3,164-ல் சிறு விவசாயிக்கு ரூ. 791-ம் குறுநில விவசாயிகளுக்கும், வேளாண் தொழிலாளருக்கும் ரூ. 1,054-ம் மானியமாகக் கொடுக்கப் படுகிறது. 1983-84-ல், 1,200 பிரிவுகளை மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலுள்ள சிறு விவசாயி கள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர் களுக்குக் கன்று வளர்ப்பில் இத்திட்டம் உதவுகிறது. மதுரை, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட வட்டங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்கப் படுகிறது. 25 மாதங்களுக்குக் கன்று ஒன்றைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவாகிய ரூ. 1,920-ல் சிறு விவசாயிக்கும், மற்றும் குறுநில விவசாயிக்கும் ரூ. 960-ம், வேளாண் தொழிலாளருக்கு ரூ. 1,280-ம் மானியமாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகையை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடனாகப் பெறுவதற்கு ஆவன செய்யப்படுகிறது. இது வரை இத்திட்டத் தின் கீழ் 2,970 பேர் பயனடைந்துள்ளனர். 1982-83-ஆம் ஆண்டில் 500 கன்றுகள் சேர்க்கப்பட்டன. 1981-82-ல் சேர்க்கப்பட்ட 1987 கன்றுகளும், 1982-83-ல் சேர்க்கப்பட்ட 500 கன்றுகளும் 1983-84-ல் தொடர்ந்து மானிய உதவி பெறும்.





(3) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக கால் நடைப் பரா மரிப்பு சுற்றுப்புற சூழ்நிலை வசதிகள் அளிப்பது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் நீலகிரி மாவட்டம் முழுவதையும் உட்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உதகமண்டலம் மாவட்டக் கால்நடைப் பண்ணை வலுப் படுத்தப்பட்டுள்ளது. கோல்கிரேன், குருத்துக்குளி பசுந்தீவனப் பண்ணைகளுக்குக் கூடுதல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. கால் நடை நோய்ப் புலனாய்வு நிலையம் ஒன்றும் 415 ஆடு வளர்ப்புப் பிரிவுகளுடன் கூடிய 4 ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கீழ்குந்தாவில் கால்நடை மருந்தகக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. ரூ. 8.40 இலட்சம் செலவில் 5,884 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. 1983-84-ல் 40 சிறு விவசாயிகளுக்கும், 30 வேளாண் தொழிலாளர்களுக்கும், 30 குறுநில விவசாயிகளுக்குமாக மொத்தமாக 100 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

(4) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

சேலம், தென்னாற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி, மாவட்டங்களிலுள்ள 9 பழங்குடிப் பகுதி களின் பழங்குடியினருக்கு இத்திட்டத்தின் கீழ் கறவை மாடுகள், வேலை மாடுகள் வழங்கப்படுகின்றன. ஆடு மற்றும் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டும் அவர்தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இத்திட்டம் உதவுகிறது. 1982-83-ஆம் ஆண்டில் 1,183 பழங்குடியினர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

1983-84-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 14.78 இலட்சம் செலவில் கீழ்க்கண்டவாறு கால் நடைகள் வழங்கப் படுகின்றன :—

(1) கறவைப் பசுக்கள் —160

(2) ஆடு வளர்ப்புப் பிரிவுகள் —337

(3) வேலை மாடுகள் —375

(4) கன்று மானியத்தின் கீழ் கன்றுகள் —80

(5) கழுதை வளர்ப்புப் பிரிவுகள் —10

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப் பகுதியில் 75 சதவிகிதமும் இதர மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிகளில் 50 சதவிகிதமும் மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ளத் தொகை "லாம்ப்" சங்கத்தின் மூலம் கடனாகப் பெற வழிசெய்யப்படுகிறது.

(5) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

நிரந்தரமான சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிக்கும் நோக்குடன் இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களிலுள்ள கால்நடைப் பண்ணைகள் அப்பகுதியிலுள்ள விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்படி உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அளவில் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் விநியோகித்தல், ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றால், சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களுமாக மொத்தம் 10,100 பேர் பயனடைந்துள்ளனர். இவை தவிர, இயங்கும் மருத்துவப் பிரிவுகள் கால் நடை மருத்துவ நிலையங்கள், பிரதம மருத்துவ நிலையங்களின் மூலம் தடுப்பூசி போடுதல், ஆடுகளுக்கு குடற் புழு நீக்கம் செய்தல், நோயுற்றக் கால் நடைகளுக்கு சிகிச்சையளித்தல் போன்ற பணிகள் ஆற்றப்படுகின்றன.

1983-84ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில், ரூ. 10.51 இலட்சம் செலவில் உறை விந்து முறையை செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தவிர, தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், இம்மாவட்டங்களிலுள்ள கால்நடைப் பராமரிப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கானப் புதிய திட்டங்களுக்காகவும், ரூ. 20,00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 வட்டாரங்கள் தற்போது சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1983-84-ஆம் ஆண்டிற்கு ரூ. 11.65 இலட்சங்கள் செலவினத்தில் 4 கால்நடை மருந்தகங்கள் மற்றும் நடமாடும் மருத்துவப் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(6) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

இத்திட்டம் தமிழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் மத்திய அரசினரால் ஏப்ரல் 1978 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, அக்டோபர் 1980 முதல் எல்லா வட்டாரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய, மாநில அரசினால் 50 : 50 என்ற நிதி உதவி அடிப்படையில் செயலாக்கப்படுகிறது. இது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கண்காணிப்பின் கீழ் வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. கறவை மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள்,



கோழிகள், வேலை மாடுகள் போன்றவைகள் விநியோகம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களாகும், இவற்றின் கீழ் சிறு விவசாயிக்கு 25 சதவிகிதமும் குறுநில விவசாயி மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு 33 113 சதவிகிதமும் மானியமாக வழங்கப்படுகிறது. இவை தவிர, கால்நடைகள் விநியோகித்தல், மற்றும் உறை விந்து இனவிருத்தி, இயங்கும் மருந்தகப் பிரிவுகள், காது அடையாளமிடும் கருவிகள் வழங்கல் போன்ற சில வசதிகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியைக் கொண்டு கால்நடைப் பராமரிப்புத் துறையினால் செயற்படுத்தப்படுகிறது.

(7) ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் அளவீடு :

கால்நடை உற்பத்தி பொருட்களான பால், முட்டை, இறைச்சி மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றின் மதிப்பீட்டை அளவிடும் இத்திட்டம் 1977-78 முதல் தமிழகத்தில் செயற்படுத்தப்படுகிறது. 1982-83-ஆம் ஆண்டு முடிவு வரை 1,365 கிராமங்களில் அளவீடு முடிவு பெற்றுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு அளவீட்டின் மதிப்பீடுகள் பின்வருமாறு : —

பால் உற்பத்தி—1,788.4 ஆயிரம் டன்கள்.

முட்டை உற்பத்தி—898 மில்லியன்கள்.

இறைச்சி உற்பத்தி—27,572,087 கிலோ கிராம்.

(அங்கீகரிக்கப்பட்ட கால்நடை வெட்டுக் கொட்டில்கள்.)

1983-84-ஆம் ஆண்டில் மாவட்ட மாதிரிப் பொருள் அளவீடு திட்டம் ஒன்று செயல்படுத்த அரசு ரூ. 10.854 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் மாவட்டங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை, கால்நடைகளின் உற்பத்தி மற்றும் இதர கால்நடை பராமரிப்பு செயல்முறைகள் போன்றவை பற்றிய விவரமான, நம்பகமான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, குறைந்த கால அளவில் அவற்றின் பலன்கள் வெளியிடப்படும்.

(8) கால்நடை இடைக்கால கணக்கெடுப்பு அளவீடு:

கால்நடைத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பலன்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய, கால்நடை எண்ணிக்கையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்கள் அமைப்புக்கள் பற்றிய உண்மைகளை ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். வருங்காலத்தில் கால்நடை பராமரிப்புத் தொழில் மற்றும் கால்நடைகளை ஏற்றுமதி செய்தல் போன்ற கால்நடை அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டுவதில், இத்திட்டத்தின் வாயிலாகக் கண்டுபிடிக்கப்படும் கால்நடை வளர்ச்சி வீதம் பெரிதும் பயன்படும். 1982 ஆம் ஆண்டுக்கான கால்நடைத் தொகை, மாவட்டங்கள் அனைத்திற்கும் மதிப்பீடு செய்யப்பட்டுவிட்டது. 1983 ஆம் ஆண்டுக்காக இரண்டாம் கால்நடை இடைக்காலக் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முன்னேற்ற நிலையிலுள்ளது.

(9) 13-வது ஐந்தாண்டு கால்நடைக் கணக்கெடுப்பு—1982 :

மத்திய அரசின் கருத்துப்படி, 13-ஆவது கால்நடை மற்றும் வேளாண் உபகரணங்களின் கணக்கெடுப்பு 1982-ல் எடுக்கப்பட்டது. அதன்படி, தமிழகத்தின் பசுவினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள், குதிரைகள், மட்டக் குதிரைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகங்கள் ஆகியவை சேர்ந்து மொத்தமாக 24,792,942 கால்நடைகள் உள்ளன. 1977 ஆம் ஆண்டில் 24,146,248 கால்நடைகள் மட்டுமே இருந்தன. இதிலிருந்து 2.7 சதவிகிதம் அதிகரித்துள்ளது அறியலாகிறது. முதல் தடவையாக நாய்க் கணக்கெடுப்பும் இக் கணக்கெடுப்பில் எடுக்கப்பட்டுள்ளது. நாய்கள் உட்பட மொத்த கால்நடை எண்ணிக்கை 25,768,829 ஆகும்.

(10) ஆடுகளில் பிறப்பு, இறப்பு விகிதம் மதிப்பிடும் முன்னோடி ஆய்வு :

தமிழகத்திலுள்ள ஆடுகளிடையே பிறப்பு, இறப்பு விகிதத்தை மதிப்பிடும் முன்னோடி ஆய்வுத் திட்டமொன்றுக்கு 1983-84-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியா முழுவதிலும் தமிழகமே அதிகமாக ஆடுகளைக் கொண்டுள்ளதால் மேற்படி ஆய்வை முதன்முறையாக மேற்கொள்ளுவதற்காக இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்தால் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.





இத்திட்டத்திற்கு ஆகும் முழுச் செலவும் 50 : 50 விகித அடிப்படையில் மேற்படி கழகத்தாலும் மாநில அரசினாலும் பகிர்ந்து கொள்ளப்படும். செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளின் ஆயுள் கால அட்டவணை தயாரிக்கவும், ஆட்டினத் தொகையை வருமாண்டுகளுக்குக் கணிக்கவும் அவசியமான இனப்பெருக்கம் மற்றும் இறப்பு விகிதத்தை மதிப்பீடு செய்து, தகுந்த மாதிரியை வரையறுப்பதே மேற்படி ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வுக்கான ஆரம்பப் பணிகள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## (III) கால்நடைப் பண்ணைகள்.

கால்நடை வளர்ச்சியில் கால்நடைப் பண்ணைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் இயங்கும் ஒன்பது கால்நடைப் பண்ணைகளும் ''விதைப் பண்ணைகள்'' ஆக இயங்கி வருகின்றன. இத் துறையின் கீழ் இயங்கும் பொலிகாளை நிலையங்களுக்குத் தேவையான உயர்ரகக் காளைகள் இப்பண்ணைகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன. உள்நாட்டு இனங்களான சிந்தி, தார்பார்க்கர், காங்கேயம், உம்பளாச்சேரி, மற்றும் முர்ரா எருமையினமும், அயலினங்களான ஜெர்ஸி மற்றும் ஹால்ஸ்டைன் ப்ரீசியனும் இப்பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன. சில பண்ணைகளில் ஆடு, பன்றி மற்றும் கோழிகளும் பராமரிக்கப்படுகின்றன. திருநெல்வேலி, புதுக்கோட்டை செட்டிநாடு, ஓசூர் மற்றும் மாதவரம் ஆகிய பண்ணைகளில் பசுந்தீவனப் பயிர் விதை உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை :

இம்மாநிலத்திலுள்ள பொலிகாளை நிலையங்களில் கலப்பினப் பணிக்காகத் தேவைப்படும் ஜெர்ஸி இனக் காளைகளைப்பெருக்கி, வழங்குவதே இப்பண்ணையின் நோக்கமாகும், தற்போது இப்பண்ணையில் சுமார் 385 ஜெர்ஸி மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. 1982-83-ஆம் ஆண்டில் 112 ஜெர்ஸி கன்றுகள் பிறந்துள்ளன. இனவிருத்திப் பணிக்காக கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு 36 ஜெர்ஸிக் காளைகள் அனுப்பப்பட்டுள்ளன. இப்பண்ணையில் இயங்கி வரும் தீவனப்பயிர் உற்பத்தி நிலையம் பண்ணை மாடுகளின் பசுந்தீவனத் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது.

[1984 மார்ச் 23

கிடேரி உற்பத்தித் திட்டம் :

தற்போது 2 கிடேரி உற்பத்தி நிலையங்கள் முறையே உதகமண்டலம் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களின் நோக்கம் சிறந்த கலப்பினக் கன்றுகளை 28 மாதங்கள் வளர்த்து, கிடேரிப் பருவத்தில் இலாப-நஷ்டமற்ற அடிப்படையில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் மூலம் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்குவதேயாகும். இதுகாறும் இந்நிலையங்களில் 387 கன்றுகள் வாங்கப்பட்டு, 86 கிடேரிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு :

சின்ன சேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணையில் ஓங்கோல் கால்நடை வளர்ப்புப் பிரிவு இயங்கி வருகிறது. தற்போது இந்நிலையத்தில் 54 ஓங்கோல் மாடுகள் பராமரிக்கப்படுகின்றன. இனப்பெருக்கத்திற்காக ஓங்கோல் இனக் காளைகள் விற்கப்படுகின்றன.

மாடுகள் வாங்குதல் :

தற்போது பொலிகாளை நிலையங்களில் பராமரிக்கப்படும் முர்ரா இனக்காளைகளில் போதுமான சிறந்த வித்து கொடுப்பது நின்று விட்டதால், அக்காளைகளுக்குப் பதிலாக இளங்காளைகளை வைப்பது அவசியமாகும். இவ்விதம் அவ்வப்போது வயதான காளைகளை மாற்றம் செய்வது அத்தியாவசியமாகும். எனவே 1981-82-ஆம் ஆண்டில் 60 முர்ரா காளைகள் வாங்கும்படி அரசு 3.00 இலட்சத்துக்கு ஒப்புதல் அளித்தது, அதன்படி 1982-83-ல் 60 முர்ரா காளைகள் வாங்கப்பட்டு. பொலிகாளை நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன.



1984 மார்ச் 23]

கால்நடைப் பண்ணைகளை சீரமைத்தல் :

தற்போது தமிழகத்தில் 9 கால்நடைப் பண்ணைகளும், 2 ஆட்டுப்பண்ணைகளும் உள்ளன. இப்பண்ணைகளிலிருக்கும் பரந்த பரப்பளவைக் கால்நடைகளுக்குத் தேவைப்படும் தரமுள்ள தீவனப்பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக மிகுதியான நிலப்பரப்பை தீவனப்பயிர் சாகுபடிக்குள் கொண்டுவருதற்குத் தேவையான கிணறுகள், நீரேற்றும் விசைக்கருவிகள், நீர்த் தெளிப்பான்கள், டிராக்டர்கள், வேளாண் கருவிகள் போன்ற நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் கொருக்கை ஆகிய இடங்களிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைகளிலும், சாத்தூரிலுள்ள ஆட்டுப்பண்ணையிலும் அரசு மேற்படி வசதிகளைச் செய்துள்ளது. 1983-84-ஆம் ஆண்டில் ஒரத்தநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ரூ. 3.86 இலட்சம் செலவில் மேற்படி வசதிகள் செய்யப்பட்டு வருகிறது.

(IV) கால்நடை நோய் நீக்கப்பணிகள்.

(1) கால்நடை மருத்துவ நிலையங்கள் :

பல்வேறு வகையான கால்நடை நோய்களைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசின் முதற்கடமையாகும். தற்போது நம் மாநிலத்தில் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை புரிவதற்காக 748 மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| (1) | கால்நடை மருந்தகங்கள் .. .. .. | 600 |
| (2) | கால்நடை மருந்தகங்கள்—கேந்திர கிராம நிலையங்கள். | 72 |
| (3) | கால்நடை மருத்துவமனைகள் .. .. | 55 |
| (4) | கால்நடை மருத்துவமனைகள்—கேந்திர கிராம நிலையங்கள். | 2 |
| (5) | பிரதம மருத்துவமனைகள் .. .. | 19 |
| | | 748 |

இவற்றில் 1983-84-ஆம் ஆண்டில் 26 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டன. 3 மருந்தகங்கள் மருத்துவ மனைகளாகவும், 2 மருத்துவ மனைகள் பிரதம மருத்துவ மனைகளாகவும் உயர்த்தப்பட்டன. நவீன கால்நடை மருத்துவத்தின் பயனை கால்நடை உரிமையாளர்கள் அனுபவிக்கும் நோக்குடன் மேற்படி நிலையங்களில் கூடுதல் மருத்துவ வசதிகளை அளித்து, அரசு அந்நிலையங்களைத் தரம் உயர்த்தியுள்ளது.

கால்நடை மேம்பாட்டு முனைப்பு திட்டம், கேந்திர கிராமத் திட்டம் மற்றும் பால்வள அபிவிருத்திப் பகுதிகளில் மாடுகளிடையே சாதாரணமாகக் காணப்படும் மலட்டுத் தன்மை, சிறுஅளவில் மந்தை வைத்திருக்கும், சிறு மற்றும் குறுநில விவசாயிகளுக்குப் பெரும் பிரச்னையாக உள்ளது. எனவே மருத்துவ நிலையங்களிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மலடு நீக்கக் குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மலட்டுத்தன்மை மாடுகளிடையே ''சிஸ்டிக் ஒவரீஸ்'' ''அன்னிஸ்ட்ரம்'' ''சர்விசைட்டீஸ்'', ''மெட்ரைட்டீஸ்'' போன்ற பல்வேறு காரணங்களினால் உண்டாகிறது. 1982-83-ம் ஆண்டில் 60 கால்நடை உதவி மருத்துவர்கள் ஆறு வாரக் குறுகியகாலப் பயிற்சிக்காக கேரள மாநிலத்திலுள்ள மாட்டுப்பட்டிக்கு அனுப்பப்பட்டனர். 1983-84-ஆம் ஆண்டில் 60 கால்நடை உதவி மருத்துவர்களை அனுப்புவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

கால்நடை மருத்துவத்திலுள்ள நவீன முறைகளை களப்பணிகளில் புகுத்தும் பொருட்டு கால்நடைப் பராமரிப்பு அலுவலர்களையும், கால்நடை உதவி மருத்துவர்களையும் மேற்படிப்புக்காக அரசு அனுப்புகிறது. முதன் முறையாக இத்திட்டம் 1980-81-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, 5 அலுவலர்களும், 5 உதவி மருத்துவர்களும் ஒவ்வோராண்டும், எம்.வி., எஸ்.ஸி., மேற்படிப்புக்காக அனுப்பப்படுகின்றனர். 1983-84-ல் 4 அலுவலர்களையும் 4 உதவி மருத்துவர்களையும் அனுப்புவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இது தவிர, 10 அலுவலர்கள் அடங்கிய 2 குழுக்களும், 25 உதவி மருத்துவர்கள் அடங்கிய 3 குழுக்களும் முறையே ஒரு மாதம் மற்றும் 3 மாதம் உள்பணி பயிற்சி மற்றும் மறு பயிற்சிக்காக ஒவ்வோராண்டும் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பப்படுகின்றனர்.

கால்நடை நோய் நீக்கப் பணிகளுக்காக இம்மாநிலத்தில் செலவிடப்படும் தொகை ஒவ்வோராண்டும் பிற மாநிலங்களைவிடக் கூடுதல் என்பது குறிப்பிடத் தக்கதாகும். 1983-84-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டத் தொகை ரூ. 1,56 கோடியாகும்.

மேலே கூறப்பட்டுள்ள மருத்துவ நிலையங்கள் தவிர 11 கால்நடை நோய் புலனாய்வு நிலையங்கள் மாநிலத்தில் இயங்கிவருகின்றன. கால்நடை நோய்கள் ஏற்படுவதை முன் அறிவித்தல் அவற்றைத் தடுப்பதற்கானத் தக்க முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நவீனத் தொழில் நுட்பங்களையும், மருந்துகளையும் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கான களப்பணிகளில் புகுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இந்நிலையங்கள் மேற்கொள்ளுகின்றன. இவற்றில், 3 நிலையங்கள் 1983-84-ம் ஆண்டில் ரூ. 9.64 இலட்சம் செலவில் செங்கற்பட்டு, தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டன.



மேலும், நோய் மாதிரிகளைப் பரிசோதனை செய்தல் நோய்களுக்கானக் காரணங்களைக் கண்டறிதல், அதற்கேற்ப சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளுதல் போன்றவற்றில் களப் பணியாளர்களுக்கு உதவுவதில் 13 நோய்ப் பரிசோதனைக் கூடங்கள் ஈடுபட்டுள்ளன. மருத்துவ நிலையங்களுக்குக் கொண்டு வரஇயலாத நிலையிலிருக்கும் கால்நடைகளுக்கு வீட்டு இருப்பிடங்களிலேயே மருத்துவ வசதி அளிப்பதில் 48 இயங்கும் மருத்துவப் பிரிவுகள் ஈடுபட்டுள்ளன.

இம்மருத்துவ நிலயங்களை தவிர 550 கால்நடை முனைப்பு மேம்பாட்டு திட்ட கிளை நிலையங்களும், 620 கேந்திர கிராம கிளை நிலையங்களும், 424 கால்நடை மருத்துவ கிளை நிலையங்களும் செயற்கை முறை இனவிருத்திப் பணி மற்றும் முதலுதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. 682 கால்நடை மருத்துவ கிளைநிலையங்களில் நோயுற்றக் கால்நடைகளுக்கு முதலுதவிப் பணிகள் மட்டும் ஆற்றப்படுகின்றன.

நீண்ட காலத் தேவையான எக்ஸ்ரே நிலயைம் 1983-84-ல் ரூ. 3.30 இலட்சம் செலவில் மதுரை மாவட்டத்திலுள்ள தல்லாக்குளம் மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனைகளுக்குக் கொண்டு வரப்படும் நோயுற்ற சிறிய, பெரிய கால்நடைகளின் கால்கள். எலும்புகள், மண்டை ஓடு, வயிற்றுப் பகுதி ஆகியவற்றை ஒளி ஊடுருவு கருவி மூலம் படம் பிடித்துத் தக்க சிகிச்சையளிக்க எக்ஸ்ரே நிலையம் உதவும்.

(2) மருந்து கிடங்குகள்.

துறையின் கால்நடை மருத்துவ நிலையங்களுக்குத் தக்க சமயத்தில் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கச் செய்ய செங்கற்பட்டு, நாமக்கல், பேரூர் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய 4 இடங்களில் மருந்துக் கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கானக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டிடப் பணிகள் முடிவுற்றதும் கிடங்குகள் செயல்பட ஆரம்பிக்கும்.

(3) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம் :

கொடிதான வெக்கை நோய் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை வீழ்த்தி, கால்நடைகளிடையே பெரும் நஷ்டத்தை உண்டாக்குவதாக உள்ளது. எனவே, இக்கொடிய நோயை முற்றிலும் வேரறுக்கும் பணியில் 17 மாவட்டக் குழுக்களும், 16 சோதனைச் சாவடிகளும், 10 கண்காணிப்பு நிலையங்களும் ஈடுபட்டுள்ளன.

(4) மருந்து தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்துதல் :

கால்நடை மருந்து தயாரிக்கும் நிலையமொன்று 1980 81-ல் ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவுக்கானக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டிடப் பணிகள் முடிவுற்றதும் மருந்து தயாரிக்கும் பணி துவக்கப்படும்.

(5) கோமாரி நோய்த் தடுப்புப் பணி :

சிறு விவசாயிகளால் பராமரிக்கப்படும் கால் நடைகளுக்குப் பாதி விலையில் கோமாரி நோய்த் தடுப்பூசிப் பணி திட்டமொன்று மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1982-83-ஆம் ஆண்டில் ரூ. 8,76 இலட்சம் செலவில் 2,74,800 டோஸ் பல்முனைக் கிருமித் தடுப்பு மருந்தும், 1,64,000 டோஸ் ஒருமுனைக் கிருமித் தடுப்பு மருந்தும் வாங்கப்பட்டுத் தடுப்பூசிப் பணி நடைபெற்று வருகிறது.

தேசிய பால் பண்ணை வாரியத்தினால் 1983-84-ஆம் ஆண்டு முதல் 1989-90-ஆம் ஆண்டு வரை உள்ள ஏழாண்டுக் காலத்தில் இம்மாநிலத்தில் நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோயற்ற மண்டலம் (Foot and mouth Diseas freeZon ) ஒன்று ஏற்படுத்தி ரூ. 2,000 இலட்சங்கள் செலவின மதிப்பீட்டில் செயல்படுத்தும் திட்டத்திற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் செலவினத்தில். தேசீயப் பால்பண்ணை வாரியம் ரூ. 1,800.36 இலட்சங்களும் இம்மாநில அரசு ரூ. 199.64 இலட்சங்களும் ஏற்று செலவினம் பகிர்ந்து கொள்ளும். இந்தத் திட்டத்தை தமிழ் நாட்டில் செயல்படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34.00 இலட்சங்கள் மதிப்புள்ள கால்நடைகள், கோமாரி நோயினால் ஏற்படும் மரணத்தில் இருந்து காப்பற்றப்படும். மேலும், இத்திட்டத்தினால் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள்



ஏற்படும். அவர்கள் கிராம அளவில் கால்நடைப் பராமரிப்புத் திட்டங்களைத் தெரிந்து கொள்ளவும், அறிவியல் அடிப்படையில் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடுதல் போன்ற பணிகளைத் தெரிந்து கொள்ளலாம். கிராமங்களில் இருந்தும் மற்றும் ஊராட்சிகளில் இருந்தும் தடுப்பூசியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுவதால் கிராம அளவில் கால்நடைகளுக்கு முதல் உதவி மருத்துவம் செய்வதற்கான வாய்ப்பு பெற இயலும். இத்திட்டம் கால்நடைச் செல்வத்தை அதிகரிப்பதுடன் கறவை மாடுகள் மற்றும் பால் உற்பத்தி போன்றவற்றையும் போதுமான அளவிற்கு அதிகரிக்க வகை செய்யும். இத்திட்டத்தை செயல்படுத்துவதால் குறிப்பாக கிராமப்புறங்களில் " ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை" என்னும் அரசின் கொள்கையினை அதிகமாக நிறைவேற்ற வழிகோலும்.

(6) கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை :

இந்நிலையத்தில் கால் நடை நோய்த் தடுப்பு மருந்துகள் ஊனீர் எதிர்ப்பான், கரைசல்கள் மற்றும் களவைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நிலையத்தின் உற்பத்திப் பொருட்கள் துறையின் கால்நடை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், பிற மாநிலங்களின் தேவைக்கேற்ப விற்கப்படுகின்றன. புருசெல்லோஸிஸ் சோதனைக் கூடம், கோழி நோய்த் தடுப்பு மருந்துப் பிரிவு, வாத்து நோய்த் தடுப்பு மருந்துப் பிரிவு, செல் கல்சர் கோழியம்மை தடுப்பு மருந்துப் பிரிவு போன்றவைகள் சமீப காலத்தில் விரிவு படுத்தப்பட்டுள்ளன. வெறி நோய் தடுப்பு மருந்து, மாரக்ஸ் தடுப்பு மருந்து போன்றவைகளும் தயாரிக்கப்படுகின்றன. இந்நிலையம் இந்தியாவிலேயே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

உறை உலர் முறையில் அனுப்பப்படும் தடுப்பு மருந்தின் சக்தி இரண்டு வருடங்களுக்குக் குறையாமலிருப்பதால், களப் பணிக்காக அனுப்பப்படும் தடுப்பு மருந்து உறை உலர் முறையிலேயே அனுப்பப்படுகிறது. இதற்காக உறை உலர் பரிசோதனைக் கூடங்களுக்கு தேவையான 5 ஜன்னல் மாதிரி குளிர் சாதனக் கருவிகளை 1983-84-ல் வாங்குவதற்கு ரூ. 0.71 இலட்சத்திற்கு அரசு ஒப்புதளித்துள்ளது.

[1984 மார்ச் 2

(7) கால்நடை நோய் கண்காணிப்பு நிலையங்கள் :

மத்திய அரசு உதவி பெற்ற ''கால்நடை நோய் கண் காணிப்புத்'' திட்டம் ரூ. 4,90,000 செலவில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்தொகை மத்திய, மாநில அரசுகளினால் 50 : 50 விகிதத்தில் சமமாகப் பங்கிடப்படும். இத்திட்டத்தின் நோக்கம் இம்மாநிலத்தில் ''நோய் மூலக் கண்காணிப்புப் பிரிவு'' ஏற்படுத்துவதேயாகும். இப்பிரிவு கால்நடைகளிடையே தோன்றும் பல்வேறு தொற்று நோய்கள் பற்றிய விவரங்களை சேகரித்து, தொகுத்து, ஆய்வு செய்து அதன் ஆய்வு முடிவுகளை வெளியிடும். மேலும், அடிப்படை இறப்பு விகிதம், குறிப்பிட்ட இறப்பு விகிதக் காரணம், கால்நடையின் வயது பால், இனம், போன்றவற்றுக்கேற்ப நோயின் தன்மை போன்றவற்றை ஆய்வு செய்து, பெரும் கால்நடை நோய்கள் பற்றிய விவரங்களை வருங்காலங்களில் முன் கூட்டியே வெளியிடுவர்.

(8) இயற்கை அழிவு நிவாரணப் பணிகள் :

கால்நடைகளுக்குப் பசுந்தீவனம் கிடைக்கும்படிச் செய்தல், நோய் நீக்கப் பணிகள் அளித்தல் போன்ற பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளை ரூ. 300·00 இலட்சம் செலவில் 1983-84ல் கால்நடைப் பராமரிப்புத் துறை மேற்கொண்டது.

4264·240 டன் வைக்கோல் விநியோகிக்கப்பட்டதன் மூலம் 2,65,551 மாடுகள் பயன் அடைந்துள்ளன. 4,50,539 மாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. நோய் நீக்கப் பணிக்காக ரூ. 106·35 இலட்சம் செலவில் மருந்துகள் வாங்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தென்னாற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் கால்நடைகளுக்குத் தொற்று நோய்கள் வராமல் தடுக்க தடுப்பூசிப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.



1984 மார்ச் 23]

தஞ்சாவூர் மாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால் நடைகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோரின் கறவை மாடுகளுக்கு அடர்த் தீவனம் வாங்கி 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்வதற்காக அரசு ரூ. 5·00 இலட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு அளித்து, அந்தத் தொகையினை கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் பொறுப்பில் கொடுத்தது. அதன்படி, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்கள், அவர்கள் பால் உற்பத்தி கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தினர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் ஒரு கறவை மாட்டிற்கு 2 கிலோ அடர்த் தீவனம் வீதம் 15 நாட்களுக்கு வழங்கப்படும்.

V. சிறப்பு மத்திய உதவித் திட்டம் :

ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மத்திய அரசின் உதவியுடன் ரூ. 50·28 இலட்சம் செலவில் 1983-84 ஆம் ஆண்டில் புதிய திட்ட மொன்றுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தில் கீழ்கண்டவைகள் செயல் படுத்தப்படும் :—

(1) ஆடு உற்பத்தித் திட்டம்.

(2) பசுந்தீவனம் உற்பத்தித் திட்டம்.

(3) இறைச்சி வர்க்கக் கோழிகள் உற்பத்தித் திட்டம்.

இதில், முதல் இரண்டு திட்டங்களும் கால்நடைப் பராமரிப்புத் துறையினராலும், மூன்றாவது திட்டம் தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனத்தாலும் செயல்படுத்தப்படும்.

1. ஆடு உற்பத்தித் திட்டம் :

ரூ. 4,000 மூலதனத்தில் 20 பெட்டை ஆடுகளும், 1 கிடாவும் அடங்கிய ஆடுவளர்ப்புப் பிரிவு அமைக்க ஆதி திராவிடர்களுக்கு உதவி செய்யப்படும். செங்கற்பட்டு, தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 400 பிரிவுகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 300 பிரிவுகளுமாக மொத்தம் 1,500 பிரிவுகள் ஏற்படுத்தப்படும். சிறப்பு மத்திய உதவி நிதியிலிருந்து 50 சதவிகித மானியம் கொடுப்பதுடன் மீதமுள்ள தொகை பிற உதவியளிக்கும் நிறுவனத்திடமிருந்து பெறவும் வகை செய்யப்படும். ஆட்டு மந்தைகள் ஆயுட்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு அதன் செலவுத் தொகை ஆட்டு உரிமையாளர் மற்றும் அரசினால் 50 : 50 அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும். ஆடு ஒன்றுக்கு ரூ. 3 வீதம் நோய் நீக்கப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பயனடைவோர் 50 சதவிகிதம் மகளிராக இருப்பார்கள். இத் திட்டத்திற்காகும் மொத்த செலவு ரூ. 31·65 இலட்சமாகும்.

2. பசுந்தீவனம் உற்பத்தித் திட்டம் :

கால்நடை பராமரிப்புத்துறையிலுள்ள 3 அரசுப் பண்ணைகளில் இத்திட்டத்தின் கீழ் பசுந்தீவன உற்பத்தியே மேற்கொள்ளும். இப்பண்ணைகளில் சுமார் 3,250 மெட்ரிக் டன் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி செய்து, ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் மூலம் கறவை மாடுகள் பெற்ற ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு கிலோ 10 பைசா வீதத்தில் விநியோகிக்கப்படும். இத்திட்டதிற்காகும் மொத்தத் தொகை ரூ. 11·57 இலட்சம் ஆகும்.

3. இறைச்சி இனக்கோழிகள் வளர்ப்புத் திட்டம் :

செங்கற்பட்டு, கோயம்புத்தூர், வட ஆற்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்கு 50 பிரிவுகள் வீதம் ஆதி திராவிடர் குடும்பங்கள், இறைச்சியின் கோழி வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்கு உதவி செய்யப்படும். பிரிவு ஒன்றுக்கு 100 கோழிகள் அடங்கிய மொத்தம் 200 பிரிவுகள் ஏற்படுத்தப்படும் 4 வாரங்களுக்குப் பின்னர் மீண்டும் 100 கோழிகள் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் ஆகும் செலவுத் தொகை ரூ. 4,413 ஆகும். இதில் 50 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படும். மீதமுள்ள தொகை நிதி உதவி நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெற உதவி செய்யப் படும். இத்திட்டத்திலும் பயன் பெறுவோரில் 50 சதவிகிதம் மகளிர் ஆவர். இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 5.24 இலட்சமாகும்.

VI. கால்நடைப் பராமரிப்புத் துறை நிர்வாக அமைப்பு :

காலநடை பராமரிப்புத் துறை, இயக்குநர் ஒருவரை தலைமையாகக் கொண்டுள்ளது. தொழிற்நுட்பப் பணிகளில் 2 கூடுதல் இயக்குநர்களும், நிருவாகப் பணியில் முதன்மைப் பணியாளர் அலுவலர்·ஒருவரும் இயக்குநருக்கு உதவிபுரிகின்றனர். துறை கணக்கு, மற்றும் பட்ஜெட் பணிகளை முதன்மை கணக்கு அலுவலர் கவனிக்கின்றனர். நிருவாக வசதிகாக மாநிலம் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் மண்டல இணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பிலுள்ளது. மேலும் இம்மாநிலம் மண்டலத்துக்கு கீழ் 62 வட்டரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் உதவி இயக்குநர் ஒருவரின் பொறுப்பிலுள்ளது· அவர் அவ்வட்ாரங்களிலுள்ள துறைப் பணிகள் அனைத்தையும் கவனிக்கிறார்.

இது தவிர இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம்,கூடுதல் இயக்குநர் பதவியிலுள்ள இயக்குநர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. அயலின கால்நடை வளர்ப்புப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்டம் கால்நடைப் பண்ணை புதுக்கோட்டை, ஆகியவை கூடுதல் இயக்கு



நரைத் தலைமையாகக் கொண்டுள்ளது. மாதவரம் அரசுப் பால்பண்ணை, இணை இயக்குநரின் பொறுப்பிலுள்ளது. மாவட்டக் கால்நடை பண்ணை, ஓரத்தநாடு துணை இயக்குநரின் கீழ் உள்ளது. செட்டிநாடு மற்றும் அபிஷேகப்பட்டி மாவட்டக் கால்நடைப் பண்ணைகள் மற்றும் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணை ஒவ்வொன்றிலும் ஒரு துணை இயக்குநர் பதவியை உருவாக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதர பண்ணைகள் அனைத்தும் உதவி இயக்குநர் நிலையிலுள்ள கண்காணிப்பாளர்களின் பொறுபிலும் இயங்கி வருகின்றன. கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் கேந்திர கிராம நிலையம் ஆகிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு துணை இயக்குநரின் கீழ் இயங்குகின்றன.

VII. 1984-85-ம் ஆண்டு புதியத் திட்டங்கள்

1984-85-ம் ஆண்டு செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களின் விவரம் பின்வருமாறு—.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | மதிப்பீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்). | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1 புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்துதல். | 14.46 | 20 கால்நடை மருந்தகங்கள். |
| 2 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவ மனையாக நிலை உயர்த்துதல். | 6.99 | 3 கால்நடை மருத்துவமனைகள். |
| 3 கால்நடை மருத்துவ மனையை பிரதம மருத்துவமனையாக நிலை உயர்த்துதல். | 4.14 | 1 பிரதம மருத்துவமனைகள். |
| 4 உறைவிந்து இனவிருத்தி முறையைக் கால்நடை மருத்துவ கிளை நிலையங்களில் புகுத்துதல். | 16.26 | 125 கால்நடை மருத்துவ கிளை நிலையங்கள், |
| 5 ஈச்சங்கோட்டை அயலினக் கால்நடை வளர்ப்புப் பண்ணையிலுள்ள பசுந்தீவன விதை உற்பத்தி நிலையத்தை வலுப்படுத்துதல். | 5.83 | 1 பிரிவு. |

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | மதிப்பீடு, (2) (ரூபாய் இலட்சத்தில்). | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 6 மாநில அளவில் நிர்வாகத்தை வலுப்படுத்துதல். | 0·63 | 1 இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத் துறை. |
| 7 எம்.வி.எஸ்.ஸி. மேற்படிப்புக்கு அலுவலர்கள் அனுப்புதல். | 0·94 | 12 மருத்துவ அலுவலர்கள். |
| 8 கால்நடைப் பண்ணைகளில் கண்காணிப்பாளர் பதவிகளை துணை இயக்குநர் பதவிக்கு உயர்த்துதல். | 0·81 | 3 பண்ணைகள். |
| 9 மாவட்ட வெக்கை நோய் குழுக்கள் கூடுதலாக ஏற்படுத்துதல். | 1·99 | தஞ்சாவூர் மாவட்டம். |
| மொத்தம் .. | 52·05 | |





## இணைப்பு VI.

(116—ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சமூக நலத் துறை.

### கோரிக்கை எண். 30.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

I. முன்னுரை.

கோரிக்கை எண். 30-ன் கீழ் 1984–85-க்காக ரூ. 68,66,90,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

ஏழை எளியவரின்பால் பரிவு கொண்டுள்ள தமிழக அரசு சமூக நலத்துறை வாயிலாக, மகளிர், சிறார், முதியோர் மற்றும் ஊனமுற்றோர்க்கு உதவிட பல்வேறு திட்டங்களை செயலாற்றி வருகிறது. ஒவ்வொரு திட்டமும் சமுதாயத்தில் அவர்களுக்குள்ள அடிப்படைப் பிரச்சினைகளை கருத்திற்கொண்டு தீட்டப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் 1983–84-ல் முதியோரும், முன்னாள் இராணுவத்தினரும் பயனடையும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டப் பணியின் கீழ் இதுவரையிலிருந்த 30 திட்டப் பிரிவுகள் தவிர்த்து மேலும் 9 திட்டப் பிரிவுகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சத்துணவு, கல்வி, சுகாதாரம் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு அவற்றினால் 1.53 இலட்சம் சிறார்களும், 1.80 இலட்சம் தாய்மார்களும் பயனடைந்து வருகிறார்கள். 1983-84-ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் தற்போதுள்ள மாவட்டங்களைத் தவிர்த்து மேலும் திருநெல்வேலி, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் மகளிரின் பிரச்சினைகள் பொருளாதார ஏற்றத்தாழ்வின் அடிப்படையில் அமைந்துள்ளதைக் கருத்திற்கொண்டு அவற்றை களைவதற்கான பல்வேறு திட்டங்களை செயலாக்குவதற்கென மகளிர் முன்னேற்றத்திற்கென தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்ற தனியொரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுடன் சென்ற ஆண்டுகளில் செயல்பட்டு வந்தது போலவே ஊனமுற்றோர்க்கென தொடர்ந்து பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

II. நிர்வாக அமைப்பு:

இத்துறையின் தலைமைப் பொறுப்பில் மாநில அளவில் இயக்குநரும் அவரின் கீழ் இரு இணை இயக்குநர்கள், ஐந்து துணை இயக்குநர்கள், 13 உதவி இயக்குநர்கள், ஊனமுற்றோர் நலன் வாரிய செயலாளர் ஒருவர், பெட்டிக் கடைகள் கடன் மற்றும் மகளிர் வழிகாட்டி நிலையத்திற்கென இரு தனி அலுவலர்கள், மூன்று கணக்கு அலுவலர்கள், ஒரு உதவி கணக்கு அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அலுவலர்கள் அனைத்து திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பிரிவுப் பணிகள், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் விரிவாக்கப் பணி அலுவலர் (சமூக நலம்) மற்றும் ஊர் நல அலுவலர் (மகளிர்) பணியாற்றி வருகின்றனர். மைய அளவில் ஒவ்வொரு மையத்திலும் ஒரு குழந்தைகள் நல அமைப்பாளரும் இரு குழந்தைகள் நல உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

மாநிலத்தின் பல்வேறிடங்களில் ஐந்து சேவையில்லங்கள் சேவையில்ல கண்காணிப்பாளர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றன.

உலக வங்கி நிதியுதவியுடன் இயங்கிவரும் தமிழக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்களும், வட்ட அளவில் வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இத்திட்டத்தில் ஐந்து மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்களும், 57 வட்ட திட்ட ஊட்டச் சத்து அலுவலர்களும், 136 போதனையாளர்களும், 717 மேற்பார்வையாளர்களும் 6,786 சமுதாயக் களப் பணியாளர்களும் மற்றும் 6,786 உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.



III. மகளிர் நலம்—1 " சிறப்புத் திட்டங்கள் "

இத்திட்டங்களின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களை அமைத்து, அதன் மூலம் பெண்களுக்கு வேலை வாய்ப்பும், வருமானத்திற்கான வாய்ப்பும் கொடுத்து, அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி செய்வதே அரசின் நோக்கமாகும். கூட்டுறவுத் துறைகளில் பல்வேறு அலகுகளை ஏற்படுத்தி அவைகளுக்கு மூலதனம், இயந்திரங்கள், இதர கருவிகள் வாங்குவதற்கு மானியம் ஆகியவை அளிப்பதோடு பங்குத் தொகை, நடப்பு மூலதனக் கடன் மற்றும் நிர்வாக உதவியுடன் அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 5,345 பெண்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியும், 3,810 பெண்களுக்கு வேலை வாய்ப்பும் கீழ்க்கண்ட தொழில்களில் அளிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 17.44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(1) எழுதுபொருள் தயாரிப்பு :

இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 15 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 750 மகளிருக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. 15 சங்கங்களும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. இச்சங்கங்கள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடுகளை தயாரித்து வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தேவையான அனைத்து நோட்டுப் புத்தகங்களையும் வரும் 1984-85 கல்வி ஆண்டிருந்து இந்த 15 தொழில் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்க வேண்டும் என அரசு தீர்மானித்துள்ளது.

(2) பனைப் பொருள் தொழில்கள் :

தர்மபுரி மாவட்டத்தில் 10 பனைப் பொருள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு 250 பெண்களுக்கு இத்தொழிலில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இந்த 10 கூட்டுறவு சங்கங்களும் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன.

(3) கிராம நூற்பு மையம் :

மதுரை மாவட்டம், கண்ணேந்தல் கிராமத்தில் ஒரு கிராமப்புற நூற்பு மையம் தொடங்கப்பட்டு இதன் மூலம் 25 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் வலங்கைமான் என்னும் இடத்தில் மேலும் ஒரு மையம் தொடங்கப்பட்டு 32 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(4) சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி கூடம் :

இராமநாதபுரம், மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 3 சாக்குக் கட்டி மற்றும் 3 மெழுகுவர்த்தி உற்பத்திக் கூடங்கள் தொடங்கப்பட்டு சுமார் 120 கிராமப்புற மகளிருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது.

(5) கயிறு தயாரிப்பு:

தஞ்சாவூர் மாவட்டம் நல்லூர் கிராமத்தில் ரூ. 6.61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் தொழிற்கூடமும் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சிக்கூடமும் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 10 மகளிருக்கு கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு தஞ்சாவூரில் உள்ள நல்லூரில் கயிறு தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு 60 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

(6) பட்டு நூல் எடுத்தல்:

வீணாகும் கழிவுப் பட்டில் இருந்து பட்டு நூல் தயாரிக்கும் 2 தொழிற்கூட சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டு உற்பத்தி தொடங்கப்பட்டு 50 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

(7) தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

ஆதரவற்ற மற்றும் விதவை மகளிருக்கு இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மூலம் வேறு வருமானம் கிடைக்கப் பெறாமையால் இவர்களுக்கு வருமானம் கிடைக்க மாநிலம் முழுவதும் மண்டல ரீதியாக 4 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தோர் நலத் துறைகளின் பள்ளி மாணவர்களுக்கான சீருடைகளை தைத்து வழங்குவதோடு, இதர நிறுவனங்களின் தையல் வேலைகளையும் செய்கின்றன.



(8) விதவைகள் மூலம் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள்:

ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகளின் மறுவாழ்விற்காக கல்லூரிகள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலக வளாகங்களில் சிற்றுண்டிச் சாலைகள் நடத்தும் திட்டம் ஒன்றினை அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைய முன்வரும் விதவைகளுக்கு தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக உணவு தானியங்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகையில் 25 சதவிகிதத்தை மானியமாகவும், மூலதனத்தில் 75 சதவிகிதத்தை குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வங்கியின் மூலம் பெறுவதற்கும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 70 அலகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2. மகளிருக்கான மற்ற தொழிலியல் பயிற்சிகள்:

மகளிருக்கு தொழிலியல் துறைகளில் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் துறைகள் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ.3,000 வருவாய் பெறும் குடும்பத்தில் உள்ள 16 முதல் 30 வயதுக்குட்பட்ட மகளிர் பயனடைகிறார்கள்.

(1) தட்டச்சு:

இத்திட்டத்தில் பயன்பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 150 உதவித் தொகையாக பத்து மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.43 இலட்சம் செலவில் 1,000 ஏழை பெண்கள் பயன் பெறுகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 5,938 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

(2) கணக்குப்பதிவு மற்றும் கணக்குத் துறையில் பயிற்சி அளித்தல்:

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் மகளிருக்கு மொத்தம் ரூ. 165 உதவித் தொகையாக 6 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.65 இலட்சம் செலவில் 1,000 பெண்கள் பயனடைகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 2,014 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

(3) சுருக்கெழுத்து—

இத்திட்டத்தின் படி பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 220 உதவித் தொகையாக ஓராண்டிற்கு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ. 1.01 இலட்சம் செலவில் 500 மகளிர் பயனடைகிறார்கள். இதுவரை 967 மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்திருக்கிறார்கள்.

மேலும் தொழிலியல் துறைகளில் ஊக்குவிப்பு கொடுப்பதற்காக 600 பெண்களுக்கு ரூ. 16.80 இலட்சம் செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் துறைகளில் ''டிரைசெம்'' நிதியின் மூலம் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர, சென்னை ''தாவர்ஸ்'' பயிற்சிக் கல்லூரியில் 30 மகளிர்க்கு தொழில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்று ரூ. 75,750 செலவில் ஏற்கப்பட்டுள்ளது.

3. உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள்:

தையல், கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் பின்னுதல, ஜமக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகுவர்த்தி உற்பத்திக் கூடங்களை ஏற்படுத்தி கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் 18—35 வயதிற்குட்பட்ட ஆதரவற்ற மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியானது வேலை வாய்ப்பினை அளிப்பதோடு தங்கள் குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிக்கவும் வகை செய்கிறது. இப்பயிற்சியின் போது பயிற்சியாளர்களின் சில்லறை செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தற்போது 53 உற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களும், 4 உற்பத்தி கூடங்களும் சமூக நலத்துறையின்கீழ் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காக 1984—85 ஆம் ஆண்டிற்கு ரூ. 11.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இவ்வுற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். இதில் 4 தையல் பயிற்சிக் கூடங்கள் பழங்குடியினர் பகுதிகளில் மகளிர்க்காக ஆரம்பிக்கப்பட்டு, முறையே அத்திப்பட்டு (வட ஆற்காடு மாவட்டம்), கொல்லிமலை, கல்ராயன் மலை மற்றும் ஏற்காடு (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

மேற்கண்ட மரபுத் துறைகளைத் தவிர, நவீனத் துறைகளில் மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக ''மகளிர் வர்த்தக வளர்ச்சித் திட்டம்'' சென்னை ஐ.ஐ.டி.யின் ஊரக வளர்ச்சி மைய உதவியோடு அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி 100 ஊரக மகளிர், நவீன துறைகளான, மின்னணு



இரசாயன, சோப்புப் பொருட்கள், ஸ்கிரீன் பிரிண்டிங், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல், பிளாஸ்டிக் பொருட்கள் செய்தல் ஆகிய துறைகளில் பயன் பெறுவர். இதற்காகும் செலவு ரூ. 11.40 இலட்சமாகும். இதுதவிர 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 3.46 இலட்சத்தில் அம்பத்தூர் மற்றும் கிண்டியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களிலும், திருவான்மியூரிலுள்ள தொழிற்பயிற்சி பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு தொழில்களில் மாற்று முறையின் கீழ் மகளிர்க்கு பயிற்சியளிக்க தனிப் பிரிவுகள் அமைக்கப்பட உள்ளன. இதன்மூலம் 96 பெண்கள் பயனடைவர்.

இதைத் தவிர மேலும் ஒரு ரொட்டி தயாரிக்கும் நிறுவனம் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது சென்னை மார்டன் பேக்கிரியின் கூட்டு முயற்சியுடன் ஒரு நாளைக்கு 5,000 ரொட்டித் துண்டுகள் தயாரிக்க உத்தேசித்துள்ளது. இதற்காகும் மொத்த செலவு ரூ. 3.38 இலட்சமாகும்.

4. இரசாயனப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி:

சிறிய இரசாயனப் பொருட்களான சலவை சோப்புகள், எழுதும் மை, கிருமிநாசினிகள், கற்பூர வில்லைகள், பால் பாயின்ட் பேனாக்களுக்கு உபயோகிக்கும் ரீபிள்கள், துப்புரவுத் தூள்கள் முதலியவற்றை தயாரிப்பதற்கான பயிற்சியினை 30 மகளிர்க்கு அளிப்பதற்கான திட்டம் ஒன்று ரூ. 16,000 க்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி சென்னை கிண்டியிலுள்ள சிறு தொழில் சேவை நிறுவனத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

நார்வே நாட்டு நிறுவன உதவியுடன் 50 மகளிரை தொலைக் காட்சிக்கான மின் அணு உபகரணங்களில் பயிற்றுவிப்பதற்காக ரூ. 3.47 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பு இயன்ற அளவிலும் மிகுதியாக பரவியுள்ள தொழிலாக இருந்து வருவதால் இந்த ஆண்டு ரூ. 10 இலட்சம் செலவில் 3,050 மகளிர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு, ஆடுகள் வளர்ப்பதற்கு, கோழிகள் வளர்ப்பதற்கு திட்டம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு தரப்பிலிருந்து 50 சதவீதம் மானியமும் வங்கி மூலம் 50 சதவீதம் கடனும் வழங்கப்படுகிறது.

5. சேவை இல்லங்கள்:

தமிழக அரசு சமுதாய அமைப்பு மற்றும் பொருளாதாரத்தில் நலிந்து கிடக்கும் மகளிருக்கு, குறிப்பாக விதவை மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு உதவும் பொருட்டு பலதரப்பட்ட அரசு நிறுவனங்களை உருவாக்கி வருகிறது. அந்நிறுவனங்கள் மூலம் சமுதாய-பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமுதாய அந்தஸ்தை கொடுப்பதோடு பல தொழில் பயிற்சிகளையும் அளித்து வருகிறது. இதன் மூலம் அவர்கள் சுய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் வேறு பல வேலை வாய்ப்பு தரும் நிறுவனங்களில் வேலைத்தேடி கொள்ளவும் வழிவகை கிடைக்கிறது. இதனால் அவர்களால் ஒரு புதிய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

சமூக நலத்துறையின் கீழ் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் ஏழை சேவை இல்லங்கள் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன. விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் முறையே 18 முதல் 40 வரையில் வயதுள்ள பெண்களுக்கு வாழ வகை செய்து கொடுப்பது இதன் நோக்கமாகும். இவ்வில்லங்களில் எட்டாம்வகுப்பு/பத்தாம் வகுப்பு படிக்கவும், தையல், துணிமணி தைத்தல், துணிகளில் வண்ண நூல்களால் பூவேலை செய்தல் மற்றும் நெசவு நெய்தல் போன்றவற்றிற்கு முறையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அவர்கள் துணிமணி தைத்தல் மற்றும் வண்ண நூல்களால் பூ வேலை செய்தல் போன்ற துறைகளில் ஓராண்டு பயிற்சியை முடித்ததும் அரசு நடத்தும் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் இங்கு தங்கி பயிற்சிபெறும் பெண்கள் அவர்களுடைய இரண்டு குழந்தைகளை மூன்று ஆண்டுகள் வரை தங்களுடன் வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு மாதம் ரூ. 50-ம் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 36 ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும் சீருடைக்காகவும் பெண்களுக்கு மாதம் ரூ. 60-ம் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 35-ம் வழங்கப்படுகிறது. அதோடு ஐந்து முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வாங்க ஆண்டொன்றிற்கு ரூ. 40-ம் ஒன்பது மற்றும் பத்தாவது படிக்கும் மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வாங்க ஆண்டொன்றிற்கு ரூ. 60-ம் அவர்களுடைய குழந்தைகள் ஐந்தாம் வகுப்பு வரை படிக்க ரூ. 15-ம் வழங்கப்படுகிறது.

தாம்பரம் சேவை இல்லத்தில் உடல் ஊனமுற்ற பெண்கள் குழந்தைகளுக்காக தனியாக ஒரு பிரிவும் இயங்கி வருகிறது. பெண்களில் 30 நபரும், குழந்தைகளில் 20 நபரும் இதில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள்.





மேலும் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய சேவை இல்லங்களில் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற செயலகப் பணிக் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவுகளில் 30 பெண் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதின் மூலம் உயர்கல்வி படிக்க இயலாத பெண்கள் பயன் பெறுகிறார்கள். இப்பயிற்சியில் ஓராண்டு முடித்தவர்கள் அரசு தொழில் நுட்ப தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் இவர்களுக்கு மாதம் ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இவ்வாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளமுடிகிறது. 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 18.32 இலட்சம் இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசு நிறுவனங்களோடு மேலும் இரண்டு சேவை இல்லங்கள் சேவை நிலையம் என்னும் பெயரில் மதுரையில் ஒன்றும், கஸ்தூரிபாய் சேவை நிலையம் என்னும் பெயரில் ஈரோட்டில் ஒன்றும் இயங்கி வருகிறது. இவைகளில் ஒவ்வொன்றிலும் 40 பெண்கள் வரை இரண்டு ஆண்டுகளுக்கு பத்தாம் வகுப்பு வரை படிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதத்திற்கு கல்வி உதவித் தொகையாக ரூ. 50-ம் மதிப்பூதியமாக ரூ. 15-ம் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிறுவனங்களோடு காந்தி கிராமத்தில் கஸ்தூரி பாய் சேவை நிலையமும் இயங்கி வருகிறது. இங்குள்ள பயிற்சியாளர்களுக்கு பயிற்சித் தொகையோடு கல்வி உதவித் தொகையாக ரூ. 50 வீதம் மாதந்தோறும் 120 நபருக்கு வழங்கப்படுகிறது. சமுதாயத்தில் மிகவும் நலிந்து போன பெண்கள் பத்தாம் வகுப்பு படிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னையிலுள்ள ஸ்ரீ சேவாமந்திர் நிறுவனம் மூலம் சமுதாயத்தில் நலிவுற்ற பெண்களுக்கு உதவும் பொருட்டு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி பெறும் செயலகப் பணிக் கல்வியும் அளிக்கப்படுகிறது. இதில் 20 பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதத்திற்கு ரூ. 25 கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1984-85-ம் ஆண்டிற்கு ரூ. 2.75 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 1984-85 ஆம் ஆண்டில் மற்றுமொரு சேவை இல்லம் தொடங்க உள்ளது. இதற்காக ரூ. 2.00 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்சேவை இல்லம் தொடங்குவதன் மூலம் 55 மகளிரும் 15 குழந்தைகளும் பயன்பெறுவார்கள்.

[1984 மார்ச் 23

6. ஆசிரியர்கள் பயிற்சி நிலையம் :

சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் சேவை இல்லங்கள் மூலமும் தனியார் நிறுவனங்கள் மூலமும் பயிற்சி பெற்று பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி தரும் பொருட்டு 1966-67 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்று இள நிலை மற்றும் முதுநிலைப் பிரிவுகளுடன் தொடங்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்நிலையம் பல்லாவரத்தில் இயங்கி வருகிறது. இப்பயிற்சியில் ஒவ்வொரு பிரிவிலும் 40 பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். பயிற்சி காலங்களில் ரூ. 50 கல்வி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 1.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. பணிபுரியும் மகளிர் விடுதி.

பணிபுரியும் மகளிர்க்கு பாதுகாப்பும், வசதியும் செய்துகொடுக்கும் பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதியைக் கட்டும் திட்டத்தை தமிழக அரசு பல நகரங்களில் செயல் படுத்தி வருகிறது. அவைகள் சென்னை (கிண்டி, எழும்பூர்), மதுரை, திருச்சிராப்பள்ளி, ஹோசூர் மற்றும் தூத்துக்குடி ஆக மொத்தம் ஆறு இடங்களில் செயல் படுகின்றன. எழும்பூர் விடுதியில் 35 பெண்களும் மற்ற விடுதிகளில் 50 பெண்களும் அனுமதிக்கப்படுகிறார்கள். மொத்தம் 285 பணிபுரியும் மகளிர் இதனால் பயன் பெறுகிறார்கள். 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவைகள் தவிர, மத்திய அரசு, தனியார் நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் இது போன்ற பணிபுரியும் மகளிர் விடுதிகளை கட்டுவதற்காக முன் வந்துள்ளது. இதற்காகும் செலவினங்களில் 75 சதவீதம் மத்திய அரசும் 15 சதவீதம் அல்லது ரூ. 35,000 இதில் எது குறைவோ அத்தொகையை மாநில அரசும் மீதியுள்ள 10 சதவீதத்தை அந்தந்த நிறுவனங்களும் ஏற்றுக் கொள்ளும். இத்திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 14 விடுதிகள் கட்ட மத்திய அரசால் உதவியளிக்கப்பட்டுள்ளது.



1984 மார்ச் 23]

8. மகளிர் மன்றங்கள்.

சமுதாய மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றும் பொருட்டு கிராமப் புற பெண்களைக்கொண்ட ஒரு அமைப்பான மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி நிலையங்களிலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,250 மன்றங்கள் இருக்கின்றன. மகளிர் மன்றத்தின் அமைப்பாளர்களுக்கு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ரூ. 15 வீதம் வழங்கப்படுகிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ. 4,000 வீதம் ஆண்டிற்கு சமூக நலத்துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கப்படுகிறது. இந்தச் செலவு சத்துணவு தயாரித்தல், குழந்தைகள் கண்காட்சி நடத்துதல், கல்வி சம்பந்தமான சுற்றுலா செய்தல் மற்றும் சமூகக் கல்வி சம்பந்தமாக செலவிடப்படுகிறது. பலதரப்பட்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் தூண்டுகோலாக இம்மன்றங்கள் இயங்கி வருகின்றன. சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 15.04 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9. வழிகாட்டி நிலையம்.

1983-84 ஆம் ஆண்டில் சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய வழிகாட்டி நிலையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்த நான்கும் ஏற்கனவே சென்னை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வழிகாட்டி நிலையங்களுடன் கூடுதலாக செயல் பட்டு வருகின்றன. ஏறத்தாழ அனைத்து ஏழைப் பெண்களும், எழுத்தறிவு இல்லாதவர்களாகவும் அரை குறை கல்வி அறிவு உள்ளவர்களாகவும் இருப்பதனால் சுய வேலை வாய்ப்பு ஒன்று தான் அவர்களுக்கென்று தயாராக உள்ள வழியாகும். ஆகையால் இவ்வழிகாட்டி நிலையங்கள் முக்கியமாக சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை வளர்க்க பல்வேறு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்றுத்தர தீவிரமாக முயற்சி எடுத்து வருகின்றன. இது வரை 15,797 நலிவடைந்த பிரிவில் உள்ள பெண்கள் இச்சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் வங்கிகள் மூலம் 35 இலட்சம் ரூபாய் கடனுதவி பெற்றுள்ளனர்.

இத்துடன் இவ்வழிகாட்டி நிலையங்களை அணுகும் நூற்றுக்கணக்கான பெண்கள், சமூக நிலையங்கள், அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் அவர்கள் குழந்தைகளுக்கு இடம் பெறுவதுடன் ஆயுள் காப்புத் தொகை, ஆயுள் வைப்புத் தொகை மற்றும் ஓய்வூதியம் பெறுதல் முதலிய உதவிகளை பெற்று வருகின்றனர். 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவது.—

இத்திட்டம் 1978-79-ல் துவக்கப்பட்டது. இதனால் ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் கீழ் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். இதுவரை 17,061 விதவைகளின் குழந்தைகள் பயன் அடைந்துள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் 3,000 விதவைகளின் குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு இத்திட்டம் 1984-85 ஆம் நிதியாண்டிலும் தொடர இருக்கிறது. இதற்கென ரூ. 1.08 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் மூலம் 1,000 விதவைகளின் குழந்தைகள் உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் அளவுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தைக்கு ரூ. 100 வரை செலவு செய்து இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை 2,666 விதவைகளின் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளார்கள். மேலும் ஆண்டிற்கு 1,000 குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு ரூ. 1.02 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்பட இருக்கிறது.

11. ஆதரவற்ற விதவைகளின் மகள்களுக்கு திருமணத்திற்கான உதவி.

போதுமான பொருளாதார வசதி இல்லாததின் காரணமாக விதவைப் பெண்கள் தங்கள் மகள்களுக்கு திருமணம் செய்து வைக்க மிகவும் அவதிப்படும் நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. இவர்களின் அல்லலைத் தீர்க்கும் பொருட்டுதான் ஆதரவற்ற விதவைகளின் மகள்களுக்கு திருமணத்திற்காக உதவும் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆண்டிற்கு ரூ. 3,000-க்கும் குறைவாக வருமானமுள்ள விதவைப் பெண்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள். 1982-83 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள திருமண வயது 18 முதல் 30 வரை ஆகும். ஒரு நபருக்கு ரூ. 1,000 வீதம் இது வரை 1,000 ஆதரவற்ற விதவைகளின் மகள்களுக்கு திருமணம் செய்து வைக்க உதவி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 10.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் 1984-85 ஆம் ஆண்டிற்கு தொடர்ந்து செயல் படுத்துவதன் மூலம் 1,000 ஆதரவற்ற விதவைகள் பயன் பெறுவார்கள்.



12. இலவச தையல் இயந்திரம்.—

20 முதல் 40 வரை வயதுள்ள விதவைகள், ஆதரவற்றோர், கணவரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஏழை எளியோர், உடல் ஊனமுற்றவர்கள் போன்ற பெண்கள் மற்றும் ஆண்கள் உடல் ஊனமுற்றவர் மட்டும் பயன் பெற்று வாழ்க்கைத் தரத்தை அவர்களாகவே உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் பெண்கள் தையல் கலையில் பயிற்சி பெற்று இருக்கவேண்டும் என்பது அவசியம். 1983-84 ஆம் ஆண்டு வரை 9,300 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் செயல் படுத்தப்பட இருக்கிறது.

13. விதவை மறுமணத் திட்டம்.

இத்திட்டம் 1975-76 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். இத்திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய சான்றிதழ் ஒன்று ரூ. 5,000-க்கு வழங்கப்படுகிறது. இந்த பணம் 7 ஆண்டுகள் வரை சேமிப்பில் இருக்கும். இது கணவனை இழந்த விதவைகளுக்கு மட்டும் பொருந்தும். இதுவரை 1,094 தம்பதிகள் இதன்மூலம் பயன் பெற்றுள்ளார்கள். 1984-85 ஆம் ஆண்டிற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

அரசுத் துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்கள் மூலமாக ஏற்கனவே மகளிர் மேம்பாட்டிற்காகப்பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், இப்போதும் மகளிர் பல முன்னேற்றத் திட்டங்களை அடைய முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். மகளிர் மேம்பாட்டை தனிக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு கல்வி வசதி, சுயவேலை வாய்ப்புப் பயிற்சி, மற்றும் மகளிரை பல்வேறு நிலைகளில் முடிவு எடுக்கும் தகுதி வாய்ந்தவர்களாகவும் ஆக்கும் நோக்கத்துடன் இந்த அரசு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தை அமைக்கத்தீர்மானித்தது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் தற்போதுள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் கழகத்தின்கீழ் அமையும் தனிப் பிரிவுகளின் உதவியோடு மகளிருக்கு சமூகப் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இக்கழகம் தன் செயல்பாடுகள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள மகளிருக்குப் பொருளாதார மேம்பாடு அளித்து அவர்களுக்கு சமூகத்தில் உரிய நிலையை வழங்குவதற்குப் பாடுபடும். இக்கழகம் ஒரு பொது நிறுவனமாக சென்னையைப் பதிவு

அலுவலமாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனுடைய பங்கு மூலதனம் ரூபாய் ஒரு கோடியாக இருக்கும், இக்கழகத்திற்கு தலைவர், நிர்வாக இயக்குநர் மற்றும் இயக்குநர் குழு ஆகியோர் பெண்களாகவே நியமிக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் பல்வேறு நிலைகளிலுள்ள மகளிர் மேம்பாட்டிற்காகச் செயல்பட்டு வருகிறது.

15. பிச்சைக்காரர்கள் பராமரிப்பு முகாம் ;

மேல்பாக்கத்திலுள்ள பிச்சைக்காரர்கள் பராமரிப்பு முகாம் தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சை எடுத்தல் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட பிச்சை எடுப்பவர்களுக்கென்றே நடத்தப்படும் பிச்சைக்காரர் இல்லமாகும். இம் முகாம் 1973 முதல் சமூக நலத்துறையின் பொறுப்பில் உள்ளது. இதில் 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. தற்போது இவ்வில்லத்தில் 291 ஆடவரும், 58 பெண்டிரும் உள்ளனர். இவ்வில்லத்தில் தங்கியிருப்போருக்கு நெசவுத் தொழில், தச்சுவேலை, தையற்தொழில் முதலியவற்றில் பயனுள்ள வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வில்லத்தின் பராமரிப்பிற்காக, 1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 11.42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

IV. குழந்தைகள் நலம் :

மக்களின் வளம்தான் உயர்வான இயற்கை வளம் என்பதை உணர்ந்து குழந்தைகளைப் பாதுகாத்தல், வளர்த்தல், மேன்மைப்படுத்துதல் என்ற அடிப்படை கொள்கையையொட்டி குழந்தைகள் நலம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உடல் நலப்பணிகள் ஆகிய நடவடிக்கைகளில் இந்த அரசு மிகுந்த நாட்டத்துடன் செயல்பட்டு வருகிறது. 2+வயது முதல் 4+வயது வரையுள்ள எல்லா குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து பெறுகிற அளவில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டமானது முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும். இதன் மூலம் எல்லா குழந்தைகளின் சுகாதார பராமரிப்பும், குழந்தைகளுக்கேற்படும் பொதுவான மற்றும் அஞ்சத்தக்க நோய்களிலிருந்தும் பாதுகாப்பளித்தல், குழந்தைகளின் முக்கியமான வளர்ச்சி நிலைகளில் அவர்களுடைய வளர்ச்சியைக் கவனித்தல் ஆகியுவைகளும் சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றன.



1. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் :

2+வயது முதல் 4+வயது வரையுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவுப் பிரச்சினையைத் தீர்க்கவும் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்காகவும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டின் கிராம்ப் பகுதிகளில் 1-7-1982 அன்று தொடங்கப்பட்டு, நகர்ப்பகுதிகளுக்கு 15-9-1982 முதல் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் முன்னதாக குழந்தைகள் காப்பகங்கள் மூலமும், சிறப்பு சத்துணவுத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட சிறப்பு சத்துணவுத் திட்டம் போன்றவை மூலமும் செயல்படுத்தப்பட்ட குழந்தை நலத்திட்டங்கள், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துடன் ஒன்றாக இணைக்கப்பட்டன. தற்போது கிராமப்பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் முறையே 22,928 குழந்தை நல நிலையங்களும், 4,931 குழந்தை நல நிலையங்களும் இயங்குகின்றன. நமது மாநிலத்தில் கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் 2+வயது முதல் 4+வயது வரை பயன் அடைவோர் எண்ணிக்கை சுமார் 23 இலட்சங்களாகும்.

இத்திட்டம் ஆயிரக்கணக்கான வேலையில்லாத பெண்களுக்கு வேலைவாய்ப்பளித்து வாழ்வளித்துள்ளது. சுமார் 83,577 பெண்கள் குழந்தை நல அமைப்பாளர்களாகவும், குழந்தை நல உதவியாளர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மொத்தமுள்ள 27,859 குழந்தை நல அமைப்பாளர்களில் 5,383 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்கள். 979 பேர் விதவைகள். 1,173 பேர் ஆதரவற்ற பெண்கள். அதே போன்று 55,718 குழந்தை நல உதவியாளர்களில் 11,463 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பையும் சேர்ந்தவர்கள். 7,422 பேர் விதவைகள், 5,603 பேர் ஆதரவற்ற பெண்கள்.

இத்தன்னிகரில்லாத் திட்டமானது அதன் மூன்று முக்கிய பகுதிகளான ஊட்டச்சத்து, பள்ளி முன்னிலைக் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பணிகள் மூலம் சமுதாயத்திற்குப் போற்றத் தகுந்த பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

(அ) ஊட்டச் சத்துப் பணிகள் :

இத்திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவைகளைக் கொண்டு சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது—

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. | 80 கிராம்கள். |
| பருப்பு .. .. .. .. | 10 கிராம்கள். |
| எண்ணெய் .. .. .. .. | 5 கிராம்கள். |
| காய்கறிகள் மற்றும் தாளிதம் .. .. | 50 கிராம்கள். |

ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் உணவின் மதிப்பு 0.44 காசுகளாகும். இவ்வாறு சமைக்கப்பட்டு வழங்கப்படும் உணவு, குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 411 கலோரிகள் அளிப்பதாக ஊட்டச்சத்து வல்லுநர்கள் கணக்கிட்டுள்ளனர். இவ்வுணவானது சுகாதாரமான முறையில் சமைக்கப்பட்டவுடன் சூடாகவும், சுவையுள்ளதாகவும், குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. குழந்தை நல நிலையங்களில் உணவு சமைப்பதற்காக, ஒரு நிலையத்திற்கு ரூ. 2,000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எரிபொருள்களுக்கான செலவைக் குறைக்க குழந்தை நல அமைப்பாளர்கள் குழந்தை நல நிலையத்திலுள்ள வைக்கோல் பெட்டியை உபயோகப்படுத்த அறிவுறுத்தப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) பள்ளி முன்னிலைக் கல்வி :

ரூ. 600 மதிப்புள்ள கல்வி உபகரணங்கள் அடங்கிய அடுக்கு எல்லா குழந்தை நல நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இக்கல்வி உபகரணங்களின் மூலம் மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் குழந்தை நல நிலையங்களில் பள்ளி முன்னிலைக் கல்வி பெறுகிறார்கள்.

(இ) குழந்தை நல அமைப்பாளர்கள் பயிற்சி :

டிசம்பர் 1982 முதல் ரூ. 49,40,740 செலவில் ஊட்டச்சத்து பள்ளி முன்னிலைக்கல்வி மற்றும் நிலையங்களை நடத்தத் தேவையான இதர அடிப்படைத் தன்மைகளில் கிராமப்பகுதிகள் மற்றும் நகர்ப்பகுதிகளின் சத்துணவு நிலையங்களின் குழந்தை நல அமைப்பாளர்களுக்கு ஆறு வாரப் பயிற்சித்திட்டமொன்று அணி அணியாக நடத்தப்படுகிறது. இதுவரை, டிசம்பர் 1983 வரை எல்லா மாவட்டங்களிலும், எட்டு அணிகளில் 15,093 குழந்தை நல அமைப்பாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். மீதமுள்ள குழந்தை நல அமைப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்க இத்திட்டம் 1984 ஆம் ஆண்டும் தொடர்ந்து நடத்தப்பெறும்.

(ஈ) சுகாதாரப் பராமரிப்பு—நோய்த் தடுப்பு மருத்துவ சோதனை மற்றும் எடை கணக்கிடுதல் :

இந்திட்டத்தின்கீழ், தொடக்க நல நிலையத்தின் மருத்துவ அலுவலர்களும் நகராட்சி சுகாதார அலுவலர்களும் குழந்தை நல நிலையங்களுக்குத் தொடர்ந்து வருகை தந்து குழந்தைகளை மருத்துவ சோதனை செய்யும் பணியை மேற்கொள்கின்றனர். குழந்தை நல நிலையங்களில் தொடர்ந்து நோய்த்தடுப்புத் திட்டங்களும் நடத்தப்படுகின்றன. தொடக்க நல நிலைய மருத்துவ அலுவலர்கள் தொடர்ந்து குழந்தை நல நிலையங்களுக்கு வருவதற்காக, அரசு அவர்களுக்கு தற்போது ரொக்க



ஊக்கத் தொகையும், படிகளும் வழங்கியுள்ளனர். '' யுனிசெப் '' நிறுவன உதவியுடன் ரூ. 5,68,800 மதிப்புள்ள எடை காட்டும் கருவிகள் 2,400 சத்துணவு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலையங்களின் குழந்தைகளின் வளர்ச்சியையும் கண்காணிக்க அந்நிலையங்களுக்கும் எடை காட்டும் கருவிகள் வழங்கும்படி '' யுனிசெப் '' நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார அட்டைகள் மாநிலத்திலுள்ள குழந்தை நல நிலையங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் குழந்தைகளின் எடையைப் பதிவு செய்து, அவர்கள் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

குழந்தை நல நிலையங்களிலுள்ள குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் நலவியல் பழக்கங்களை மனதில் ஆழப்பதியவைக்க கிராமப் பகுதிகளில் பல்பொடி இலவசமாக வழங்கப்படுகிறது.

(உ) ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும் திட்டத்தை நீட்டித்தல் ;—

இவ்வுன்னதத் திட்டம் 15-1-1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்க்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட பொருட்களைக் கொண்டு சமைக்கப்பட்ட உணவு 1,53,754 பேர்களுக்கு வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அரிசி .. .. .. .. | 200 கிராம்கள் |
| 2. | பருப்பு .. .. .. .. | 15 கிராம்கள். |
| 3. | எண்ணெய் .. .. .. | 10 கிராம்கள். |
| 4. | காய்கறி மற்றும் தாளிதம் .. | 50 கிராம்கள். |

இதர செலவுகளைத் தவிர்த்து மேற்கூறப்பட்ட உணவின் மதிப்பு 90 காசுகளாகும். இச்சத்துணவு தவிர, ஓய்வூதியம் பெறும் முதியோர் ஒவ்வொருவருக்கும், ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு அரை கிலோ அரிசி வீதம் வழங்கப்படுகிறது. சத்துணவு பெறாத ஓய்வூதியம் பெறும் முதியோருக்கு, ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசி வீதம் வழங்கப்படுகிறது.

1-1-1984 முதல், இத்திட்டத்தின் பயன்கள் முன்னாள் இராணுவத்தின் நல நிதிகளிலிருந்து முதியோர் ஓய்வூதியம் பெறும் முன்னாள் இராணுவத்தினருக்கும் அவர்தம் விதவையர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், குழந்தை நல நிலையங்களிலிருந்து, தற்போது சுமார் 112 பேர் சத்துணவு பெற்றுப் பயனடைகிறார்கள்.

(ஊ) திட்டத்தின் செயல்விளைவு —

கிராமப் பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலுமுள்ள குழந்தை நல நிலையங்கள், ஒருமையாக இருந்து, குழந்தைகள் அங்கே ஊட்ட சத்து, பள்ளி முனனிலைக் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போனறவைகளைப் பெறுவதோடு மட்டுமின்றி, ஒரு நல்ல சமுதாயத்திற்சான அடிப்படையில் மன வளர்ச்சி பெறுகிறார்கள். இந்நிலையங்கள் குழந்தை நலம் மற்றும் ஊட்டச் சத்து ஆகியவற்றில் தாய்மார்களுக்கு சமுதாயக் கல்வி நிலையமாகவும் உளளன. உள்ளூர்க் குழுக்கள் அமைக்கப்படுவதன்மூலம் ம்க்களின் பங்கு பெறும் பாங்கு மற்றும் ஈடுபாடு அதிகரிக்கின்றது. ஒப்பில்லாத சமுதாயம் மலர இத்திட்டம் பெருமளவு உதவியுள்ளது.

கோயம்புத்தூர் அவினாசிலிங்கம மனையியல் கல்லூரி நடத்திய ஒரு ஆய்விலிருந்து இத்திட்டத்தின்கீழ் சத்துணவு பெற்றுப் பயனடையும் எல்லா குழந்தைகளின் ஊட்டச் சத்து மற்றும் உடல் நலத் தகுதி நிலையும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளதாக அட்டியின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

எல்லா குழந்தைகளும் உடல் நலமுள்ள தேசியக்குடிமக்களாக வளர்ச்சி பெற அவர்களுக்கு சத்துணவு அளித்தல் ஒரு தேசிய பொறுப்பாகும். நம் மாநிலத்தில் தொடங்கப்பட்டு உள்ள இத் தன்னிகரில்லாத் திட்டமானது, ஏழை எளியோர்க்கு தொண்டாற்றுவதே பெரிதென செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வரின உன்னத இலட்சியத்திற்கு ஏற்ப அமைவதோடல்லாமல், மாண்புமிகு பாரதப் பிரதமரின் இருபது அம்சப் பொருளாதார திட்டத்தின் முக்கிய இலட்சியத்தையும் நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் :

குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வளர்ச்சியில் ஒரு மிக நெருக்கடியான நிலையில், செறிவு மிகுந்த பணிகளை ஒருங்கிணைந்த வடிவில் வழங்குகிற அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குழந்தை பிறப்பதற்கு முன்னாலுள்ள நிலையிலேயே கவனம் செலுத்துவதோடு அது பிறந்து ஆறு வயது ஆகிறவரை அக்குழந்தைக்கு ஊட்டச்சத்து தேவைகள், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மனவளர்ச்சி ஆகியவற்றிற்குத் தொடர்ந்து உதவி செய்கிறது. இத்திட்டம் முதலில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் 1975-76-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1982-83-ல் மேலும் 27 இடங்களிலும், 1983-84-ல் மேலும் 9 இடங்களிலும் நீட்டிக்கப்பட்டது. தற்சமயம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர்,



திருச்சிராப்பள்ளி, வேலூர், திருவொற்றியூர், சேலம், 'தஞ்சாவூர்' ஈரோடு திருப்பூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், ஆலந்தூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், இராஜபாளையம் மற்றும் கடலூர் ஆகிய நகர்ப்புறப் பகுதிகளிலும், தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய கிராமப்புறப் பகுதிகளிலும் சேர்ந்து மொத்தம் 39 திட்டப்பகுதிகள் உள்ளன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஊட்டக்குறைவு மற்றும் தொடர்பான குறைபாடுகளை எதிர்த்துப் போராட கீழ்க்கண்ட செறிவுப் பணிகள் மூலம் முயற்சி செய்கிறது—

1. துணை ஊட்டச்சத்து.
2. பள்ளி முன்னிலைக் கல்வி.
3. மருத்துவ சோதனை.
4. நோய்த்தடுப்பு.
5. மேல்மருத்துவ சோதனை.
6. சமுதாயத்தின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திலும் 100 குழந்தை நல நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு குழந்தை நல நிலையத்திலும் 40 பள்ளி முன்னிலைக் கல்விக்கான குழந்தைகள், 30 இரண்டு வயதுக்கு கீழுள்ள குழந்தைகள் மற்றும் 30 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களடங்கிய 100 நபர்கள் இருக்கவேண்டும் என்பது குறியீடாகும். ஒவ்வொரு திட்டமும், ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் நான்கு தாய்மை மருத்துவச் செவிலியர் உதவியுடன் செயல்படும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. ஒவ்வொரு குழந்தை நல நிலையமும் இரண்டு குழந்தை நல உதவியாளர்களின் உதவியுடன் ஒரு குழந்தை நல அமைப்பாளரைப் பொறுப்பாகக் கொண்டு செயல்படுகிறது.

திட்டத்தின் வெற்றி, அறிவாற்றலுடன் அதனை சரியான முறையில் செயல்படுத்துவதில் அடங்கியுள்ளதால், குழந்தை நல அமைப்பாளர்களுக்குச் சரியான முறையில் பயிற்சியளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்காகவே நியமனம் செய்யப்பட்ட போதனாசிரியைகள்மூலம் குழந்தை நல அமைப்பாளர்களுக்கு முறையான மற்றும் பயன்மிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊட்டசத்து, பள்ளி முனனிலைக்கல்வி, உடல் நலப் பராமரிப்பு மற்றும் சமுதாயக் கல்வி ஆகியவை பயிற்சியில் அடங்கியதாகும். குழந்தை நல அமைப்பாளர்களின் செயலாக்கத்தை அதிகரிக்க, பயிற்சி நிலையங்களில் அவர்களுக்களிக்கப்பட்ட

[1984 மார்ச் 23

பயிற்சி போதனாசிரியைகள் குழந்தை நல நிலையங்களுக்குச் சென்று அவ்வப்போது அறிவுரைகள் வழங்குவதன்மூலம் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே போன்று குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மருத்துவ அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள். தாய்மை மருத்துவ செவிலியர்கள் மற்றும் போதனாசிரியைகள் ஆகியோருக்குப் பணிக்கு சேருவதற்கு முன்னும், பின்னும் பொதுமக்கள் கூட்டுறவுக்கும் குழந்தை வளர்ச்சிக்குமான தேசியக் கழகத்தினராலும் ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியாலும் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இளம்பிள்ளைவாதம், தொண்டை அடைப்பான், கக்குவான், வில்வாத ஜன்னி, மற்றும் தட்டம்மை ஆகியவைகளுக்கு எதிராக நோய்தடுப்பு இயக்கங்கள் நடத்துதல் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். 1983-84-ல் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மூன்று நிலைகளில் இயக்கம் நடத்தப்பட்டது. சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின் குறியீட்டின்படி 85 சத வீதம் குழந்தைகள் போலியோ மற்றும் தட்டம்மைக்கான தடுப்பூசி மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. 30 திட்ட பகுதிகளும் சேர்ந்து இந்த இயக்கத்தில் பயன்பெற்ற குழந்தைகள் எண்ணிக்கை சுமார் 1,30,000 ஆகும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சுகாதாரப் பணியின்மூலம் தாய்மார்களுக்கும் குழந்தை பிறப்பதற்கு முன்னும் குழந்தை பிறந்த பின்னும் மேல் மருத்துவ சோதனை வசதிகளும், குழந்தைகளுக்கு மருந்து சோதனை வசதிகளும்கூட அளிக்கப்படுகின்றன. குறைந்த செலவில் ஊட்டச்சத்து, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் சொந்த தேக ஆரோக்கியம் ஆகிய சமுதாயக் கல்வி 'கேர்' நிறுவனத்தால் தயாரித்து வழங்கப்படும் திரைப்படங்கள்மூலம் அளிக்கப்படுகிறது. பெற்றோர்களுக்கு அவர்கள் குழந்தைகளை நோய்தடுப்பு முகாம்களுக்குக் கொண்டு வருமாறு அழைப்பு விடுக்கும் ஒரு சிறப்பான திரைப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தை நல நிலையத்திற்கும், குழந்தைகளின் எடை வளர்ச்சியைக் கவனிக்க ஒரு எடை காட்டும் கருவியும் சுகாதார அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழந்தையின் எடையும் கணக்கிடப்பட்டு, வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது. ஊட்டச்சத்து குறைவாயுள்ள குழந்தைகளுக்கு உடல் நலம் பேணுவதிலும் ஊட்டச்சத்திலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் ஊட்டச் சத்துப் பிரிவானது, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்மூலம் அமுல்படுத்தப்படுதல், அப்பணியைப் பெரிதும் பொருளுடையதாகவும், பயனுடையதாகவும் ஆக்குகிறது.



1984 மார்ச் 23]

30 குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப்பகுதிகளில், இரண்டு வயதுக்குக் கீழான குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்'' நிறுவனம் வழங்கும் சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 1983—84 ஆம் ஆண்டின் மிக முக்கியமான சாதனையாகும். இத்திட்டத்தின்கீழ் ஆறு மாதங்கள் முதல் 2 வயது வரையான குழந்தைகள் குழந்தை நல நிலையங்களில் 80 கிராம்கள் ஐ.சி.எஸ்.எம். மாவு கொண்டு தயாரிக்கப்பட்ட கஞ்சி நாள்தோறும் வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 720 கிராம்கள் பல்கர் கோதுமை என்னும் உணவுப் பொருளை வாரந்தோறும் ஒரு முறை பெற்று வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார்கள். தற்போது மொத்தம் 61,000 குழந்தைகளுக்கும், 79,000 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்' நிறுவனம் வழங்கும் ஐ.சி.எஸ்.எம். மற்றும் பல்கர் கோதுமை ஆகியவை வழங்கப்படுகின்றன. புதிய ஒன்பது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களிலும், 2 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் 'கேர்' உணவு வழங்கும் திட்டத்தை 1984—85 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இப்பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், சமுதாய ஊட்டச்சத்து முயற்சிகளைப் பெருக்கவும், குழந்தை நல அமைப்பாளர்களுக்கு அவ்வப்போது விரிவான வழிகாட்டியாகவும் இருக்கக்கூடிய அளவில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட செய்தி அறிவிப்பு வெளியீடு ஒன்று வெளியிடத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. இது குழந்தை நல அமைப்பாளர்கள் அவர்கள் கருத்தைச் சொல்லவும், திட்டத்தின் மீதுள்ள நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும். இச்செய்தி அறிவிப்பு வெளியீடு மற்றும் சிறு வெளியீடுகள் விரிவான விபரங்கள் மற்றும் திரைப்படங்கள் தயாரித்தல் போன்றவை குழந்தை நல அமைப்பாளர்களின் செயலாக்கத்தை அபிவிருத்தி செய்வதோடு சமுதாயத்தினருக்கு ஊட்ட சத்துக் கல்வியைப் போதிக்க நெடுங்காலத்திற்கு உதவும் என எதிர் பார்க்கப்படுகிறது. குழந்தை நல நிலையங்களை சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தவும், குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்களைக் கற்பிக்கவும் குழந்தை நல நிலையங்களை இணைத்து கழிப்பிடங்கள் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. துவக்கத்தில் ''யுனிசெப்'' நிறுவன உதவியுடன் திருப்பூர் நகராட்சியிலுள்ள 65 குழந்தை நல நிலையங்களில் கழிப்பிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு உள்ளது.

1984—85 ஆம் ஆண்டு, எல்லா 39 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டங்களுக்காகவும் ரூ. 4.55 கோடி செலவழிக்கப்படும்.

[1984 மார்ச் 23

3. உலக வங்கி ஆதரவில் சென்னை நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறும் தாய்-சேய் நலப்பணிகள் திட்டம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் இத்தாய்-சேய் நலப்பணிகள் திட்டத்தில் ஆறு மாதத்திலிருந்து ஐந்து ஆண்டுகள் வரையிலான குழந்தைகளுக்கும், கருவுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும் துணை ஊட்டசத்து, கல்வி, சுகாதார வசதி, நோய் தடுப்பு மருத்துவ சோதனை ஆகிய பணிகள் ஒருங்கிணைந்த வடிவில் அளிக்கப் படுகின்றன.

தற்போதுள்ள சென்னை மாநகரில் இத்திட்டத்தின்கீழ் 135 குழந்தைகள் நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலும ஒரு குழந்தைகள் நல அமைப்பாளரும், இரு குழந்தைகள் நல உதவியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையங்களில் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் மருத்துவ வசதி அளித்திட மூன்று மருத்துவ அலுவலர்கள் உரிய சார்பு பணியாளர்களுடன் பணியாற்றி வருகின்றனர். நடமாடும் மருத்துவ மனை ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையங்களில் 15—9—1982 வரை, துணை ஊட்டச்சத்து 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தது. 15—9—1982 முதல் கேர் பொருட்களுக்குப் பதிலாக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக மேலும் 300 நிலையங்கள் தொடங்கப்பட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. இவற்றில் 20 நிலையங்கள் தற்போது தொடங்கப்பட்டு விட்டன. 1984–85 ஆம் ஆண்டிற்கென ரூ. 44.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் :

உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் இத்திட்டத்தின் முதற்கட்டப்பணி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சோதனைத் திட்டமாக 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவங்கியது தற்போது இத்திட்டம் இரண்டாம் கட்டமாக மதுரை மாவட்டம் முழுவதிலும், மூன்றாம் கட்டமாக புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், நான்காம் கட்டமாக, திருநெல்வேலி மாவட்டத்திலும் வடாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. ஐந்தாம் கட்டமாக, இத்திட்டத்தை செங்கல்பட்டு மாவட்டத்திற்கும், எஞ்சிய வடாற்காடு மாவட்டத்தின் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.



1984 மார்ச் 23]

இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவு ரூ. 55.78 கோடியாகும். இத்திட்டத்தின் குறிக்கோள் மக்கள் நலம், ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிகளை மேலும் திறன் உடையனவாக்கி அம்முயற்சிகளின் பயனை அதிகப் படுத்துவதாகும்.' ஊட்டச்சத்துக் குறைவினால் அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய 6 மாதம் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவினைப் போக்குவதன் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய முதன் முறையாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மற்ற வயதுத் தொகுதியிலுள்ள குறிப்பாக ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பள்ளி செல்லும் வயதையடையாத குழந்தைகள் ஆகியோர்க்கும், பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஊட்டச்சத்து மையம் கிராமங்களுக்கு அனைத்துப் பணிகளையும் தரும் முக்கிய இடமாக உள்ளது. இது சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர்கள் பொறுப்பில் இருந்து வருகின்றன. இவர்களது பணி, ஊட்டச்சத்து மேற்பார்வையாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும் வட்டார அளவில் சமுதாய ஊட்டச்சத்துப் பயிற்றுநர்களாலும், வட்ட அளவில் வட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களாலும் வழி நடத்தப்படுகின்றது. திட்டம் குறித்து மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்கள் இரண்டு வார பயிற்சி பெறுகின்றார்கள். வட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவளர்கள் மூன்று வாரத் திட்டப் பயிற்சியும், மூன்று வார நிர்வாகப் பயிற்சியும் பெறுகின்றார்கள். திட்டம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும், நிர்வாகப் பயிற்சி பவானிசாகர் குடி முறைப் பயிற்சி கழகத்திலும் தரப்படுகின்றது. இது போன்று மேற்பார்வையாளர்கள் 2 மாத திட்டப் பயிற்சியை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலோ அல்லது காந்தி கிராம ஊரகக் கழகத்திலோ பெறுகின்றனர். ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள பயிற்றுநர்கள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி அல்லது காந்தி கிராம ஊரகச் கழகத்தில் ஒரு மாத பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்றுநர்கள் சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கு வட்டார அளவில் இரு மாதப் பயிற்சியளிக்கின்றனர். சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் வேலைத் திறனையும் திட்ட அறிவையும் மேம்படுத்தும் வகையில் தொடர் இடைவெளி உட்பணிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

[1984 மார்ச் 23

ஆறுமாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளின் எடையும் மாதா மாதம் எடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சத்துக் குறைவுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்றவர்களுக்கும், தாய்மார்களுக்கும், இணை உணவு தரப்படுகின்றது. மேலும் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஓர் முறை வைட்டமின் 'ஏ' திரவமும், நான்கு மாதத்திற்கு ஓர் முறை வயிற்றுப் பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகிறது. பொது சுகாதாரத்துறையின்கீழ் பணியாற்றும் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும், ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு ஆண் சுகாதாரப் பணியாளரும், ஒரு பெண் சுகாதாரப் பணியாளரும் பணிபுரிகின்றார்கள். சுகாதார மேற்பார்வையாளர்கள் இவர்களது பணிகளைக் கண்காணிக்கின்றார்கள். இவர்கள் யாவரும் அண்மையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனர். முதற் கட்டத்தில் 13 சுகாதார துணை நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இரண்டாம் கட்டத்தில், மொத்தம் 361 நிலையங்களுள், 360 முடிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டத்தில், இராமநாதபுரத்தில் 227 நிலையங்களும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 119 நிலையங்களும் கட்டப்படுகின்றன. நான்காம், ஐந்தாம் கட்ட வேலையும் விரைவில் துவங்க உள்ளது.

இத்திட்டத்தின் தொடர்புப் பிரிவு கிராம சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் உணவுப் பழக்கங்களையும் மாற்றியமைக்க முயற்சி செய்வதால் இத்திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒரு இன்றியமையாத அமைப்பாக இப்பிரிவு கருதப்படுகிறது. கருத்தரங்குகள், பயிற்சித் தகவல் கூட்டங்கள் முனைப்பு இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், திட்டத்தின் பல்வேறு பணியாளர்களுக்கும் திட்டத்தின் குறிக்கோள், செயல்முறை முதலானவற்றைப் போதித்து வருகின்றது. திரைப்படங்கள், சுவரொட்டிகள், சுவர் வண்ண விளம்பரங்கள், செய்தித் தாள்கள் ஆகியவைகளைப் பயன்படுத்தித் திட்டம் சம்பந்தமான செய்திகள் பரப்பப்படுகின்றன.

இதுவரை ஏற்பட்டுள்ள திட்டச் சாதனைகள் குறித்து, மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் அவர்களால் ஒரு இடைக்கால மதிப்பீடு நடத்தப்பட்டு வருகிறது.



1984 மார்ச் 23]

5. பழங்குடியினருக்கான குழந்தை நல நிலையங்கள் :

1976 ஆம் ஆண்டிலிருந்து, தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இயங்கி வந்த 169 குழந்தை நல நிலையங்கள் வடாற்காடு, மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் மாவட்டங்களில் பின் தங்கிய பழங்குடியினருக்காக ஏற்படுத்தப்பட்ட 49 குழந்தை நல நிலையங்களும் 1-7-1982 முதல் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டு இலவச சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ. 20.64 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. பாலர் பள்ளிக் கல்வி :

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னால் இயங்கி வந்த 4,343 குழந்தைகள் நல நிலையங்கள் அனைத்தும் பாலர் பள்ளிகளாக மாற்றப்பட்டன. இந்நிலையங்கள் அனைத்திலும் பாலர் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும். இதுவரையில் 4,140 குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு பாலர் கல்வியைப் பயிற்றுவிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டு இந்நிலையங்களில் பாலர் கல்வி வகுப்புகள் நடக்கின்றன. கல்வித் துறையைச் சேர்ந்த வல்லுநர்களால் அமைப்பாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையங்களில் 3 வயதுக்கு மேல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பொது அறிவு, ஆக்க உணர்வு, சுகாதாரக் கல்வி மற்றும் நல்ல பழக்க வழக்கங்கள்பற்றி கல்வி போதிக்கப்படுகிறது. இதற்கென, சிறப்புக் கல்வி உபகரணங்கள் இந்நிலையங்கள் அனைத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. இக்கல்விக்கான போதனா முறை கல்வித் துறை இயக்குநரைத் தலைவராகக் கொண்ட குழுவால் வகுக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றமடைந்ததைக் கருத்திற்கொண்டு மேலும் 5,000 குழந்தைகள் நல நிலையங்களில் பாலர் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சீரியத் திட்டம் புதிய குழந்தைகளின் தலைமுறையை உருவாக்கி மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமையைக் கொணர வல்லது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக, 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 65.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 23

7. ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் திட்டம் :

பதிவு செய்யப்பட்ட தனியார் சமூக நல நிறுவனங்களின் மூலம் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்கான திட்டத்தை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது. அதிக அளவிலான நிறுவனச் செலவுகளைத் தவிர்க்கும்பொருட்டு குடில் முறையில் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். ஒவ்வொரு குடிலிலும் 25 குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள்.

ஆதரவற்ற குழந்தைகளையும் மற்ற சாதாரண குடிமக்களைப்போல் வாழச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். உணவு உடை, உறையுள், மருத்துவ வசதி, கல்வி மற்றும் வாழ்க்கைக் கல்வி முதலிய வசதிகள் இத்திட்டத்தில் அடங்கும். அதனால், அக்குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்ததும் வேலை வாய்ப்பு வசதி பெறலாம். 1-4-1979 முதல் இத்திட்டத்திற்கான அரசு மானியத்தை மத்திய அரசும், மாநில அரசும் 45 : 45 என்ற விகிதத்தில் அளிக்கின்றன. மீதி 10 சதவீதம் செலவுத் தொகையை நிறுவனமே ஏற்றுக் கொள்ளும். 1-4-1979-க்கு முன்பு குழு மான்யத்தையும் (90 சதவீதம்) மத்திய அரசே வழங்கி வந்தது. இக்குடில்களுக்கான கட்டிடம் கட்டும் மான்யமும் அளிக்கப்படுகிறது. கான்கிரிட் கூரை கொண்ட ஒரு குடிலுக்கு ரூ. 1,61,700-ம், அஸ்பெஸ்டாஸ் கூரை கொண்ட ஒரு குடிலுக்கு ரூ. 1,18,500-ம் மானியமாக வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் தற்சமயம் 9,235 குழந்தைகள், 131 தனியார் நிறுவனங்களின் மூலம், பயனடைகிறார்கள். 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 119 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

8. அரசால் நடத்தப்படும் ஆதரவற்றோர் இல்லங்கள் :

ஐந்து முதல் பதினெட்டு வயது வரையிலான ஆதரவற்ற குழந்தைகளுக்கு இல்லம் ஒன்றுக்கு 250 நபர்களைக் கொண்ட 4 ஆதரவற்றோர் இல்லங்களை சென்னை, மதுரை, கன்னியாகுமரி, சேலம் ஆகிய 4 இடங்களில் சமூக நலத்துறை நடத்தி வருகிறது. இவ்வில்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு உணவு, உறையுள், உடை, மருத்துவம் மற்றும் கல்வி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 5 ஆம் வகுப்பு வரையிலான கல்வியை அவர்கள் தங்கியுள்ள இல்லங்களிலேயே பெறும் இக்குழந்தைகள், அதற்கு பிந்தைய கல்வியைப் பெறுவதற்கு அரசு பள்ளிகளுக்கோ, மாநகராட்சி பள்ளிகளுக்கோ அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



1984 மார்ச் 23]

இதற்காக ரூ. 10.87 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ரூ. 36 வீதம் வழங்கப்படுகிறது. ஆண்டு ஒன்றிற்கு உடைக்காக ரூ. 35-ம், படுக்கை செலவிற்காக ரூ. 20-ம், புத்தகங்களுக்காக ரூ. 25-ம் வழங்கப்படுகின்றன. பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும், இந்த அரசு ஆதரவற்ற இல்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

V ஊனமுற்றோர் நலம் :

உடல் ஊனமுற்றோர் சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதி ஆவார். உடல் ஊனமுற்றோர் முழு மனித உரிமைகளை மற்றவர்களுடன் பொதுவாகப் பகிர்ந்து கொள்கிறார். எனவே அவர் முடிந்தவரை எல்லாவிதமான பாதுகாப்பு உதவி மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை பெறத் தகுதி படைத்தவராவார். இப்படிப்பட்ட சகோதரரை அரசு முழு மனதுடன் பொறுப்புணர்ந்து அவருக்குத் தேவையான மருத்துவ வசதி குறுகிய கால பயிற்சி, பொருளாதாரம் மற்றும் சமுதாய மறுவாழ்வு ஆகிய வசதிகளை ஏற்படுத்தி தொடர்ந்து தனது சிறப்பான கவனத்தை செலுத்தி வருகிறது. இது அரசு தனது சமூக நலத்துறை வரவு-செலவு திட்டத்தில் 1977-78-ல் ஒதுக்கிய ரூ. 26.67 இலட்சம் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 112.04 இலட்சமாக உயர்ந்ததிலிருந்து நன்கு புலப்படும். 1983-84 ஆம் ஆண்டில் அரசால் வழங்கப்பட்ட சலுகைகளைக் கொண்டு சுமார் 45,000 ஊனமுற்றவர்கள் பயன் அடைந்தனர். இவர்களை பொருளாதாரத் தேவைக்காக சார்ந்திருப்பதை தவிர்க்கும் நோக்கத்துடன் அரசு இவர்களுக்காக அரசின் அனைத்து துறைகள்/நிறுவனங்கள்/உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றில் உள்ள பணியிடங்களில் 3 விழுக்காடுகளை பொருளாதார மறுவாழ்வாகக் கருதி, ஒதுக்கீடு செய்துள்ளது.

ஊனமுற்றவர் மறுவாழ்வுக்கென கல்வி, குறுகிய கால பயிற்சி வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்பு அரசு பண உதவி/ தேவைப்பொருள் உதவி ஆகியவற்றுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:—

(அ) ஊனமுற்றவர்களுக்கு கல்வி வசதிகள் :

பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகியோர் மிகுந்த கவனத்தையும் பாதுகாப்பையும் பெறுவதுடன் கல்விக்கான வசதிகளையும் பெறும் வண்ணம் உள்ளனர். அவர்களது மாறுபட்ட நிலையைக் கருதி கல்விக்கான வசதிகளை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு போதிப்பதற்கு சிறப்பு

வேலை முறையைக் கையாளவும் வேண்டியுள்ளது. அவர்களது சிறப்பான தேவைகளைக் கருதி அரசு சிறப்புப் பள்ளிகளை நடத்தி வருகிறது. தற்போது கீழ்க்கண்டவாறு 26 அரசு சிறப்புப் பள்ளிகளும் 25 அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளுமாக மொத்தம் 51 சிறப்புப் பள்ளிகள் இருக்கின்றன :—

| வரிசை எண். | வகை. | அரசுப் பள்ளிகள். | அரசு மானியம் பெறும் பள்ளிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பார்வையற்றோர் பள்ளி ... | 12 | 9 |
| 2. | காது கேளாதோர் பள்ளி .. | 9 | 10 |
| 3. | தொழுநோயால் பாதிக்கப்பட்டோர்க்கான பள்ளி | .. | 1 |
| 4. | மன வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பள்ளி. | 1 | 2 |
| 5. | உடல் ஊனமுற்றவர் பள்ளி | 1 | 1 |
| 6. | மாநகராட்சி காது கேளாதோர் பள்ளிகள். | 2 | — |
| 7. | ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் | 1 | 2 |
| | மொத்தம் .. | 26 | 25 |

சுமார் 4,500 ஊனமுற்ற சிறுவர்கள் தங்கும் வசதியையும் உணவு வசதியையும் கொண்டு சிறப்புக் கல்வி கற்பிக்கப்படுகிறார்கள்.

1984-85 ஆம் ஆண்டில் அரசு காது கேளாதோர் பள்ளிகள், சிதம்பரம், புதுக்கோட்டை ஆகியவற்றிலும் பார்வையற்றோர் பள்ளிகள் சேலம், திருவாரூர் ஆகியவற்றிலும் 6 ஆம் வகுப்பு ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதே போல தர்மபுரி அரசினர் காது கேளாதோர் பள்ளியிலும் மதுரை பார்வையற்றோர் பள்ளியிலும் 8 ஆம் வகுப்பு ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் அரசு காது கேளாதோர் பள்ளியில் 10 ஆம் வகுப்பு ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலே விவரிக்கப்பட்டபடி உயர் வகுப்புகள் ஆரம்பிக்க 1984-85 ஆம் ஆண்டில் ஆகும் மொத்த செலவு ரூ. 5.24 இலட்சங்கள் ஆகும்.



மதுரையில் உடல் ஊனமுற்றவர்களுக்கான சிறப்புப் பள்ளியொன்று நடைபெற்று வருகிறது. அங்கு இருக்கும் மாணவர்களுக்குத் தொடர்ந்து மருத்துவ கவனிப்பும் முறையான தேகப் பயிற்சிகளும் அளிக்கப்படுவது அவசியமாகிறது. எனினும் பெரும்பாலானவற்றில் அறுவை சிகிச்சை மூலம் சரிப்படுத்திய பின்னர் நடப்பதற்கு இயலும் வண்ணம் தாங்கும் கருவிகள் நூதன செயற்கை அவையங்கள் பொருத்துதல் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 1.69 இலட்சங்கள் செலவில் மேற்கூறிய வசதிகளை 100 சிறுவர்களுக்கு மேற்படி பள்ளியில் பயில்பவர்களுக்கு ஏற்படுத்தும் நோக்கத்தில் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) சிறப்புப் பள்ளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் திட்டம்:

அரசு 12 பார்வையற்றோர் பள்ளிகள் மற்றும் 9 காதுகேளாதோர் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ரூ. 4.03 இலட்சங்கள் செலவில் 1984-85 ஆம் ஆண்டில் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் மரச் சாமான்கள் ஆகியவற்றை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) அரசு எழுத்து முறை வட்டார அச்சகம்:

அரசு பார்வையற்றோர் பள்ளி, பூந்தமல்லி வளாகத்திற்குள் பார்வையற்றோருக்கு தேவைப்படும் எழுத்துமுறை புத்தகங்களை அச்சு செய்து வழங்க ஒரு சிறப்பு அச்சகம் செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகம் தென்னகத்தில் இருக்கும் நான்கு மாநிலங்களுக்குத் தேவையான எழுத்து முறைப் புத்தகங்களை தயார் செய்கிறது. தற்போதிருக்கும் அச்சக கட்டிடம் போதுமானதாக இல்லாமையால் கூடுதலாகக் கட்டிடம் ஒன்றை ரூ. 1.64 இலட்சம் செலவில் 1984-85 ஆம் ஆண்டில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 3·23 இலட்சங்கள் இந்த அச்சகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை:

ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்க்கும் தொழில் நுட்ப உள்துறை பயிற்சிபெறும் ஊனமுற்ற மாணவர்க்கும் உதவித் தொகை இந்திய அரசு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. அவர்களது கல்விக்கேற்ப உதவித் தொகை ரூ. 60-லிருந்து ரூ. 170 வரை மாறுபடுகிறது.

1977-78 ஆம் ஆண்டு முதல் 1983-84 ஆம் ஆண்டு முடிய மொத்தம் ரூ. 35.78 இலட்சங்கள் அவர்களது உதவித் தொகை வசதிக்கென செலவிடப்பட்டுள்ளது. 1984-85ஆம் ஆண்டு சுமார் 1,500 ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கென ரூ. 15 இலட்சங்கள் இந்திய அரசிடமிருந்து கேட்கப்பட்டுள்ளது.

மேற்கூறியதுடன் மாநில அரசும் ஒரு ஆண்டுக்கு ஒருவருக்கு ரூ. 25 வீதம் தேவைப்படும் புத்தகம் மற்றும் எழுது புத்தகம் அல்லது குறிப்பேடு வாங்குவதற்கென 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு முடிய உள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குகிறது. இந்த வசதியினால் சுமார் 8,000 ஊனமுற்றவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயன் பெறுகிறார்கள். 1984-85ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 2.05 இலட்சங்கள் ஆகும்.

(உ) மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் :

மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் தொடக்கத்தில் 25 சிறுவர்களுடன் முதன் முதலாக குரோம்பேட்டையில் துவங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் மன வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு உறைவிடம், உணவு வசதிகளுடன் கல்வி மருத்துவ வசதி போன்ற மறுவாழ்வு வசதிகளை உண்டாக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் மேற்படி நிறுவனம் 100 மாணவர்களைக் கொண்டதாக விளங்கும். இந்தத் திட்டத்திற்கென 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 3.07 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்களுக்குப் போதிப்பதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்:

மேற்படி துறையில் திறம்பட செயல்படும் நிறுவனங்கள் மூலம் ஊனமுற்றவர்களுக்கு சிறப்பாக போதிப்பதற்கென அரசு பயிற்சியினை ஆசிரியர்களுக்கு வழங்குகிறது. காது கேளாதோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சென்னையிலுள்ள காது கேளாதோர் பள்ளியில் நவீன முறைகளைப் பற்றிய பயிற்சி கொடுக்கப்படுகிறது. மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு போதிப்பது பற்றிய பயிற்சி சென்னையிலுள்ள பாலவிகாரில் கொடுக்கப்படுகிறது. இதற்கென அரசு மான்யம்



அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1984-85 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். வட்டார பயிற்சி நிலையம் பார்வையற்றோருக்கு போதிப்பதற்கான பயிற்சியை இந்திய அரசின் உதவியினால் அளித்து வருகிறது. ஆண்டு தோறும், 12 ஆசிரியர்கள் பயிற்சிக்காக அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி இருக்கைகளை தென்னகத்தில் நான்கு மாநிலங்களும் பங்கீடு செய்துகொள்கின்றன. மேற்படி நிறுவனத்தில் தமிழக அரசு 15 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கும் விதத்தில் ஒரு சிறப்புப் பிரிவினை நடத்தி வருகிறது.

2. ஊனமுற்றோருக்கு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி:

வேலை வாய்ப்புக்குத் தகுதியான பயிற்சியைப் பெறாத ஊனமுற்றோர்களை பணியில் அமர்த்துவது என்பது கடினமான ஒன்றாகும். எனவே அவர்களது வேலை வாய்ப்புக்கான வழிகளை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களுக்குத் தகுதியான தொழில்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எனவே அரசு ஊனமுற்றோர்களுக்கு தங்கும் வசதிகளுடன் சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகிறது. இதனால குறிப்பிடதக்க எண்ணிக்கை கொண்ட ஊனமுற்றோர்கள் குறிப்பிட்ட பயிற்சியில் தகுதி பெற்று வேலை வாய்ப்புக்குத் தகுதி உடையவர்களாக ஆகிறார்கள். அப்படிப்பட்ட ஊனமுற்றோர்களுக்காக அரசு நடத்தி வரும் பயிற்சித் திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு:

(அ) நவீன பயிற்சி மற்றும் உற்பத்திப் பணிமனை, முட்டுக்காடு :

முட்டுக்காட்டில் உள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்திப் பணிமனை உருக்குப் பொருள்கள் தயாரிப்பு, பெட்டிக்கடை தயாரித்தல், மூன்று சக்கரவண்டி தயாரித்தல் போன்ற தொழில்களில் 77 ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சியை அளித்துள்ளது. 1984 85 ஆம் ஆண்டுக்கு ரூ. 10.36 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஸ்ரீ சேவாமந்திரில் பயிற்சி அளித்தல் :

ஊனமுற்ற மகளிர் சென்னையில் உள்ள ஸ்ரீ சேவா மந்திர் மூலம் 1975 முதல் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 75 வீதம் உதவித் தொகை பெற்று வாழ்க்கைத் தொழிற்பயிற்சி பெறுகின்றனர். இது வரை 156 ஊனமுற்ற மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 25 ஊனமுற்ற மகளிருக்கு இப்பயிற்சி 1984—85-ல் அளிக்கப்பட உள்ளது. இந்த ஆண்டு ரூ. 0.54 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 23

(இ) பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி நிறுவனம், கிண்டி :-

வயது வந்த பார்வையற்றோருக்கு எளிய பொறியியல் பயிற்சித் திட்டம், கிண்டியில் கனரகப் பொறியியல் அல்லாத எளிய பொறியியல் தொழில்களில் 1981 முதல் 1982 முடிய பார்வையற்றோருக்கு பயிற்சி அளித்து வந்தது. இவ்வாறு பயிற்சிப் பெற்ற 453 பார்வையற்றோரில் 268 பார்வையற்றோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். 1982–83 ஆம் ஆண்டில் இந் நிறுவனம் பார்வையற்றோருக்கான அரசு தொழில் பயிற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. அடிப்படை பொறியியல் பணியாளர், சுருள் சுற்றுதல் மற்றும் புத்தகம் கட்டுதல் போன்ற 3 துறைகளில் தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இம்மூன்று துறைகளிலும் 24 பார்வையற்றோர் பயிற்சி பெற்று வருகின்றனர். இதற்காக 1984–85 ஆம் ஆண்டுக்கு ரூ. 2.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) தற்போதுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் காது கேளாதோருக்கு பயிற்சி அளிப்பதற்காக தனிப் பிரிவு ஏற்படுத்துதல் :

1981–83 ஆம் ஆண்டுகளில் சென்னை கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பொருத்துபவர் துறையிலும், மதுரை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மின் கம்பியாள் துறையிலும் காது கேளாத மாணவர்கள் அடங்கிய ஒரு குழு பயிற்சி பெற்றது. சென்னை கிண்டியில் இப்பயிற்சித் திட்டம் 1984–85 ஆம் ஆண்டில் தொடர்ந்து நடைபெற உள்ளது. இதன் மூலம் 16 காது கேளாதவர்கள் பயன் அடைவார்கள். இதற்கென 1984–85 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு :

பொருளாதார ரீதியாக தனித்து இயங்கவும் மற்றும் தன்னம்பிக்கை அடையச் செய்வதே ஊனமுற்றோரின் மறுவாழ்வுத் திட்டத்தின் குறிக்கோளாகும். தன் வாழ்க்கையைத் தானே நடத்திச் செல்ல சுயவேலை செய்ய அவர்களுக்கு உதவி செய்வதின் மூலமோ அல்லது அவர்களை தொடர்ந்து வருமானம் கிடைக்கும் பணியில் அமர்த்துவதன் மூலமோதான் மேற்படி நோக்கம் நிறைவேறும். சுய வேலை மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் கீழ்க்கண்ட திட்டங்கள் ஊனமுற்றோருக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—



1984 மார்ச் 23]

(அ) ஊனமுற்றோர்க்கு பெட்டிக்கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல் :

வங்கிகள் மூலம் குறைந்த விகித வட்டியில் கடனுதவி பெற்று மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பெட்டிக்கடைகள் அமைக்க ஊனமுற்றோருக்கு உதவி அளிக்கப்படுகிறது. அவ்வாறு உதவி பெறுபவர்களுக்கு பெட்டிக் கடையின் மதிப்பைப் பொறுத்து ரூ. 250 முதல் ரூ. 500 வரை அரசு மான்யமாக அளிக்கிறது. 1979–80 முதல் 1983–84 முடிய ரூ. 3.37 இலட்சம் அரசு மான்யத்துடன் 710 ஊனமுற்றோர் பெட்டிக்கடை அமைக்க உதவி செய்யப்பட்டிருக்கின்றனர். 1984–85 ஆம் ஆண்டிற்கென ரூ. 94,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஊனமுற்றோருக்கு தொலைபேசி நிலையம் அமைக்க உதவி அளித்தல் :

ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிப்பதில் ஒரு பகுதியாக அவர்களுக்கு தொலைபேசி நிலையம் அமைத்து சென்னைத் தொலைபேசி பொது மேலாளர் மூலமாகவும், சென்னை மாநகராட்சி மூலமாகவும் அதற்குரிய இடத்தைப் பெற்று உதவி அளிக்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 20 ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர்.

(இ) பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல் :

1979-80 ஆம் ஆண்டில் அரசு ''சிறப்புத் தொழில் பழகுவோர் திட்டம்'' என்ற புதியதொரு திட்டத்தை ஊனமுற்றோருக்காக துவக்கியது. இத்திட்டத்தின்படி வேலை வாய்ப்பிற்காக தமிழ்நாடு வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர் பல்வேறு நிறுவனங்களில் தொழில் பழகுவதற்காக அமர்த்தப்படுகின்றனர். அப்படி அமர்த்தப்படும் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 150 உதவித் தொகை அரசு ஓராண்டு காலத்திற்கு வழங்குகிறது. தொழில் பயிற்சிக் காலம் ஓராண்டு முடிந்த பிறகு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஊனமுற்றோரை நிரந்தர ஊழியர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 1,290 ஊனமுற்றோர் இந்த வசதியை பெற்றுள்ளனர். 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 23

(ஈ) பார்வையற்ற மகளிருக்குத் தொழில் கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் :

பார்வையற்ற மகளிருக்காக சென்னையில் தங்கும் வசதியுடன் கூடிய மறுவாழ்வு இல்லம், 1978 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 40 வயதுக்கு குறைந்த பார்வையிழந்து வறுமையில் வாடி ஆதரவு அளிக்க யாரும் இல்லாத நிலையில் உள்ள மகளிர் கல்வித் தகுதி எதுவாயிருப்பினும், அவர்கள் இந்த இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு நெய்தல், சாக்கட்டி செய்தல் போன்ற தொழில்களில் 6 மாத காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த உடன் அவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்பட்டு, தினமும் அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் வழங்கப்படுகிறது. இதுவரை 150 பார்வையற்ற மகளிர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1984-85 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 2.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) ஊனமுற்றோருக்கான வட்டார மறுவாழ்வு மையங்கள் :

ஊனமுற்றோரின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கென ஒரு சிறப்பு நிறுவனம் தனியே நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசால் நடத்தப்படும் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலைய அமைப்பைப்போல் நடத்தப்படும் வட்டார மறுவாழ்வு மையம் என்ற அமைப்பாகும்.

இது போன்று இம்மாநிலத்தில் சென்னை, கோவை, தஞ்சாவூர், மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு எல்லா மாவட்டங்களையும் தன்னுள் அடக்கி 5 மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு வட்டார மறுவாழ்வு மையமும் 100 ஊனமுற்றோருக்கு ஒவ்வொரு மாதமும் மறுவாழ்வு உதவி அளித்து வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இந்த 5 நிலையங்களின் மூலம் சுமார் 1,150 ஊனமுற்றோர் பயன்டைந்துள்ளனர்.

1984-85 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ. 12.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1984 மார்ச் 23]

(ஊ) வேலையின்றி உள்ள பார்வையிழந்தோருக்கு வேலையற்றோருக்கு வழங்கப்படும் படியை அளித்தல் :

இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து மூன்றாண்டு காலம் இப்பதிவேடுகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருந்தால் 45 வயதுக்குக் கீழும், மற்றவராக இருந்தால் 40 வயதுக்குக் கீழும் உள்ள பார்வையிழந்தவர்கள் பள்ளியிறுதித் தேர்வு அல்லது தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் இந்த படியை பெறத் தகுதி பெறுகின்றனர். இத்திட்டம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் பயிற்சித் துறை இயக்குநரால் சமூக நலத்துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 314 பார்வையற்றோர் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 1983-84 ஆம் ஆண்டு தொடரப்பட்டு 1984-85 ஆம் ஆண்டுக்கென ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ) ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு முயற்சிக்கு அரசு மான்யம் அளித்தல் :

வங்கிகளின் மூலம் கடனுதவி பெற்று சுயவேலை வாய்ப்பிற்காக சிறு தொழில் பிரிவுகள் அமைக்கும் பெரும்பான்மையான ஊனமுற்றோர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அரசு மான்யம் அளித்து சிறப்பு ஊக்குவிப்பு முயற்சிகள் எடுத்து வருகின்றது. வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்குச் சமமான, ஆனால், ஒரு நபருக்கு ரூ. 1,000-க்கு மேற்படாமல் அரசு மான்யமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 11,231 ஊனமுற்றோர் பயனடைந்தனர்.

4. ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்குதல்.

ஊனமுற்றோருக்கு அவர்களது ஊனத்தின் தன்மையைப் பொறுத்து காது கேட்கும் கருவிகள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்கள் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன.

(அ) மூன்று சக்கர வண்டி வழங்குதல் :

ஏழ்மை நிலையில் உள்ள கை, கால் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1974-75 ஆம் ஆண்டு முதல் 1983-84 ஆம் ஆண்டு முடிய 6,818 ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் செலவில் 133 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 130 கை, கால் ஊனமுற்றோர் இதன் மூலம் பயனடைவார்கள்.

(ஆ) சக்கர நாற்காலிகள் வழங்குதல் :

உடலின் கீழ் பகுதி பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம் 1981-82 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. இத் திட்டத்தின் மூலம் இதுவரை 200 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், 100 நபர்கள் 1983-84 ஆம் ஆண்டில் பயனடைவார்கள். 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல் :—

மாத வருமானம் ரூ. 500க்கு மேற்படாமல் இருக்கும் பெற்றோர்/பாதுகாவலரின் பராமரிப்பில் உள்ள காதுகேளாத ஏழை குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இது வரை 3,172 காது கேட்கும் கருவிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டிற்கு 125 நபர்களுக்கு இக்கருவிகள் வழங்க ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே அளவு நிதி ஒதுக்கீடு 1984-85 ஆம் ஆண்டிற்கும் செய்யப்பட்டுள்ளது.

5. மற்ற திட்டங்கள் ;

(அ) தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் :

8 முதல் 11 வயதிற்குள் இளம்பிள்ளை வாதத்தினாலும் முடக்கு வாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிற, மன வளர்ச்சி குன்றிய, காது கேட்காத, பார்வையற்ற, கை, கால் ஊனமுற்ற ழந்தைகளையும், தொழு நோயாளிகளின் குழந்தைகளையும் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு குழந்தை ஒன்றுக்கு ரூ. 30 என்ற விகிதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மான்யம் வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 78,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது



(ஆ) செய்திப் படம் தயாரித்தல் :

ஊனமுற்றோரிடம் பொது மக்களின் நாட்டத்தைத் திருப்பவும் பல்வேறு ஊனத்திற்கான காரணங்கள், வராமல் தடுப்பது, அவற்றைக் கண்டுபிடிப்பது மற்றும் ஊனத்தை நிவர்த்தி செய்தல் ஆகியவை பற்றி பொது மக்களுக்குக் கற்பிக்கவும், மேலும், ஊனமுற்றோர் நலனுக்காக அரசு ஆற்றிவரும் பல்வேறு பணிகளையும், பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டும் ஒரு வண்ண செய்திப்படம் அரசு தயாரித்து வெளியிட்டுள்ளது.

VI. தமிழ்நாடு சமூக நல வாரியம் :

தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்து வருகிறது. மேற்படி வாரியம் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்படுகிறது.

முக்கிய நோக்கங்கள் :

1. சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித் திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

3. உதவி திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடம் இருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் தமிழக குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காக பணியாற்றுகிறது. சுமார் 50 விழுக்காடுகள் முதல் 90 விழுக்காடுகள் வரை தொண்டு நிறுவனங்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது. மீதித் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது சிறப்புத் திட்டங்களுக்கு 100 விழுக்காடுகள் கூட பண உதவி செய்யப்படுகிறது.

தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1978-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 32 உறுப்பினர்களைக் கொண்டதாக திருத்தியமைக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு முதல் திருமதி தாராசெரியன் அவர்கள் தலைவியாக பணியாற்றி வருகிறார்கள். 1983 84ஆம் ஆண்டில் 3,[illegible]5 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ 83·88 இலட்சம் பண உதவி செய்யப்பட்டது.

விவரம்

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | அலகு எண். | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 நிட்டக்கால உதவி .. .. | 33 | 2.77 |
| 2 வருடாந்திர உதவி .. .. | 226 | 3.25 |
| 3 மகிலா மண்டல் உதவி .. | 16 | 1.29 |
| 4 சத்துணவுத் திட்டம் .. .. | 160 | 4.93 |
| 5 குழந்தைகள் காப்பகத் திட்டம் | 592 | 40.42 |
| 6 விடுமுறை முகாம் .. .. | 40 | 2.00 |
| 7 குறுகிய கால கல்விப்பயிற்சி (1 வருடம்) .. | 10 | 2.39 |
| 8 வாழ்க்கை தொழிற் பயிற்சி .. | 63 | 12.03 |
| 9 பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 8 | 0.39 |
| 10 சமூக பொருளாதார்ரத் திட்டம் .. | 11 | 5.94 |
| 11 சேவை முனைப்புத் திட்டம் .. | 2 | 0.19 |
| 12 பால்வளத் திட்டம் .. .. | 15 | 3.13 |
| 13 சிறப்பு சுயவேலைவாய்ப்புத் திட்டம் | 2 | 0.20 |
| 14 மாநில அரசு மான்யம் .. .. | 17 | 0.50 |
| 15 புத்தறிவுப் பயிற்சி முகாம் .. | 2,000 | 4.00 |
| 16 கிராமப்புற மகளிர் பயிற்சித் திட்டம் | 10 | 0.45 |
| மொத்தம் .. | 3,205 | 83.88 |





VII. முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டம் :—

ஆதரவற்ற உற்றார் உறவினர் யாரும் இல்லாத வயது முதிர்ந்த முதியோர்களுக்கு, சமூக பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அரசு 1-4-1962 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை ஏற்படுத்தி அமுல் படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி, கீழ்க்கண்ட இனத்தைச் சார்ந்த முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர் :—

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம்.

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம்.

(அ) ஆதரவற்ற முதியோர்களுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம் :—

இத்திட்டம் 1962 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. ஆதரவற்ற 65 வயதும் அதற்கும் மேற்பட்ட முதியோர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தின் மூலம் 1—1—1984 வரை இம்மாநிலத்தில் 1,10,063 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கான முதியோர் உதவித் தொகைத் திட்டம் :—

உடல் ஊனமுற்றவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கும் பொருட்டு 1974 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் விரிவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 45 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெறுகின்றனர். ஆனால், கண் பார்வையற்ற நபர்களுக்கு வயது வரம்பு எதுவும் இன்றி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்களில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மருத்துவ அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக் குழுக்கள், உடல் ஊனமுற்றோர் அனுப்பும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து அவ்விண்ணப்பத்தாரர்களின் வயது குறித்த விதிகளைக் கருதிப் பாராது. ஒவ்வொரு விண்ணப்பதாரரின் இடர்ப்பாட்டை மட்டுமே கருதிப்பார்த்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதிக்கும்.

இம்மாநிலத்தில் 1—1—1984 முடிய 13,373 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) ஆதரவற்ற விதவைகளுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம் :—

அரசு 1975 முதல் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை விரிவுபடுத்தி ஆதரவற்ற விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கி வருகிறது. 40 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இம் மாநிலத்தில் 1—1—1984 முடிய 46,203 நபர்களுக்கு இத் திட்டத்தின் மூலம் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஈ) ஆதரவற்ற விவசாயிகளுக்கான முதியோர் உதவித் தொகை திட்டம் :—

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் மூலம் வேளாண்மை தொழிலாளர்களும் பயன் பெறும் பொருட்டு இத்திட்டத்தினை விரிவுபடுத்தி 15—3—1981 முதல் செயற்படுத்தி வருகிறது. இதன் மூலம் 60 வயதும் அதற்கும் மேற்பட்ட ஆதரவற்ற எத்தொழிலும் செய்ய இயலாத நிலையில் உள்ள வேளாண்மைத் தொழிலாளர்கள் பயன் பெறுகின்றனர். இம் மாநிலத்தில் 1—1—1984 முடிய 30,000 விவசாயிகள் இத் திட்டத்தின் மூலம் பயன் பெற அரசு ஆணையிட்டுள்ளது.



முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் திங்கள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரொக்கமாக 35 ரூபாய் வழங்குவதோடு ஆண்டொன்றுக்கு பொங்கல் திருநாளன்றும், சுதந்திரத் திருநாளன்றும் ஆக இருமுறை சேலைகள், வேட்டிகள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கும் உதவித் தொகைக்கான ரொக்கம், காசோலை மூலம் அஞ்சல் வழியனுப்பப்படுகிறது. இதற்கான அஞ்சல் வழியனுப்பல் செலவுத் தொகையினையும் அரசே ஏற்றுக் கொள்கிறது.

எ. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தினை முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கும் நீட்டித்தல்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெற்றுவரும் நபர்களும் பயனடையும் பொருட்டு, திட்டத்தினை விரிவுபடுத்தி 15—1—1983 முதல் அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், முதியோர் உதவித் தொகை பெற்று வரும் அனைத்து நபர்களுக்கும் ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவில் இருக்கும்:—

| | | |
|---|---|---|
| 1. | அரிசி .. .. .. | 200 கிராம். |
| 2. | பருப்பு .. .. .. | 15 கிராம். |
| 3. | எண்ணெய் .. .. | 10 கிராம். |
| 4. | காய்கறி மற்றும் தாளிதம் .. | 50 கிராம். |

இதரவு செலவு வகைகளைத் தவிர மேற்கண்ட சத்துணவிற்கு 90 பைசா ஆகிறது. அருகாமையில் உள்ள குழந்தைகள் சத்துணவு மையங்களில் முதியோர் உதவித் தொகை பெறும் முதியோர்களுக்கு சத்துணவு அளிக்கப்படுகிறது. நகரம், கிராமம் போன்ற இடங்களில் அவரவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள குழந்தைகள் நல மையங்களில் அளிக்கப்படுகிறது. சத்துணவு பெறும் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு ஒருவருக்கு வாரத்திற்கு ஒரு கிலோ அரிசிக்கு பதிலாக 15-1-1983 முதல் 1/2 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. சத்துணவு பெறாத முதியோர் உதவித் தொகை பெறும் ஒருவருக்கு ஒரு வாரத்திற்கு 1 கிலோ அரிசி வீதம் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 6.48 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். அரசு இதுவரையில் 1,99,639 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க ஆணையிட்டுள்ளது. சென்ற 1983-84-ம் ஆண்டில் முதியோர் உதவித் தொகை திட்டத்திற்கென 16.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கென 11.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### VIII. சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புப்பணி:—

சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு பாதுகாப்பு இல்லங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இத்துறை தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் (1920)கீழ் குற்றம் புரிந்த இளங்குற்றவாளிகள், ஆதரவற்றோர் கூட்டுக் கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத்தடுப்புச் சட்டத்தின்கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிர் ஆகியோரின் பொறுப்பினை ஏற்று சீர்திருத்தப் பயிற்சி அளித்து கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி மறுவாழ்வு அளிக்கும் முக்கிய குறிக்கோளைக் கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சீர்திருத்த நிறுவனங்களிலிருந்து விடுதலையாகும் இல்லவாசிகளுக்கும் நிறுவனங்கள் மூலமாக பிற்காப்பு அளிக்கிறது.

சமூக நலத்துறையின் இயக்குநரே சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறையின் பொறுப்பாக உள்ளார். சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறையில் நிர்வாகப் பணிகளில் சமூக நலத்துறை இயக்குநருக்கு உதவும் பொருட்டு ஒரு இணை இயக்குநர் (சமூக நலம்) பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை துணை இயக்குநரைக் கொண்டு இம் மாநிலத்தில் தென் மாவட்டங்களிலுள்ள நிறுவனங்களை உடனடி மற்றும் நேரடி மேற்பார்வைக்காக மதுரையில் ஒரு மண்டல அலுவலகம் இயங்கி வருகிறது.

#### 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் மற்றும் அதன் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் :—

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 23 சீர்திருத்தப்பள்ளிகள் (நீண்டகால வரையறை நிலையங்கள்) உள்ளன. ஒன்பது பள்ளிகள் அரசினரால் நடத்தப்பட்டும் எஞ்சிய 14 தனியார் பள்ளிகள் தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களினால் சீர்திருத்தப் பயிற்சி பெற வேண்டி ஒப்படைக்கப்படும் சிறுவர்களை பராமரிப்பதற்கு அரசினரின் மான்ய உதவி பெறுகின்றன. அறிவு வளர்ச்சி குன்றியதாகக் காணப்படும் சிறார்களும் பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் இளநிலை சீர்திருத்தப்பள்ளியில் பொறுப்பேற்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர்.



மாநிலம் முழுவதுமாக பதினைந்து வரவேற்பு இல்லங்கள் (ஒன்பது அரசினராலும் ஆறு தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படும் —குறுகிய கால வரையறை நிலையங்கள்)உள்ளன. இவ்வரவேற்பு இல்லங்கள் நீதிமன்றங்களின் முன் விசாரணையேற்கும் சிறுவர் சிறுமியரைச் சேர்த்து விசாரணைக் காலங்களில் அவர்களின் பொறுப்பை ஏற்கின்றன. இவ்வரவேற்பு இல்லங்கள் சீர்திருத்தப்பள்ளிகளின் நுழைவாயில்களாகும். இவ்வரவேற்பு இல்லங்களில் ஒன்பது அரசினராலும் ஏனைய ஆறு வரவேற்பு இல்லங்கள் குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலைப்பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் ஆகிய (அரசினரின் மானிய உதவி பெறும்)தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.

#### 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டமும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களும்;—

1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக சேர்க்கப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு அரசினர் மகளிர் விழிப்பு காப்பகங்களில் (நீண்டக்கால வரையறை) புகலிடம் தந்து பயிற்சி அளிக்கப்படுகின்றது. இத்துறையின்கீழ் ஆறு அரசினர் மகளிர் காப்பகங்கள் உள்ளன. இவற்றைத்தவிர ஒன்பது (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் நீதிமன்றத்தின் முன் விசாரணை ஏற்கும் சிறுமியர் மற்றும் பெண்களைச் சேர்த்து அவர்களது விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங்கள் நீண்ட கால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாகும்.

#### சபிற்றாப்பு இல்லங்கள்:—

இந்துறையின்கீழ் மூன்று அரசினர் பிற்காப்பு இல்லங்கள் இரண்டு சிறுவர்களுக்காகவும் ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் அமைந்துள்ளன. சிறுமியர் மற்றும் பெண்களுக்கான இல்லம் வட ஆற்காடு மாவட்டம் வேலூரிலும் மற்ற சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூரிலும் மதுரையிலும் இயங்கி வருகின்றன. சீர்திருத்த இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகள் (ஆதரவற்றோர்) மற்றும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு இவ்வில்லங்கள் வாழ்கைத் தொழிற்கல்வி பயிற்சியினை தொடர்ந்து பெற்று வேலைக்குத் தகுதி பெறுமாறு உருவாக்க பயிற்றுவிக்கின்றன. மேலும் அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லத்துடன் இணைக்கப்பட்டுளள ஒரு தொழில் நிலையம் உடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தலிலும் பயிற்சி அளித்து வருவதுடன் பயிற்சிகளுக்கு வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பில்ல இல்லவாசிகளும் அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர்பெண்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

[1984 மார்ச் 23

கல்வி :—

அனைத்துச் சீர்த்திருத்தப்பள்ளிகளும் கல்வித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பிரிவுகளைக் கொண்டவையாகும். இவற்றில் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்த்திருத்தப்பள்ளியில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு உயர்நிலைக் கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியில் நாட்டமுள்ள மாணவர்கள் மேல்நிலைப்பள்ளி/கல்லூரி/தொழிற் பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

வாழ்க்கைத் தொழிற் கல்வி :—

இல்லவாசிகளின் பயனுக்காகவும் இல்ல நீக்கத்திற்குப் பின் அவர்களின் மறுவாழ்வு இலகுவாக அமையும் பொருட்டும் கீழ்க் குறிப்பிட்ட வருவாய் பயக்கும் தொழிற் கல்விப் பயிற்சிகள் நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

சீர்த்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்:—

1. தச்சுப் பயிற்சி.
2. தையல் மற்றும் பூ வேலைப் பயிற்சி.
3. நெசவுப் பயிற்சி.
4. பாய் நெசவுப் பயிற்சி.
5. கருமார்ப்பணிப் பயிற்சி.
6. உலோகப் பணிப்பயிற்சி.
7. தோட்டம் மற்றும் வேளாண்மைப் பயிற்சி.
8. கொத்து வேலைப் பயிற்சி.
9. புத்தகம் கட்டும் பயிற்சி.
10. இசைக்கருவி இசைக்கும் பயிற்சி.
11. மாட்டுப்பண்ணைப் பயிற்சி.
12. சோப்புகள் தயாரிக்கும் பயிற்சி.

பிற்காப்பு இல்லங்கள்:—

1. புத்தகம் கட்டும் பயிற்சி.
2. கருமார்ப் பணி பயிற்சி.
3. தையல் பயிற்சி.



1984 மார்ச் 23]

வரும் கல்வி ஆண்டில் தற்போதுள்ள சென்னை அரசினர் பெண்கள் நடுநிலைப் பள்ளியை (சென்னை-10) உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவும், அங்கு ஒன்பதாம் வகுப்பு துவக்கவும் ஆணை வழங்க உள்ளது.

மாணவ மாணவிகளுக்கு நவீன இயந்திரங்களில் உற்பத்தி செய்வதற்கு பயிற்றுவிப்பதன் மூலம் அவர்கள் இல்ல நீக்கம் பெற்று வெளியேறி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற வசதியாக மேலே குறிப்பிட்டுள்ள தொழிற் கூடங்களில் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி தையற் கூடங்களும், செங்கற்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியின் தச்சு மற்றும் நெசவுத் தொழிற்கூடங்களும் மின்விசையால் இயங்கும்படி நவீனமாக்கப்பட்டுள்ளன.

1981-82 ஆம் ஆண்டின் திட்டப் பணிகளில், தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை, அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியின் தச்சுக்கூடங்கள் மின் பொறிகளால் இயங்கும் வண்ணம் நவீனப்படுத்தவும், சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு மின்விசை சலவைத் தொழிற் கூடம் தொடங்கவும் அரசினர் ஆணை வழங்கியுள்ளனர்.

சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளியில் புதியதாகத் துவங்கி செயல்பட்டு வரும் குழந்தைகள் காப்பகத்தில் சில பெண்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளை பயிற்றுவிக்க இல்லவியல் பயிற்சி வகுப்பு ஒன்று துவங்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான காலம் 6 மாதங்களாகும்.

சீர்திருத்தப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்.

1980-81 ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கு இடையே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர்களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமையேற்றல் ஆகிய நற்பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது.

இளங்குற்றவாளிகள் வழிகாட்டி நிலையங்கள் :

சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வுகள் மேற்கொள்வது மட்டுமின்றி, இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர், சிறுமியர் பற்றிய மனநிலை அறிக்கைகளை அளிக்க சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் மூன்று இளங்குற்றவாளி

களுக்கான வழிகாட்டி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அருகிலிருக்கும் வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை ஏற்கும் இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுக்களால் நடத்தப்பட்டாலும் இவற்றின் மீதான செலவினம் அரசினரால் ஏற்கப்படுகிறது.

மறுவாழ்வுத் திட்டம் :—

சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழுள்ள, சீர்திருத்த நிறுவனங்களின் முன்னாள் இல்லவாசிகள் மற்றும் இன்னாள் இல்லவாசிகளின் மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு அம்சமாக, சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையில் ஏற்படும் காலியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் கீழ் வராத நேரடி நியமனங்கள் அனைத்தும் அவ்வில்லவாசிகளுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் கீழ் தனியாக ஒரு நன்னடத்தை அலுவலர் பிரிவு செயல்பட்டு வருகின்றது. மாநிலம் முழுவதும் செயல்படும் வகையில் அப்பிரிவின்கீழ் எட்டு நன்னடத்தை அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இல்லவாசிகள் சீர்திருத்த நிலையங்களில் சேருவதற்கு முன்பும், இல்லத்தை விட்டு சென்ற பிறகும் அவர்களை நல்வழிப்படுத்த இந்நன்னடத்தை அலுவலர்களில் பணி பயன்படுத்தப்படுகின்றது. இந்நன்னடத்தை அலுவலர்கள் இளங்குற்றவாளிகள், பெண்கள் மற்றும் சிறுமியர். ஆகியோரின் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கும், முன்னாள் இல்லவாசிகளைப்பணியிலமர்த்த உதவுவதற்கும், இல்லவாசிகள் சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக திகழ்வதற்கும் ஏற்றவகையில் பணியாற்றி வருகின்றனர்.

இல்லவாசிகள், நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர் தகுந்த மறுவாழ்வு அளிக்கப்படுகின்றனர்.

1. விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல் ;

2. வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல் ;

3. வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக்கேற்ற கருவிகள் வழங்குதல்—முதலிய மறுவாழ்வுத் திட்டங்கள் மூலம் விடுதலை பெற்ற இல்லவாசிகள் பொருளீட்டி அமைதியாக வாழ்க்கை நடத்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது.



திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000-ம் மற்றும் திருமணச் செலவுகளுக்கு என ரூ. 100-ம் அரசினரால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (1—1—1981 முதல் 31—12—1983 முடிய) 27 இல்லவாசிகளுக்கு திருமணம் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவு மதிப்பீடு :

இத்துறையின் 1984-85 ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடு ரூ. 159.55 இலட்சமாகும். இதில் ஊழியர்களின் ஊதியம் மற்றும் இதர இனங்களுடன் தனியார் நிறுவனங்களுக்கு மான்ய உதவியாக வழங்கப்படும் ரூ. 9.58 இலட்சமும் அடங்கும்.

புதிய திட்டங்கள் :

1984-85ஆம் ஆண்டின் இரண்டாம் பாகத் திட்ட வேலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பணித்திட்டம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியில் வெல்டிங் மற்றும் உற்பத்திப் பிரிவினைத் துவக்குதல்.. .. .. .. | 5.34 |
| | 5.34 |

சென்னை 600 008
13624